# GNANASAMBANDAM

## VELLIVIZHA MALAR 1965

# ஞானசம்பந்தம் வெள்ளிவிழா மலர்

10 — 12 — 65






ஸ்ரீ விநாயகர்

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

( தருமையாதீனத் திங்கள் இதழ் )

# " வெள்ளிவிழா மலர் "

ஆசிரியர் :—
வித்துவான்
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :—
வித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

## பொருளடக்கம்

| எண் | | | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | திருக்கை வழக்கம் | — | iii |
| 2 | வாழ்த்துரைகள் | — | vi |
| 3 | தேசவிளக்கு - வெள்ளி விழா | — | 1 |
| 4 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளுரை | | 5 |
| 5 | அருமருந்து | — | 9 |
| 6 | திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம் | | 11 |
| 7 | 'ஞானசம்பந்தம்' ஆற்றிய பணிகள் | — | 14 |
| 8 | பக்தி | செந்தமிழ் வித்தகர், —திரு. அ. ச. ஞானசம்பந்தம் M. A., | 17 |
| 9 | நந்தனார் பிறந்த ஆதனூர் | சைவ இலக்கியப் பேரறிஞர், —டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A., M. O. L., Phd.. | 20 |
| 10 | The concept of the Muttamil of the Tamil Language | Tamil Perum Pulavar, —*Prof S. Arumuga Mudaliar,* M.A.,B.O L.L.T. | 23 |
| 11 | ஐம்பெருங் காப்பியங்கள் | -வித்துவான். திருமதி ப. நீலா | 27 |
| 12 | மனிதரில் தலையான மனிதர் | சித்தாந்தப் புலவர் மணி, —திரு. ந ரா. முருகவேள் M. A, M. O. L., | 31 |
| 13 | அவன் அருள் | செஞ்சொற்கொண்டல், —வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் M. A., | 37 |
| 14 | முருகனடி | —திருமதி. சௌந்தரா கைலாசம் | 41 |

| எண் | | | பக்க எண் |
|---|---|---|---|
| 15 | திருமுறைகளும் மெய்கண்ட நூல்களும் | தருமையாதீனப் புலவர், பாலகவி, —வயிநாகரம். திரு. வே. இராமநாதன் செட்டியார் | 42 |
| 16 | பூம்பாவை | செந்தமிழ்ச் செம்மல், —திரு. அ. சீநிவாசராகவன் M. A., | 44 |
| 17 | தர்மமும் தருமபுரம் ஆதீனமும் | —திரு. P. நீலகண்ட சர்மா | 46 |
| 18 | எது இன்பம்? | திருக்குறள்வேள், —திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A, | 48 |
| 19 | திருநீற்றின் சிறப்பு | தருமையாதீனப் புலவர், —வித்துவான். திரு வை. குஞ்சிதபாதம் பிள்ளை | 50 |
| 20 | சமய வாழ்வு | பல்கலைச் செல்வர், —திரு. தெ பொ. மீனுட்சிசுந்தரனுர் M. A., B. L., M. O. L., | 52 |
| 21 | குமரகுருபரர் | பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி, —திரு. கு. சுந்தரமூர்த்தி | 53 |
| 22 | நாத தரிசனம் | தருமையாதீனப் புலவர், மகாவித்துவான், —திரு. ச. தண்டபாணி தேசிகர் | 57 |
| 23 | சித்தாந்த நூல்கள் | தருமையாதீனப் புலவர், மகாவித்துவான், சித்தாந்தக்கலைமணி, —திரு. சி. அருணைவடிவேல் முதலியார் | 61 |
| 24 | திருக்குறளும் திருமுறையும் | —வித்துவான். திரு. மு. நடராஜ தேசிகர் | 64 |
| 25 | என்றும் இருக்க | —திரு. R. கந்தசாமி மூப்பனுர் B A, B. L, | 67 |
| 26 | வேத ஆகம உபநிடதங்கள் | சிவாகம வித்துவான், —சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார் | 69 |
| 27 | மனிதப்பிறவியின் பயன் | —வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் | 73 |
| 28 | வேதத்தின் சிறப்பு | —பிரமஸ்ரீ. வைத்தியநாத கனபாடிகள் | 74 |
| 29 | புராணம் | வேதாந்த சிரோமணி, —பிரமஸ்ரீ K இராஜகோபால சாஸ்திரிகள் | 76 |
| 30 | எதிர்காலம் | —திரு K. முத்து ஜோதிடர் | 79 |


## வண்ணப்படங்கள்


1. ஸ்ரீ குருஞானசம்பந்தர்
2. 24வது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்
3. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்
4. ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி
5. ஸ்ரீ தையல்நாயகி
6. ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் கனகாபிஷேகக் காட்சி.

மற்றும் நிழற்படங்கள்.



ஸ்ரீ குருஞானசம்பந்தர்

# திருக்கை வழக்கம்

திருவருளை, 'திருவடி' என்றல் மரபு. எனினும், 'திருக்கை' என்றலும் பொருந்துவதே. "நங்கையி னால் நாம் அனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும் நங்கையினுற் செய்தளிக்கும் நாயகனும்" என்று சத்தியை 'கை' எனத் திருக்களிற்றுப்படியார் கூறுதல் கருதத்தக்கது

திருவடியும் தலையில் சூட்டப்பெறுவது. திருக் கையும் தலைமேல் வைக்கப்பெறுவது. இரண்டும் ஞானத்தை அளிப்பனவே. என்ருலும், ஒன்றை வேண்டுவார்க்கு அதனை வழங்குவது கையே. ஆதலின், ஞானத்தை வழங்கும் திருவருளின் செயலை, 'திருக்கை வழக்கம்' என்றல் மிகவும் பொருந்துவதாம்.

வேண்டுவார் வேண்டுவதே ஈயும் இறைவனது திருக்கை வழக்கத்தில், ஞானத்தை வழங்கும் வழக்கமே சிறப்புடைய வழக்கம். இதனைத் திருத் தருமையாதீனத்திங்கள்இதழாகிய, 'ஞானசம்பந்தம்' சிறக்கச் செய்து வருகிறது.

இஃது, இவ்வாதீனத்தின் ஆதி குருமுதல்வ ராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரைத் தாங்கி வெளிவருவது. இதன் 25 ஆவது ஆண்டு இப் பொழுது தொடங்குகிறது. இதுகாறும் ஞான சம்பந்தம் உலகிற்கு வழங்கிவந்த அருட் செல்வம், கலைச் செல்வங்கள் அளப்பில. தோத்திர சாத்திரங் களைப் பற்றிய சமயக் கட்டுரைகள், இலக்கிய இலக்கணங்களைப் பற்றிய மொழிக் கட்டுரைகள், விஞ்ஞானம், வரலாறு போன்ற உலகியற் கட்டுரை கள் பழம் பெருநூல்கள், உரைகள் பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரைகள், அவற்றின் பதிப்புப்பற்றிய திருத்தக் கட்டுரைகள் முதலியனவற்றைத் தனித் தனியாகவும், தொடர்பாகவும் 'ஞானசம்பந்தம்' இதழ் வழங்கி வந்துள்ளது மற்றும் வடமொழி, தென் மொழியில் உள்ள அரிய பலநூல் வெளியீடுகளையும் இது வழங்கிவந்திருக்கின்றது. சோதிடம், மருத்து வம் பற்றிய செய்திகளால் மக்கள் இனத்திற்கு மாண்பு பல விளைத்துள்ளது. இதன் 25 ஆவது ஆண்டுத் தொடக்கத்தில் வெளிவரும் இவ் வெள்ளி விழா மலரை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அரிய வாழ்த்துரையுடன் அன்பர்களுக்குத் திருக்கை வழக்கமாக வழங்கியருளுகின்ருர்கள். அவர்களது பொன்னுர் திருவடிகளை வணங்கி நன்றியறிதலைத் தெரிவித்து இம்மலரை யேற்றுப் பயனுறுவோமாக.

இவ் வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துரை யருளிய காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்கட்கும், மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், காஞ்சி தொண்டை மண்டலம்ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்அவர்கள் திருவடிகட்கும் வணக்கங்களோடு கூடிய நன்றி மயிலம் ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் கௌமாரமடம் ஸ்ரீமத் சுந்தர சுவாமிகள், பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடம் ஸ்ரீமத் இராமசாமி அடிகள் ஆகியோர்க்கும் நன்றி. சென்னை மாநில ஆளுநர் கனம் ஜெயசாமராஜ வாடியார், மத்திய அரசாங்க அமைச்சர் கனம். ஒ. வி. அளகேசன், மத்திய அரசாங்க அமைச்சர் கனம். C. R. பட்டாபி ராமன், சென்னை மாநில உயர்மன்ற நீதிபதி கனம். R. சதாசிவம், புதுவை முதல் அமைச்சர் கனம் வை. வேங்கடசுப்பா ரெட்டியார், புதுவை

நிதி அமைச்சர் கனம். அ. ச. காங்கேயன், சென்னை மாநில இந்து சமய அறநிலைய ஆணையாளர் திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார், தஞ்சை துணை ஆணையாளர் திரு. ஆ. மார்க்கண்டவேல்ராஜன், செட்டிநாடு டாக்டர் ராஜாசர் முத்தைய செட்டியார். அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் திரு. சி. பி. இராமசாமி ஐயர், மதுரை திரு. கருமுத்து தியாகராச செட்டியார், இராஜபாளையம் திரு. P. A. C R. இராமசுப்பிரமணிய ராஜா, சென்னை டாக்டர் திரு. இரத்தினவேல் சுப்பிரமணியம், சிதம்பரம் திரு, அரங்கசாமிப் பிள்ளை, இலஞ்சி திரு. I. A. சிதம்பரம் பிள்ளை, சென்னை நாரதர் ஸ்ரீநிவாச ராவ், மயிலம் வித்துவான், திரு. சிவலிங்கனுர் ஆகியோர் அனைவர்க்கும் எங்கள் நன்றி.

வெள்ளி விழா மலரின் இன்பத்தேனை அறிவு விருந்தாக அனைவரும் பருகி இன்புறுதற்கு வாய்ப்பாக, திரு. அ. ச. ஞானசம்பந்தம், திரு மா. இராசமாணிக்கனுர், திரு. S. ஆறுமுக முதலியார் திரு N. R. முருகவேள், திருமதி. சௌந்தரா கைலாசம் திரு. அ. ஸ்ரீநிவாசராகவன், திரு M. M. தண்டபாணி தேசிகர், திரு. ஜ் வரதராஜப் பிள்ளை, திரு. R. கந்தசாமி மூப்பனுர், திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், திரு. ச. தண்டபாணி தேசிகர், திரு. வே. இராமநாதன் செட்டியார் திரு. மு நடராஜ தேசிகர், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை திரு. சொ. சிங்காரவேலன், திருமதி. ப. நீலா திரு. கு. சுந்தரமூர்த்தி, திரு. P. நீலகண்ட சர்மா, சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார், பிர்மஸ்ரீ K. இராஜகோபால சாஸ்திரிகள், பிர்மஸ்ரீ வைத்தியநாத கனபாடிகள், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் முதலியோர் அரிய பல கட்டுரைகளையும் கவிதைகளையும் அளித்துள்ளனர். திங்கள்தோறும் ஞானசம்பந்தம் இதழுக்கு அறிவுடைப் பெருமக்கள் பலர் கட்டுரைகள் வழங்கி வந்துள்ளனர். எதிர்காலப் பயனை இனிதெடுத்தெழுதிவருபவர் திருவிடைமருதூர் பிர்மஸ்ரீ முத்து ஜோசியர். அனைவர்க்கும் எங்கள் நன்றி.

மிகக் குறுகிய நாட்களில் இதனை அச்சிட்டு உதவிய "ஞானசம்பந்தம்" அச்சகத்தார்க்கும், உடனிருந்து இம்மலர் வெளிவர உதவிய ஆதீனப் பல்கலைக்கல்லூரிப் பொறுப்பு முதல்வர் வித்துவான் திரு. வி சா. குருசாமி தேசிகர், பேராசிரியர் திரு. வி. சபேசன் ஆகியோர்க்கும் ஞானசம்பந்தம் இதழை மாதந்தோறும் விரும்பிப் பயிலும் நேயர்கள் பலருக்கும் எங்கள் நன்றி.



உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம்

25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

அருளிய

# வாழ்த்துரை

### சொக்கநாத வெண்பா

ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் - பாலைவிடாம்
மத்தனே கூடல் மதுரா புரியுமையாள்
அத்தனே ஆலவா யா.

மக்களுக்கு அன்றாடம் பலவகை அநுபவங்கள் நிகழ்கின்றன. அனைத்து அநுபவங்களும் இரண்டு வகையில் அடங்கும்; ஒன்று இன்ப அநுபவம்; மற்றொன்று துன்ப அநுபவம். இவ்வநுபவங்கட்குக் காரணம், இவற்றைத் தரும் பொருள்களோடு அவர்கட்கு உண்டாகும் சம்பந்தமே. அந்தச் சம்பந்தமும் உடற் சம்பந்தத்தோடு நில்லாமல், உயிர்ச்சம்பந்தமாக இருத்தல் வேண்டும். இல்லையேல் அநுபவம் உண்டாகாது. உயிர்ச்சம்பந்தம் என்பது, அறிவால் அறியும் சம்பந்தம்.

குழந்தையின் கையில் விலையுயர்ந்த பொன்னாபரணத்தையோ, இரத்தினாபரணத்தையோ, கொடுத்தால், அதைப்பெற்று அது இன்பம் அடைவதில்லை. ஏனெனில், பொன், இரத்தினம் இவற்றின் சிறப்பியல்புகளுடன் குழந்தைக்கு அறிவுத்தொடர்பு இல்லை. இறைவனது பெருமையை அறிவதிலும் நாம் குழந்தைகள் போலத்தான் இருக்கிறோம்.

" மழக் கையிலங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை என்றுனைக் கருதுகின்றிலேன் "

என்றார், மாணிக்கவாசகர். இறைவனோடு நமக்கு அறிவுத்தொடர்பு இல்லையாகையால், இறையநுபவம் நமக்கு உண்டாகவில்லை. உலகத்தோடு நமக்குத் தொடர்பு இயற்கையில் அமைந்து கிடப்பதால், உலக அநுபவம் மட்டும் கிடைக்கின்றது. ஆனால், உலக அநுபவம் துன்ப அநுபவமே. இறையநுபவமே இன்ப அநுபவம். இந்த இன்ப அநுபவத்திற்கு, அறிவுத்தொடர்பு-ஞானசம்பந்தம் வேண்டும். இதை அனைவர்க்கும் தருதற்காகவே நமது 'ஞானசம்பந்தம்' இதழ், திங்கள் தோறும் வெளிவந்து பலவகை விளக்கங்களைச் செய்துவருகின்றது.

ஞானசம்பந்தம் பெற்ற பெரியார் பலர். எனினும், மூவாண்டில் உலகுய்ய அம்பிகையின் திருமுலைப்பால் வழியே ஞானசம்பந்தம் பெற்ற ஆளுடைய பிள்ளையார் ஒருவரே 'ஞானசம்பந்தர்' என்று அனைவராலும் அழைக்கப்பெற்றார். அவருக்குப்பின்னர் அவர்தம் பெயரைச் சென்னிமேல் வைத்துப் போற்றும் முறையில், அப்பெயரைப் பெரியார் பலர் பெற்று விளங்கினர். சந்தானாசாரியருள் மூன்றாமவர், 'மறை ஞானசம்பந்தர்' என்னும் பெயருடையவராய் இருந்தனர். இங்ஙனமே நமது ஆதீனத்தின் ஆதிபரமாசாரிய சுவாமிகள், 'குருஞானசம்பந்தர்' என்னும் திருப்பெயருடையவர் என்பது பலரும் அறிந்தது. இவர்கள் திருப்பெயரைத் தாங்கி வெளிவருவதுதான், 'ஞானசம்பந்தம்' திங்களிதழ்.

அகில உலகிற்கும் அருள்ஞானசம்பந்தத்தை அளிக்க நமது ஆதீன 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளம்பற்றி 1941 ம் ஆண்டு கார்த்திகைத்திங்களில் தோற்றுவித்தருளியது, ‘ஞானசம்பந்தம்’.

இறைவன் அனைவர்க்கும் ஞானசம்பந்தத்தைத் தருதற்பொருட்டு, குடிலை என்னும் தடவயல் நாப் பண் அருள்வித்திட்டுக் கருணை நீர் பாய்ச்சி, வேதம் என்னும் பாதவத்தை வளர்த்தான். அதுபோல, எங்கள் 24 ஆவது, குருமூர்த்திகள், அனைவர்க்கும் ஞானசம்பந்தத்தைத்தர நமது ஆதீனமாகிய தடவயல் நாப்பண் திருவருளாகிய வித்தினை இட்டுத் தங்கள் திருவுளப்பாங்காகிய கருணை நீர் பாய்ச்சி, ‘ஞான சம்பந்தம்’ என்னும் பாதவத்தினை (மரத்தை) வளர்த்தார்கள்; வேதமாகிய பாதவத்திலும் இலை, தளிர், அரும்பு, பிஞ்சு, காய், கனி, முதலாகப் படுபயன் பல வாயின. ஞானசம்பந்தமாகிய பாதவத்திலும், இலக்கியம், இலக்கணம், அறிவியல், வரலாறு, தோத்திரம், சாத்திரம் முதலாக விளைபயன்கள் பல.

ஞானசம்பந்தம், அருள்வித்தில் தோன்றியதாகலின், இன்றும் நன்றே வளர்ந்து வருகின்றது. இருபத்து நான்கு ஆண்டுகளில் இது, சிறந்த பயன்கள் பலவற்றைப் பலருக்கும் தந்து, 25 ஆவது ஆண்டுத் தொடக்கத்திலே வெள்ளிவிழா மலரை அளிக்கிறது.

‘ஞானசம்பந்தம்’ உலகிற்குத் தந்த பயன்கள் பலவற்றை அவ்வப்பொழுதும், இம்மலரிலும் அன்பர் பலர் தங்கள் மனமார எடுத்துக்கூறியுள்ளனர். எங்கள் ஆதி குருமூர்த்திகளது திருப்பெயருடன் நிலவும் ஞானசம்பந்தம், இனியும் மேன் மேல் வளர்ச்சியுற்று, உலகிற்கு அரும்பயன் பலவற்றை அளிக்கும் என்பது உறுதி. இங்ஙனம் ‘ஞான சம்பந்தம்’ நனி வளர்ந்து நற்பயன் பலவற்றைப் பலர்க்கும் நல்கவும், ஞானசம்பந்தம் பெற்றுக் களிக்கும் அனைவரும் இகபர நலங்களை இனிது எய்தவும், எங்கள் ஆலவாய்ச் சொக்கலிங்கத்தின் அடிமலர்களைச் சிந்திக்கின்றோம். ஞானசம்பந்தத்தின் இவ்வெள்ளிவிழா மலர்க்குக் கட்டுரை முதலியன வழங்கிய அன்பர்கள் அனைவர்க்கும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் பெருகுவதாக,

# வாழ்த்துச் செய்தி

உ

Ref No......... ... சேந்திலாண்டவன் துணை Encl.... .......

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் அவர்கள் (தஞ்சாவூர் ஜில்லா)

திருப்பனந்தாள் தேதி......—12—1965

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனக் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆற்றிவரும் பல அரிய அருட் செயல்களுள் ஒன்று "ஞானசம்பந்தம்" என்னும் திங்கள் இதழை நடத்திவருதல், கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர் களும் படித்து இன்புறும் தகைமையுடையது ஞானசம்பந்தம். அழகுக்கு அழகு செய்வது போன்று ஒவ்வொரு இதழிலும் கயிலைக் குருமகாசன்னிதானம் அவர்களின் திருவருட் சிந்தனைகள் கட்டுரை வடிவில் ஞானசம்பந்தம் தாங்கி மக்களின் ஊன சம்பந்தம் நீக்கி அருட்பெருகு சிவஞானம் பரப்பிவருவது உலகறிந்ததொன்று. ஞானசம்பந்தம் தொடங்கிக் கால் நூற்றாண்டாகி முன்னூறு இதழ்கள் வெளிவந்தன. ஞான சம்பந்தம், செந்திலாண்டவன் திருவருளால் பல்லாண்டு பல்லாண்டு நிலவி எத்திசையும் சிவமணம் பரப்புவதாகுக.

தமிழ்மணம் கமழுங் கமலையம் பதிவாழ்
ஞானசம்பந்தனை வணங்கின்
ஊனசம் பந்தமில்லாவீ டெளிதே. —குமரகுருபரர்.

எம்கே. சிவ சிவ

# வாழ்த்துச் செய்திகள்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

## ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், ஸ்ரீமடம் காஞ்சீபுரம்.

சிவம் என்றால் மங்களம். மங்களமான சைவ சமபந்தமான நூல்கள், கட்டுரைகள் மூலமாக மக்களுக்கு ஞானசம்பந்தத்தைப் புகட்டும் ஞானசம்பந்தத்தின் வெள்ளி விழா மலர் சிறப்பான முறையில் வெளிவந்து மேன்மேலும் எல்லோரும் ஞானசம்பந்தத்தை அடைய உதவியாயிருக்கட்டும்.

HIS HOLINESS TIRUVARUL THAVAYOGA

## Sri-la-Sri Somasundara Sri Gnanasambanda Desika Paramacharya Swamigal, MADURAI ADHEENAM.

தருமையாதீனத்தின் திங்கள் வெளியீடாகிய "ஞானசம்பந்தம்" பத்திரிகைக்கு 24 ஆண்டுகள் பூர்த்தியாகி 25 வது ஆண்டு தொடங்குகிறதென்பதையும அதனை முன்னிட்டு 10—12—65ல் வெள்ளி விழா மலர் சிறந்த முறையில் வெளியிடத் தீர்மானித்திருப்பதையும் அறிந்து மகிழ்கிறோம்.

"ஞானசம்பந்தம்" உண்மையிலேயே ஒரு சிறந்த ஞானக்கருவூலமாகவும், மக்களிடையே திருவருட் பேற்றின் பெருமையை உணர்த்தும சிறந்த சஞ்சீவியாகவும் திகழ்கின்றது. அதிலுள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் அருளுரைகள் அனைத்தும் பக்திச் சுவை சொட்டக் கூடியனவாகவும் தாய் குழந்தைகளுக்கு ஊட்டும் பான்மையில் அமைந்தனவாகவும் மிளிர்கின்றன.

"ஞானசம்பந்தம்" இன்னும் சிறந்தோங்கி வளர்ந்து, அரிய பெரிய பணிகள் பல ஆற்றி, வெற்றியுடன் மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் பரவுமாறு செய்யத் திருவருள்பாலிக்குமாறு எல்லாம் வல்ல அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றோம்.

காஞ்சிபுரம் தொண்டைமண்டலம் ஆதீனம் மகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் பக்குவம் அறிந்து, திருவருள் உண்டாகச் சிவநெறியைப் பரப்பிச் செம்மைப் பயிற்சியருளற் பொருட்டுத் தோற்றிய சைவாதீனம் பல இருந்தன. இருப்பன வற்றுள் இக்காலத்தில் நன்கு விளங்குவனவும் தொன்மையுடையனவும் ஆவன நான்கு. அவற்றுள் தருமையாதீனம் எல்லாத் திறத்திலும் மிக்க புகழ்வாய்ந்து ஒளிர்கின்றது.

தருமையாதீனத்துக் குருமகாசந்நிதானங்கள் எல்லாரும் ஆதிபரமாசாரியராகிய ஞானசம்பந்தர் அருள் பெற்றவர்கள். அவவருட்சிறப்பு இப்போது ஞானபீடத்தை அணிசெய்துகொண்டு விளங்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு அளவிட்டுக் கூறற்கியலாதவாறு அமைந்தது. அவ்வமைதியை நல்லோருள்ளம் நடுநின்று ஆய்ந்து உணர்ந்து கொள்ளும். இவர்கள் எத்தனையோ பெருமைகள் உடையவர்கள். அப்பெருமைகளின் முடி மணியாக உள்ளது திருக்கயிலைக்காட்சி. இதன் சிறப்பை சென்றுமீண்ட புண்ணியர்களே அறிவார்கள்.

எச்சந்நிதானம் இக்காட்சியை யெய்தியதோ அறியேம்? இச்சந்நிதானம் யாம் அறியச்சென்றும் கண்டும் மீண்டும் தருமைக்குப் போந்தது செயற்கரிய செயலும் பெறற்கரிய பேறும் ஆகும். தில்லைத் திருக் கூத்தனைப் பிறந்து மொழி பயின்றபின் தொடங்கி இன்றும் வழிபட்டு வருகின்றார்கள். கால்மாறிய கடவுளைப் பரம்பரைப் பெரும்பொருளாகப் பெற்று நாள்தோறும் மிகச்சிறந்த பாங்கிற்போற்றிப் பேரின்புறுகிறார்கள்.

தருமையாதீனத் திருக்கோயில்களின் திருப்பணிகளையும் அவற்றின் இப்போதைய நிலையையும் அழகையும் தூய்மையையும் நித்திய நைமித்திக நிகழ்ச்சிகளையும் நோக்கியவர்கள் பெரும் புண்ணியர் களாவார்கள். உலகில் உள்ள ஏனைய கோயில்களுக்கு இருக்கவேண்டிய இலக்கணங்களையுணர்த்தும் கோயில்கள் அவையெல்லாம். கற்கள் இல்லாத சோணாட்டில் அக்காலத்தில் வேந்தர்கள் கட்டுவித்த கற்கோயில்கள் பெருமதிப்பிற்குரியவாயின. இக்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் வேற்றுநாடு களினின்று கற்களை க் கொணர்வித்தும் திருப்பணி செய்வித்தும் வருகிற மாட்சி அவர்களது அருளாட் சிக்கே உரியது. அதனை மதிக்கும் வன்மை எம்மனோர்க்குப் பெரிதும் அரிது.

அவர்கள், தங்களது முன்னைச் சந்நிதானத்தின் திருவுளத்திற்கிடந்தவற்றை யெல்லாம் நிறை வேற்றியதும் மிகப் போற்றத்தக்கது. சந்தியோநிர்வாணம் எய்திய ஆநந்த பரவசர் திருக்கோயில் அருகிலும் அதன் வடகிழ்ப் பக்கத்திலும் சென்று நின்று காண்பவர்க்கு அது நன்கு புலனாகும். 24 வது மகாசந்நிதானம் எம்மையும் ஆதீனப் புலவராக்கியாட்கொண்டவர்கள். இச்சந்நிதானம் தருமைப் பல்கலைக் கல்லூரி முதல்வராக்கி வாழ்வித்தார்கள். அதனோடு 'ஞானசம்பந்தம்' ஆசிரியராகவும் பணி புரியப் பணித்தருளினார்கள். ஞானசம்பந்தம் யாமும் பெற்றோம்.

ஞானசம்பந்தம் 1941 இல் தோன்றியது. இத்திங்களிதழ்க்கு இப்பெயர் வாய்த்தது என்னை? ஆதிபரமாசாரியராகிய ஞானசம்பந்தர் அருள் அனைவரும் பெறற்பொருட்டே. அவர்கள் திருப்பெயர் கொண்டதே இத்திங்கள் வெளியீடு. அதனால்தான் நீள நிகழ்கின்றது இது. அவர்கள் உபதேசித் தருளிய சைவநெறியைத் திருநெறி என்பர் நம முன்னோர் (நம் சமயாசாரியர்). திருநெறிய தமிழ் வல்ல வர்க்கு இவ்வுண்மை தெரியும். எளிதாகத் தொல்வினை தீர்க்க முயல்வோர்க்கு இந்தஞானசம்பந்தம் பெருந்துணைபுரியும். ஞானமேதிரு, ஞானநெறியே திருநெறி; ஞானசம்பந்தமே திருநெறியின் பயன். இத்திருஞானசம்பந்தம் 'குருஞானசம்பந்தம். சண்முகஞானசம்பந்தம, கயிலைக் குருமணி ஞானசம்பந்தம், இம்மகாசந்நிதானத்தின் பட்டமும் இருபத்தைந்து. இத்திங்களிதழும இருபத்தைந்தாம் ஆண்டினை அடைந்துள்ளது.

இதன் புத்தாண்டு வெள்ளிவிழா சிறப்புடையதாயிற்று. கயிலை மலையும் வெள்ளி. இதன் விழா வும் வெள்ளி. பொன்னார் மேனியனருளாற் பொன் விழாவையும், பின்னர்ப் பிற மணிவிழா முதலிய வற்றையும் இக்கயிலைக் குருமணியே நடாத்தும் வண்ணம நீடூழி இனிது வாழ்க.

வாழ்க! வாழ்க! ஞானசமபந்தம் வாழ்க!

## மயிலம் மடாலயம், ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

மனிதப் பிறவி கிடைத்தற்கரியது அதையடைந்த யாவரும் அதன் பயன் வீடுபேறடைதலே என எண்ணுதல் வேண்டும். வீடு பேறடைய வேண்டுமானால் புறப்பற்றையும் அகப்பற்றையும் விட வேண்டும. அவற்றைவிட வேண்டுமானால் பிற பொருள்களைப் பற்றியும் தன்னைப் பற்றியும் உள்ள உண்மை நிலைகளை யுணர்தல் வேண்டும். அவ்வுணர்வே அவற்றை விட ஏதுவாகும். அவ் வுணர்வே ஞானம எனப்படும் அது எல்லார்க்கும் கிடைப்பதில்லை. அதுகிடைக்கப் பெற்றவர்களே ஞானியர் எனப்படுவர். அவர்களே பாசம (பற்று) கெடுப்பவர்கள். அவர்களே ஞானசம்பந்தம் உடையவர்கள்; குருமார்கள், மகா சந்நிதானங்கள்,

ஞானசம்பந்தம் உடையவர்களே பிறரைப் பாசங்கெடுத்து ஞானசம்பந்தப் படுத்த முடியும்.

''என்ன தவவுதவி யீதென் றுணர்கிலன்
மன்னுசிவ ஞானமுனி வந்துற்றுன் - தன்னேரிகர்
மாசங் கெடுக்கு மலர்த்தடஞ்சூழ் கச்சியிலெம்
பாசங் கெடுக்கும் படி.'' (ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் கலம்பகம் 20)

எனக் கற்பனைக் களஞ்சியம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளும பாடியுள்ளமை காணலாம். பிறரை ஞானசம்பந்தப் படுத்துதல் இரண்டு வகைப்படும். ஒன்று நேரில் உபதேச வாயிலாகச் செய்வது. இரண்டாவது எழுத்து வாயிலாகச் செய்வது. இவவிரு வகையிலும் செய்வதும் உண்டு.

இன்று ஞானசம்பந்தம் உள்ள திருமடங்களுள் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத் திருமடமும் ஒன்றும். அத்திருமடம் மக்களுக்கு, நேரிலும எழுத்து (நூல்) மூலமும ஞானசமபந்தப் படுத்தி வருகின்றது. எழுத்துமூலம செய்து வந்தாலும் ''ஞானசம்பந்தம்'' என்ற பத்திரிகை (மாதவிதழ்) மூலமும் செய்துவருகின்றது. அப்பத்திரிகை இவ்வுலகில் 24 ஆண்டுகளாக ஞானசம்பந்தப் படுத்தி வருகின்றது. இன்று வெள்ளி விழாக் கொள்கின்றது. மக்களை மாக்கள் நிலையினின்றும் நீக்கி மக்களாகவே நிறுத்தி இறையருளைப் பெறச் செய்து சிறந்த முறையில் திகழ்ந்துவரும் அப பத்திரிகை, பொன் விழா, வைர விழா முதலியவற்றையும் கொண்டு மேன்மேலும் தழைக்க என வாழ்த்துகின்றோம். ஞானசம்பந்தம் தரும் ஷை ஆதீனமும, இன்று கயிலைக் காட்சி கண்டு கயிலைக்குருமணி என விளங்கும் மகா சந்நிதானம அவர்களும இன்று போல் என்றும் நிலவுக என, எங்கள் ஆதி சிவஞான பாலய சுவாமிகளையும் அவர்க்கருளிய மயிலமமுருகப்பெருமானையுமநினைக்கின்றோம்.

## வித்துவான். ஸ்ரீமத். சுந்தர சுவாமிகள்,

மடாதிபதி, கௌமார மடாலயம், சின்னவாடம்பட்டி, கோயம்புத்தூர்.

### வெண்பாக்கள்

கயிலை வருகுருநம காசந்நி தானம்
பயிலருமை ஞானசம் பந்தம — எயிலவனபோல்
மின்னவரு மாத வெளியிட்டால் நல்லருட்சீர்
துன்ன அளித்தார் தொடுத்து.

தருமையா தீனம தழைத்தவிர் பட்டம
வருமிருபத் தைநதா வயங்கும — பெருமைக(கு)
இணையாக ஞானசம் டந்தஇத மூக்கும்
அணையுமிரு பத்தைந் தாண்டு.

இருபத்தைந் தாமபட்டம ஏற்றசந்நி தானம்
இருபத்தைந தாண்டி னிதழும் — வருதல்
இருபத்தைந் தென்ன இசைசிவமூர்த் தம்போல்
தருமினிய ஞானசம்பந் தம.

கோயில்களின் மாண்பு குலவு வெளியீடு
மேயினே ரைப்புரக்கு மேனமைபண்பு — தோயுமுயர்
பன்னூலா ராய்ச்சிமுதல் பற்றுசந்நி தானமிந்தத்
தென்னுட்டுச் சைவச் சிரம்.

சைவ சமயம் தனைக்காத் திடுமுறையில்
தெய்வசந்நி தானத தினிற் பலவாச் — செய்வளங்கள்
காண்போர் மனத்தைக் கவருமவளப் பூசனையின்
மாண்பா யமைத்தல்பல வாம.

தமிழுக்கும் சைவ சமயத் தினுக்கும்
அமிழ்தொப்ப தாமே யருளில் — அமிழ்விக்கும்
கட்டுரைகள் மேவும கவின்ஞான சம்பந்தம்
எட்டுவது வெள்ளி விழாவே.

பொன்விழா முத்துவிழாப் போன்ற பலவிழா
துன்வகையிற் பல்லாண்டு தொல்லுலகில் — மன்னிக்
குருஞான சமபந்தக் கோமான் அருள்போல்
இருஞாலத் தூடொளிர்க வே.

## தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் திருமடம்
### பேரூர் - கோவை.

ஞானசம்பந்தம் என்னும் திருப்பெயர் தாங்கி வெளிவரும் மாத இதழாகிய இதற்கு இருபத்து நான்காண்டுகள் நிறைந்து இருபத்தைந்தாம் ஆண்டு தொடங்குவதறிந்து பெரிதும் உவகையுறுகிறோம்.

ஞானசம்பந்தம் என்பது சைவசமய ஆசாரியர் நால்வருள் ஒருவர் பெயரும் தருமையாதீனம் ஆதிகுருமுதல்வர் பெயருமாம என்பதனைவரும் அறிவர். காழிப்பிள்ளையார் உமையம்மையால் ஞான போனகம் ஊட்டப் பெற்று சிவனடியே சிந்திக்கும திருப்பெருகு சிவஞானம் பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் எய்திச் சிவஞானசமபந்தர் ஆனார் என்று திருத்தொண்டர் புராணம் கூறும்.

சித்தாந்தச் செந்நெறியும், தமிழ்நெறியும் வளர்ந்து சைவ உலகும் தமிழுலகும் பெரும் பயனுறுமாறு அளவிடற்கரிய பணிகள் ஆற்றிவரும் தருமையாதீனம் 25-வது மகாசந்நிதானம் கயிலைக் குருமணியவர்களின் தண்ணளியால் தழைத்து வளரும் இவ்விதழ் பல்லாண்டு நிலவி எல்லா உயிர்களும் சிவஞான சமபந்தம எய்தத் துணை புரிவதாக என; எங்கள் சாந்தலிங்கப் பெருமான் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

### H. H. THE MAHARAJAH OF MYSORE,
Madras Governor.

His Highness is glad to know that the monthly journal of the Dharmapuram Adhinam - "Gnanasambandam" has completed twenty-five years of its circulation and that a Siver Jubilee issue is being brought out. His Highness has asked me to convey his best wishes for the success of the journal. (P. S)

### கனம். திரு. ஒ. வி. அளகேசன், Minister of State
Ministry of Petroleum & Chemicals Government of India
NEW DELHI-1

தெய்வ சம்பந்தமும் சைவ சம்பந்தமும் பெற்று விளங்கும் தருமையாதீனம் 'ஞானசம்பந்த'த்தின் மூலம் கடந்த கால் நூற்றுண்டாக மக்கள் உய்யும பொருட்டுச் சமய நன் பொருள்களையும் இலக்கிய இன் பொருள்களையும் வழங்கி வருவது தமிழ்நாடு செய்த தவப்பயனாகும் தருமையாதீனத்தின் பல நற்பணிகளையும் ஊக்குவித்து வரும அதன் தலைவர் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இந்தச் சொற்பணியையும் நடத்தி வருகிறார்கள். 'ஞானசம்பந்த'த்தின் வெள்ளி விழா மலர் நம்மனோருடைய ஊன சமபந்தத்தைப் போக்கும் ஒளிமலராக விளங்கும் என்பதில் ஐயமில்லை தருமையாதீனமும் அதன் பெருமையார் பணிகளும் மேன்மேலும் சிறப்புறுவோங்க எல்லாம் வல்ல சிவ பெருமானின் திருவருளை வழுத்துகின்றேன்.

### SRI C. R PATTABHI RAMAN,
Deputy Minister, Information & Broadcasting India.

I am glad that the Silver Jubilee of "GNANASAMBANDAM", the Tamil monthly is being celebrated next month. I wish the function in advance all success. The ancient Adheenam of Dharmapuram has played a great role in the organisation and preservation of Hinduism. Many of the Holinesses who have held the headship of the Mutt have

distinguished themselves by learning and by their great charities. Publications from the Dharmapuram Adheenam have always helped to take the light to many homes not only in South India but also wherever tamilians congregated. May your journal grow from strength to strength.

### கனம். திரு. கோ. பூவராகன்

செய்தி விளம்பரத்துறை அமைச்சர், சென்னை.

சைவமும் தமிழும் தழைத்து வளர தருமபுரம் ஆதீனம் ஆற்றி வரும் பணிகள் உலகறிந்தவை இந்தப் பணியில் ஒரு அம்சமாக வெளிவரும் 'ஞானசம்பந்தம்' திங்கள் இதழ், வெள்ளிவிழா மலர் வெளியிடும் நிலையினை எய்தியுள்ளதுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். மக்களிடையே சமய உணர்வும் சீரிய நெறிகளும் வளரும்படிச் செய்வதில் 'ஞானசம்பந்தம்' ஆற்றும் பணி மேலும் வளர என் நல்வாழ்த்துக்கள்

### நீதிபதி கனம். திரு. R. சதாசிவம்.

சென்னை,

*தமிழ் மணம் கமழும் "ஞானசம்பந்தம்" இதழின் வெள்ளி விழா மலர் 10—12—1965-ல் வெளிவர இருக்கிறது என்று அறிய மிகவும் மகிழ்ச்சி. - ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமரபில் 25-ஆவது குருமகாசந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளாட்சியில் இந்தச் சிறந்த பத்திரிக்கையின் 25-ஆவது ஆண்டு தொடக்க இதழ் வெள்ளி விழா மலராக வெளிவருவது தெய்வீகப் பொருத்தமே யாகும்.*

*சமயப் பிரசாரத்திற்கு உதவும் சாதனங்களில் இது முக்கியமானது. மற்றும் அதன் பெயருக்கு ஏற்ப சைவமும் தமிழும் நல்ல முறையில் தழைத்து ஓங்கத் தொண்டு செய்கிறது. "ஞானசம்பந்தம்" என்றும் சமயக் கருத்துக்களைப் பரவச் செய்து பணிபுரிய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்*

### Hon'ble Sri V. Venkatasubba Reddiar, Chief Minister.

Pondichery.

*தருமையாதீனத் திங்கள் இதழ் ஞானசம்பந்தம் 24 ஆண்டுகளாக சமய இலக்கிய வளர்ச்சிப் பணி புரிந்து வருவது கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தங்கள் பணி மிகப் பாராட்டுதற்குரியது வெள்ளிவிழா மலர் வெற்றியடைய என் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.*

### Hon'b'e Sri A. S Kankeyan, B. A., Finance Minister.

Government of Pondichery.

*தருமையாதீனத் திங்கள் இதழாகிய 'ஞானசம்பந்தம்' வெள்ளிவிழா மலர் வெளிவர இருப்பதை அறிய மிக்க மகிழ்ச்சி.*

*உலகிலே அஞ்ஞானமும நாத்திகமும் பரவிவரும் இக்காலத்தில், மக்களிடையே அன்பும் அறமும், இறைவழிபாடும் வளரச்செய்யும நோக்குடன் சைவத்தின் தத்துவங்களைப் போதித்து, சமய இலக்கிய வளர்ச்சிக்கு அருமபணியாற்றிவரும் இந்த வெளியீடு மேலும் மேலும வளர்ச்சியடைந்து தனது பணியைத் தொடர்ந்து சிறந்த முறையில் இயற்றிவர இறைவன் அருள்புரியப் பிரார்த்திக்கிறேன்.*

## திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ , பி. எல்., ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய (ஆட்சித்) துறை, சென்னை.

தருமையாதீனத் திங்கள் இதழாகிய "ஞானசம்பந்தம்" கடந்த 24 ஆண்டுகளாகச் சமய, இலக்கிய வளர்ச்சிக்குப் பல்வகைப் பணிகளை ஆற்றி, அதன் 25-ம் ஆண்டுப் பணியைத்தொடங்க இருப்பது அறிந்து மிகவும் மகிழ்கின்றேன். அவ்வமயம, வெள்ளி விழா மலர் ஒன்று வெளிவர இருப்பதையும் அறிந்து உவகை எய்துகின்றேன். தருமையாதீன மடம், அதன் ஆதிக்கத்தின் கீழுள்ள ஆலயங்களைச் செவ்வனே பரிபாலித்து வருவது தமிழுலகம நன்கறிந்த செய்தி. சைவசமயத்தைப் பேணி வளர்க்கின்ற பெருமபண்ணை களுள் அது தலைசிறந்ததாக விளங்குகின்றது. மற்றும், ஆகமக்கலலூரி, தமிழ்க்கல்லூரி போன்ற கல்வி நிலையங்களையும் பரிபாலித்து வருகின்றது சித்த வைத்திய முறையையும் ஆதரித்து ஆதரவற்ற குழந்தை களையும் பராமரிக்கும் நற்பணியை மேற்கொண்டு இருக்கின்றது. இவற்றோடல்லாமல், சைவசமயத்தைப் பல்வேறுமுறைகளில் வளர்க்க அருமபாடுபட்டுவருவது எனக்குப் பெரும்மகிழ்ச்சியைத் தருவதாக உள்ளது. சென்னையில் சைவசமயப் பிரசார நிலையம் ஒன்றை நிறுவி, அதன்மூலம் பிரசாரப் பணியை விரிவாகச் செய்துவருவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய அரும்பணிகளை மக்கள் அறியுமாறு செய்தும், மற்றும் சமயத்துறையில பல்வேறு விஷயங்களைக குறித்து நல்ல கட்டுரைகளை வெளியிட்டும், மக்கள் பெரும்பாலும அறியாதிருக்கின்ற ஆகமத்தை அவர்கள் உணருமபொருட்டு அந்துறையில் வல்லவர்களைக கொண்டு கட்டுரைகளைப் பிரசுரித்தும் "ஞானசம்பநதம" என்னும் திஙகள் இதழ் நற்றொண்டு ஆற்றி வந்திருக் கிறது. 24 ஆண்டுகளாக அது ஆற்றிவந்துள்ள பணிகளை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். இற்றொண் டுக்கு நல்ல ஆதரவு கொடுத்துவரும ஸ்ரீலஸ்ரீ தருமையாதீன மகாசந்நிதானம அவர்களுக்குச் சைவமக்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துககொள்கின்றேன்.

## திரு. ஏ. மார்க்கண்டவேல்ராஜன்,
துணை ஆணையர், இந்து சமய அறநிலைய பாதுகாப்பு இலாகா, தஞ்சாவூர்.

திருத் தருமையாதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாலும், வித்துவான் ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமி அவர்களின் பெருமுயற்சியாலும், 'ஞான சம்பந்தம்' என்னும் மாதவெளியீடு 24 ஆண்டுகளாக சமய வளர்ச்சிககு நலல தொண்டு ஆற்றி வருகிறது. இது மென்மேலும் பெருகி, வளர்ந்து, வார இதழாக மாறி சமயத்தொண்டு புரிய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

## Dr. RAJAH SIR MUTHIAH CHETTIAR OF CHETTINAD.

சமய இலககிய வளர்ச்சியில் தமிழ்நாடடில பல வழிகளில தொண்டாற்றிவரும் தங்கள் இதழ் மேன்மேலும் சிறப்புற்று விளஙகவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

ஆசிரியராகப் பணியாற்றிவரும் தங்களுக்கும் மேனமேலும் பல இலக்கியப் பணிகளில் தொண் டாற்றிவர போதிய திடகாத்திரத்தையும் ஆண்டவன் அருளவேணுமாயும் பிரார்த்திக்கிறேன்.

## Dr. C. P. RAMASWAMI AIYAR,
Vice Chancellor, Annamalai University.

On the occasion of the Silver Jubilee of "Gnanasambandam", I convey my best wishes for the prosperity of the Journal.

## திரு. கருமுத்து. தியாகராஜ செட்டியார்

மதுரை.

கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாய்ச் சமய இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ் மொழியின் உயர்விற்கும் அரும்பணி புரிந்து வரும் "ஞானசம்பந்தம்" 10—12—65 அன்று வெள்ளி விழா மலராக அலர இருப்பதறிந்து மகிழ்ச்சி யடைகிறேன்.

தமிழ் நாட்டில் புறச்சமய இருளும், திசைமொழியின் அயல் வழக்குக் கருமுகிலும் பரவி, சிவநெறியாம் ஞாயிறும், தேன் தமிழாம் திங்களும் மங்குதலுற்ற கி. பி. ஆறும் நூற்றூண்டில்,

"திருக்கிளரும் ஆதிரை நாள் திசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமும் தழைத்தோங்க"

"அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல
விசைமுழுது மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலைபெருக"

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் திருஞானசம்பந்தப்பெருமான் தோன்றியருளினர்.

அவ்வாறே, இவ்விருபதாம் நூற்றூண்டில், உலகாயத அறிவும் வேற்று மொழிகளும் பெருநெறிய சைவத்திற்கும், தேனினும் இனிய செந்தமிழுக்கும் விளைத்த பேரிடரை, தருமை யாதீனம் திருக்கயிலைக் குருமணி யவர்களின் அருட் குறிப்பால் தோன்றிய "ஞானசம்பந்தம்" தன்னேரில்லாத் தனது சமய மொழிப் பணிகளால் அறக்களைந்து வருகிறது,

அத்தகைய அருந்திறல் தொண்டு வருங்காலத்தில் மேலும் சிறந்தோங்கி மிளிர "ஞானசம்பந்தம்" வெள்ளி விழா மலராகப் பூத்தல் அகம் நிறைந்த உவகை தருவதாகும்.

அவ்வண்ண ஒளி மலர் நாற்றிசையும் மணம் பரப்பித் திகழவும், சிவநெறி, செந்தமிழ் இரண்டையும் தம் கண்ணின் மணிகளெனக் காத்துப் புரந்து வரும் திருக்கயிலைக் குருமணியவர்கள் வையை மணலினும் பல்லாண்டு வாழ்ந்து, தமது அருள் பெருக்கால் மன்பதைக்கு உய்தி நல்கவும் வேயுறு தோளி பங்கன் திருவருள் புரிவாராக.

## திரு. P. A. C. R. ராமசுப்பிரமணிய ராஜா B. Sc., இராஜபாளையம்.

தண்ணருள் மிக்கு உலகமக்கள் பேரின்ப வாழ்வு பெறவேண்டி, திருக்கயிலாய பரம்பரை, தருமையாதீனம் ஆற்றிவரும் அரிய திருப்பணிகள் பலவாகும். மனிதப்பிறவியின் குறிக்கோள் இறைவனடி அடைவதேயாகும் என்ற பெரு நெறியை உலக மக்களுக்கு பலவாற்ருலும் எடுத்து ஓதி வருவதும், கல்வி பெருகுவதற்கும் கலைகள் சிறப்பதற்கும், என்றுமுள கன்னித்தமிழ் ஏற்றமுறுவதற்கும், அத்தனைக்கும் சிகரமாகச் சமய வளர்ச்சிக்கும் ஆதீனம் ஆற்றி வரும் புனிதப்பணியை யாவரும் அறிவர்.

அதன் சீர்மிக்க கிளைகளில் ஒன்ருகிய "ஞானசம்பந்தம்" என்னும் திங்கள் வெளியீடு செய்து வரும் தொண்டு, தமிழ் இலக்கியமும், சைவநெறியும் தழைத்தோங்கப் பெருந்துணையாக அமைந்துள்ளது. சென்ற இருபத்துநான்கு ஆண்டுகளாகப் பல்லாயிரம் மக்கள் இதைப் படித்து ஆன்ம ஞானத்தைப் பெற்று இன்புறுவதைக்கண்டு மகிழ்கின்ருேம்.

அருள் ஞானத்தை அளித்துவரும் "ஞானசம்பந்தம்" தனது வெள்ளிவிழாக் காண்பதைக் கண்டு நாமும் மகிழ்கின்ருேம். வெள்ளிவிழாமலர் பேரின்பமூட்டும், தெய்வத் திருமலராகி மலருவதாக.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி மகாசந்நிதானம் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்களைச் செலுத்துவதுடன், "ஞானசம்பந்தம்" மேலும் வளர்ச்சியுற்று, பலநூற்றுண்டு விழாக்களைக் காணத் திருவருள் பாலிக்க அம்மையப்பனும் உமாமகேசனை வாழ்த்தி வேண்டுகிறேன்.

வாழ்க ஞானசம்பந்தம்! வாழ்க பல்லாண்டு !!

## Dr R. SUBRAMANIAM, B. Sc., M. D., M. R. C. P. (London), KILPAUK, MADRAS-10.

"ஞானசம்பந்தம்" வெள்ளிவிழா நடப்பதைப்பற்றி அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் திங்கள் இதழில், ஒவ்வொரு திங்களிலும் தேவாரத்திலிருந்து ஒரு பாட்டை எடுத்து பதவுரை, பொழிப்புரை அந்தப் பாட்டு எந்த சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது, எதற்காகப் பாடப்பட்டது, அவைகளின் பலன் என்ன என்பதை விளக்கினால் அன்பர்களுக்கு பிரயோசனமாயிருக்கும். மற்ற பாட்டுக்களைப்போல் அல்லாமல் தேவாரத்தில் உள்ள பாட்டுக்கள், மருத்துவபலனை அளிக்கக்கூடிய சக்தி உள்ளது. அந்தப் பாட்டின் அர்த்தத்தை அறிந்தால் அன்பர்கள் உடல் நலனையும் நன்கு பாதுகாக்க முடியும் என்று கருதுகிறேன்.

எல்லாம் வல்ல இறைவன் நடராஜப்பெருமானை இந்த "ஞானசம்பந்தம்" திங்கள் இதழ் வெள்ளி விழா மட்டுமல்ல, தங்க விழாவும், வைர விழாவும் கொண்டாட வேண்டும் என்றும், மேலும், மேலும் விருத்தியடைய வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்கிறேன்.

## டாக்டர் திரு. K. அரங்கசாமிப் பிள்ளை M. B., B. S., சிதம்பரம்.

நமது "ஞானசம்பந்தம்" திருவருளாலும் குரு அருளாலும் ஞானமணம் கமழ திருவருட்பொலிவுடன் ஒவ்வொரு திங்கள் தோறும் மலர்ந்து சைவப் பெருமக்கட்குப் பெரும் அருள் விருந்தை அளித்துக் கொண்டு இன்று 25 வது ஆண்டு வெள்ளிவிழா மலராக அருள் மணமும் சிவமணமும் கமழ மலர்வது கண்டு மனம் மகிழ்கின்றேன்.

நமது கயிலைக் குருமணி அவர்கள் இதனைக் கண்போல் காத்து வருகின்றனர். இறைவனது திருவருள் ஞானத்தை முதன்மையாகக்கொண்டு அந்த மெய்ஞ் ஞானத்தையே அனைவருக்கும் அளித்து வருகின்றது. அஞ்ஞான இருளில் மூழ்கித் தவிக்கும் மக்கட்கு மெய்ஞ்ஞானத்தை வாரிவழங்கி மெய்ஞ் ஞானத்தோடு தொடர்புபடுத்துதலின் "ஞானசம்பந்தம்" என்னும் பெயர் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது. நமது கயிலைக் குருமகாசந்நிதானம் தோத்திர நூல்களாகிய பன்னிரு திருமுறைகட்கும், மற்றும் சாத்திர நூல்கட்கும் தனக்கே உரிய சிறப்பு முறையில் பல மேற்கோள்களோடு அருள் விளக்கங்களை வழங்கி வருவது சைவர்களுடைய சிந்தனைக்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளது. அதில் வெளியாகி வருகின்ற இலக்கிய, சைவ சித்தாந்த சிவாகமக் கட்டுரைகளும், கண்கவர் படங்களும் மக்களுக்குப் பயன் உடையதாகவும், சைவ உணர்ச்சியை ஊட்டுவதாகவும் அமைந்திருக்கின்றன. எதிர் காலத்தை மக்கட்கு முன்கூட்டியே உணர்த்தும் 'எதிர்காலம்' என்ற பகுதியைப் படித்து பலரும் பயன் அடைகின்றனர். இத்தகைய சிறந்த சமயப் பணியைச் செய்துவரும் ஞானசம்பந்தம் தமிழ் கூறும் நல்லுலகமெலாம் பரவி பயனளிக்குமாக.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பொன்னார் திருவடிகட்கு என் மனமொழி மெய்களாலாகிய வணக்கங்களைச் சமர்ப்பிக்கிறேன்.

**திரு. ஐ. ஏ. சிதம்பரம்பிள்ளை** M. A., M. L. C., " அன்பு நிலையம் " இலஞ்சி, தென்காசி.

திருப்பெருந்திரு கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளங்கொண்டு சமயத்திற்கும், சமய இலக்கிய வளர்ச்சிக்கும் ஆற்றிவரும செயற்கரிய செயல்களுக்கு சமய உலகம் என்றைக்கும் அவர்கட்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது.

" ஞானசம்பந்தம் " பல பேரறிஞர்களின் சமயக்கட்டுரை, சாத்திர ஆராய்ச்சிக் கட்டுரைகளோடு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் ஆசியுரை அருளுரைகள் தாங்கிவருவது, நமக்கு சமய வாழ்க்கையை நடத்த மிகவும் உதவுகின்றது

" ஞானசம்பந்தம் " இப்பணியில் மென்மேலும் சிறந்து விளங்கவும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளுரைகள் மக்களிடையேபரவி, எல்லோரையும் உய்விக்கவும், அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய் அண்ணல் அருள் புரிவாராக.

## நாரதர், திரு. ஸ்ரீநிவாசராவ்,

ஆசிரியர், நாரதர், சென்னை.

தருமை ஆதீனத் திங்கள் இதழாகிய ஞானசம்பந்தம் உதயமாகி இருபத்துநான்கு ஆண்டுகள் பூர்த்தியாகி இருபத்தைந்தாம் ஆண்டு தொடங்குகிறது. அதையொட்டி வெள்ளி விழா மலர் ஒன்று வெளிவர இருக்கிறது என்பதறிந்து மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

இத்தனை காலமாக இந்த மாளிகை சமயத்திற்கும், இலக்கியத்திற்கும் செய்துள்ள அரிய பணிகளை நான் நன்கறிவேன். தருமை ஆதீனத்திற்கும் எனக்கும் நட்பு ஏற்பட்டதன் வெள்ளி விழா ஆண்டும் இதுவேதான். ஆகவே, ஞானசம்பந்தம் முதல் இதழிலிருந்து அதனைத் தொடர்ந்து படித்து ரசித்து வருபவர்களில் அடியேனும் ஒருவன். இந்த மாளிகை நல்ல தமிழையும் வளர்த்திருக்கிறது. இதன் வாசகர் களைக் கைலை முதல், கன்னியாகுமரி வரை அடிக்கடி மகாசந்நிதானத்துடன் சகல க்ஷேத்திரங்களுக்கும் அழைத்துச் சென்றிருக்கிறது. புண்ணிய நதிகளில் நீராட வைத்திருககிறது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத் தின் சமய உரைகளையும், அறிவுரைகளையும் தொடர்ந்து தாங்கி வரும் ஞானசம்பந்தம், சைவத்திற்கும் தமிழுக்கும் அரிய சேவைகள் செய்து வருகின்றது. இன்னும் மென்மேலும் இது ஓங்கி வளரவும் தமிழ் மக்கள் நல்ல ஞானத்தைப்பெற்று நல்வாழ்வு வாழவும் இறைவன் அருள்புரிவாராக.

## வித்துவான் திரு. ஆ. சிவலிங்க முதலியார்

பேராசிரியர், ஸ்ரீமத் சிவஞான பாலயசுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்.

நற்றருமை யாதீன ஞானசம் பந்தமலர்
வெற்றியுடன் வெள்ளி விழாவதனைப்-பெற்றதே
கற்றறிந்தார் ஞானியர்கள் கண்டுவப்பச் சொல்மணத்தை
உற்றுலகில் உய்த்தே யுயர்ந்து.

உ
சிவமயம்

# தமிழ்த்தாய் வாழ்த்து

தருமையாதீன இசைப்புலவர், இசைப்பேரறிஞர், இசையரசு,

**திரு. M. M. தண்டபாணி தேசிகர்**

இராகம் - தோடி ] [ ஆதி தாளம். இரண்டுகளை


சித்ரலேகா

### பல்லவி

ஆருயிராம் தமிழ் அன்னையே—இயல்
ஆயும் அறிவினிலே அமிழ்தமெனத் திகழும் (ஆருயிராம்)

### அனுபல்லவி

சீருடையாய்க் கன்னிப் பேருடையாய்—அருட்
செல்வத் தமிழணங்கே சேயன்எனக் கருள்வாய் (ஆருயிராம்)

### சரணம்

பாரினிலே பல மொழிகளெல்லாம் உனது
பண்பை யறிந்து நாளும் பகர்கின்றதே
ஒருருவாய்த் தோன்றி மூவுருவாய் விளங்கி
உயிரும் மெய்யுமாய்வரி வடிவமுமாகி நின்றாய். (ஆருயிராம்)

'ஞானசம்பந்தம்' இதழை
இருபத்து நான்கு ஆண்டுகளுக்குமுன் தொடங்கியருளிய



தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

( தருமையாதீனத் திங்கள் இதழ் )

## " வெள்ளி விழா மலர் "

மலர் 25 | விசுவாவசு - கார்த்திகை - 10—12—65 | இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினாய் ! கூடலால வாயிலாய் !
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. ( சம்பந்தர் )

திருச்சிற்றம்பலம்

## தேச விளக்கு

பொருள்களை அறியும் அறிவில், காட்சி யறிவே தலையாயது. ஒரு பொருளைப் பற்றி எத்தனை வகையாகத்தான் நாம் உணர்ந்தபோதிலும், அதைக் கண்ணுற் காணாத பொழுது, மன நிறைவு உண்டாதல் இல்லை. அதனால், எந்தப் பொருளையும் நாம் கண்ணுற் காணவேண்டும் என்று விரும்புகின்றோம். கடவுளைக்கூடக் கண்ணுற் கண்டால் நலம் என்று எண்ணுகின்றோம். இதனால், காட்சி ஒன்றே, அறிவு எனபபடுதற்குச் சிறந்ததாதல் பெறப்படுகின்றது. அறிவுக்கே, 'காட்சி' என்ற ஒருபெயர் இருத்தலை நாம் அறிவோம்.

" இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர் "

என்றாற்போல்வன, அறிவு, 'காட்சி' எனப்படுதற்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

காட்சி, கண்ணால் பெறப்படுவது. அதனால், மக்கட்குக் கண்ணிற் சிறந்த உறுப்பு இல்லையாயிற்று. 'அகக் கண், அறிவுக் கண், ஞானக் கண்' என்றெல்லாம், அறிவையும், 'கண்' என்று வழங்கும் வழக்கமும், கண்ணினது சிறப்பைத் தெரிவிக்கும்.

" எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு "

" கண்ணுடையர் என்பவர் கற்றோர் "

என, அறிவைக் கொடுப்பதாகிய கல்வியை, 'கண்' என்று குறிப்பிடுதல் வெளிப்படை. எனவே, ஒருவனுக்குக் கண்ணில்லையேல், உலகமே இல்லையாம்.

கண் இத்துணைச் சிறப்புடையதாய் இருப்பினும், அது பயன்படுதல் எப்பொழுது? ஒளி உள்ள பொழுதேயாம். ஒளி இல்லையேல், கண் இருந்தும் இல்லையாம். ஆகவே, ஒளி இல்லாத பொழுது, கண்ணுடையவர்களும், கண்ணில்லாதவர்கள் போலவே, இன்னற்பட்டு, இடர்க்குழியில் விழ வேண்டியவராகின்றனர். அதனால், எல்லா நலங்கட்கும் முதலாவது ஒளியும், எல்லாத் தீங்குகட்கும் முதலாவது இருளும் ஆம் என்பது சொல்ல வேண்டா.

இருள் மூடிக்கொண்ட காலத்து அதனை நீக்குதற்கு ஏற்றப்படுவது விளக்கு. அதனால், இயற்கையாய் அமைந்த ஒளிகளாகிய ஞாயிறு திங்கள் முதலியவற்றையும் ஆன்றோர், 'விளக்கு' என வழங்குதலை,

'' எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு ''

என்னுந் திருக்குறளால் அறியலாம். இருளைவிட மிகுந்த தீய - அமங்கலப் பொருள் இல்லையாதலின், அதனைப் போக்குகின்ற விளக்கைவிடச் சிறந்த நல்ல - மங்கலப் பொருள் ஒன்று இருப்பதாக மக்கள் கருதவில்லை. அதனால், இரவில் மட்டுமன்றிப் பகலிலுங்கூட விளக்கேற்றி வைத்து வழிபடுவது, நம் நாட்டில் தொன்றுதொட்ட வழக்கமாய் வீடுதோறும் காணப்படுகின்றது.

இல்லங்களில்ஏற்றப்படும்விளக்குக்கள் அவைகளில் வாழ்பவர்கட்குமட்டுமே, இருளைப் போக்கி ஒளியைத் தரும். தெருக்களிலும் ஊர்களிலும் ஏற்றப்படும் விளக்குக்களும் அவ்வவ்விடங்கட்கு மட்டுமே பயன்படும். ஆயினும், உலகம் முழுவதற்கும் இருளைப் போக்கி ஒளியைத் தரும் விளக்குக்கள் யாவை? அவைதாம் ஞாயிறும், திங்களும், வெள்ளி வியாழன் முதலிய கோள்களும், பல விண்மீன்களுமாகும் இவைகளை, 'தேச விளக்கு- உலக விளக்கு' என்று கூறலாம்.

இத் தேச விளக்குக்களாகிய ஞாயிறு, திங்கள் முதலியவற்றிற்கும் ஒளியைத் தருகின்ற பொருள் ஒன்று உண்டு; அஃது யாது? அதுவே முதற் பொருள் - பரம்பொருள் - இறை. இதனை உண்மை உணர்ந்தோர் உணர்வர். நாவுக்கரசர், தேச விளக்குக்கட்கெல்லாம் தேசு - ஒளி தருபவன் இறைவனே என்பதை,

'' தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ ''

என்று அருளிச்செய்தார்.

'' நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள ''

என்று பரிபாடலிலும் வருகின்றது.

'' வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ''

என்ற திருவாசகத்திலும் இறைவன் ஒளிப்பொருள்களிலெல்லாம் ஒளியாய் நிற்றல் காணப்படும். இவற்றாலெல்லாம், உண்மையில் தேச விளக்காய் நின்று உலகிற்கு ஒளிதருபவன் இறைவனே என்பது பெறப்படும். அதனால், கதிரவனையும், வேள்வித்தீயையும், விளக்கையும் வழிபடும் வழிபாடுகள் பலவும், அவற்றில் இரண்டறக் கலந்து நிற்கும் இறைவனை நோக்கியே செய்யப்படுகின்றன என்பது தெளிவு. கதிரவன் முதலிய பொருள்களுள், விளக்கு எளிதிற் பெறத்தக்கது; இல்லங்களில் இருந்து பெரிதும் பயன் தருவது; ஆதலின், விளக்கு, சிறந்த தெய்வத் தன்மை பொருந்திய பொருளாக இல்லங்களில் விளங்குகின்றது.

சிறப்புக் காலங்களில் நம் நாட்டு மக்கள் விளக்கை மிகுதியாக ஏற்றி வைத்து மகிழ்வர். கோயில்களிலும விளக்கை மிகுதியாக ஏற்றுதல் ஒரு தனிச் சிறப்புடையது. 'இலட்ச தீபம்' என்று ஒருவிழா, கோயில்களில் கொண்டாடப்பெறும் அவ்வமையம் விளக்குக்களை எங்கும் நிறைய ஏற்றிவைத்துக் கோயிலையே ஒளிமயமாகச் செய்வர். ஆலயத் தொண்டில், திருவிளக்கிடுதல் சிறந்த பணியாகும். அதன் பயனாக ஞானமே உண்டாகும் என்பது உண்மை.

'' விளக்கிட் டார்பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞான மாகும் ''

என்பது அப்பர் அருள் வாக்கு. இறைவன் திருக் கோயிலில் திருவிளக்கிடும் தொண்டினைச் செய்தே முத்தி பெற்ற நாயன்மார்கள் சிலர் உளர்.

இத்தகைய விளக்கீட்டு விழா, கார்த்திகைத் திங்களில் முதன்மை பெற்று விளங்குகிறது. கார்த் திகைத் திங்களில் கார்த்திகை நாளில் சிவாலயங் கள் பலவற்றிலும் விளக்கீட்டு விழா நடைபெறும். மற்றைய தேவாலயங்களிலும் இஃது இன்றியமை யாது நடைபெறுவதே. கார்த்திகை விளக்கீட்டு விழாவைக் காணுதல் மனிதப் பிறப்பு எடுத்ததன் பயனாகும் என்பதைத் திருஞானசம்பந்தர்,

" தொல்கார்த்திகை நாள்.........விளக்கீடு காணாதே
போதியோ பூம்பாவாய் "

எனக் குறித்தருளுகின்றார்.

விளக்கு, மலைமேல் ஏற்றப்படுமாயின், அது பலராலும் காணப்படும். சிறப்புடையதாய் விளங்கு மாதலின், மலைமேல் ஏற்றப்பட்ட விளக்கை, 'குன் றின்மேல் இட்ட விளக்கு' எனப் போற்றுதல் நம் மரபு ஆதலின் கார்த்திகை விளக்கீட்டு விழா, இறைவன் மலைமேற் கோயில் கொண்டுள்ள இடங் களில் சிறப்புற்று விளங்கும். மலைமேற் கோயில் கொண்டு இருத்தலே யன்றி, இறைவன் தானே ஒரு மலையாகி நிற்கும் தலம் அண்ணாமலை - திரு வண்ணாமலை ஆகையால், கார்த்திகை விளக் கீட்டு விழா, அத்தலத்திற்குச் சிறப்பாக உரியதாய் விளங்குகின்றது.

பிரம விட்டுணுக்களின்முன், அடிமுடி தோன் றாத அனற் பிழம்பாய் எழுந்து நின்ற இறைவன், பின்பு மலைவடிவமாகி, ' ஆண்டிற்கொருமுறை ' கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் மலை உச்சியில், இம் மலையின் உண்மை வடிவாகிய சோதியைத் தோற்றுவிப்போம்; அதனைத் தரிசித் தோர் எல்லா நலங்களும் எய்துவர் ' என்று அருள் புரிந்து, அங்ஙனமே செய்துவருகின்றான் என்பது, அண்ணாமலையைப் பற்றிய புராண வரலாறு. இறைவன் அனல் வடிவாய்த் தோன்றி நிற்கும் தலமாதலின், பஞ்ச பூதத் தலங்களில் திருவண் ணாமலை, தேயுத் தலமாய் இலங்குகின்றது. இறை வன் தேயுலிங்கமாய் - ஒளிஇலிங்கமாய் விளங்கும் இத்தலத்தில், ஒளிவிழாவாகிய கார்த்திகை விளக் கீட்டு விழா, முதன்மை பெற்று விளங்குகின்றது. இறைவனே தேச விளக்கு என்று மேற்கூறினோம். அங்ஙனமே, அண்ணாமலைமேல் விளங்கும் விளக் கும் யாவருங்காண உலக விளக்காய் - தேச விளக்காய் இலங்கும்.

ஞாயிறு, திங்கள் முதலிய தேச விளக்குக்கள் எல்லாம் புற இருளையே போக்கும். அக இருளை அகற்றமாட்டா. கார்த்திகை விளக்கு புற இரு ளோடு, அக இருளையும் போக்கும். ஏனெனில், அஃது அஞ்ஞானத்தை அகற்றும் இறைவனது அருள் வடிவேயாய் உள்ளது. இவ்வுண்மையைச் சிவப்பிரகாச அடிகள் தமது, ' சோணசைல மாலை ' என்னும் நூலுள்,

" கார்த்திகை விளக்கு மணிமுடிசுமந்து
கண்டவர் அகத்திரு ளனைத்தும்
சாய்த்துநின் றெழுந்து விளங்குறுஞ்சோண
சைலனே "

என விளக்கினார். ' கார்த்திகை விளக்கு, மக்க ளால் ஏற்றப்படும விளக்காயினும், அதனை ஏற்கின்ற இறைவன் தானே தோன்றிய விளக்கு, உலகிற்கு ஒருவிளக்கு ' என்றும் அவர் கூறு கின்றார்.

' அகவிளக் கென்ன அகல்திரி நெய்தீ
ஆக்குவோ ரின்றியே எழுந்த
சகவிளக் கென்ன விளங்குறுஞ் சோண
சைலனே "

என்றது அறிக.

உலகத்திற்கு அருள் ஒளியைத் தருகின்ற இறைவன் சகவிளக்காகவே, அவன் அத்தன்மை யைப புலப்படுத்தும் கார்த்திகை விளக்கையும், ' சகவிளக்கு ' என்றற்கு ஐயமில்லை. தேச விளக் கெலாமான இறைவன், ஒரு தேசவிளக்கைக் காட்டும்நாள் திருக்கார்த்திகைநாள்; இஃது இருளை யெல்லாம் போக்கும் திருநாள்.

அஞ்ஞானம் மட்டும், 'இருள்' என்ப்படுவ தன்று; வறுமை, பகை முதலிய இன்னல்கள் பலவும், 'இருள்' எனப்படும். ஆகவே இவை அனைத்தையும் போக்க வல்லது, கார்த்திகை விளக்காகிய தேச விளக்கு. அதனை அண்மையில் வழி பட்டு அருள் ஒளியைப் பெற்றனர், அன்பர் பலரும். அவ்வருட் சுடராகிய தேச விளக்கு, தேசம் முழுவ தற்கும் வறுமை, பகை, அறியாமை முதலிய துன்ப இருள் அனைத்தையும் போக்கி, இன்ப ஒளியை என்றும் விளங்கச் செய்யும். இந்நன்னாள், நம் ஞானசம்பந்தத்தின் வெள்ளி விழாத் தொடக் கத்திற்கு முன்னிற்கும் பொன்னாளாய் அமைந்தமை போற்றற்குரியது.

உண்ணாமுலை யுமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே.

சோதியே! சுடரே! சூழொளி விளக்கே!
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே! பரனே! பால்கொள்வெண் ணீற்றாய்!
பங்கயத் தயனுமால் அறியா
நீதியே! செல்வத் திருப்பெருந் துறையுள்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே.

திருச்சிற்றம்பலம்

# வெள்ளிவிழா

உதயம்; வெள்ளி உதயம். 'வெள்ளி முளைத்தது' என்றால், 'பொழுது புலர்ந்தது' என்பது பொருள். வெள்ளி முளைத்ததைக் காணும்பொழுது மக்கட்கு ஏன்! உலகிற்கே ஓர் ஆனந்தம். பறவைகள் செய்யும் ஆரவாரம் அந்நேரத்தில் பலர்க்கும் இன்பத்தை ஊட்டும். கன்றுகள் தம் தாய்ப் பசுக்களை அழைக்கும் ஓசையும், அவற்றிற்கு அத்தாய்ப் பசுக்கள் எதிர்க் குரல் கொடுக்கும் ஓசையும், ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளவர்களையும் விழித்தெழச் செய்யும். அவற்றின் பின் நாவில் நீரூறும்படி பால் கறக்கும் ஓசையும் தயிர் கடையும் ஓசையும் எழும். இவைகட்கெல்லாம் முன்னே காணப்படுவது வெள்ளி உதயம்.

நமது 'ஞானசம்பந்தத்'திற்கு 25 ஆவது ஆண்டு தொடங்குகின்றது. அதன் அறிகுறியாக வெள்ளிவிழா மலர் மலர்கின்றது. திருத்தருமை யாதீனத்தின் 24 ஆவது குருமகாசந்நிதானமவர் களது திருவுளப்பாங்கில் தோன்றி, 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் திருக்கண் பார்வையில் வளர்ந்துவரும் 'ஞானசம்பந்தம்', இருபத்துநான்கு ஆண்டுகளாகச் சைவப்பணியும், தமிழ்ப்பணியும் செவ்வனே ஆற்றிவந்திருப்பதை நேயர்கள் நன்கறிவர்.

ஞானசம்பந்தத்தின் நற்பணிக்கு முதலாவதாக, அருளுரைகள் பலவற்றையும் வழங்கியருளியதோடு, 25 ஆவது ஆண்டுத் தொடக்கத்தை முன்னிட்டு வெளிவரும் இவ் வெள்ளிவிழா மலருக்கு அன்ன தோர் அருளுரையுடன் 'ஞானசம்பந்தம்' நீடு வளரத் திருவருள் பாலித்து அருளாசிச் செய்தியை வழங்கி யருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது திருவடிமலர் களுக்கு எங்கள் மன மொழி மெய்களாலாகிய பெரு வணக்கங்களைச் செலுத்திக்கொள்ளுகிறோம்.

அரசியல் துறையிலும், இலக்கியத் துறையிலும், பிற வகையிலும் சிறந்து விளங்கும் பெருமக்கள் பலர். தங்கள் கருத்துரை, மகிழ்ச்சியுரை, வாழ்த்துரை முதலியவற்றை ஞானசம்பந்தத்திற்கு அவ்வப் பொழுது அளித்துள்ளனர். சமயம், மொழி, அறிவியல் வரலாறு முதலிய பல துறைகளில் சிறப்புற்ற அறிஞர் பலரும் தங்களது அரிய ஆராய்ச்சி முதலியவற்றைத் திங்களதோறும் தொடர்ந்தும், அவ்வப்பொழுதும் வழங்கியிருக்கின்றனர். அப்பெருமக்களது வாழ்த் துரைகளும், அறிஞர்களது கட்டுரை முதலியனவும், இவ் வெள்ளிவிழா மலரையும் நன்கு அலங்கரிக்கின் றன. அவர்கள் அனைவர்க்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி என்றும் உரியது.

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## என்றும் அளிப்பவன்

**ஆசா னுளத்திருந்தும் ஆன்மா வுளத்திருந்தும்**
**மாசார் மலத்தை யறுத்தருளி—நேசா**
**ஒளித்திருந்த இன்பவெள்ளம் ஒன்றவுயிர்க்**
**அளிப்பவன்நீ சோக்கநா தா. [கேன்றும்**

— குருஞானசம்பந்தர்.

அன்பு, அருள், இரக்கம், கருணை என்பனவற்றோடு ஒத்தது, ‘அளி’ என்னும் ஒருசொல். இஃது, ‘அன்பு, அருள்’ இரண்டிற்குமே உரிய பெயராய் வழங்கும். அளிதல் நெகிழ்தல்; அஃதாவது மென்மையாதல். நன்றாய்ப் பழுத்த பழத்தை, ‘அளிந்த பழம்’ என்பது வழக்கம்.

“அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே” எனத் திருவாசகத்திலும் வருதல் காணலாம். ஆகவே, ‘அளி’ என்பது, மனத்தின் இளகிய நிலையைக் குறிப்பதாயிற்று. அன்பினாலும் மனம் இளகும்; அருளினாலும் மனம் இளகும; தமக்கு இனியராய் இருப்பார் மீது உண்டாகும் இளக்கம் அன்பு. இன்னார் இனியார் என்பதின்றி, எல்லார் மீதும் உண்டாகும் இளக்கம் அருள்.

“அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே”

(திருவிசைப்பா)

என்ற இடத்தில், ‘அளி’ என்பது, அன்பைக் குறித்தது.

“அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண்
அம்மானாய்”

**(திருவாசகம்)**

என்ற இடத்தில், ‘அளி’ என்பது, அருளைக் குறித்தது.

உயிர்கள் இறைவன் தமக்குச் செய்யும் நன்மையை உணரும்பொழுதே அவைகட்கு, அவனை நினைந்து உள்ளம் உருகும் நிலை உண்டாவதாகும். இறைவனுக்கு அவ்வாறு இன்னார் இனியார் என்பது இன்றி, எல்லா உயிர்களிடத்துமே இரக்கம் உளதாகும். அதனால், உயிர்கள் இறைவனிடத்துச்செய்வது அன்பு என்பதும், இறைவன் உயிர்களிடத்துச் செய்வது அருள் என்பதும் அறியலாகும்.

‘அளிதல்’ என்பதிலிருந்தே, ‘அளித்தல்’ என்பது வந்தது. ‘அளித்தல்’ என்பதற்கு, ‘கொடுத்தல, காத்தல்’ என்ற இருபொருள் உண்டு உள்ளத்தில் அருள் உண்டானால்தான், கொடுத்தல் உண்டாகும். ஆகவே, இன்னார் இனியார் என்று கருதாது, இரக்கம் காரணமாகக் கொடுப்பதே, ‘அளித்தல்’ என்று சொல்லப்படும் அருள் காரணமாக, ஒருவர்க்கு அவர் வேண்டிய பொருளைக் கொடுத்தல், அவரைக் காப்பாற்றுதலாக அமைகிறது ஆதலின், கொடுத்தல் என்பதற்குப் பிறகு, ‘காத்தல்’ என்ற பொருளும், ‘அளித்தல்’ என்பதற்கு உண்டாயிற்று.

‘அளித்தல்’ என்பது, ‘கொடுத்தல்’ என்று பொருள் தருதலை அனைவரும் அறிவர். ஆயினும், அது, ‘காத்தல்’ என்ற பொருள்தருதலை, இலக்கியங்களை உணர்ந்தவரே அறிவர்.

“..........ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை”

**(திருஞானசம்பந்தர் தேவாரம்)**

என்றதுபோன்ற இடங்களில், 'அளித்தல்' என்பது, 'காத்தல்' எனப் பொருள்தருதலைக் காணலாம்.

'ஒருவர்க்கு அவர் வேண்டிய பொருளைக் கொடுத்தல்' என்பது பலவகையில் உள்ளது. உயிர் உடம்போடு பொருந்தி வாழ்தற்கு உணவு முதன்மையானது. ஆதலின், பசித்து வந்தோர் முகம்பார்த்து இரங்கி, அவர்க்கு வேண்டிய உணவைக் கொடுத்தல் முதலாவதாகின்றது.

" உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே "

என்பது சங்கப் பாட்டு (புறநானூறு).

இனி, உடை இல்லாது திரிகின்றவர்களைக் கண்டு இரங்கி, அவர்கட்கு உடையளிப்பதும், உணவு அளிப்பதற்கு அடுத்த நிலையில் வேண்டப்படுகிறது. அதற்கு மேல் நோய்க்கு மருந்து பெற்று உண்ண இயலாத வறியவர்களுக்குப் பொருளை எதிர் நோக்காமல் மருந்து கொடுத்து நோய் தீர்த்தலும் ஒரு சிறந்த செயலே. மற்றும், கல்வி கற்கும் ஆற்றலும், விருப்பமும் உள்ள சிறுர்க்குக் கைம்மாறு கருதாது கல்வி கற்பித்தல் ஓர் அருஞ் செயலாகும். இவையெல்லாம் ஒவ்வொருவர் ஒவ்வொரு சமையத்தில் ஒவ்வொருவர்க்குச் செய்யும் உதவிகளாம்.

இனிப் பலருக்கும் எக்காலத்தும் பயன்படும் வகையில் காவளர்த்தல், குளந்தொடுதல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், அறச்சாலை யமைத்தல் முதலியவை நிலையான பெருஞ்செயல்களாகும். இப்படி அளவற்றனவாக உள்ளவைகளை எல்லாம் நம்முன்னோர், 'முப்பத்திரண்டு அறங்கள்' என்று ஒரு வரையறை செய்தனர். இவை அனைத்தும், அருள் உள்ளத்தால் செய்து, பிறரைக் காப்பனவாகலின், அளித்தல்களே யாம்.

இவைகளில், எத்துணை அளித்தல்களை எத்துணைப் பேர் எத்துணைக் காலம் செய்கின்றனர்? யாரோ ஒருசிலர், ஒருசில வேளைகளில், ஒருசிலருக்குச் சிலவற்றைச் செய்கின்றனர். அவையும் பெரும்பான்மையும் நிலையில்லாத உடலுக்கு நன்மையான சிலவே யாமல்லது, நிலையுடைய உயிருக்கு நன்மையாவன அல்ல. இச் செயல்களால் எல்லாருமே - எல்லா உயிர்களும் - எப்பொழுதும், எல்லா உதவிகளையும் பெற்று, இக பரமாகிய எல்லா நலங்களையும் எய்துதல் கூடுமோ! கூடாது. ஆகவே, அங்ஙனம் எல்லா வுயிர்கட்கும், எஞ்ஞான்றும், எல்லா உதவிகளையும் செய்து அளிப்பவன் - காப்பவன் யார்? இறைவன் ஒருவனே அங்ஙனம் காப்பவனுவன்.

**" எவ்விடத்தும் - காத்தல் அவன்கடனே காண் "**

என்கின்றது திருக்களிற்றுப்படியார். எவ்விடத்தும் எப்போதும் துணையாய் நின்று, எல்லாவற்றையும் அளித்துக் காத்தலின், இறைவனைவிட உயிருக்கு இனியவர் பிறரில்லை என்னுங் கருத்தினுல், அவனை,

" எப்போதும் இனியான் "

என்று அருளிச்செய்தார் திருநாவுக்கரசர். இறைவனது வள்ளற்றன்மையை விளக்க அவர்,

" வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய் "

என்று அருளினர். மாணிக்கவாசகர், உயிர்கள் தமக்கு வேண்டுவன இவை என்பதையும் அவன் அறிவிக்கவே அறியும் என்பதை அறிவித்தற்கு,

" வேண்டத் தக்கது அறிவோய் நீ "

என்று முன்னர் அருளிச் செய்து, பின்னர்,

" வேண்ட முழுதும் தருவோய் நீ "

என்று அருளினர். இறைவன் உதவி இவ்வாறு எல்லா உயிர்கட்கும் எவ்விடத்தும் எஞ்ஞான்றும் இடையறாது நிகழும் பேருதவியாய் இருத்தற்கும், நம்மனோர் செய்யும் உதவி ஒருசிலருக்கு ஒருசிலவிடத்து ஒருசில வேளைகளில் நிகழும் சிற்றுதவியாய் இருத்தற்கும் காரணம், இறைவனது அருளும், ஆற்றலும் அளவில்லாதனவாய் இருத்தலும், நம்மனோரது அருளும், ஆற்றலும் மிகச் சிறியனவாய் இருத்தலுமேயாகும். ஆகவே, இறைவன் உயிர்களிடத்து வைத்துள்ள கைம்மாறற்ற பெருங்கருணைக்கு, தாய் தன் மகவிடத்து வைக்கின்ற கைம்மாறற்ற அன்பும் ஓரளவே ஒப்புமை சொல்லத்தக்கதாகும். ஆதலின், அதனை யுணர்ந்த அருளாளர்கள், அவனது அருட் பெருக்கை நினைந்து நினைந்து, நெஞ்சம் நெக்குருகி,

" தாயிற் சிறந்த தயாவான தத்துவனே "

" பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்பரிந்து "

என்றெல்லாம் பலபடியாகப் பாடிப் பரவுகின்றனர். திருவிளையாடற் புராணத்துள் சொல்லப்படும் பன்றிக் குட்டிகட்கு முலைகொடுத்த திருவிளையாடல், சிவபெருமானது அளவிலாப் பெருங்கருணைக்கும், அக்கருணை காரணமாக அவன் உயிர்கட்கு எளிவந்தருளுந் தன்மைக்கும் பெரியதோர் எடுத்துக்காட்டாம். அதனுல், மாணிக்க வாசகர்,

" ஏனக் குருளைக் கருளினை போற்றி "

என்றும்,

" ஏவுண்ட பன்றிக் கிரங்கி யீசன்
எந்தை பெருந்துறை யாதி அன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொ டுத்த
கிடப்பறி வாரெம் பிரானு வாரே."

என்றும் அவ்வரலாற்றைச் சிறந்தெடுத்தோதியருளி னர். இன்னும் அவர்,

" தாயாய் முலையைத் தருவானே "

என்று அருளிச்செய்ததிலும், இவ்வரலாற்றுக் குறிப்பு உண்டென்று கொள்ளல் தகும். இவற்றாலெல்லாம், இறைவன் ஒருவனே பேராற்றலும், பெருங்கருணையும் உடையவனாய், எல்லா உயிர்களையும், எஞ்ஞான்றும், எல்லா நலங்களையுந் தந்து அளிப்பவன் - காப்பவன் என்பது விளங்கும். எனினும், இதனை, உண்மை ஞானத்தைப் பெற்ற ஞானிகளே உணர்வர்; ஏனை யோர் உணர்தல் அரிது. ஆதலின், எங்கள் ஆதி குருமுதல்வர் அவர்கள் தங்கள் ஆன்மார்த்த மூர்த்தி யைத் துதித்தருளிய மேற்காட்டிய வெண்பாவில், அப் பெருமானை,

" உயிர்க்கு என்றும் அளிப்பவன்நீ சொக்கநாதா "

என்று குறிப்பிட்டருளினார்கள். 'அளித்தல் - மனம் இரங்கிக் கொடுத்தல்' என முன்பே சொல்லப்பட் டது. 'உயிர்களுக்கு இறைவன் எதனை மனம் இரங்கிக் கொடுக்கின்றான்' என்ற வினாவிற்கு விடையாக அவர்கள், " இன்ப வெள்ளம் " என்று அருளிச்செய் தார்கள். 'இன்பம்' என்று மட்டும் கூறாது, " இன்ப வெள்ளம் " என்று அருளிச் செய்ததனால், அஃது எல்லையில்லாது விளையும் பேரின்பமே யாயிற்று.

உலகப் பொருள்கள் தரும் இன்பம், உடல் இன்பம். அவை நிலையில்லாது ஒழியும் சிற்றின்பம். உணவு, உடை, உறையுள் முதலியவற்றால் வரும் இன்பம் யாவும் இத் தன்மையனவே. இவைகளுள் எவையேனும் ஒன்றிரண்டைத்தான் நம்மனோர் பிறர்க்கு எப்பொழுதாயினும் சிறிது கொடுத்தல் இயலும். ஆனால் இறைவன் இவைகளையும் அளிப் பான்; இவை அனைத்திற்கும் மேலான உயிரின்ப மாகிய பேரின்பத்தையும் தந்தருளுவான்.

" இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே "

என்பது நம்பியாரூரர் திருவாக்கு. உடலுக்கு உரிய தாகிய உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் வரும் சிறிய இன்பத்தைப் பிறர் தருதலுங் கூடும், ஆனால், உயிர்க்கு உரியதாகிய பேரின்பத்தை இறைவ னன்றிப் பிறர் தருதல் இயலாது. ஆகவே, 'இன்ப வெள்ளத்தை - வெள்ளம் போன்ற பேரின்பத்தை அளிப்பவன் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானே' என்று அருளிச்செய்கிறார்கள் எங்கள் ஆதி குருமூர்த்திகள்.

பொங்கித் ததும்பி எங்கும் பூரணமாய் ஏகவுரு வாய்க் கிடக்கின்ற இன்ப வெள்ளத்தை அடைந்த உயிர், என்றும் அந்த இன்ப வெள்ளத்திலே மூழ்கித் திளைத்திருப்பதன்றிப் பின் ஒருபோதும் துன்பம் என் னும் சூழலில் தோன்றுதல் இல்லை. அதனால், " என்றும் அளிப்பவன் நீ " என்று அவர்கள் அருளிச்செய்தார்கள்.

'இந்த இன்ப வெள்ளத்தை உயிர்கட்கு இறைவன் என்றும் அருளுவது, அருள்காரணமாகவன்றிப் பிறி தொரு காரணத்தால் அன்று' என்பதைக் குறிப் பிடவே, இறைவனை, " நேசா " என்று அவர்கள் அழைத்தருளினார்கள்.

'என்றும் வற்றாது பெருகும் இப் பேரின்ப வெள்ளம் எங்கிருந்து பெருகிற்று' என்பார்க்கு, " ஒளித்திருந்த இன்ப வெள்ளம் " என்று அருளினார்கள். இந்த இன்ப வெள்ளம் என்றும் எங்கும் இருப்பது தான். ஆனால், அதனில் மூழ்கித் திளைக்க வகையறி யாமலே நாம் துன்பத்துள் சுழலுகின்றோம். இது வெள்ளத்தில் நாவறண்டு நிற்பதுபோலும், நகைப் பைத் தருவதொன்று.

" வெள்ளத்துள் நாவற்றி யாங்குன் அருள்பெற்றுத்
துன்பத்தின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண்டாய் "

என்ற திருவாசகமும்,

" வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்
கள்ளத் தலைவர் கடன் "

என்ற திருவருட்பயனும் ஊன்றியுணரத்தக்கன.

கரையற்ற பெரிய வெள்ளம் எப்படிச் சிறிதும் நம் கண்ணுக்குத் தோன்றாது ஒளித்திருந்தது என்பதை விளக்கவே திருவருட்பயன், 'எங்கும் விடிந்திருளாம்' என்று கூறிற்று. அஃதாவது, சூரியன் நன்கு உதய மாகி, எல்லா இடங்களிலும் தனது பேரொளியை வீசியபோதிலும், படலத்தால் மறைக்கப்பட்ட கண்ணை யுடையவர்களுக்கு உள்ளது இருளேயாம். அது போல, மலத்தால் மறைக்கப்பட்டு ஞானக்கண்ணை யிழந்தவர்களுக்கு இந்தப் பேரின்ப வெள்ளம் எங்கும் நிறைந்திருப்பினும், உள்ளது துன்பமேயாம். ஆகவே, கண்ணில் படர்ந்த படலத்தை நீக்கும் மருத் துவன்போல, இறைவன் உயிர்களின் ஞானக்கண்ணை மறைத்துள்ள மலத்தை நீக்குகின்றான். இதனை,

"மாசார் மலத்தை யறுத்தருளி" என்று அவர்கள் அருளிச்செய்தமையால் அறிகின்றோம். மாசு - குற்றம். மருத்துவத்தால படலம் படிமுறையில் நீங்குவது போல, இறைவனது திருவருட் செயல்களால் மலமும் படிமுறையில் நீங்குவதாகும். அது முற்றிலும் நீங்கும் நிலேயே, 'மலபரிபாகம்' எனப்படுகின்றது.

குற்றம் பொருந்தியதாகிய மலத்தை இறைவன் நீக்குதல் ஆசான் மூர்த்தி வாயிலாகவேயாம். அஃதாவது, சிவமாந் தன்மைப் பெருவாழ்வெய்தி விளங்கும் ஆசான் மூர்த்திகளது கருவிகரணங்களை எல்லாம் இறைவன் தனது கருவிகரணங்களேயாக வேறற விளங்கிநின்று, திருநோக்கம், பரிசம் முதலியவற்றால் மாணக்கனது மலத்தைப் போக்கியருளுவன். அதனை, "பலவிதம் ஆசான் பாச மோசனந்தான் பண்ணும் படி" என்ற சிவஞான சித்தியால் அறியலாம்.

மலம் நீங்க நீங்க, மாணவனது உள்ளத்தில் சிவம் பிரகாசிக்கும். ஆதலின்,

"ஆசா னுளத்திருந்தும் ஆன்மா வுளத்திருந்தும்
மாசார் மலமகற்றி"

என்று அருளினர்கள். இறைவனுக்கு உயிர்களிடத்து நேசம் என்றும் உள்ளதாயினும், படலம் நீங்கும் பக்குவத்தில்தான் நீக்கப்படுவது போல, பரிபாகம் அடையும் போதுதான் அஃது இறைவனல் நீக்கப்படும்.

இறைவனது திருவருட் செயலால் தாங்கள் மல மறைப்பு நீங்கி அறிவுக்கண் பெற்று அவனை அறிந்து இன்பம் எய்தினமையை,

"பிரிந்தேன் மலத்துனது பேரருளி னலே
அறிந்தேன் உனைநன்று ஐயா—செறிந்தஇன்ப
பூரணு செங்கமலப் பொற்பாதா கூடலிலவாழ்
ஆரணு சொக்கநா தா"

என்ற வெண்பாவிலும் அவர்கள் இனிது விளங்க அருளிச்செய்தார்கள். இன்னேரன்ன, எங்கள் ஆதி குருமூர்த்திகளது அருள்வாக்குக்கள், 'எல்லார்க்கும் என்றும் எல்லாம் அளிப்பவன் இறைவனே' என்ற உண்மை நிலையை உளங்கொள உணர்த்தி உய்விப்பனவாம். ஆதலின், அவற்றை உலகம் அன்போடும், ஆர்வத்தோடும் ஓதி உய்தி பெறுவதாக.

**உடம்பெங்கும் உயிர் நிறைந்திருப்பினும், இரண்டிடங்களை உயிர் சிறப்பாகப் பற்றிநிற்கும். அவை, 'இருதயம் புருவநடு' என்பன. உயிர் சிறப்பாகப் பற்றிநிற்கும் இந்த இரண்டிடங்களிலும் அகத்திலே இறைவனது நடனம் நடைபெறுவதாகும். நடனம் புரியும் இடம் திறந்த வெளியாய் இருத்தல்வேண்டும். அதனல், மேற்சொல்லிய இரண்டு இடங்களும் 'அம்பலம்' என்று சொல்லப்படும்.**

**ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமணி அவர்கள்**

" அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனே "

என்று பாடிக்கொண்டு, மீண்டும கனகசபையை அடைந்து பெருமானை வணங்கி, ஆரா அன்பால, " அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை " என்ற திருத்தாணடகத் திருப்பதிகத்தை அருளிசசெய்தார். அதில், இறைவனை, அவன் யாவராலும் அழித்தற்கு அரியவன்; எல்லாரினும் பெரியவன்; எல்லாப் பொருளகளிலும் நுட்பமாய்க கலந்திருப்பவன்; ஆயினும், தன் அடியார்களுக்கு எளியவன்; தேனினும் பாலினும் இனியவன்' என்றெல்லாம் சொலலி வருகின்ற அவர், அடியார்களுக்கு அருமருந்தாயும் இருக்கின்றான்' என்று அருளிச்செய்கின்றார்.

அருந்துணை - எல்லா நற்பண்புகளும் நிறைந்த ஒப்பற்ற துணைவன் அருமருந்து கிடைத்தற்கு அரிய மருந்து. அரிய பெரிய நோய்களைத் தீர்ப்பது மட்டும் அன்று; மரணத்தையே விலக்கக கூடிய மருந்து. 'இவை இரண்டும் அடியார்களுக்கே' என்பதற்கு, அதனை இடையிலே வைத்தார் அகல் ஞாலம் - மிகப் பரந்த உலகம். துணை - துணைவர்; சகோதரர். பற்று - செல்வம், பெருந்துணை - எந்த வகையான இடரையும் நீக்கிக் காக்கும் உறுதுணை, உடன் பிறந்தார், சுற்றத்தார், செல்வம் முதலாக எல்லாப் பொருள்களிலும் உள்ள பற்றுக்களையும் விட்டு - மகளிர் இன்பத்தையும் வெறுத்து, பலரை, நினைத்து அலையாமல் தன்னையே நினைப்பவர்கட்குப் பெருந்துணையாய் நின்று எல்லா இன்னல்களையும் நீக்கிக் காக்கின்றான். பெரும்பற்றப்புலியூர்ப்பெருமான் - பொன்னம்பலக் கூத்தன், ஆதலின் அவனை நினையாமலும், அவன் பெயரைச் சொல்லாமலும் இருத்தல கூடுமோ! அவ்வாறு இருக்கும் நாள்கள் எவையேனும் இருந்தால் அவைகளை மனிதப் பிறப்புடன் இருந்த நாளாகக் கருதுதல் இயலாது.

இவ்வாறு அத்திருத்தாண்டகத்தால் உறுதி பெறக் கூறுகின்றார் நாவுக்கரசர். இந்த உறுதிப் பாட்டினை நம் மனத்திற்கு அளிப்பதால், நாவுக்கரசரை, நோய்களுக்கு மனச் சிகிச்சை அளிக்கும் மருத்துவர் எனலாம. உடல் நோயையே அன்றி, மன நோயையும் - ஏன் மரணத்தையும் போககும் அருமருந்து இறைவன் என்றால், ஏன் அவனை அடைந்து நாம் எல்லா நலஙகளும் எய்துதல் கூடாது! இந்த அருமருந்தை உண்டு, தோற்றது தம் வயிற்றின் அகம்படியே குடரோடு துடககி முடக்கிய சூலைநோய் தீர்ந்த அனுபவமுடைய பெரியவர் அவ்வனுபவத்தின் பயனைக எடுத்துச் சொல்லிய பின்பும் அதனை அடையத் தயஙகுதல் கூடுமோ!



# திருக்கயிலாய பரம்பரைத் - - திருத்தருமையாதீனம்

உயிர்கள் இயல்பாகவே பாசத்துள் அகப்பட்டவை; அதனால், அவை அநாதிமலபெத்த முடையவை; இறைவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கினவன்; அதனால், அவன் அநாதி முத்தனாய் இருப்பவன். பெத்தம் - கட்டு, எவ்வாற்றானும் துன்பமே தரும்; ஆதலின், துன்பக் கடலில் அகப்பட்டுத் துயருறுகின்றன, முத்தி - கட்டின்மை, இன்பத்தைத் தரும்; அதனால், இறைவன் எல்லையில்லாத இன்பமே வடிவாய் இருககின்றான். இன்பமே வடிவாய் இருத்தலுடன், கைம்மாறற்ற கருணைமூர்த்தியாகவும் அவன் விளங்குகின்றான். ஆதலின், உயிர்கள் பாசப்பிணிப்பால் படுந் துன்பத்தைக்கண்டு இரங்கி, அவைகளை இன்பக் கரையில் ஏற்றுவதற்கு எத்துணையோ வகையான செயல்களை இடையறாது செய்துவருகின்றான். அச்செயல்கள் அனைத்தும் ஐந்து வகையில் அடக்கிச் சொல்லப்படும். அவை, 'படைத்தல், காத்தல். அழித்தல், மறைத்தல், அருளல்' என்பன. இவை, 'பஞ்ச கிருத்தியங்கள்' என்றும் பெயர் பெறும்,

படைத்தலும், காத்தலும், அழித்தலும் உலகின்பால் நிகழ்வன; மறைத்தலும், அருளலும் உயிர்கள் பால் நிகழ்வன. 'ஒருமலம் உடைய உயிர்கள், இரு மலம் உடைய உயிர்கள், மும்மலமும் உடைய உயிர்கள்' என உயிர்கள் மூன்று வகைப்படுதலால், அவற்றின் பொருட்டுப் படைக்கப்படும் உலகங்களும் மூன்று வகைப்படும்; அவை, 'தூய உலகம், கலப்புலகம், தூய்தல்லாத உலகம்' என்பன. இவை முறையே, 'சுத்தப் பிரபஞ்சம், மிச்சிரப் பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம்' எனப்படும். மூன்று வகை உலகமும், மூன்று வகை மாயையிலிருந்து வருவன. அம்மாயையாவன, சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை.

ஒருமலம் உடையோர், 'விஞ்ஞானகலர்' என்றும், இருமலம் உடையோர், 'பிரளயாகலர்' என்றும், மும்மலமும் உடையோா, 'சகலர்' என்றும் சொல்லப்படுவர். அவர்களில் விஞ்ஞானகலருக்கு உரியது, தூய உலகம். பிரளயாகலருக்குஉரியது, கலப் புலகம். சகலருக்கு உரியது தூய்தல்லாத உலகம்.

படைத்தல், காத்தல் முதலிய பஞ்சகிருத்தியங்களை இறைவன் தானே நேர் நின்றும் செய்வான்; பிறரை வாயிலாகக் கொண்டு, அவர் வழியாகவும் செய்வான். சுத்த மாயையில் நிகழும் ஐந்தொழில்களை இறைவன் தானே நேர் நின்று செய்வான். அசுத்த மாயையில் நிகழும் ஐந்தொழில்களை, இறைவன் சுத்த வித்தையில் உள்ள அனந்ததேவர் என்பவரை வாயிலாகக் கொண்டு அவர் வழியாகச் செய்வான். பிரகிருதி மாயையில் நிகழும் ஐந்தொழில்களை, இறைவன் அனந்ததேவர் வாயிலாக, மேலும் சீகண்ட ருத்திரரை வாயிலாகக் கொண்டு அவர் வழியாகச் செய்வான். சீகண்ட ருத்திரர் எழுந்தருளியிருக்கும் இடமே திருக்கயிலாயம்.

'திருமால், பிரமன்' என்னும் காரணக் கடவுளர்களும், அவர்க்குக் கீழுள்ள இந்திரன் முதலிய எண்ணற்ற தேவர்களும், மக்களாகிய நாமும், நமக்குக் கீழேயுள்ள நரகர்களும் பிறவுயிர்களும் ஆகிய யாவரும் சகல வருக்கத்தினர். ஆதலின், நாம் வாழும் இந்நிலவுலகமும், இதனைச் சார்ந்து மேலும் கீழுமாய் நிற்கின்ற சுவர்க்க பாதால உலகங்களும் பிரகிருதி மாயா புவனங்களாகும். இவை அனைத்திலும் நிகழும ஐந்தொழிற்கும் முதல்வனாய்த் திருக்கயிலையில எழுந்தருளியிருக்கும் புவனாதிபதியே சீகண்ட பரமசிவன் ஆதலின், அப்பெருமானது ஆணை வழியே இப்புவனங்கள் இய்ங்கி வருகின்றன. அப்பெருமான் பிரமன வழியாகப் படைத்தலையும், திருமால வழியாகக் காத்தலையும், தென்றிசைக் கடவுளாகிய கூற்றுவன் வழியாக அவ்வப்பொழுது அங்கங்கே நிகழும் அழித்தலையும், இப்புவனங்கள் முழுதையும் அழிக்கும் பேரழிப்பினைத் தாமேயும் நிகழ்த்தி வருகின்றான். ஆகமஙகளிற் சில இடஙகளில், 'நீல ருத்திரர்' என்ற ஒருவர் இச் சிற்றழிப்பினைச் செய்பவராகக் குறிப்பிடப்படுகின்றார். அவரே தென்றிசைக் கடவுள் என்றும், 'அவர் வேறு; தென்றிசைக் கடவுள் வேறு' என்றும் இரண்டுபட்ட கருத்துக்கள் உள்ளன.

ஐநதொழில்களில் முடிவாய் உள்ளது அருளல். அதுவே உயிர்களை முற்றிலும் துன்பத்தினின்றும்

விடுவித்து, இன்ப நிலையில் இனிதிருக்கச் செய்வது. உயிர்கள் துன்புறுவதற்குக் காரணம் ஞானம் இன்மையே. அதனால், ஞானத்தைத் தருதலே, 'அருளல்' என்னும் சிறந்த தொழிலாம். திருக் கயிலையில் வீற்றிருக்கும் சீகண்ட பரமசிவன், இப் பிரகிருதிபுவனத்தில் உள்ள சகலர் பொருட்டுச்செய் யும் தனது ஐந்தொழில்களில் ஒவ்வொன்றை ஒவ் வொரு வகையான பதவிகளில் வைத்துச் செய்தல் போல, 'அருளல்' என்னும் தொழிலைக் குரு பரம் பரையில் வைத்துச் செய்கின்றான்.

ஒருமலம் உடையவராகிய விஞ்ஞானகலருக்கு இறைவன், ஞானத்தை உள்நின்றே உணர்த்தி, அருளலைச் செய்கின்றான் ; இருமலம் உடையவராகிய பிரளயாகலருக்கு இறைவன் ஞானத்தை முன்நின்று உணர்த்தி, அருளலைச் செய்கின்றான்; மும்மலம் உடைய சகலராகிய நம்மனோர்க்கு இறைவன், ஞானத்தை ஆசான் மூர்த்திவாயிலாகவே உணர்த்தி, அருளலைச் செய்கின்றான். ஆதலின், இந்நிலவுலகில் குரு பரம்பரைகள் பல விளங்குவவாயின. அவை அனைத்தும் சீகண்ட பரமசிவன் திருவருளாலேயே தோன்றி விளங்கினவெனினும், அப்பெருமான் திருக் கயிலையில் தானே முதற்குருமூர்த்தியாய் வீற்றிருந்து உண்மை ஞானத்தை உபதேசித்து, அவ்வுபதேசம் அவிச்சின்ன பரம்பரையில் என்றும் நின்று நிலவு மாறு செய்வித்த குருபரம்பரை, நந்தி மரபு ஒன்றே.

சீகண்ட பரமசிவன் திருக்கயிலையில் கல்லால மர நிழலில் தென்முகக் கடவுளாய் எழுந்தருளியிருந்து நந்தி பெருமானுக்கு உணமை ஞானத்தை அறிவுறுத் தருளினன். அவ்வுபதேசத்தை நந்தி பெருமா னிடத்திலிருந்து நேரே பெற்றவர் எண்மர். அவர் இவர் என்பதை,

> '' நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்
> நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
> மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
> என்றிவர் என்னோ டெண்மரு மாமே ''

என்று திருமூலர் அருளிச்செய்கின்றார். இவர்களில் '' நந்திகள் நால்வர் '' எனப்பட்டவர், 'சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர்' என்னும் முனி வர்களேயாவர். இவர்கள் சிவபிரானிடமே உண்மை ஞானத்தைப்பெற்றவராகச் சொல்லப்படினும், அதனை அவர்கள் ஐயந்திரிபறச் சிந்தித்துத்தெளிந்து நிட்டை கைவரப் பெற்றது நந்திபெருமானிடமே என்பது கொள்ளக்கிடக்கின்றது. எவ்வாறெனில், சனற்குமார முனிவர் நந்திபெருமானுக்கு மாணாக்கர் என்பது பல விடத்தும் சொல்லப்படுகின்றது.

நந்தி பெருமான் மாணாக்கர் எண்மராலும் ஞான பரம்பரைகள் இந்நிலவுலகத்தில் தோன்றி வளர்ந்தன வாதல் வேண்டும். தாயுமானவர் தமக்கு ஞானத்தை அருளிய ஸ்ரீமௌனகுருமூர்த்திகளை, 'மூலன் மரபில்வரு மௌன குருவே' என்று போற்றுகின்றார். அதனால், நந்திபெருமான் மாணாக்கருள் ஒருவராகிய திருமூலர் மரபு தமிழ்நாட்டில் இருந்தமை தெளியப்படும். இவ் வாறாயினும் எக்காரணத்தாலோ, சனற்குமார பரம் பரை தவிர ஏனைய பரம்பரைகள் நின்று நிலவாமற் போயின. சனற்குமார பரம்பரை ஒன்றே இருகிளை களாய்க் கிளைத்து வளர்ந்து, இன்றும் ஞான ஒளியைப் பரப்பி வருகின்றன. சீகண்ட பரமசிவனாகிய ஞானத் தந்தையின் ஞான பரம்பரைகள் இவை. நந்தி பெருமானிடத்திலிருந்தே இப்பரம்பரைகள் வளர்ச்சி யுற்ற காரணத்தால், இவை 'நந்திபரம்பரை' எனப்படும். 'சயிலாதி மரபு' என வருதல் காண்க. சயிலாதி - நந்தி பெருமான்; 'சிலாதர முனிவர் புதல்வர்' என்பது இதன் பொருள்.

சீகண்ட பரமசிவன் தோற்றுவித்தருளிய இந்த ஞான பரம்பரை முதலில் திருக்கயிலையிலேயே வளர்ந் தது. அது கயிலாயத்தின் அகத்திலே இருப்பதால், அகச்சந்தானம்' என வழங்கப்படும். அவ்வகச்சந்தான, ஆசிரியர் நால்வர். அவர்கள், நந்திபெருமான், சனற்குமார முனிவர், சத்தியஞான தரிசனிகள், பரஞ் சோதி மாமுனிகள் ஆவர். இவர்களில் பின் இரு வரும் சனற்குமார பரம்பரையினராதல் அறிக.

பரஞ்சோதி மாமுனிகளுக்குப் பின்னரே சனற் குமார பரம்பரை நிலவுலகில் தோன்றுவதாயிற்று. தமிழ் நாட்டில், திருவெண்காட்டு இறைவன் திருவரு ளால், திருப்பெண்ணாகடத்தில் தோன்றி, 'சுவேத வனப் பெருமாள்' என்னும் பிள்ளைத் திருநாமத் துடன் திருவெண்ணெய் நல்லூரில் இருந்த மெய்கண்ட தேவரது சாமுசித்த நிலையை, வான்வழிச் சென்று கொண்டிருந்த பரஞ்சோதி மாமுனிகள், ஆங்கு இறங்கி அங்குத் தாம் தமது பரம்பரையில் பெற்ற ஞானோபதேசத்தை அவருக்குச் செய்து, , மெய்கண்டார்' என்னும் தீட்சா நாமத்தை யும் தந்தருளிச் சென்றார்கள். அதன் பின்னர் அவ் வுபதேசத்தை மெய்கண்ட தேவர் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள பொல்லாப் பிள்ளையாரது திருமுன் பிலே சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடிச் சாக் கிரத்தே அதீதத்தைப் புரியும் நிலையுடையவராய் விளங்கினார். இவர் முதலாக வருவது புறச்சந்தானம்.

அக்காலை நடுநாட்டுத் துறையூரில் ஆதி சைவ குலத்தில் தோன்றி வடமொழி தென்மொழிகளில் துறைபோனவராய் வேதசிவாகமங்களின் கரைகண்டு 'சகலாகம பண்டிதர்' என்னும் சிறப்புப் பெயர் பெற் றிருந்த அருணந்தி சிவாசாரியர் மெய்கண்ட தேவரது பெருமையை அறிந்து வந்து, அவர்பால்

உ

குருபாதம்

# திருக்கயிலாய சந்தாநசாரிய பரம்பரை

ஸ்ரீகண்டபரமசிவன்

திருநந்திதேவர் (அகச்சந்தானம்)

சனகர் — சனந்தனர் — சநாதனர் — சநற்குமாரர்

சநற்குமாரர்

சத்தியஞானதரிசனிகள்

பரஞ்சோதிமுனிவர்

மெய்கண்டதேவர் (புறச்சந்தானம்)

அருணந்திதேவசிவாசாரியர்

மறைஞானசம்பந்தர்

- உமாபதிசிவாசாரியர்
  - அருணமச்சிவாயர்
  - சித்தர்சிவப்பிரகாசர்
  - திருவாவடுதுறை ஆதீன ஸ்தாபகர் நமசிவாயமூர்த்திகள்

- மச்சுசெட்டியார்
  - காழிக்கங்கைமெய்கண்டார்
  - காழிப் பழுதைகட்டிச் சிற்றம்பலநாடிபண்டாரம் முதலியோர்
  - பழுதைகட்டிச் சம்பந்த பண்டாரம் முதலியோர்
  - சிவபுரம் ஞானப்பிரகாச பண்டாரம்
  - சிவபுரம் தத்துவப்பிரகாச பண்டாரம்
  - திருவாரூர்ச் செட்டித்தெரு பழுதைகட்டி ஞானப்பிரகாச பண்டாரம்
  - சிதம்பரநாதமாசிலாமணி கமலைஞானப்பிரகாச பண்டாரம்

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

1. குருஞானசம்பந்தர்
2. ஆநந்தபரவசர்
3. சச்சிதாநந்தர்
4. மாசிலாமணி தேசிகர்
5. ஞானசம்பந்த தேசிகர்
6. திருஞானசம்பந்த தேசிகர்
7. திருவம்பல தேசிகர்
8. அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்
9. திருநாவுக்கரசு தேசிகர்
10. சிவஞான தேசிகா
11. சச்சிதாநந்த தேசிகர்
12. முத்துக்குமார தேசிகர்
13. ஞானசம்பந்த தேசிகர்
14. கந்தப்ப தேசிகர்
15. மாசிலாமணி தேசிகர்
16. சச்சிதானந்த தேசிகர்
17. மாணிக்கவாசக தேசிகர்
18. சிவஞான தேசிகர்
19. மாணிக்கவாசக தேசிகர்
20. சிவஞான தேசிகர்
21. சச்சிதாநந்த தேசிகர்
22. மாணிக்கவாசக தேசிகர்
23. சுப்பிரமணிய தேசிகர்
24. சண்முக தேசிகர்

இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.**

அவ்வுபதேசத்தைப் பெற்றுவிளங்கினர். 'அருணந்தி' என்பது, மெய்கண்ட தேவர்பால் பெற்ற தீட்சாநாமமேயாகும். அருணந்தி சிவசாரியரே யன்றி மற்றும் பல மாணவர் மெய்கண்டாருக்கு இருந்தனர். அவர்களுள் 'திருவதிகைமனவாசகங்கடந்தார்' என்ற ஒருவரைப் பற்றியே அறியப்படுகின்றது.

பின்பு அருணந்தி சிவாசாரியர்பால் நந்திமரபின் ஞானேபதேசத்தைப் பெற்றவர், திருப்பெண்ணுகடத்தில் தோன்றி மருதூரில் வாழ்ந்த மறைஞானசம்பந்த சிவாசாரியர். இவர் அந்தண வருணத்துப் பாராசர் முனிவர் கோத்திரத்தினர். இவர்பால் அவ்வுபதேசத்தைப் பெற்றவர் தில்லை மூவாயிரவருள் ஒருவராகிய கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியரும், 'மச்சுச்செட்டியார்' என்பவரும். இவர்களில ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் வழியிலே வந்த ஸ்ரீ நமச்சிவாய குருமூர்த்திகளால் நிறுவப்பெற்று விளங்கி வருவது துறைசை ஆதீனம். மச்சுச்செட்டியார் வழியிலே வந்த கமலை ஞானப்பிரகாசர்பால் ஞானேபதேசம் பெற்று, அவரது அருளாணையின் வண்ணம் போந்து மாயூரத்திற்கு அருகில் வில்வாரணியத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ குருஞானசம்பந்தமூர்த்திகளால் நிறுவப்பெற்று விளங்கி வருவது திருந்தருமை ஆதீனம். இவையே திருக்கயிலாய பரம்பரையாய் இன்றும் நின்று நிலவி, அருள்ஞான ஒளியைப் பரப்பிவருகின்றன,

" உரைசேரும் எண்பத்து நான்குநூ றுயிரமாம்
யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே
நின்றுன் "

என்றும்,

" ஆட்பாலவர்க் கருளும்வண்ணமும்
ஆதி மாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை
கிளக்க வேண்டா "

என்றும் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்தபடி, இறைவன் ஆங்காங்குள்ள உயிர்கட்குத் தனது அருட்பெருக்கத்தால் அருள்செய்யும் முறைகள் பல. அந்த வகையில் நம் தமிழ்நாட்டிலும், பிற இடங்களிலும் இறைவனது அருள் அனுபவம் பெற்ற பல பெரியார்கள் உளர். அவர்கள் தம் அளவில் தாம் அனுபூதிமான்களாய் எங்கும் நடமாடியிருந்து இறைவன் திருவடி கூடுகின்றவர் பலர். இவர்களே, 'சாதுக்கள்' என்று பலராலும் வணங்கப்படுகின்றவர்கள். இத்தகையோர்களில் ஒருசிலர், தாம்பெற்ற அனுபவத்தைப் பிறரும் பெறச் செய்யவேண்டும் என்னும் கருத்தால் ஓர் இடத்தில் நிலையாய் இருந்து பலருக்கு நன்னெறியை உணர்த்திவருவர். இவர்கள் இருந்த நிலையங்களே, 'ஆச்சிரமம்' என்று பின் உள்ளவர்களாலும் போற்றப்படுகின்றன.

இனி, திருக்கயிலையில் வீற்றிருக்கும் சீகண்ட பரமசிவனிடமிருந்து பெற்ற உபதேசத்தைக் கொண்டு, அவிச்சின்ன பரம்பரையாக ஞானேபதேசத்துடன் பீடாதிபத்தியமும் பெற்ற ஆசாரிய மூர்த்திகள் என்றென்றும் வீற்றிருந்து அருட்செங்கோல் ஓச்சிவரும் ஞான பீடங்களே 'ஆதீனங்கள்' என்பன. இவைகளில் ஓரோர் காலத்தில் அருளொளி மிகச் சிறப்பாக எழுந்து பிரகாசிக்கும்.

இவ்வகையில் இப்பொழுது திருத்தருமையாதீனத்தில் ஞான பீடத்தில் எழுந்தருளியிருந்து, அருட்செங்கோல் ஓச்சி வருபவர்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். 'திருக்கயிலாய பரம்பரை' என்பதற்கு ஏற்பக் கயிலாய யாத்திரை செய்து, கயிலையை நேரே தரிசித்துக் கயிலைக் குருமணியாய் இவர்கள் விளங்குகின்றுர்கள். இவர்கள் அருளாட்சியில் ஆதீனத் திருக்கோயில்களில் செய்யப் பெற்ற திருப்பணிகளும், மற்றும் சைவப்பணி, தமிழ்ப் பணிகளும் உலகறிந்தவை.

தருமையாதீனம் தொன்று தொட்டே சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் வளர்த்து வருவது. அதனை யறிந்தே அரசர்களும், கிழக்கிந்தியக் கம்பெனியாரும் தங்கள் மேற்பார்வையில் இருந்த சிவாலயங்களை இவ்வாதீன மகாசந்நிதானங்களிடம் ஒப்புவித்தார்கள். தஞ்சையரசர், மைசூர் மன்னர் போன்றவர்கள், ஆதீனத்திற்குப் பல நில புலங்களைத் தங்கள் அன்புக் காணிக்கையாக அளித்தனர்.

திருக்கயிலாய மெய்கண்ட சந்தானத்தில் வந்த கமலை ஞானப்பிரகாசர் தம் ஞானப் புதல்வராகிய ஸ்ரீகுருஞானசம்பந்தர் முதலாக வரும் ஞானபரம்பரை வழிமுறை இது;

இம்மகாசந்நிதானங்களின் காலத்தில் சமயத் தொடர்பாகவும், தமிழ்த் தொடர்பாகவும் பற்பல அற்புத நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்துள்ளன.

கயிலாய பரம்பரையிற் சிவஞான சித்திநெறி
காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றருமை வாழ்ஞான சம்பந்தக்
குரவன் மேலாஞ்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ.

# 'ஞானசம்பந்தம்' ஆற்றிய பணிகள்

சமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றும் பத்திரிகைகள் பலவற்றுள் தலையானதாய் விளங்குவது ஞானசம்பந்தம் இதழாகும். சைவ சமயத்தின் அருமை பெருமைகளை சைவ இலக்கியச் சிந்தனை உரைகளை மாதந்தோறும் எடுத்துக் கூறும் சிறந்த சமய இலக்கிய வெளியீடாகத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருகிறது இவ்விதழ். சமய உலகில் ஒரு விழிப்புணர்ச்சியை உருவாக்கி வரும் பெருமை ஞானசம்பந்தத்திற்கு உண்டு. தருமையாதீனத்தின் குரு முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் திருப்பெயரைத் தாங்கி அன்பர்கள் பலருக்கும் ஞானசம்பந்தம் செய்துவரும் இவ்விதழ் இருபத்துநான்கு ஆண்டுகளாகச் செய்துவந்துள்ள சமயப்பணியை, தமிழ்ப் பணியை எண்ணிப்பார்ப்போம்.

இவ்வெண்ணம் புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் நமக்கு விளைவிக்கும். மேலும் செய்ய இருக்கும் ஆக்கவேலைகளுக்குத் தூண்டுகோலாக அமையும்.

ஞானசம்பந்தம் 1941-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தருமையாதீனம் இருபத்துநான்காவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் தொடங்கப் பெற்றது. இருபத்துநான்காண்டுகளில் எண்ணற்ற கட்டுரைகளையும் கவிதைகளையும், அரிய நூல்களையும் தாங்கி வெளிவந்து அறிவுலகிற்குத் தலையாய தொண்டு செய்துள்ளது.

முதலாண்டு மலர் இதழ்களில் பல அரிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. தேவாரத் திருப்பாடல்களின் விளக்கங்கள் அன்பர்கள் பலரால் எழுதப் பெற்றுள்ளன. செப்பறைச்சுவாமிகள் எழுதி வைத்திருந்த தேவாரஉரைகளைத் தமிழுலகிற்கு வழங்கியது இம் மலர். உலகெலாம் என்ற பெரிய புராணத் தொடக்கத் திருப்பாடற்கு ஸ்ரீ சுவாமிகளவர்கள் எழுதிய உரை அறிஞர் உலகம் பாராட்டுதற்குரியது. தருக்க சங்கிரக விளக்க வினு விடை பண்டித திரு சித-நாராயணசாமியடிகளால் எழுதப் பெற்றுள்ளது, சிவலிங்கம் என்ற தலைப்புள்ள கட்டுரை சிவலிங்கத்தின் தத்துவத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. தமிழ்மறைந்த தலைநகரம் என்ற வரலாற்றுக் கட்டுரையும் மற்றும் சமய இலக்கியக் கட்டுரைகளும் இம்மலரை அலங்கரிக்கின்றன.

இரண்டாவதாண்டு மலரில் திருப்பதிக விளக்கவுரைகள் பலவற்றுடனும் இரட்டை மணிமாலை, திருவெம்பாவை, அற்புதத் திருவந்தாதி, கந்தரலங்காரம் போன்ற சமய நூல் விளக்கக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. திருவாசகத்துள் ஒரு பாடலுக்குச் செப்பறைச் சுவாமிகளவர்களுடைய உரை வெளிவந்துள்ளது. திருவுந்தியார் என்ற சாத்திர நூலை உரைநடையாக வடித்துத் தந்த கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. திருவைந்தெழுத்தின் பெருமை சிவராத்திரியின் மகிமை, சிவாகமசீலம் முதலிய கட்டுரைகளும், பொற்கைப் பாண்டியன் போன்ற வரலாற்றுக் கட்டுரைகளும், கழற்சிங்க நாயனர் போன்ற அடியார்களின் வரலாற்று ஆராய்ச்சியும், சைவத்திருமுறைகள் பற்றிய கட்டுரைகளும், முப்பொருள் விளக்கக் கட்டுரையும் இம்மலர் இதழ்களில் வெளிவந்தவை.

மூன்ருவது மலரில் சிவஞான போதமென்ற சாத்திர நூல் விளக்கக் கட்டுரையும், சேக்கிழார், திருநாவுக்கரசர் தண்டியடிகள் முதலிய நாயன்மார்கள் வரலாறுகளும், சோமவார விரதம், குருபக்தி, உயிர் இறை ஆகிய கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. சிறந்த சிவதலங்களின் கல்வெட்டுக்கள் வெளிவந்துள்ளன.

நான்காவது மலரில் வெளிவந்த கட்டுரைகளில் பெரியார் பெருமை, அரசளித்த அம்மையார் முதலிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை.

ஐந்தாம் மலரில் உருத்திராக்கப் பெருமை, தேவாரத் திருப்பதிக விளக்கங்கள், கல்வெட்டு விளக்கம், குமரகுருபரர் கவிச்சித்திரம், சிவஞான போதம், அற்புதத் திருவந்தாதி ஆங்கில மொழி பெயர்ப்பு, சிவோத்கர்ஷமஞ்சரி முதலிய கட்டுரைகளும், ஸ்ரீகண்டன் என்ற சிறு நாடகமும் மற்றும் பல சாத்திரக் கட்டுரைகளும் வெளி வந்துள்ளன.

ஆறுவது மலரில் சித்தாந்த சாத்திரங்கள், திருமுருகாற்றுப்படை, குமரகுருபரர் கவிச்சித்திரம், சிவதலக்கோவை முதலிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

ஏழாவது மலரில் கல்வெட்டு ஆராய்ச்சி விளக்கங்கள், பன்னிரு திருமுறைச் சிறப்பு, நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருத்தொண்டர் புராண வரலாறு சோடசகலாபிராசாதஷட்க விளக்கம், சிவாஷ்டகம், அன்பு முதலிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

எட்டாவதுமலரில் வெண்ணிலவில் என்ற நிலாத் தொகுப்புக் கட்டுரை, உண்டா இல்லையா? என்ற உரையாடல், மார்கழி மாதச் சிறப்பு, தாயுமானவர் மடல் என்ற நூல் வெளியீடு, தேவாரத் திருப்பதிக விளக்கங்கள், கலித்தொகைக் கடவுட் காட்சி, திருவிழாக்களின் தத்துவக் கருத்து, திருமுருகாற்றுப்படை, திருப்பழனி வெண்பாவந்தாதி நூல்வெளியீடு, தேவி மான்மியம் நூல் வெளியீடு, ஹம்ஸதம்பதிகள் செய்த பூஜை, மாப்பிள்ளையின் சமர்த்து என்ற உரையாடல், பரிசலோட்டி என்ற சமயச் சிறுகதை தெய்வக் கலைஞன், வாரவழிபாடு, எது மூடநம்பிக்கை?, திருவாரூர்க்கோவை விரிவுரை, சூதாடிக்கும் சொர்க்கம் முதலிய கட்டுரைகள் படிக்கச் சுவைபயப்பனவாய் வெளிவந்தவை.

ஒன்பதாம் மலரில் கதையின்கதை, நெடுவெண்ணிலவினர் அடிமைக்கு அழகா, இலக்கணக்குறிப்புக்கள், சன்மார்க்கம், யார் வாசல்காப்பான், அவன் லட்சியம் (சிறுகதை) அன்புச்சுடர் (நாடகம்), பௌஷ்கர சம்ஹிதை (மொழி பெயர்ப்பு), மெய்கண்டார் விஜயம், சைவக் குடியரசு, கண்கண்ட தெய்வம் (சிறுகதை) திருவாரூர் மும்மணிக்கோவை நூல் வெளியீடு, நாட்டுப்படலம், சேக்கிழாரும் காவிரியும் முதலிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

பத்தாவதாண்டுமலரில், தேவீமகாத்மியம் (தமிழ்) நூல் வெளியீடு தொல்காப்பியம் கல்லாடர் உரை நூல் வெளியீடு, ஞானவர்ண விளக்கமும் அரும்பத விவேகமும் நூல் வெளியீடு முதலியனவும், திருமுறை இலக்கிய சிந்தனைக் கட்டுரைகளும், திருக்குறள் கட்டுரைகள், தெய்வ நீதியென்னும் சிறுகதை, கந்தர் அனுபூதிச் செய்யுள் அமைப்பு, ஞாயிற்றினுட் புள்ளிகள், மூன்று புருஷ இரத்தினங்கள், உதிர்ந்த சுடர்கள், திருக்குறள் ஆராய்ச்சி முதலிய கட்டுரைகளும் வெளிவந்தன.

பதினொராவதாண்டு மலரில் தொனிப்பகுதி நூல் வெளியீடு, சிவஞான போதார்த்த தோத்திரப் பாமாலை, சிவபோகசாரம், சேக்கிழாரும் நாயன்மார் வரலாற்றுக் குறிப்புக்களும், சைவ சமயத்தின் நிலை, பொய்யில் காட்சியோர் பொருளுரை, புறத்துறை, முதலிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

பன்னிரண்டாவது ஆண்டு மலரில் மெய்க்கலை, செந்தமிழ்ச் சொக்கர், வான்மீகம், கந்தபுராணத்தின் காவியச்சுவை, பட்டினத்தார் நூல்கள், இலக்கியச் சுவை, சேக்கிழாரும் சேயிழையாரும், பட்டினத்தடிகள், சங்ககாலக் கடவுட் பாடல்கள், தமிழ் சுவைக்கும் திருமடங்கள், கம்பர் கவிச்சுவை, அடைக்கலம், பிழை கணித்தல், பாரத தர்மம், திருமுருகாற்றுப்படை, அர்ச்சனைகள், தமிழர்வீரம், அகத்தியர், சைவசித்தாந்தம முதலிய பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

பதின்மூன்றுவதாண்டு மலரில் கந்தபுராணக் கவிச்சித்திரம், சுவை விளக்கம், உவமை இலக்கணம், ஆன்மா, திருப்பாட்டின் திறம், கந்தபுராணத் தத்து தத்துவம், நாவுக்கரசரும் திருவள்ளுவரும், அடியார் உள்ளம், மாசில்வீணை என்ற தொடர்கதை, நவராத்திரி, பெருந்தேவனர் கண்ட விசுவரூபம், அணிக்கலை, வேதப்பொருள், முக்கனி, திருக்கோவையார், சிவபெருமான் திருவந்தாதி விளக்கம் ஆகிய கட்டுரைகளும், கவிதைகளும் திருமுறை விளக்கங்களும் வெளிவந்துள்ளன.

பதினான்காவதாண்டு மலரில் சாத்திரம், தோத்திரம், இலக்கியம், அறிவியல், வாழ்வியல், வரலாறு, கதைப்பகுதி, மகளிர்பகுதி முதலிய பல தலைப்புக்களில் கட்டுரைகள், இராமேஸ்வர யாத்திரை நூல் வெளியீடு, கண்ணகி, விருத்தவகை, முதலிய கட்டுரைகளும் கவிதைகளும் சிறுகதைகளும் வெளிவந்துள்ளன.

பதினைந்தாவதாண்டு மலரில் முப்பொருள் விளக்கம், ஐந்தெழுத்துண்மை, அருச்சனை, தொண்டு, திருசிய காவியப் பிரிவுகள், குறிப்பெச்சம், வாழ்க்கைத் துணை நலம், சதாசிவரூபம், இலக்கிய இலக்கண விருந்து, சஙக இலக்கியங்களில் கடவுட் கொள்கை, முதலிய பல கட்டுரைகளும் கவிதைகளும் சிறு கதைகளும் வெளிவந்துள்ளன.

பதினாறுவதாண்டு மலரில் பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள் என்ற தொடர் கட்டுரை, உயர்திணை உம்மைத் தொகை, பொய்கைநாடு கிழவன், தாயுமானவர் நெறி, ஆன்மலிங்க மாலை நூல் வெளியீடு, பெரும்பாணாற்றுப்படை இலக்கியவளம், ஆகமம், சேக்கிழார் கண்ட செந்தமிழ்நாடு, உண்மை விளக்கம், பழமை எழுதியது, கலித்தொகையில் சில திருத்தங்கள், நாவுக்கரசரும் வள்ளுவரும் முதலிய கட்டுரைகள் கவிதைகள் வெளிவந்துள்ளன.

பதினேழாவதாண்டு மலரில் பெருந்தேவனர் கவிச்சித்திரம், சம்பந்த சரணாலயர், சிந்தாமணியிலுள்ள ரசங்கள், சிவாகமமும்சிவாலயமும், நற்றிணை, சிவராத்திரி, சப்தசதி விளக்கம், மெய்கண்ட தேவர் தோத்திரம், வேதாகமசாரமே தேவாரம், ஐந்திர வியாகரணம், திருவேரகம் முதலிய கட்டுரைகள் கவிதைகள் வெளிவந்துள்ளன.

பதினெட்டாவதாண்டு மலரில் கந்த புராணப் போற்றிக் கலிவெண்பா, சிவாகமம், சொக்கநாதர் திருவருட்பா நூல் வெளியீடு, சௌந்தரியந்தாதி நூல் வெளியீடு, கந்தபுராண வரலாறு, உடல் வளர்க்கும் மூலிகைகள், மகாகயிலாய யாத்திரை, இதிகாசம், கம்பன் கண்ட தன்னித் தமிழ் நாடு முதலிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இம்மலரின் பத்தாம் இதழ் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளது அறுபத்தோரா மாண்டின் தொடக்கச் சிறப்பு மலராக வெளிவந்தது.

பத்தொன்பதாவதாண்டு மலரில் சீவக சிந்தா மணியிலுள்ள ரசங்கள், அம்மையாரின் அரும்பெயர் கள், தருமையாதீன வெளியீடுகள், திருவள்ளுவரும் சித்தாந்தமும், உடல் வளர்ப்பு மூலிகைகள், முதலிய கட்டுரைகளும் திருப்பதிக விளக்கங்களும் வெளி வந்துள்ளன.

இருபதாவதாண்டு மலரில் சைவ சித்தாந்தம், பழந்தமிழகத்துத் திருவிழாக்கள், மனக்கோயில, மருத நாட்டு மங்கை கவிதை இலக்கியம், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் விளக்கம், சிவசயிலப் பள்ளு நூல் வெளியீடு முதலியவை வெளிவநதுள்ளன.

இருபத்தோராவதாண்டு மலரில் திருமுறையர்ச் சனை, தமிழில் தந்தி, காந்தாரி, உலக அரங்கில் தமிழ், கடவுளின் வடிவம், பட்டினத்துப் பிள்ளையார் பாடல், சிவாகம சாரஹாரம், திருமுறையும் கல்வெட்டும், சஹஸ்ராகமம், சித்தாந்த வினுவிடை, உருத்திராக்க மகிமை முதலிய கட்டுரைகளும் கல்வெட்டுக் குறிப்புக் களும் கவிதைகளும் வெளிவந்துள்ளன.

இருபத்து இரண்டாவதாண்டு மலரில் அந்தாதி, சங்கர சிவக்கொழுந்து மாலை நூல் வெளியீடு, திருக் குறள் கருத்துரை நூல் வெளியீடு, சித்தாந்த வினு விடை, தொலகாப்பியம் சொல்லதிகார விளக்கத் தொடர்கட்டுரைகள், சத்தியேந்திர சோழன், முருக வழிபாடு, முத்திநிச்சயம், சிவஞானபோதச்சிற்றுரை இலக்கணக் குறிப்பு முதலியன வெளிவந்துள்ன.

இருபத்துமூன்றுவதாண்டு மலரில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் கேதாரநாதம், பதரிநாதம்தலயாத்திரை, திருக்கோயில் அமைப்பு முறை, வாழியாதனின் வள்ளன்மை, சிவவழிபாடும் சங்க நூல்களும், சிவராத்திரி வரலாறு, சிவாலயதரிசன முறை தொடர் கட்டுரை முதலியனவும், சாத்திரக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

இருபத்து நான்காவதாண்டு மலரில் பிழை பொறுத்தல், தமிழ் கூறும் நல்லுலகம் தொடர் கட்டுரை, சொக்கன் கோயிலா? மெய்கண்டார் காலம், சிவாகமத் தெளிவு, புனித வேள்வி, அமராபரண சீயகங்கன், சோழமன்னர் திருக்கோயில்கள், தையல் நாயகி அந்தாதி நூல் வெளியீடு, மதமும் நல் வாழ்வும் முதலிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அவ்வப்போது நிகழ்த்தும் அருளுரைகள் குறிப் பெடுக்கப் பெற்று ஞானசம்பந்தம் இதழ்களில் வெளி யிடப்படுகின்றன. இவ்வருளுரைகள் தொகுக்கப் பெற்றுச் செந்தமிழ்ப் பூம்பொழில் என்ற பெயரில் ஆதீன வெளியீடுகளாக வெளியிடப் பெற்றுள்ளன. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் அருளுபதேசங்களைச் சமய நல்லுலகம் படித்துப் போற்றிப்பயன்பெறுகிறது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளுரை களாக பன்னிரு திருமுறைகளிலிருந்து ஓவ்வொரு திருப்பாடல் விளக்கம் திங்கள் தோறும் வெளி வந்துள்ளது. தொடர்ந்து பதினுன்கு சாத்திரங் களில் ஓவ்வோர் திருப்பாடல் விளக்கமும் வெளி வந்தது. இவை திருமுறைகளின் அரிய கருத்துக் களையும் சித்தாந்த நுண்பொருள்களையும் சமய நல்லுலகம் அறிவதற்குப் பெருந்துணையாக அமைந் தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பண்டார சாத்திரத்திலிருந்து ஸ்ரீ குருஞானசம்பந்தப்பெருமான் அருளிச்செய்த சிவபோகசாரம், சொக்கநாதவெண்பா முதலிய அருட்பாடல்களின் விளக்கங்களை அருளுரை களாக வழங்கியருளி வருகின்றார்கள். ஞானசம்பந்தம், சிறந்த பேரறிஞர்களின் ஆங்கிலக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளது

ஞானசம்பந்தம் சிறந்த நூல் வெளியீட்டுப் பணியினையும் செய்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. ஞானசம்பந்தத்தில் வெளிவந்து நூலாக்கம் பெற்றவை, தருக்க சங்கிரக வினு விடை, தேவி மான் மியம் தமிழ், சிவாஷ்டகம், தாயுமானவர் மடல் சௌந்தரியந்தாதி, தொல்காப்பியம் கல்லாடர் உரை ஞானவரண விளக்கமும் அரும்பதவிவேகமும், சிவ சயிலப்பள்ளு, சிவதலக்கோவை, சொக்கநாதர் திருவருட்பா, திருக்குறள் புழைய உரை, திருவாரூர் மும்மணிக் கோவை விரிவுரை முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. நம் மலர் இதழ்களில் வெளி வந்த தொடர் கட்டுரைகள் பலவும் நூலாக்கம் பெற்றுள்ளன. பழந்தமிழ் நூல்களில் உயிர் வகை கள், புதுமைக்கு, மாசில் வீணை திருக்கேதார யாத்திரை முதலியன அவை.

ஞானசம்பந்தம் சிறப்பு மலராகப் பலமுறை முகிழ்த்துள்ளதை அன்பர்கள் அறிவர். அவற்றுள் ஏழாவதாண்டு மலர் கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில் சிறந்த கட்டுரைகளோடும் வண்ண ஓவியங்களுடனும் வெளி வந்துள்ளது.

இவ்வண்ணம் பல்வகையானும் சமயப்பணி தமிழிலக்கியப் பணிகள் பலவற்றைச் செய்து வரும் ஞானசம்பந்தம் வெள்ளி விழா மலராக விரிந்து மணந்து வருவதைத் தமிழுலகம் வரவேற்கும் என்பது உறுதி. இவ்விதழைத் தொடங்கியருளிய ஞான்று இவ்விதழாசிரியராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருக்கை வழக்கமாக இவ்வெள்ளி விழா மலர் வெளிவருவது போற்றற் குரியது. வாழ்க கயிலைக் குருமணி. வளர்க ஞானசம்பந்தம்.



ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி

# பக்தி

*செந்தமிழ் வித்தகர்*

**திரு. அ. ச. ஞானசம்பந்தம் M. A.,**

இந்தப் பெரிய உலகில் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால், எல்லா மொழிகளும், முழு வளர்ச்சி பெற்றவை அல்ல. சில மொழிகள் நன்கு வளர்ச்சி அடைந்துள்ளன. ஒரு மொழி வளர்ச்சி அடைந்துள்ளது என்றால், அதன் பொருள் என்ன? நல்ல இலக்கணம், இலக்கியம் நிறைந்துள்ள மொழியை வளர்ச்சி அடைந்துள்ள மொழி என்று கூறுகிறோம். அம்முறையில் பார்த்தால் முழு வளர்ச்சி பெற்ற மொழியாகும் நம் தமிழ் மொழி.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இம் மொழியில் நிறைந்த இலக்கண இலக்கியங்கள் உண்டு. அவ்வளவு பழைய இலக்கியத்திலும் ஒரு தனிச் சிறப்பை உடையது நம் தமிழ் மொழி. இறைவனைப் பற்றிப் பாடும் சிறப்பை அப்பொழுதே பெற்றுள்ள மொழி இதுவாகும். மிகப் பழைய பாடல்களில் கூட முருகப் பெருமானைப்பற்றிக் கூறும் திருமுருகாற்றுப்படையும், பரிபாடலும் இருக்கின்றன.

இவற்றையே பக்திப் பாடல்கள் என்று கூறுகிறோம். பக்தி என்றால் யாது? மனிதனிடத்துக் காணப்படும் ஒருவகை மனநிலையையே பக்தி என்று கூறுகிறோம். மனிதன் முதலில் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களைக் காணுகிறான். இறுதியாகத் தன்னைத் தானேயும் காண்கிறான். புல் பூண்டில் தொடங்கி மனிதனில் முடிவுபெறும் இப் பரந்த உலகம் வேறுபாடு நிறைந்ததாக உள்ளது. இந்த வேறுபாடுகளினிடையே ஓர் ஒற்றுமைத் தன்மையைக் காண்பவன் எவனோ அவனே பக்தன் எனப்படுவான். இவ்வளவு வேறுபாடுடைய பொருள்களையெல்லாம் உண்டாக்கி, காப்பாற்றி, இறுதியில் அழித்து மறுபடியும் பிறக்கச் செய்யும் ஒரு தலைவன் இருந்து தீரவேண்டுமல்லவா? தலைவனில்லாமல் எந்த ஒன்றும் ஒழுங்காக நடைபெறுவதில்லை. இதனைக் கருதித்தான் கம்பநாடர் "உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும், நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா, அலகிலா விளையாட்டு உடையார் அவர் தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே" என்று கூறிப்போனார். தலைவனை உணர்ந்து, தன்னை உணர்ந்து, தனக்கும் தலைவனுக்கும் உள்ள தொடர்பை உணர்ந்து, அத்தொடர்பை நல்முறையில் ஏற்படுததிக் கொள்பவனே பக்தன் எனப்படுகிறான். தலைவனிடத்து அவன் கொண்ட தொடர்பே பக்தி எனப்படுகிறது. ஒரு பக்தனுடைய உண்மை பக்தி எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைப் பெரியோர்கள் அழகாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். மாணிக்கவாசகப் பெருமான் "வெள்ளந்தாழ் விரிசடையாய்" என்ற பாடலில் உண்மையான பக்தியின் இலக்கணத்தை அழகாக எடுத்துக் கூறுகிறார்.

"கங்கையைச் சடையில் தரித்தவனே, தேவர்களின் தலைவனே" என்று பிறர் சொல்வதைக் கேட்ட மாத்திரத்தில் உண்மையான பக்தர்கள் மேட்டிலிருந்து பள்ளத்தில் பாயும் தண்ணீரைப்போல உள்ளம் உருகி, வழிபட்டு நிற்கின்றார்கள். ஆனால், அப்படி உருகுகின்ற அடியார்களை யெல்லாம் விட்டுவிட்டு, நாயினும் கடையினனை என்னைவந்து ஆண்டு கொண்டாயே; அப்படி ஆண்டு கொண்டவனாகிய உனக்கு நான் என்ன கைமாறு செய்ய முடியும்? என் உடம்பெல்லாம் கண்ணாக இருந்து கண்ணீர் பொழிய வேண்டும். உள்ளங்காலிலிருந்து உச்சிவரையும் நெஞ்சாக இருந்து உருகவேண்டும்; இவை இரண்டும் இல்லாமையினால் என் நெஞ்சத்தைக் கல்லென்றே கூறுகிறேன்; என் கண்களை மரம் என்றே நினைக்கின்றேன்; என் தீவினைப் பயன்போலும் இது." இந்தப் பொருளில் மணிவாசகப் பெருமான் பாடிய பாடலைக் காண்போம்.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மேலாகப்
பதைத்துஉருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுஉச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்இணையும் மரமாம் தீவினையினேற்கே"

திருவைகாவூர் என்ற ஊருக்கு ஞானசம்பந்தர் செல்கிறார். அங்கே குடிகொண்டுள்ள ஆண்டவனைச் சில அன்பர்கள் பாடுகிறார்கள். வயது முதிர்ந்த காரணத்தாலும், இசைப் பயிற்சி இல்லாத காரணத்தாலும், அவர்களுடைய பாடல்கள் கேட்பதற்கு இனிமையற்றதாக இருந்தனபோலும். அப்படியிருந்தும் உள்ளன்போடு அவர்கள் பாடுகின்ற காரணத்தால்

ஆண்டவன் அவர்களுடைய பாடல்களையும் ஏற்றுக் கொண்டு அருள் செய்வான் என்று கூறுகின்றார் ஞானசம்பந்தர்.

"சளியோடு நிறைந்த கண்டத்தால் பொருள் இல்லாத கவிகளைப் பொருந்தாத இசையில் பாடினாலும் கூட, பாடுகின்றவர்கள் உள்ளன்பைக் கருதி மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகின்ற இறைவன் வாழுகின்ற இடம் யாது எனில், மிக நீண்டு வளர்ந்திருக்கின்ற தென்னை மரத்தில் உள்ள நெற்றுக் காய்கள் கமுகு மரத்திலே விழ, கமுகு மரத்திலுள்ள காய்கள் சிதறி வாழையின் மேல் விழ, வாழைப் பழங்கள் சிதறி வயலில் வீழ்ந்து சேறாகச் செய்கின்ற திருவைகாவூர்." இப் பொருள்படப் பாடுகின்ற ஞானசம்பந்தர் பாட்டு உண்மையான பக்தி இருக்குமேயானால், வேறு எதுபற்றியும் கவலையில்லை என்ற பொருளைப் பெற வைக்கின்றது.

"கோழைமிட றாககவி கோளுமில வாகஇசை கூடும்வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொன்மகிழும் ஈசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறுசிதறி
வாழையுதிர் வீழ்கனிக ளூறிவயல் சேறுசெயும் வைகாவிலே."

பக்தியின் எல்லையிலே சென்று நிற்கும்பொழுது மனிதனுக்குரிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களும், மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற நான்கு அந்தக்கரணங்களும் ராஜஸ, தாமஸ, சத்துவ குணங்கள் மூன்றும் ஒன்றாய் நிலைத்துவிடுதலைக் காண்கின்றோம். சுந்தர மூர்த்தி சுவாமிகள், சிதம்பரத்திலே ஐயன் அண்டமுற நிமிர்ந்து, ஆடும் கூத்தினைக் காணச் சென்று அவன் முன்னர் நிற்கின்றார். அவருடைய அறிவெல்லாம் கண்களேயாக, கரணங்கள் எல்லாம் சிந்தையேயாக, குணங்கள் எல்லாம் சாத்துவிகமே ஆக, இந்துவாழ சடையான் ஆடும் எல்லையில் தனிப்பெரும் கூத்தில் தம்மை மறந்து நிற்பதை இதோ பாடுகிறார் சேக்கிழார்

"ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

"ஒள்ளிய நிலவைச் சடையிலே உடைய பெருமானே! உன் அழகிய நடனத்தைக் கும்பிடக்கூடியது பெருமை பெற்று இந்த மண்ணிலே வந்த பிறப்பே எனக்கு மிகுதியும் இன்பந் தருவதாகும் என்று கண்ணில் ஆனந்த அருவிநீர் பொழிய, கைகளைத் தலைமேற் குவித்து, பண்ணோடு கூடிய அழகிய பதிகத்தைப் பாடினார்" என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறுகிறார். சுந்தரமூர்த்திகளுடைய மன நிலையை ஏறத்தாழப் படம் பிடித்துக் காட்டுகிறார் தொண்டர் சீர் பரவ வல்ல சேக்கிழார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணி னால்நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்."

சிறந்த பக்தியுடைய அடியார்களுக்கு அவர்கள் பக்தியைத் தவிர வேறு எது கிடைப்பதனாலும் மகிழ்ச்சி ஏற்படுவதில்லை. பரிபாடலில் முருகப்பெருமானை நோக்கி ஒரு பக்தர் வேண்டுவதாகப் பேசப்படுகின்ற பாடல் நினைக்கும் தோறும் இன்பம் பயப்பதாகும். "ஐய நின் மாட்டு இரப்பவை பொன்னும், பொருளும், போகமும் அல்ல; அன்பும், அருளும் உருள் இணர்க்கடம்பின் ஒலி தாரோயே" முருகப்பெருமானைப் பார்த்து எனக்குச் சொத்து, சுதந்திரம் ஒன்றும் வேண்டாம்; உன்னிடத்து நீங்காத அன்பு ஒன்றே வேண்டும் என்று கேட்கின்ற இவரைவிடச் சிறந்த அன்பர் வேறு யார் இருக்கமுடியும். இதே கருத்தைக் குலசேகரப்பெருமாள் தம்முடைய திருமொழியில் பேசக் கேட்கிறோம்.

நிறைந்த செல்வத்தோடுகூடியதும், அரம்பையர்களால் சூழப்பட்டிருப்பதும் ஆன இந்திரப் பதவியோ, அல்லது இந்தப் பூவுலக ஆட்சியோ எனக்கு வேண்டாம். அழகிய சோலைகளையுடைய திருவேங்கட மலையில் உள்ள பல சுனைகளில் மீனாகப் பிறக்கும் பேறு கிடைத்தால் போதும் என்று பேசுகிறார் அப்பேரன்பர்.

இந்த உலகத்தில் இருந்துகொண்டு மனமார ஆண்டவனை வழிபடக் கூடுமேயானால், இதைவிட மோட்ச உலகங்கூடத் தேவையில்லை என்று சொல்லுகின்ற இந்த அடியார்களின் மன உறுதியை என்ன என்று சொல்ல முடியும்!

"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையன் ஆவேனே"

திருமங்கை மன்னன் தம்முடைய நெஞ்சை நோக்கி நல்ல அறவுரை கூறுகிறார். இந்திரன் முதலிய தேவர்களுக்கு முதல்வனை, பூதங்களுக்கெல்லாம் தலைவனை, திசைகள், சூரிய சந்திரர் முதலியோர்க்கெல்லாம்

தலைவனை, எப்பொழுதும் நினைத்து மறவாது இருப்பாயேயானால் வாழலாம் என்று அவர் சொல்லும்பொழுது, பக்தி நிலைக்க வேண்டுமானால், ஆண்டவனுடைய திருவடியை நினைப்பது தவிர வேறு ஒன்றும் வழியில்லை என்பது நன்றாக விளங்கும்.

இந்திரர்க்கும், பிரமர்க்கும் முதல்வன் தன்னை
இருநிலம், கால், தீ, நீர், விண் பூதம் ஐந்தாய்
செந்திறத்த தமிழ்ஓசை வட சொல் ஆகி
திசை நான்கும்ஆய், திங்கள் ஞாயிறுஆகி
அந்தரத்தில் தேவர்க்கும் அறியல் ஆகா
அந்தணனை, அந்தணர் மாட்டு அந்தி வைத்த
மந்திரத்தை, மந்திரத்தால் மறவாது என்றும்
வாழுதியேல் வாழலாம், மட நெஞ்சமே!

பக்தியோடு கூடி, தினம் உன் திருவடிகளைத் தொழுது, உன் திருப்புகழைப் பேசி, மலர்களால் உன் திருவடியை அர்ச்சித்து, நல்ல அன்பர்களோடு கூடி, நீ வாழும் மலையை வலம் வந்து, நல்முறையில் வாழ்நாளைச் செலுத்தாமல் என் வாழ்நாளை வீண்நாளாக்கி விட்டேனே என்று அருணகிரியார் கதறுகிறார்.

உனைத்தினம் தொழுதிலன்; உனது இயல்பினை
உரைத்திலன், பல மலர்கொடு அடி இணை
உறப் பணிந்திலன்; ஒரு தவம் இலன்; உனது அருள்மாறு

உளத்துள் அன்பினர் உறைவிடம் அறிகிலன்;
விருப்பொடு உன்சிகரமும் வலம் வருகிலன்;
உவப்பொடு உன்புகழ் துதிசெய விழைகிலன்...

*சிவஞானம் கைவரப் பெற்றவர்களுக்கு, சிவபிரானே எல்லாப் பொருள்களுமாகி இனிப்பான்; பேரின்பம் தருவான். அப்பொழுது, மற்ற மற்ற தெய்வங்களிடம் சென்று சிறிது சிறிது பெற்ற பயன்களை எல்லாம், சிவபெருமான் ஒருவனே கொடுத்தலும், அப்பயன்கள் எல்லாவற்றையும்விடத் தானே பெரும் பயனாகி, உள்ளத்தையும உயிரையும் ஒருங்கே குளிரவைக்கும் பேரின்பமாய் நிற்கின்ற அற்புத நிலையும் வெளியாகும்.*

❊ ❊ ❊

*உண்மை அறிவு இன்ப உருவாகிய சிவபிரான், உலகிற்கு என்றும் இருந்து அருளொளியை வழங்கிக்கொண்டிருக்கும் இடம திருக்கயிலை; அங்கு அவன் என்றும் இருந்து எல்லாவற்றையும் அறிந்து யாவர்கும் தோன்றாத நிலையில் நின்று அருளுதலேயன்றி, அவ்வப்பொழுது அங்கு நின்றும் தன் அடியவர்களையும் இந்நிலவுலகில் வரவிடுத்து, அருளொளியைப் பரப்பச் செய்கின்றான்.*

❊ ❊ ❊

*பயன் கருதிச் செய்வதாயினும் இறைவனிடத்துச் செலுத்துகின்ற அன்பு, ஏனைய பொருள்கள்மேல் செலுத்துகின்றதுபோல, வினையாகி அழிந்தொழியாமல், தவமாகி நிலைத்து நின்று ஞானத்தைத்தரும்.*

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

# நந்தனார் பிறந்த ஆதனூர்

சைவ இலக்கியப் பேரறிஞர்

**டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார்** *M. A. M. O. L., Phd.*

## ஆதன் - பூதன்

வில்லியன், அவியன், கோலியன், கம்பன், வளவன், பூதன் முதலிய பெயர்களோடு 'ஊர்' என்னும் இடப்பெயர் சேர்ந்து - வில்லியனூர், அவியனூர், கோலியனூர், கம்பனூர், வளவனூர், பூதனூர் என்று பன்னெடுங்காலமாக ஊர்ப்பெயர்களாக வழக்கில் உள்ளன. ஆதனூர் என்பதும் இவற்றைப் போன்றதே. 'ஆதன்', 'பூதன்' என்ற பெயர்கள் தொல்காப்பியர் காலத்திற்கும் முன்பே தமிழர் பெயர்களாயிருந்தன என்பது,

> " ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு
> பெயரொற் றகரம் துவரக் கெடுமே "[1]

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியப்பெறும்.

நெடுஞ்சேரல் ஆதன், வில்லி ஆதன், செல்வக் கடுங்கோ வாழி ஆதன், நல் ஆதன, எனச் சங்ககாலப் பேரரசர், சிற்றரசர், புலவர் முதலியோர்க்கு 'ஆதன' என்ற பெயர் வழங்கிவந்தமை சங்கநூல்களால் அறியப்பெறும் உண்மையாகும். 'ஆதன்' என்னும் இயற்பெயருடன் தந்தை என்னும் முறைப்பெயர் சேரும்பொழுது (ஆதன் + தந்தை) 'ஆந்தை' என்னும் புதுப்பெயர் உண்டாகிறது என்று மேல் சுட்டப்பெற்ற தொல்காப்பியம் நூற்பா நுவல்கின்றதை நோக்க, ஆதன் என்ற பெயரை அக்காலத்தில் பலர் வைத்துக்கொண்டிருந்தனர் என்பது உணரப்பெறும். இவ்வாறே 'பூதன்' என்ற பெயரும் பெருவழக்குடையது என்பதை அதே நூற்பா விதி கூறுவதிலிருந்து அறியலாம். பிற்காலத்திலும் 'பூதன்' என்ற வழக்கு இருந்ததைப் 'பூதத்தாழ்வார்' என்னும் பெயர் மெய்ப்பித்தல் காண்க.

## ஆதனூர்கள்

ஆதன் என்ற பெயர் பண்டுதொட்டே பெருவழக்காய் இருந்தமையால் தமிழகத்தில் பல ஊர்கள் ஆதனூர் எனப் பெயர்பெற்றனபோலும்! இன்று வழக்கில உள்ள ஆதனூர்களை மாவட்டம் - வட்டம் வாரியாகக் கீழே காண்க.

| எண் | ஆதனூர் | மாவட்டம் | வட்டம் |
|---|---|---|---|
| 1 | ஆதனூர் | செங்கற்பட்டு | ஸ்ரீபெரும்பூதூர் |
| 2 | ஆதனூர் | வட ஆர்க்காடு | ஆரணி |
| 3 | ஆதனூர் (காட்டுமன்னார் குடிக்கருகில்) | தென் ஆர்க்காடு | சிதம்பரம் |
| 4 | ஆதனூர் (புவனகிரிக்கு அருகில்) | ,, | ,, |
| 5 | ஆதனூர் | ,, | கள்ளக்குறிச்சி |
| 6 | (கீழ்) ஆதனூர் | ,, | திண்டிவனம் |
| 7 | (மேல்) ஆதனூர் | ,, | ,, |

[1] எழுத்ததிகாரம், புள்ளி மயங்கியல், 53.

| எண் | ஆதனூர் | மாவட்டம் | வட்டம் |
|---|---|---|---|
| 8 | ஆதனூர் | தென் ஆர்க்காடு | திருக்கோவலூர் |
| 9 | ஆதனூர் | ,, | விழுப்புரம் |
| 10 | (குளப்பாக்கம்) ஆதனூர் | ,, | விருத்தாசலம் |
| 11 | (ஊத்தங்கால்) ஆதனூர் | ,, | ,, |
| 12 | (கீழ்) ஆதனூர் | ,, | ,, |
| 13 | (மேல்) ஆதனூர் | ,, | ,, |
| 14 | ஆதனூர் | தஞ்சாவூர் | குடந்தை |
| 15 | (அகரம்) ஆதனூர் | ,, | மாயூரம் |
| 16 | ஆதனூர் | ,, | பாபநாசம் |
| 17 | ஆதனூர் | ,, | பட்டுக்கோட்டை |
| 18 | ஆதனூர் | ,, | திருத்துறைப்பூண்டி |
| 19 | ஆதனூர் | ,, | ,, |
| 20 | ஆதனூர் | திருச்சிராப்பள்ளி | குழித்தலை |
| 21 | ஆதனூர் | ,, | முசிறி |
| 22 | ஆதனூர் | ,, | பெரம்பலூர் |
| 23 | ஆதனூர் | மதுரை | நிலக்கோட்டை |
| 24 | ஆதனூர் | ,, | பெரியகுளம் |
| 25 | ஆதனூர் | இராமநாதபுரம் | சிவகங்கை |
| 26 | ஆதனூர் | திருநெல்வேலி | கோவில்பட்டி |

## நந்தனார் பிறந்த ஆதனூர்

இவ்வூர்கள் இன்று நேற்றுத் தோன்றியவை அல்ல; தொன்றுதொட்டு இருந்துவருபவை. இத்துணை ஆதனூர்களுள், நந்தனார் என்ற திருநாளைப் போவார் நாயனார் எந்த ஆதனூரிற் பிறந்தார் என்ற குழப்பம் உண்டாகும் அன்றோ ?

சோழப் பேரரசின் முதல் அமைச்சராயிருந்த சேக்கிழார் பெருமான் தமிழகத்தில் இத்துணை ஆதனூர்கள் இருத்தலை நன்கு அறிந்தவர் ஆதலால், படிப்பவர் மயக்கந்தீர்க்கும் முறையில் நந்தனார் எந்த ஆதனூரைச் சேர்ந்தவர் என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

"கொள்ளிட நீரினால் வளம்பெற்றுள்ள மேல்காநாட்டு ஆதனூர்"[2] என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

கொள்ளிடம் என்னும் பேரியாறு பழங்காவிரி (வடகாவிரி) என்னும் பெயரை உடையது. அது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரியிலிருந்து பிரிந்து, தஞ்சை மாவட்டத்தில் சீகாழி வட்டத்தில் திருமயேந்திரப்பள்ளிக்கு அருகில் கடலில் கலக்கிறது. ஆதலால் சேக்கிழார் குறித்த ஆதனூர், சோழநாட்டில் தான் அமைந்திருத்தல் வேண்டும். சோழநாட்டில் கொள்ளிடக் கரையில் உள்ள ஆதனூர் சேக்கிழார் காலத்தில் மேல்கானாட்டைச் சேர்ந்தது என்பது சேக்கிழார் வாக்கு. அக்காலத்தில் கானாடு – கீழ்க்கானாடு என்றும் மேல்கானாடு என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது உண்மையா ?

சிதம்பரம் வட்டத்தில் உள்ள கானாட்டுமுள்ளூர், (கொள்ளிடத்து வடகரை) கீழ்க்கானாட்டைச் சேர்ந்தது;[3] பெருமருதூர், எறும்பூர், திருச்சோபுரம், திருத்தினை நகர் என்பவை (கொள்ளிடத்து வடகரை) மேல் கானாட்டைச் சேர்ந்தவை[4] என்பது கல்வெட்டுக் களால் தெரிகின்றது. ஆதலால், கொள்ளிடத்தின் வடகரையை அடுத்த நிலப்பகுதி கீழ்க்கானாடு என்றும்

[2] திருநாளைப்போவார் நாயனார் புராணம், செ. 1. [3] 514 of 1926. [4] 504 of 1926, 387 of 1913, 109 of 1904 and 116 of 1904.

மேல் காளுடு என்றும் பெயர்பெற்றிருந்தது என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது. நந்தனுர் பிறந்த ஆதனூர், கொள்ளிடக்கரையில் அமைந்த மேல் காளுட்டு ஆதனூர் என்பது சேக்கிழார் வாக்கு. அந்த ஆதனூரில் நந்தனுர் வாழ்ந்தார் என்பது இன்றும் அங்குள்ளவர் கூறும் செய்தியாகும். நந்தனுர் தொடர்பான திருப் புன்கூர் கொள்ளிடத்தின் தென்கரையில் உள்ளது. அவர் வழிபட்டுப் பேறுபெற்ற தில்லை கொள்ளிடத் தின் வடகரையில் உள்ளது.

ஊர்களின் இருப்பிடத்தைப் பிழைபடாமல் கூறு வதில் சேக்கிழார்க்கிருந்த தமிழக நில அறிவு நுட்பத்தை அறிவதற்கு இஃது ஏற்ற சான்ருகும் அன்ருே ?

இறைவன் உடலில் உயிர்போல் உலகத்தோடு ஒன்ருயும் கலந்துள்ளான் ; கண்ணில் கலந்து அதற்குப் பொருள்களைக் காட்டுகின்ற சூரிய ஒளி கண்ணுக்கு வேறுபட்ட தன்மை உடையதாயிருத்தல்போல, இறைவன் உலகில் கலந்து இருப் பினும் தன்மையால் வேருய் இருக்கின்ருன். பொருள்களைக் காணும் ஆற்றல் உடையது கண் ; ஆயினும் அதற்குப் பொருளை உடன் நின்று காட்டியும் கண்டும் வருகின்ற உயிரைப்போல இறைவன் உலகத்தோடு உடனுயும் உள்ளான்.

❊ ❊ ❊

திருவைந்தெழுத்து மன இருளைப்போக்கும் விளக்காகும். இருள் பொருந்திய மனமே ஊனக்கண் எனப்படுகின்றது. இதனுல் உணரவியலாத பொருளை விளக்கு தலால் திருவைந்தெழுத்து அகவிளக்காய் மிளிர்கின்றது. இவ்வருமையைத் திருமுறை சாத்திரம் இரண்டினும் ஒப்பக் காணலாம்.

❊ ❊ ❊

திருவைந்தெழுத்து பிறவிக் கடலில் கிடந்துழலும் ஆன்மாக்களுக்குக் கிடைத்த திருவருள் தெப்பம். அதைப் பற்றிக்கொண்டாலன்றி உய்வில்லை.

❊ ❊ ❊

சமயத்திற்கும், மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மக்கள் மன வளர்ச்சிக்குப் பாடுபட்டு அவர்களைத் துன்பக் கடலிலிருந்து இன்பக்கரையேற்று வோரே சமயத் தலைவர்கள். நம் சைவ சமயாசாரியர்களும், சந்தாளுசாரியர்களும் இறைபணியை முறையாகச் செய்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

# The concept of Muttamil of the Tamil Language

'Tamil Perum Pulavar'

Prof. S. Arumuga Mudaliar, M.A., B.O.L., L.T.,

From Time immemorial the Tamil Language has been divided into 3 integral parts forming into a whole, the Muthamil forming into a Muzhuthamil, even as the Trident of Siva with three forks persons into a powerful single weapon like the three aspects and the trinity forming the Almighty Lord. Muthamil is referred to in the Sangam work Paripadal thus "தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்". "மூவுலகும் புகழ் முந்து முத்தமிழ்" is Kamban's dictum. Avvaiyar II prays to Lord Ganapathi for giving her intuition into the 3 fold Sanga Tamil (சங்கத் தமிழ் மூன்றும் தா). It is said that the earliest Tamil grammar by sage Agastya is complete grammar of all the 3 aspects of Tamil இயல், இசை, நாடகம். Silappadikaram is, according to Adiyarkku Nallar, an illustration of principles of the grammar of the three fold Tamil. The Tirukaccur inscription (N. E. R. 377 of 1906) mentions one 'முத்தமிழ் ஆசிரியர் பெருநம்பி' adding weight to the trinity idea of Tamil. The Tamil Vidu Tutu too ascribes Tamil as 'முத்திப்பயனே முத்தமிழே' - Barathidasan hails Tamil as 'முடிக்கு மூன்றும் முத்தமிழ் என்பது புத்தமுதே'.

The Muthamil divisions are Iyal Tamil, Isai Tamil and Nadaka Tamil.

Iyal Tamil the first part of the three is indeed the foundation for the other two and for the whole language itself, as it consists of all the words and vocabulary of the language which are formed from the different sounds.

Words denote the meanings; the ideas and thoughts that spring in our mind and intellect are expressed both in oral and written forms. Sivagnana Munivar the great commentator of Sivagnana Bodham is of opinion that all our thoughts take the form of words and Tholkappiyar earlier said that all words denote some meanings. Letter - (sound) in its phonic form is only the collection of molecules of sound. In this way, words coming together denoting meaning constitute the language and it takes various forms both oral and written - Essaye, short stories, Epistles, stray songs, lyrics, idyls, dramas, vowels, continuous epic works called பொருட்டொடர் நிலைச் செய்யுள் or Kavyas (small and big). Through one's own language, writers and thinkers record their knowledge and experience of the world, nature and natural objects and phenomenon, human nature and its vicissitudes in prose or poetry. All humanities, sciences, technical and technological subjects also come to be written in one's own language. In the Tamil language this has happened through the ages. All the works in prose or poetry on the above and allied subjects come under the first - Iyal Tamil. All the grammar, poetry, prose, short stories of the language itself also come under this category.

*Isai*, originally is the natural out-let of the *emotions* of man in songs and musical compositions - in tunes suitable for each emotion. Later songs and lyrics and musical compositions depicting particular emotions கும்மி, தெம்மாங்கு, வரிப்பாட்டு, சிந்து, ஆனந்தக் களிப்பு, கீர்த்தனம் etc., and other literary and folk lore compositions have been composed in appropriate tunes. All these form Isai Tamil. Isai Tamil is naturally formed of Iyal Tamil, from which it has drawn words and phrases for its sustenance, set to music and rhythm. It is, therefore, placed next to Iyal Tamil. Most of the classical musical texts and their grammars in Tamil have been lost to posterity. We hear the names of a number of grammar books on music in Tamil in the 3rd Sangam days like இசைநுணுக்கம், தாளவகையோத்து, பெருநாரை and பெருங்குருகு. Adiyarku nallar in Arangetru Kathai commentary, preserves this great tradition of Isai Tamil. If there were a number of grammars of Isai Tamil even in those days, then it goes without saying, that countless number of musical compositions and texts should have preceded these grammars, which should have deduced and evolved grammatical theories of music from them. வரிப்பாடல்கள், சிலம்பு, பரிபாடல், Tevaram, Tiruvissaippa, Tiruvachakam, Nalayira Divya Prabandham, திருப்புகழ், திருவருட்பா, தாயுமானவர் கண்ணிகள், பாடல்கள், கந்தபுராணக் கீர்த்தனைகள், பெரியபுராண, நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள், சங்கீத சந்திரிகை, இராமலிங்க அடிகளார் பாடல்கள், இலக்குமணப்பிள்ளை பாடல்கள், வேதநாயகம்பிள்ளை பாடல்கள், and the modern compositions of composers like, பாபநாசம்சிவன், சுத்தானந்தபாரதி, பெரியசாமிதூரன், மாரியப்ப சாமிகள், மதுரை சோமசுந்தரம் etc., all come under Isai Tamil. The Tamil Isai movement, started by the late Rajah Sir Annamalai Chettiyar, has done yeoman service in the resuscitation and popularisation of Tamil Isai, by the publication and promotion of Tamil Isai compositions in the Annamalai University. In short, the development of emotional and Bakti education can be done only through music or இசைத்தமிழ்.

Nadakattamil, the third part of Tamil, is born of the foregoing Iyal and Isai, - the themes from the life of the world of eternal nature and human nature, and Music which attends these *themes, when sung occasionally in verse* set to music. Nadakatamil is very popular and sought for by the *general public*, as it portrays, in short compass of two to three hours, the important themes of life of a subjective and objective nature on the stage and brings into play the good and bad in eye - and then respective consequences. It impresses on the minds of the audience the permanent, values of life, the dignity of man, the qualities of virtue and truth etc., so that it is of great educative value in life Unfortunately ancient Tamil Dramas and Dramatics, as those Isai Tamil have been lost to us though there is satisfactory progress of these in modern times - one who speaks the language, should in the opinion of great thinkers, be well versed and trained in all these 3 aspects to be educated and cultured. Then only all these aspects of life are covered by him or her. Though other languages of the world have literature on these three aspects of language, they have *not in a systematic* way made these integral parts of the whole Literature and arranged *them in such* a way as to constitute a whole entity into an inseparable unit. But Tamil has done this from time immemorial. It is never thought of without these three aspects

It is possible also to go deeper into and interpret this structure of Muthamil from various points of view, like, (1) Psychological (2) Educational, (3) Linguistics, (4) Ethical and (5) Philosophical.

I. Psychologically the human mind reveals its cognitive, emotive and conantive (*Thinking, feeling and willing*) aspects These are echoed in the Iyal, Isai and Nadaka Tamil of the Tamil Language. It shows that the language has developed on the right psychological lines.

II. *From the Educational point of view* also these three aspects of the language நாடகம், இசை and இயல் can be explained as educating and training the physical, emotional and spiritual and mental aspects of the personality of the individual.

III. *Linguistics* interpretation of these 3 aspects will be இயற்றமிழ் - Inner thought or மனக்கருத்தின் அமைதி, இசைத்தமிழ், natural production of sound or இயற்கை வாய் ஒலியின் அமைதி and நாடகத்தமிழ், the natural movement of the body in action or மெய்யின் இயக்க விளக்கம்.

IV. Tirukural is the highest and purest expressions of human thought dealing with the ultimate objects of achievements from the *ethical aspect of life* of the (அறம், பொருள், இன்பம்) aspects leading to the (realisation of the truth) or salvation of the soul called the *Veedu* or release from bondage. These three divisions of it may be interpreted as being dealt with by the Iyal (அறம்), Isai (காமம்) and Natakam (பொருட்பால்) aspects of the Tamil language respectively.

V (1) Philosophically the principles of Icca (Iccai), krya (seyal), Sakti and gnana (Arivu) are represented by Iyal, Isai, and Natakam of the Tamil Language Sakti prevalent in the universal Micro crocosm or cosmos is espounded by Bhagawat Gita in chapters 1-6 as *Karma Yoga, or the Kriya aspect of God* in chapters 7-12, the Bhakti Yoga or the Icca aspect of God and in chapters 13 to 18 as Gnana Yoga or the gnana aspect of God. The Iyal Tamil treats the gnana aspect, the Isai Tamil the Icca aspect and the Nataka Tamil the Kriya aspect.

V (2) *Spiritual*:- Streching our imagination further we can according to Baghavan Dass read the philosophical aspects of the individual soul's cognition (*சித்*), affection (*ஆனந்தம்*) and conation (*சத்*) merging with the aspects of universal god, Sath, Chit and Anandam in the realisation of the self. The three aspects of the Tamil language reflect these as இயல் - சித்

இசை - ஆனந்தம

நாடகம் - சத்.

V (3) Yet in another way philosophically these three fold aspects of the Tamil Language may be interpreted to reflect the 3 gunas of the soul and the three functions of the god. Gunas in soul are represented by

Satvic - இயல்

Rajas - நாடகம்

Thamas - இசை

V (4) The three functions of god creation, preservation and destruction, of the world are denoted by Natakam, Iyal and Isai respectively.

These are the different interpretations that are possible to be given to these 3 aspects of Tamil Language from different points of view. They are summed up in the chart below:

## Chart of Muttamil Concepts.

| Serial No. | Way or mode of Interpretation | 1. Iyal - Tamil இயல் தமிழ் | 2. Isai Tamil (இசைத்தமிழ்) | 3. Nataka Tamil (நாடகத்தமிழ்) | Remarks. |
|---|---|---|---|---|---|
| 1. | Psychological | Knowing - cognition | Feeling - Emotion or Affection | willing - conation | Three aspects of the mind |
| 2. | Educational | Mental - உணர்வு (அறிவு) | Emotional - spiritual- உயிர் - பண்பாடு | Physical-ஊன் | Three functions of Education |
| 3. | Linguistic | Inner thought - மனக்கருத்தின் அமைதி | Natural Production of sound-Music இயற்கை வாயொலியின் அமைதி | Natural movement of the body, மெய்யின் இயக்க விளக்கம் | Three aspects of thought |
| 4. | Ethical | Moral & Spiritual அறத்துப்பால் | Domestic காமத்துப்பால் | Social பொருட்பால் | Three ways of life |
| 5. (a) | Philosophical | Gnana (அறிவு) (Gnanayoga in Geetha) | Icca - (இச்சை) Bakti yoga | Krya (செயல்) Karma yoga | Three aspects of God |
| (b) | | Chit (சித்) அறிவு | Ananda - (இன்பம்) | Sat (உண்மை) | ,, ,, |
| (c) | | Preservation of the universe - ஸ்திதி, அளித்தல், காத்தல், நிலைபெறுத்தல் | Destroyal சம்ஹாரம், நீக்கல், அழித்தல் | creation ஸ்ருஷ்டி-ஆக்கல், உளவாக்கல் | ,, ,, of God's work |
| (d) | | Satva (சத்துவம்) | Thamas (தாமதம்) | Rajas ராஜஸம் | Three gunas of soul |

'மெய்ப்பொருள் ஒன்றே; பல இல்லை' என்பது விளங்கியபின். அம் மெய்ப்பொருள் சிவபிரானே என்று உணரப்பெறுதலே ஞானத்தின் முடிந்த நிலையாகும். இதுவே. 'சிவஞானம், சித்தாந்தஞானம்' என்றெல்லாம் உயர்த்துக் கூறப்படுவது. இந்தச் சிவஞானம் மற்றைய ஞானங்கள் எல்லாவற்றினும் மேலானதாகும்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

# ஐம்பெருங் காப்பியங்கள்

வித்துவான், திருமதி. ப. நீலா

எண்ணுதற்கும், எழுதுதற்கும் வற்றாத இலக்கியச் சோலையிலே பூத்த எழில் மலர்கள் ஐந்து. தமிழரசியின் வள்ளைப் பூவின் வனப்பைப் பகைத்த செவிகளில் குண்டலகேசி, கமுகினை வென்ற கவின் படைத்த கழுத்திலே சிந்தாமணி. காந்தளம் மலர் புரையும் கரங்களிலே வளையாபதி. நூலினைப் பகுத்த நுண்ணிடையில் மணிமேகலை. செந்தாமரை பீடழிந்து நாணும் என விளங்கும் பாதமலர்களில் சிலப்பதிகாரம். காலத்தொடு கற்பனை கடந்த கருவூலத்தின் திருவுருவமாம் தமிழன்னையின் பெருமையைப் பேசவும் ஒண்ணுமோ! இதோ ஒரு புதிய பாடல்!

" கார்க்குழலே ஐம்பெருங் காப்பியங்கள் பேரெண்ணில்
சீர்த்தமணி மேகலையே செஞ்சிலம்பு — ஆர்த்தபுகழ்
நந்தாத குண்டல கேசிவளை யாபதிநற்
சிந்தா மணியெனவே செப்பு "

## சித்தம் கவர்ந்த சிலம்பு :

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு அல்லவா இது. பத்தரை மாற்றுப் பத்தினித் தங்கமாம் கண்ணகியின் சிலம்பே காப்பியத்தின் பெயருக்குக் காரணம் என்பது வெள்ளிடைமலையென விளங்கும். குடத்துள் விளக்குப் போல் காணும் கோப்பெருந் தேவியின் சிலம்பு இன்றேல் கோவலன் கள்வனுதல் எங்ஙனம்! கண்ணகி நீதி கேட்பது எப்படி! ஊழ்வினைப்படி கோவலன் கொலையுண்ணல் - மதுரை எரியால் விழுங்கப்பெறுதல் - கண்ணகிக்காக முடியரசர் தலையிலே கல் சுமத்தல் — எல்லாம் கோப்பெருந் தேவியாரின் சிலம்பாலே நடந்த கதை தானே! பின் காப்பியத்தின் பெயருக்கும் பாண்டிமா தேவியின் சிலம்பே காரணமாயிற்று - என்பதில் பிழையுண்டோ! சிலம்பால் அதிகரித்த வரலாறு சிலப்பதிகாரம் என்பது அறிஞர் துணிபு

காவியத்தின் முப்பெரும் உண்மைகளை நினைவு கொள்வோம்.

" அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதும்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டு மென்பதும்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்."

கண்ணகியின் காலணிகளான சிலம்புகள் மட்டுமே இருந்திருக்குமானால் அவற்றைக்கொண்டு இழந்த பொருளை மீட்டு இருவரும் மதுரையில் சுகமாக வாழ்ந்திருப்பார்களே!

வேண்டுமானல் மூன்று உண்மைகளில் ஒன்று மெய்யாகி யிருக்கலாம். ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதை - நல்லோர் - பல்லோர் போற்ற பெருவாழ்வு வாழ்ந்த கோவலன் - கூடா நட்பால் செல்வமிழந்து சிறுமை யுற்ருன், ஊழ்வினையை வெல்ல முடியாது! என்ற அளவில். இருந்தும் நீலி சாபந்தானே - ஊழ்வினை மூலம் கோவலனைக் கொலையுண்ணச் செய்கிறது! பழியறியாத சங்கமனை ஒற்றன் என்ற பழிப்புக்குள்ளாக்கிக் கொலை புரிவிக்கிருன் பரதன். சங்கமன் மனைவி நீலி இப்பிறப்பில் எனக்கு ஊறுஇழைத்தோர் - நானடைந்த துன்பம் அடைக! என்று கூறி உயிர் விட்டாள். இப்பிறப்பில் - 1. கோவலன் கள்வன் என்ற பொருந்தாப்பழியோடு உயிர்விடவும் 2. அரசியல் நெறி பிழைத்த பாண்டியனுக்குதருமமே கூற்றாயின விதமும், 3, உரை பொருந்தியகண்ணகி தன் கற்பின்மேன்மையைவெளிப்படுத்தவும் - கடல் சூழ் இலங்கைக் கயவாகுமுதல் பலர் போற்றவும் காரணமாயினது — செழியனின் தேவி சிலம்பே. ஆகவே சிலப்பதிகாரம் கூறும் மூன்று செய்திகளுக்கும் கோப்பெருந் தேவியின் சிலம்பே காரணம். அது இல்லையேல் மதுரை வஞ்சிக் காண்டங்கள் தோன்றியிரா என்பதும் நாம் உணர வேண்டிய செய்திகள்.

டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் *"எந்தச் சிலம்பு" என்ற தலைப்பில் இப்புதிய கருத்தைத் தெளிவாக விரிவாக விளக்கியுள்ளார்கள்.

சிலப்பதிகாரம் காட்டும் சமய ஒருமைப்பாடு! வியத்தற்குரியது. சிவன் - திருமால் பேதமில்லாமல் சேரன் செங்குட்டுவன் நடந்து கொண்டான் என்பதைக் கால்கோள் காதையால் அறிந்து மகிழ்கிறோம். அடிகளாரும் - சமயப்பொறை கொண்டவர் என்பதைக் கீழ்வரும் வரிகளால் விளங்கிக்கொள்ளலாம்.

சிவபிரானின் மேலாந் தன்மையை,

' பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில் '

என இந்திர விழவூர் எடுத்த காதையிலும்

'' நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
உலகுபொதி உருவத்து உயர்ந்தோன் சேவடி

எனக் கால்கோள் காதையிலும் கூறுகிறார்.

கோவலன் - கவுந்தி அடிகளுக்கு மதுரைக்கு வழி காட்டும் மாங்காட்டு மறையோன்,

'' பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும் ''

என்கிறான்.

'' செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவனாக ''

செங்குட்டுவன் கூறப்பெறுகின்றான்.

சிவபெருமான் புகழுக்குச் சற்றும் குறைவுபடாத வகையில் 'நீலமேனி நெடியோன்' புகழப் பெறுகிறான்.

ஆடகமாடத் தறிதுயிலமர்ந்தோன் ''
— கால்கோள் காதை.

விரிதிரைக் காவிரி வியன்பெரு துருத்தி
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும் ''

மின்னுக்கோடி உடுத்து விளங்கு விற்பூண்டு
நன்னிற மேகம் நின்றது போல
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும் ''
— காடுகாண் காதை.

எழிலுடன் பேசப்படுகின்றது. இது தவிர

'' அந்தர சாரிகள் அறைந்தனர் சாற்றும்
இந்திர விகாரம் ''

'' மெய்வகை உணர்ந்த விழுமியோர் குழீஇய
ஐவகை நின்ற அருகத் தானம்.''

'' வால்வளை மேனி வாலியோன் கோயில் ''

என்று மற்றைத் தெய்வக் கோட்டங்களும் பேசப்படுகின்றன.

சிலம்பின் நாயகிகளான கண்ணகி - மாதவி - கோப்பெருந்தேவி மூவரில் சிறந்தவர் யார் என்ற வினவிற்கு, மா - பலா - வாழை ஆகிய முக்கனிகளில் சிறந்தது எது! என்ற வினவே விடையாகும்!

சிறைகாக்கும் காவலைவிட நிறைகாக்கும் காப்பே சிறந்தது என்று கணக்கிடுவோமாயின் மாதவி முதற் படியிலும், கோப்பெருந்தேவி அடுத்த படியிலும், கண்ணகி மூன்றும் படியிலுந்தான் வைக்கப்பெறுவர். ஆமாம். வாய்ப்பிருந்தும் பிசகாமை – வழி இருந்தும் வழுவாமை அரியது அல்லவா! குடிப்பிறந்தவளாம் கண்ணகி பரத்தையை ஏற்றதில் வியப்பில்லை! பரத்தை - பத்தினியை ஏத்தியது அதிசயம். இலக்கியம் மாதவிதான்!

'' மாலை வாராராயினும் காலை காண்குவமென ''

கையறு நெஞ்சமொடு பூமலர் அமளியில் பொருந்தாது வதிந்தது - பரத்தையுள்ளமா - பண்பட்ட உள்ளமா?

பொருளுக்காக என்பார் கூற்றுப் பொருந்தாது! பொருளை எல்லாம் இழந்த (மாதவியிடம் தான் இழந்தான்) கோவலனை எண்ணி ஏங்கி 'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்' என்று பணிவு மொழி புகன்று குலப்பிறப்பாட்டியொடு இரவிடை ஏக என்ன குற்றம் செய்தேன்! என்று வினவிய உயர்ந்த உள்ளம் நம்மால் பாராட்டப்பட வேண்டியதுதானே!

இல்லறத்திலே தெரிந்தோ - தெரியாமலோ குறை கண்டவள் கண்ணகி. கருத்தொருமித்த காதல்

* கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெள்ளிவிழா மலர்.

வாழ்வு - மங்கல மாட்சியின் நன்மகப்பேறு, காம வேட்கை கழிந்து ஏற்ற தூய துறவறம் - இவற்றிலே நிறைவு கண்டவள் மாதவி. கணவனின்றிக் காட்டு வது இல் என்ற எழுத்திற்கு இலக்கிய மானவள் கோப்பெருந்தேவி.

யாழிசை உருவில் வந்த ஊழ்வினை, கோவலனை மாதவியிடமிருந்து பிரித்து - கண்ணகி சிலம்பை விற்கச் செய்து கோப்பெருந்தேவி சிலம்பால் கொலை யுண்ணச் செய்து - சாவாத இலக்கியம் தந்தது. என்னே ஊழின் வலிமை!

'' மாதவி பாடிய கானற் பாணி
கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது. ''

என்ற சுருங்கிய வரிகளே சிலப்பதிகாரம்.

**மாண்பு மிக்க மணிமேகலை :**

மாதவி பெற்ற கண்ணகியின் திருமகள் மணி மேகலை. பத்தினித் தெய்வத்தின் மகள் என்று கூறுவதிலே பெருமை பெறுகிறாள் மாதவி.

'' மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாள் ''
— மணிமேகலை.

இக்காப்பியத்தைக் கூல வாணிகன் சாத்தனார் இயற்றினார். புத்தமதக் கொள்கை இந்நூலினுலே வலியுறுத்தப் பெறுகிறது. மணிமேகலையை மாதவி கணிகையர் கோலங் காணுதொழிகென கோதைத் தாமம் குழலொடு களைந்து - போதிசத்துவர் முன்பு புத்தபிக்குணி யாக்கினாள்.

புத்த சமயந் தழைக்கவும் - பசிப்பிணி நீக்கத் திற்காகவும் வாழ்ந்தாள் மேகலை. ஆபுத்திரன் கை அட்சய பாத்திரம் மணிமேகலை கையிற்பட்டு - உலக வறவியில் சோறுண்ணும் ஒலியெழச் செய்தது.

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர் அல் லவா. தவத்திறம் பூண்டு தருமம் கேட்டுப் பவத்திறம் அறுகென நோற்றவள் மணிமேகலை.

'' கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப்
பெண்டிர் தம் குடி '' — என்ற வரிகள்

சிலம்பிலுள்ள

'' ஆடுதும் என்ற அணியிழைக்கவ் வாயிழையாள்
பீடன் றெ‌ன விருந்த பின்னர் ''

என்ற வரிகளையும்

'' மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனில் இன்றால் ''

என்ற செய்தி

'' அருந்திறல் அரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்
பண்டையோர் உரைத்த தண்டமிழ் ''

என வரும் சிலம்புச் செய்தியோடு எத்துணை ஒப்புமை கொண்டது.

**நந்தா விளக்காம் சிந்தாமணி:**

சிந்தாமணிக் கடலில் சிறிது மொண்டு கொண் டேன் என்பார் கம்பர் பெருமான். ஏமாங்கத நாட் டரசன் சச்சந்தன் விசயை இருவருக்கும் தோன்றிய அருமகன் சீவகன். கட்டியங்காரனின் சூழ்ச்சியால் இவனது பிறப்பு இடுகாட்டில் நிகழ்வதாயிற்று. சீவகன் வளர்ந்து வாலிபனாகி எண்மரை மணந்த தோடு - கல்வியால் கலைமகளை - வீரத்தால் வெற்றி மகளை - அரசியலால் மண்மகளை - தவத்தினால் முத்தி மகளையும் மணந்து கொண்டான். இந்நூற்கு இத னாற்றான் மணநூல் என்ற மற்றொரு பெயர் வழங்கு வதாயிற்று. வீரம், காதல், தியாகம், கொடை, நன்றி மறவாமை, தெய்வ பக்தி ஆகிய உணர்ச்சி களின் உருவமே சீவகன். நல்லவன் வாழ்வான் - அநீதி அழியும் என்றபடி கடைசியில் கட்டியங் காரனைக் கொன்று அரசுகட்டில் ஏறுகிறான் ஆண் சிங்கம் போன்ற சீவக வேந்தன்.

'' போது வாய் திறந்த போதே பூம்பொறி வண்டு சேர்ந்தாங்கு
ஊதுமே மகவிர்க்கொத்த போகமும் அன்ன தொன்றே ''

என்ற சிந்தாமணி வரிகள் உன்னி உணரத்தக்க வைகள்.

'' கையால் பொதித் துணையே காட்டக்
கயற்கண்ணாள் அதனைக் காட்டாள்
ஐயா விளாம் பழமே யென்கின்றீர்
ஆங்கதற்குப் பருவ மன்றென்
செய்கோ எனச் சிறந்தாள் போற்
சிறவாக் கட்டுரையாற் குறித்த எல்லாம்
பொய்யே பொருளுரையா-முன்னே
கொடுத் துண்டல் புரிமின் கண்டீர். ''

என்ற பாடல் எண்ண எண்ண இனிக்குமே.

**வையம் போற்றும் வளையாபதி:**

நவகோடி நாராயணன் என்பவன் வேற்றுச் சாதியிலிருந்து பெண் கொண்டான். அவளிடம்

குழந்தையொன்று பிறந்தது. குழந்தையின் தந்தையாகிய நாராயணன் அதனை மறுக்கவே காளிகோயில் முன்னர் அவன் மனைவி அதனைச் சூளுறவோடு கூறினாள் என்று போகும் இக்கதை உண்மைக் கதையல்ல என்பார் ஐயர் அவர்கள்.

குண்டலகேசிக்கு எதிராக எழுந்த காவியம் இது என்று சிலர் கூறுவர். காவியத் தலைவன் யார் என்பது சரியாகத் தெரியவில்லை. சமணஞ்சார்ந்தது எனச் சிலரும் பௌத்தம் தழுவியது எனப்பலரும் கூறுவர். கி, பி. 10-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தோன்றிய இந்நூலில் சமய - பொருட் செறிவுள்ள கவிதைகள் பல உண்டு.

"நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே!
கோலங் குயின்ற குழலும், கொழுஞ் சிகையும்
காலக் கனலெரியின் வேம் வாழி நெஞ்சே
காலக் கனலெரியின் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வன் வாழி நெஞ்சே!

இந்நூலில் இதுவரை சும்மார் எழுபது பாடல்களே கிடைத்துள்ளன.

## மண்டலம் போற்றும் குண்டலகேசி:

குண்டலம் போன்ற சுருண்ட முடி கொண்ட இவளை மந்திரி குமாரி என்றும் வணிகர் குலப்பெண் என்றும் கூறுவர். இவள் கணவன் காளன் இவளது செல்வத்திற்கு ஆசைப்பட்டு இவளை மணம் புரிந்து கொண்டான். பின்பொருநாள் உயர்ந்த மலையிடத்திற்கு இவளை அழைத்துச் சென்றான். அங்கிருந்து கீழே உருட்டித் தள்ளிக் கொலை செய்வதாக எண்ணம். இதனை அறிந்த கேசி அவனுக்கு முற்பட்டு அதனைத் தானே செய்தாள். பின்னர் சமண சமயம் புகுந்து மிகுந்த புலமை நலங்கொண்டு வாதிடுவாளாயினள். நாவல் மரக்கிளையை நட்டுப் போட்டியிடுதல் அக்கால மரபாம். அதன்படி நட்டிருந்த இவளது நாவலங்கிளையை புத்தரது சீடரான சாரிபுத்தர் பிடுங்கி எறிந்து வாதத்திலே இவளைத் தோல்வியுறச் செய்தார். பின்பு இவள் பௌத்த மதம் சார்ந்தாள் என்பர்.

நிலையாமை குறித்துக் குண்டலகேசி கூறும் அரிய பாடல் ஒன்றுண்டு.

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே"

— திருமந்திரம்

இப்படிப்பட்ட காட்சிகளைமட்டுமா நாம் காண்கிறோம். நம்முள்ளே நாம் நிலையாமையைக் காணவில்லையா என்று நகைக்கிறார் குண்டலகேசியார்.

"பாலையாந் தன்மை செத்தும் பாலனாந் தன்மை செத்தும்
காளையாந் தன்மை செத்தும் காமுறுமிளமை செத்தும்
மீளுமிவ் வியல்பு மின்னே மேல்வரு மூப்புமாகி
நாளு நாம் சாகின்றேமால் நமக்குநாம் அழாத தென்னோ"

ஐம்பெருங் காப்பியங்கள் உணர்த்தும் வழி நடந்து இலக்கிய இன்பத்தோடு ஈடிணையில்லாத் தண்டமிழ்ப் பயனும் கொண்டு எண்டிசை போற்ற வாழ்வோம்.

"இருந்தமிழே உன்னா லிருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

— தமிழ்விடுதூது

# மனிதரில் தலையான மனிதர் *

சித்தாந்தப் புலவர் மணி

திரு. ந. ரா. முருகவேள் *M. A., M. O. L.,*

**முன்னுரை :**

" அனுசயப் பட்டுஅது இதுஎன் னுதே
கனிமனத் தொடுகண் களும் நீர் மல்கிப்
புனிதனைப் பூவ ணனைப் போற்றுவார்
மனிதரில் தலை யான மனிதரே "

எனத் திருநாவுக்கரசர் பாடியருள்கின்றார். அந் நிலையில் 'மனிதரில் தலையான மனிதர்' எனப் புகழ்ந்து போற்றத்தக்க வண்ணம் விளங்கியவர், திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள் ஆவர். அண்மைக்காலத்தில் வாழ்ந்து, தமிழுக்கும் சமயத்துக்கும் சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கைக்கும் அரும்பெருந்தொண்டுகள் ஆற்றிய சான்றோர்களுள், திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை அவர்கள் தலைசிறந்த ஒருவர் எனலாம்.

**ஏகலவ்யன் :**

திரு. நல்லசாமிப்பிள்ளை அவர்களை நினைக்கும் போது, எனக்கு இராமாநுஜர் பற்றிய வரலாற்றுக் குறிப்பொன்று நினைவுக்கு வருகின்றது, இராமாநுஜர் வைணவ சமயப் பெருந்தகையாகிய ஆளவந்தார் என்பவரின் அருமை பெருமைகளைக் கேட்டறிந்து, அவரைக் கண்டு மகிழ்தல் வேண்டும் என விரும்பியிருந்தார். ஆனால் இராமாநுஜர் திருவரங்கம் போய்ச் சேர்வதற்கு முன்னரே, ஆளவந்தார் திருநாடு அலங்கரித்துவிட்டார். எனினும் ஆளவந்தார் தான் இராமாநுஜரின் வாழ்க்கைக்கு ஒளிவிளக்காகத் திகழ்ந்து, உணர்வெழுச்சி (Inspiration) ஊட்டி உந்துதல் அளித்து வந்தாராம். திருமாலையாண்டான் என்பவர்பால் திருவாய்மொழிக்குப் பொருள் கேட்டுப் பயின்று வந்த இராமாநுஜர், இடையிடையே திருவாய்மொழிக்குத் தம் ஆசிரியர் கூறும் பொருளின் வேறாகப் புதுப் பொருள் கூறுவார். அதுகேட்டுத் திருமாலையாண்டான், 'இது விசுவாமித்திர சிருட்டியாகத் தோன்றுகின்றது. எம் ஆசிரியராகிய ஆளவந்தார் எமக்கு இவ்வாறு பொருள் கூறவில்லையே. இதனை யாம் எங்ஙனம் ஒப்புக்கொள்ள முடியும் ?' என்பார். அதற்கு இராமாநுஜர் 'அடியேன் ஆளவந்தார்க்கு ஏகலவ்யன் அல்லனோ ? அதனால்தான் ஆளவந்தார் அவர்களின் அருட்பெருந் திறனால் அடியேனுக்கு விசுவாமித்திர சிருட்டி எனத் தாங்கள் கூறும் இப் புதிய சிறந்த பொருள்கள் தோன்றுகின்றன' என்று விடையளிப்பாராம். 'ஆளவந்தாரை யான் கண்டிருக்கப் பெற்றேனாகில், வைகுந்தத்திற்கே நேரே படிகட்டி ஏணி அமைத்திருக்க மாட்டேனா ?" என்றும் ஆராமையுடன் இராமாநுஜர் குறிப்பிடுவாராம்.

**ஒருபுடையுவமை :**

இவ்வரலாறு இங்கு ஒருபுடை யுவமையாகவே கொள்ளத்தக்கது; முற்றுவமை யன்று. இராமாநுஜர்க்கு ஆளவந்தார் போல, எனக்குச் சைவத் தமிழ்த் துறைகளில் திரு. ஜே. எம். என். அவர்கள் உணர்வெழுச்சி (Inspiration) யூட்டி, உந்துதல் அளித்து வருகின்றார். ஆளவந்தார்க்கு இராமாநுஜர் போன்று, திரு. ஜே. எம். என். அவர்களுக்கு யான் ஓர் ஏகலவ்யன் ஆவேன். இராமநுஜர் தம்மைக் காணும் முன்னரே ஆளவந்தார் திருநாடு அலங்கரித்துவிட்டார். அந்நிலையில் யான் பிறப்பதற்கு முன்னரே திரு. ஜே. எம். என். அவர்கள் சிவபிரான் திருவடி நிழலில் 'சுத்தாத்வைத சித்தாந்த முத்தி எய்திவிட்டார். ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் போன்ற

---

*** சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நிகழ்ந்த திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை அவர்களின் நூறாவது பிறந்தநாள் விழாவில் பேசியதனைத் தழுவியது. (24—11—65).**

சான்றோர்களைக் கண்டு கேட்டு மகிழும் பேறுபெற்ற எனக்கு, திரு. ஜே. எம். என். அவர்களைக் காணும் பேறு வாய்த்திலது.

**பழைய நினைவுகள் :**

இற்றைக்குச் சற்றேறத்தாழ 25 ஆண்டுகட்கு முன்னர், யான் சென்னைத் தியாகராயநகர் இராமகிருஷ்ணமிஷன் உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் படிவம் (Fifth form) படித்துக்கொண்டிருந்தபொழுது, சேலை சகாதேவ முதலியார் என்னும் தமிழறிஞரின் புதல்வர் ஆகிய மீனுட்சிசுந்தரம் என்னும் மாணவர் ஒருவர், என்னுடு உடன் பயின்று வந்தார். ஒரு நாள் அவர் 'சிந்தனைக் கட்டுரைகள்' என்னும் தலைப்புள்ள நூல் ஒன்றனை எனக்குப் படிக்கக் கொடுத்தார். ஆசிரியர் மறைமலையடிகள் இயற்றிய நூல் அது. ஜோசப் அடிசன் (Joseph Addison) என்னும் ஆங்கிலப் பெரும்புலவர் "பார்வையாளர்" (Spectator) என்னும் இதழில் எழுதிய கட்டுரைகளுள், Vision of Minya போன்ற சிறந்த சில கட்டுரைகளின் தமிழ் மொழி பெயர்ப்புத் தொகுப்பே அந்நூலாக அமைந்துள்ளது. அந்நூலுக்குப் பிற்சேர்க்கையாக அடிகளார் எழுதியுள்ள விளக்கவுரைக் குறிப்புக்களில், திரு. ஜே எம். என். அவர்களைப் பற்றியும், அவர் சித்தூரில் நீதிபதியாக இருந்தபோது அங்குச் சென்று 'அச்செல்வரின் இல்லத்தில் இனிது விருந்தோம்பப் பெற்றுச் 'சித்தாந்த தீபிகை' எனப் பெயரிய திங்கள் இதழின் தமிழ்ப் பதிப்பிற்கு ஆசிரியராகத் தாம் சிலகாலம் பணி புரிந்தமை பற்றியும், குறிப்பிட்டிருக்கின்றார். அப்போது அடிகளாரின் மனங்கவர்ந்த சிறந்த இளைய நண்பராகத் திரு வி. வி. ரமண சாஸ்திரிகள் அவர்களும், அங்கு அடிகளாருடன இணைந்து பணி புரிந்து வந்ததாகத் தெரிகின்றது.

**சிறு நிகழ்ச்சியின் பெருவிளைவு:**

மனித வாழ்க்கையிற் சில சமயங்களிற் சிறிய நிகழ்ச்சிகள் தாமும், பெரிய விளைவுகளை நிகழ்த்தி விடுகின்றன. 'ஒரு தெய்விக ஆற்றல் உள்ளது. அது நம் வாழ்க்கையினை எவ்வெவ்வகையிலோ உருவாக்குகின்றது' எனறு ஷேக்ஸ்பியர் பாடுகின்றார். என் நண்பன் எனக்குப் படிப்பதற்குப் புததகம் கொடுததது மிகவும் சாதாரணமான செயலதான். ஆனல், அந்நூல் என் வாழ்க்கையிற் பலவகைகளில பெருவிளைவுகளை எய்துமாறு செய்துள்ளது எனக்குத் தமிழறிவும், சைவவுணர்வும், சைவ சிததாந்தக கொள்கைப் பற்றும், ஓரளவேனும ஏற்பட்டிருப்பதற்கு அச்சிறு நூலும் அச்சிறிய நிகழ்ச்சியுமே, பின் நாளிற் படிப்படியே பெரிதும் துணை புரிந்தது. முதன் முதலாக யான் திரு. ஜே. எம். என். அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளுதற்குக் கிடைத்த வாய்ப்பினைக் கூறும் முறையில், இதனை யான் இங்கு நினைவு கூர்தல் (Reminiscance) நேர்ந்தது.

**தொண்டின் திறம்:**

பேரறிஞர் திரு. ஜே. எம். என். அவர்கள் 'சைவ சித்தாந்த சண்டமாருதம்' என விளங்கிய ஸ்ரீ சோமசுந்தர நாயகர் அவர்கள்பால் சைவ சித்தாந்தம் பயின்றவர். சிவஞான போதம், சிவஞான சித்தியார், திருவருட்பயன் முதலிய எட்டு நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். மொழி பெயர்த்தல் என்பது எளிதான செயல் அன்று. பரமஹம்ஸர் என்பதனைப் பெரிய வாத்து (Great goose) என்று மொழி பெயர்த்தார் ஒருவர். சத்திநிபாதம் என்பதனைச் சத்தி நின்று போதல் (Cessation of energy) என்னும் பொருளமைய மொழி பெயர்த்தார் மற்றெருவர். எவ்வளவு தான் பெருமை மிகுந்த தேவர்களாயினும் தன் முன்னே அவர்கள் சிறிய புழுவாகி விடும் அளவுக்குச் சிறந்துயர்ந்து மேம்பட்டுத் திகழ்பவன் சிவபெருமான் எனப் பொருள்படும் " கீடம் புரையும் கிழவோன் " என்னும் திருவாசகத் தொடரைச் சிவபெருமான் புழுவிற் புழுவாக விளங்குகின்றான் எனப் பொருள் படுமாறு, நம் பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய போப்பையர் அவர்கள், மொழி பெயர்ப்போடு பொருட் பெயர்ப்பும் செய்துவிட்டார். சிலந்தியானது தனது வயிற்றினின்று நூலை வெளிப்படுத்தி வலை பின்னிப் பின்னர் அதன்கண் உறைவதுபோல, இறைவன் தன்னினின்று மாயையினை வெளிப்படுத்தி உலகத்தைப் படைத்து அதன்கண் யாண்டும் பரவி விளங்குகின்றான் என்னும் கொள்கையினை ஓரளவு கேட்டு அறிந்து கொண்டு, இந்துக்கள் என்போர் சிலந்திப் பூச்சியையே (Spider) கடவுளாக வணங்குகின்றனர் என இகழ்ந்து எழுதியவர்களும் உண்டு.

இத்தகைய செய்திகளினல் மொழிபெயர்த்தல் என்பது எத்துணைக் கடினமான ஒரு செயல் என்று யாவரும் உணரலாம். அதனைத் திறம்படச் செய்து, செந்தமிழ்க்கும் சிவ நெறிக்கும் பெருந்தொண்டு புரிந்திருப்பவர் நமது பிள்ளை அவர்கள்; " திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" எனப் பாரதியார் பாடியுள்ளார். அம்முறையில் பேரறிஞர் ஜி. யூ. போப், பேரறிஞர் எல். டி. பார்னெட், பேராசிரியர் ஜுலியன் வில்சன் முதலிய எத்துணையோ பல வெளிநாட்டு அறிஞர்களும், அருட்டிரு விவேகானந்த அடிகளார் போன்ற சான்றோர்களும் பாராட்டி மகிழும் வண்ணம் திரு. ஜே. எம். என். அவர்கள் பெருந்தொண்டு புரிந்துள்ளார் எனில், 'நீளும் அத் தொண்டின் நீர்மை நினைக்கில் ஆர் அளக்க வல்லார் ?'

**பலதிறச் சிறப்புக்கள் :**

திருவள்ளுவர் அறிஞர்களை நூலார், நூல் வல்லார், நூலாருள் நூல்வல்லார் என மூவகையாகக் குறிப்பிடுகின்றார். அவ்வகையில் உத்தமோத்தமப்

பெரும்புலவராக "நூலாருள் நூல் வல்லார்" எனும் நிலையில் விளங்கியவர் திரு. ஜே. எம். என். அவர்கள்.

ஆசிரியர் சிவஞான சுவாமிகள், 'நல்லார்' என்னும் சொல்லுக்குக் 'கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்' எனப் பொருள் காண்கின்றார். அம்முறையில் நோக்கின் திரு. ஜே. எம். என் அவர்களை விடச் சிறந்தவேறு "நல்லவர்" ஒருவரை நாம் சைவத் தமிழுலகிற் காண்டல் அரிது.

"சிலர் பிறக்கும் போதே பெருமையுடன் பிறக்கின்றார்கள்; சிலர் பிறந்த பின்னர்ச் செயற்கருஞ் செயல்கள் புரிந்து பெருமையை அடைகின்றார்கள். சிலர் மீது வறிதே பெருமை திணிக்கப்படுகின்றது', என ஷேக்ஸ்பியர் குறிப்பிடுகின்றார். திரு. ஜே. எம். என். அவர்கள் 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றபடி பிறக்கும் போதே 'கருவில் திருவுடையவர்' ஆகத் தோன்றினர். 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்றபடி செயற்கரிய பல பெருந்தொண்டுகளைப் புரிந்துள்ளார். 'மதி நுட்பம் நூலோடு உடையவர்' அவர். 'அறிவு உரு ஆராய்ந்த கல்வி' இம் மூன்றும் அவர்பாற் செறிந்திருந்தன அவர் "சொலல் வல்லர் சோர்விலர் அஞ்சார்" என விளங்கியிருந்தார். தமிழ் நலமும் சைவ நலமும் பேணி, அவற்றின் வளர்ச்சி குறித்துப் போராடும் பெருவீரராக (Champion) அவர் திகழ்ந்தார்.

திரு. ஜே. எம். என். ஓர் இலட்சிய புருஷர். 'குறிக்கோள் இலாது கெட்டேன்' என்றபடி இல்லாமல், உயர்ந்த குறிக்கோள்களுக்காக-இலட்சியங்களுக்காக-வாழ்ந்தவர். நாம் எல்லோரும் பணிந்து பின்பற்றத் தக்க நிலையில் நமக்கெல்லாம் ஓர் எடுத்துக் காட்டாக - இலட்சியமாக - விளங்கியவர்.

"எத்தனையோ பல நூற்றாண்டுகள் கழிந்தே ஒரு நாட்டில் வரலாறு முகிழ்க்கின்றது. எத்தனையோ பல நூற்றாண்டுகளின் வரலாற்றுக்குப் பின்னரே இலக்கியங்களும் இலக்கிய வரன் முறைகளும் அரும்புகின்றன" எனப் பேரறிஞர் திரு. எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுவர். அம்முறையில், எத்தனையோ பல நூற்றாண்டுகளின் இலக்கிய வளர்ச்சிக்குப் பிறகே தத்துவ மலர்ச்சி நிகழ்கின்றது. எத்தனையோ பல நூற்றாண்டுகளின் தத்துவ வளர்ச்சிக்கு அப்புறம்தான் திரு ஜே. எம். என் போன்ற தத்துவ வித்தகர்கள் தோன்றுகின்றனர் எனலாம்.

கிரேக்க நாட்டின் பழம் பெரும் அறிஞர்களுள் ஒருவராகிய தேல்ஸ் ( Thales ) என்பவர், 'விலங்காக அன்றி மனிதனாகப் பிறந்தேன்; அதிலும் பெண்ணாகப் பிறவாமல் ஆணாகவே பிறந்தேன்; அதற்கு மேலும் பண்பிலாதவன் ( Barbarian ) எனப் பிறக்காமல், பண்பாடு மிக்க கிரேக்க நாட்டவனாகப் பிறந்தேன். இஃது எத்தகைய பேறு!" என்று மகிழ்ந்து கொள்கின்றார். "நரர்பயில் தேயம் தன்னில் நான்மறை பயிலா நாட்டில் விரவுதல் ஒழிந்து" தமிழனாகப் பிறப்பது சிறப்பு. அதிலும் சிவ நெறியாளனாகப் பிறப்பது பெருஞ் சிறப்பு. அதற்கு மேலும் சைவ சித்தாந்தப் பற்றும் புலமையும் அமையும்படி பிறப்பது மிகுந்த சிறப்பு. அதனினுங்கு அத்துறையிற் பிறர்க்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கும் நிலையில், அரும்பெருந் தொண்டுகள் ஆற்றப் பிறப்பது, மேலும் மிகமிகப் பெருஞ்சிறப்பு. இவ்விணையற்ற தனிப்பெருஞ் சிறப்பினைப் பெற்றவர்களுள் தலை சிறந்த ஒருவர் திரு. ஜே. எம். என்.

ஸ்ரீ ஆறுமுக நாவலர், ஸ்ரீ சோமசுந்தர நாயகர் போன்ற பேரறிஞர்கள் தமிழ் - வடமொழி நூல்களின் துணை கொண்டு சைவ சித்தாந்த நெறியினை விளக்கி வளர்த்துப் போந்தனர். இவரோ இக்கால அறிவாராய்ச்சி நெறிமுறைகளை ஒட்டி, மேலைநாட்டு அரிய பல ஆங்கில நூல்களின் துணை கொண்டும் ஒப்புமைத் திறனாய்வு (Comparative study) முறையில், சைவ சித்தாந்தச் செந்நெறியுண்மைகளை விளக்கிப் பரப்பினர். பழைய கருத்துக்களைப் புதிய முறைகளில் இவர் விளக்கியிருக்கக் காண்கிறோம். ஒரு சில எடுத்துக்காட்டுகள் மட்டும் இங்குக் காண்போம்.

(1) யூக்லிட் என்பவரின் மொழியில் சொல்லுவதாயின், கடவுள் (பதி) ஒரு புள்ளி. புள்ளிக்கும் பகுப்பும் பரப்பும் இல்லை. அஃது அகமும் புறமும் மேலும் கீழும், எங்கும் பரவி நிற்கும். கடவுளும் அத்தகையவரே. வட்டத்தின் மையம் ஆன்மா (பசு), வட்டத்தின் சுற்றளவே ஆன்மாவைச் சூழ்ந்திருக்கும் மாயை (பாசம்). எப்பொழுது மையம் ஆகிய ஆன்மா, புள்ளியாகிய கடவுளின் நிலைக்கு உயர்ந்து செல்லுகின்றதோ, அப்பொழுது அது வீடு பேறு (முத்தி) அடையும் நிலையினை எய்துகின்றது"

---

(1) "In the language of Euclid, God is the point, that which hath no parts, nor magnitude; that which is everywhere in and out, above and below; the soul is the centre of the circle and the circumference is the Maya that bounds. When this centre can rise upto the point then its Nirvana is possible.

- Studies in Saiva Siddhanta (P. 88)

(2) "கடவுள் 'சச்சிதானந்தம்' என விளங்குகின்றார் என வேத ஆகம உபநிடதங்கள் அனைத்தும் கூறும். இப்பழம் பெரும் கருத்தினை நமது பேரறிஞர் பின்வருமாறு விளக்குகின்றார். "கடவுள் சத்து சித்து ஆனந்தம்" என்னும் முப்பெரும் பணபு நலங்களையுடையவர். இவ்வுண்மையினையே, எல்லாச் சிவாலயங்களிலும் வைத்து வழிபடப் பெறும் சோமாஸ்கந்த மூர்த்தம் அறிவுறுத்திக்கொண்டு திகழ்கின்றது. கிறித்தவ சமயத்திற் கூறப்பெறும் பரமபிதா தேவகுமாரன் பரிசுத்த ஆவி என்னும் முப்பொருள்களின் (Trinty) இயல்பும், இதனோடு, ஒத்த தன்மையுடையதாகக் காணப்படுகின்றது. சத்து சிவம். சித்துஉமை. ஆனந்தம் முருகன்."

(3) "சிலர் கடவுட் பெரும்பொருளை அது என்று சுட்டுகின்றனர். மற்றும் சிலர் அவன் என்று குறிப்பிடுகின்றனர். 'அது' என்று சுட்டினால், கடவுள் அஃறிணைப்பொருள் எனமுடியும். 'அவன்' என்றாலோ, கடவுள் ஆணாக மட்டுமே இருப்பதாகக் கொள்ளப்படும். கடவுள் எல்லாமாயும் அல்லவாயும் நிற்கும் இயல்புடையவர் ஆதலின், அவரை நாம் அவன் - அவள் – அது என்னும் மூன்று நிலைகளிலும் குறிப்பிடுதல் பொருந்தும். இறைநிலையை அவள் எனத் தக்கவாறு கொண்டு வழிபடும் முறையே சக்தி வழிபாடு ஆகும்.

'அன்னை மரியாள சிறப்பைப் புகழ்ந்து கொண்டாடுவதன் மூலம் கிறித்தவ சமயமும், தாராதேவியின் சிறப்பைப் போற்றுவதன் மூலம் பௌத்த சமயமும் கூட, ஒருவகையில் தாய்மைத் தெய்வ வழிபாட்டு முறையினை உடன்பட்டுத் தழுவிக் கொண்டுள்ளன. தூய சிறந்த கன்னிமை - இல்லாண்மை - தாய்மை ஆகிய பண்பு நலஙகளின் குறைவிலா நிறைவு ஆகிய வடிவமே உமாதேவியாவர் எனத் திருமதி. பிளோரா அன்ஸி ஸ்டீல் என்பவரும் உடன்பட்டுக் குறிப்பிடுகின்றார்".

(4) "பேராசிரியர் மாக்சுமுல்லர் அவர்கள், முழுமுதற்பரம் பொருளைக் குறிப்பதற்கு உருத்திரன்-அரன்-சிவன் என்னும் சொற்கள்தாம், பிரம்மம்-ஆத்மா-பரமாத்மா என்னும சொற்களை விடப் பழமையாக வழங்கி வந்துள்ளன. பிரம்மம்-ஆத்மா-பரமாத்மா முதலிய சொற்கள் முழுமுதற் பரம் பொருள் ஆகிய கடவுளைக் குறிப்பனவாக இருக்கு வேதத்தில் யாண்டும் பயின்று வரவில்லை"

---

(2) "Our idea of God is sat-Chit-Ananda Symbolised in the form of *Somaskanda* (Sa+Uma+Skanda) and this is the same as God the heavanly *Father*, God the *Mother*, or Holy *Ghost* and God the *Son*, and I have quoted in some other place the definition of these terms from *Bishop Westcott*, God as pure being or Spirit, God as Light that links to him all humanity, and God as Love" - J. M. Nallaswamy Pillai, B. A., B.L. Studies in Saiva Siddhantha P. 193

(3) "One says, 'address God always as *He*; and if you call Him, 'It', he says you are addressing a cold abstraction.

Another claims to have reached a higher philosophy by refusing to call Him as 'He' and by calling Him '*It*'

Both seem to think that there is something degrading in calling Him as '*She*', But the feeling which includes the European to lift the female to almost divine honors, and the tenderest and most passionate of all our emotions which cling round the word '*Mother*' ought to enable one to realize our ideal of God as the Divine Sakti. *Mrs. Flora Annie Steel* speaks of *Uma-Mainavati* as the emblem of perfect wife-hood, mother-hood, and mystical virginity. Ibid.

(4) "Prof. Maxmuller has shown the use of such words as *Rudra, Hara, Siva* to denote the highest God is much more earlier than the use of such words as Brahman, Atman and Paramatman; and in fact these words do not occur in the Rig Veda at all to denote the Highest God" Ibid. - P. 4.

(5) "சிவம் என்னும் சொல்லுக்குத் திருமூலர் அன்பு என்று பொருள் கொண்டிருப்பது யாவரும் அறிந்தது. கடவுளை அன்பு வடிவினனாகக் கொண்டு வழிபடுவதிலும் மேற்பட்ட சிறந்ததொரு கொள்கை, வேறு பிறிதொன்றில்லை. பேராசிரியர் ரோமேனஸ் என்னும் விஞ்ஞான மேதையும் கூட இதனை வியந்து புகழ்ந்து போற்றியுள்ளார்."

(6) "ஒழுக்கத்தை வற்புறுத்துவதில் பௌத்தமும் கொல்லாமையை அறிவுறுத்துவதில் ஜைனமும், கடவுட் பொருளின் உயர்நத தத்துவம் - மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பு - அன்பு அருள பற்றிய கொள்கை - ஞானாசிரியரின் தேவை - கடவுளிடம் புகலடைதல் முதலியவற்றைக் கூறுவதில் கிறித்தவமும், தாசமார்க்கத்தைப் போற்றுவதில் இசுலாமியமும், பத்தியுணர்வைக் கடைப்பிடிப்பதில் மற்றும் எத்தனையோ பல கொள்கை ஒப்புமைகளைக் கொண்டதாய் இருத்தலில் வைணவமும் ஆகிய பல சமயங்களுடனும், சைவ சமயமானது ஒருமைப்பட்டுத் திகழும உயர்வுடையதாகத் திகழ்கின்றது" எனவும், நமது விழாத் தலைவர் அவர்கள் விளக்கியிருக்கின்றார்கள்.

**முடிவுரை :**

இதுகாறும் கூறியன கொண்டு, நாலிபுலாக நியாயம் பற்றி, நமது சைவ சித்தாந்தச் சான்றோர் அவர்களைப் பற்றிய அருமை பெருமைகளை நாம் ஓரளவேனும் உணரலாம்.

இத்தகைய சிறந்த உயர்ந்த பெருந்தகையாரைப் பற்றி நமது "திருவாசகமணி" அவர்கள் எழுதியுள்ள வாழ்க்கை வரலாற்று நூல் பலவகைகளில் சிறப்புடையதாகத் திகழ்கினறது. "பாம்பறியும் பாம்பின கால்" என்பது பழமொழி. அம்முறையில் நம் திருவாசகமணி போன்ற மேதைகளே, நமது ஜே. எம். என். போன்ற மேதைகளின் சிறப்பினை விளக்குதல் இயலும். எழுதப் பெற்றவரும் சிறந்த பெருந்தகையார், எழுதியவரும் ஒரு சிறந்த பெருந்தகையார். எழுதிய முறை, எழுதிய நடை, எழுதிய உணர்வு எல்லாமே சிறந்து விளங்குகின்றன.

தேவேந்திரனின் தலைநகர் ஆகிய அமராவதியையும், குபேரனது கோநகர் ஆகிய அளகாபுரியையும், முதற்கண் படைத்துப் பயிற்சி பெற்றுக் கொண்டு, அதன் பின்னரே பிரமன் அயோத்திமா நகரினைப் படைத்தான் என்கிறார் கம்பர். மேரு ஆகிய பெருமலையை வில்லாக வளைத்துப் பயின்று தேர்ச்சி பெற்றதன் பின்னரே, இறைவன் தம்முடைய மனம் ஆகிய கல்லைப் பிசைந்து மென்கனியாக ஆக்கும் விசசை (Magic) புரிந்து, தம்மை ஆட்கொண்டருளினன் எனப் பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

அதனைப்போல, "புகழோங்கிய தென்னிந்தியப் பெருமக்கள் (The South-Indian Celebrities), திருவாசக மொழி பெயர்ப்பு, திருக்குறள் மொழி பெயர்ப்பு ஆகிய சிறந்த நூல்களை இயற்றி வெளியிட்டதன் பின்னர், இந்நூல் திருவாசகமணி அவர்கள் வாயிலாக வெளிவருவது, எழுத்துத் துறையில் அவர்க்குள்ள பயிற்சி - தேர்ச்சி - முதிர்ச்சி ஆகிய நலங்கள் முற்றும், இந்நூலின்கண் இனிதியைந்து அமைந்திருக்கும் திறனை உணர்த்துவதாகும் எனலாம்.

இந்நூலின் இணையற்ற சிறப்பினை யான் 'என்ன கூறி மற்று எங்ஙன் உணர்த்துகேன்?' சாமுவேல் ஜான்சனைப் பற்றி எழுதிய ஜேம்ஸ் பாஸ்வெல்லையோ பிறரையோ, இங்கு யான் உவமையாகக் கூறத் துணியவில்லை. சர்வால்ட்டர் ஸ்காட் என்னும் புகழ் பெற்ற புதின ஆசிரியரின் வரலாற்றை எழுதிய லாககார்ட் (J. G. Lockhart) என்பவரையும், மெக்காலேயின் வரலாற்றை வரைந்த டிரவெலியன் (Trevelyan) என்பவரையுமே, யான் ஈண்டு நினைவு கூர்கின்றேன். 'லாக்கார்ட்' என்பவர் ஸ்காட்டின் மருகர், டிரவெலியன் அவர்களோ, மெக்காலேயின் உறவினர் (Nephew).

திருவாசகமணியும் ஜே. எம். என். அவர்களின் உறவினர். லாக்கார்ட்டும் டிரவெலியனும் போலவே, இவரும் ஜே. எம், என். அவர்கள்பால் மிக்க ஈடுபாடும் பகதியும் கொண்டு, அரிதின் ஆராய்ந்து இந்நூலை எழுதியுள்ளார். நாயன்மார்களுககுச் சேக்கிழார் பெருமான் அமைந்தமைபோல, திரு. ஜே. எம். என். அவர்களுக்கு மிகப் பொருத்தமாகத் திருவாசகமணி அவர்கள் வாழ்க்கை வரலாறு எழுதக் கிடைத்தார்கள். இராமகிருஷ்ணரின் பெருமையினை விளக்க விவேகாநந்தர் ஆகிய மாணவர் கிடைத்தார். அதுபோலத் திரு ஜே. எம். என் அவர்களின் பெருமையை விளக்க

---

(5) "The highest and best conception that we can ever reach of God, describing as it does, His inmost nature, and of course the only way we can know him is that God is love and Blessedness, Sivam.

And such a great scientist as the late *Prof. Romanes* has asked with truth what has all the science or all the philosophy of the world done for the thought of mankind to be compared with one doctrine, '*God is Lover*'?". Ibid — Page 239.

நம் திருவாசகமணி ஆகிய தொண்டர் நேர்ந்தார். ஆசிரியரால் மாணவரும், மாணவரால் ஆசிரியரும் பெருமை பெறுகின்றனர். "கொண்டும் கொடுத்தும்" இருவரும் குலாவிக் குடிகுடி ஆட்செய்கின்றனர் - தமிழுக்கும் சைவத்துக்கும்.

*நல்லசாமிப்பிள்ளை அவர்கள் நாமம் வாழ்க !*

அவர்களின் சைவ சித்தாந்தச் செந்நெறியும், தொண்டும் செழித்துச் சிறந்தோங்குக !

* சீலம் மிக்க பெருமக்கள்
சிறந்த நல்ல வரலாறு
ஏல நாமும் அவர்களைப் போல்
இறைமை வாழ்வெய் துதல்தேற்றும்,
கால மணலிற் பதிந்தவர்காற்
சுவடு, வாழ்வாம் கலம்கவிழ்ந்து
சாலத் தவிக்கும் சகோதரரைத்
தைரி யமேகொண் டுயச்செய்யும் !

---

* "Lives of great men all remind us
we can make our, lives sublime,
And, departing, leave behind us,
Footprints on the sands of time;
Footprints, that perhaps another,
Sailing o'er life's solemn main,
A forlorn and shipwreck'd brother,
Seeing, shall take heart again"
— H. W. Longfellow.

*உயிரினங்களில் மக்கள் சிறநது நிற்றற்குக் காரணம், அவர்களது அறிவின் மிகுதியே. மேலும், அவர்கள் ஒவ்வொன்றையும தாமே ஆராய்நது "புதிதாக உணர்நதுகொள்ளாமல், தமக்குப் பனனெடுநாள் முன்னிருநத பெரியோர் பலர் தம அனுபவத்திற் கண்டு" சொல்லிச்சென்றவற்றை நூல்கள் வாயிலாகப் பெற்று அறிவு முதிர்கின்றனர்.*

* * *

*உயிர்கள் இறைவனது இன்பத்தை அடையவொட்டாது தடுத்து நிற்பது, அறியாமையே வடிவாகிய ஆணவ மலம். இதற்கு மாற்று மருந்தாய் இறைவனால் சேர்க்கப்பட்டவை கன்மமும், மாயையும். அவற்றுள், கன்மம் உயிர்கள் இயங்கும் ஒழுங்குமுறையாயும், மாயை அவ்வொழுங்கு முறையினால் வரும் பயனையும் அமையும்.*

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

கவிதை நாடகம்:

# அவன் அருள்

செஞ்சொற்கொண்டல்

**வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன்** *M. A.,*

### காட்சி 1

[ வெண்ணிலாப் பொழுது; புலவர் பிறைசூடியார் தம் மனையின் முன்னுள்ள மகிழமரத்தடியில் அமர்ந்துள்ளார்; அவருடைய ஒளிபடர்ந்த விழிகள் வெண்ணிலாப் பொழியும் தண்மதியை நோக்கியிருக்கின்றன; உணர்ச்சி வெள்ளத்தால் உந்தப்பட்ட புலவர் திருவாய் திறக்கிறது; தீந்தமிழ் பொழிகிறது. ]

**பிறை :**

விண்ணகத் தொளிரும் வண்ண நிலாவே!
மண்ணகத் தமுதக் கிண்ண மிருந்து
பாலைப் பொழியப் பாங்குபெற் றனையே!
ஆலைக் கரும்பின் தெளிவினைப் போல,
நிலவே, நீதரும் இன்பமென் நெஞ்சில்
கலந்தே யினிக்கக் களிப்பேன் வாழி!
செந்தமிழ்க் கவிதை செவியினுட் புகுந்து
சிந்தையில் தேங்கிச் செறிவது போல,
ஒளிக்கதிர் நெஞ்சிலும் உட்புகுந் தென்னைத்
தெளிபரம் பொருளின் தெய்விகக் காட்சியில்
சேர்த்திட லதனைச் செப்பலும் ஆமோ?
வார்த்தையில் அடங்குமோ, வான்நிலா
உன்புகழ்! 12

[ புலவரின் ஓரேமகள் அன்பரசி உட்புறமிருந்து வருகிருள் ]

**அன்பரசி :**

தந்தையே! திருவிளக் கேற்றிவைத் திட்டேன்;
வந்திடு வீரே, வழிபா டியற்ற?

**பிறைசூடியார் :** (எழுந்துகொண்டே)

அன்பரசீ! என் அன்புப் புதல்வி!
இன்புறும் நிலவின் இணையிலாப் புகழில்
என்னை மறந்தேன்; இனியஉன் குரலால்
என்னிலை யுணர்ந்தேன்; ஈதோ வருகுவன்!

[ இருவரும் உட்புறம்சென்று கொண்டிருக்கும் போது, ஒரு குதிரை மனைக்குப் பக்கம் வந்து நிற்கிறது; அதன்மீதிருந்து இறங்கிய வீரன் அவ்விருவரையும் பார்த்த வண்ணம் நிற்கிருன் ]

**வீரன் :** (தனக்குள்)

யாரிவர்? இந்தக் கானக நடுவண்
யாரினும் தனித்து இருப்பவர் ஈங்கு?
அறிவுக் கலையும், அன்பின் சுடரும்
செறிவுறப் பெற்றவிச் சீரியோர் யார்தாம்?
மருங்கிற் செல்லும் மானிளம் பிணையோ,
பெருங்குடிப் பிறந்த பெண்கொடி போலும்!
வழி தெரியாமல் வந்தவென் றனக்கு
விழியிற் பட்டவிவ் வித்தகம் என்னே!

[ சிந்தித்து ]

இப்பெண் அழகு இதயம் கவரும்,
ஒப்புரை யில்லா ஓவியப் பாவையை
எவ்வா றேனும் என்னவள் ஆக்கிச்
செவ்விதின் நுகர்வேன்! சிந்தையே பொறு நீ!

[ குதிரையின் மீதேறிக் காட்டு மரங்களினூடே மறைகின்ருன்; மனைக்குள்ளிருந்து புலவரின் இனிய குரல் வெளி வருகிறது:- "தென்னாடுடைய சிவனே போற்றி! எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி!" என்று. ]

### காட்சி 2

[ மனைக்கு முன்புறமுள்ள மகிழ மரத்தடி; அன்பரசி பூசைக்கு வந்த மலர்களைத்தொடுத்துக்

*கொண்டிருக்கிருள்; அவளது வாய் தமிழ் இசைத்துக் கொண்டிருக்கிறது. ]*

அன்பரசி : ( தனக்குள் )

தமிழே! தமிழே! தெய்வத் தமிழே!
அமிழ்தே! தேனே! ஆருயிர் விருந்தே!
நெஞ்சத் தெழுதிய நீள்ஒளி விளக்கே!
செஞ்சொற் கடலே! சிவன்திரு மகளே! 34
[ தமிழே ]

[ புலவர் வருகிருர் ]

புல : ( சிரித்தவாறே )

அன்பரசீ! உன் கவிதை அழகிது!

அன் : ( எழுந்து, நாணி )

தந்தையே! தங்கள் நிழல்தந்த வார்த்தை!
சிந்தனைத் திறத்தில் சிறுமிநான் அன்றே?

புல : ( கனிந்து )

செல்வமே! ஒன்று செப்பிட மறந்தேன் ;
பல்வகை யானும் பாங்குறக் கற்று,
சில்லாண்டு முன்னர்த் தீந்தமிழ்ப் பொதியம்
கல்விக்குச் சென்றஉன் கண்மணித் தமையன்
அருளப்பன் இன்று அடைகுவன் நம்மனை
பொருந்திய செய்தி போந்ததால் இன்று!

அன் : ( மகிழ்ந்து )

தந்தையே, மகிழ்ச்சி! என்னுயிர்த் தமையன்
சிந்தையில் செறிந்து சிறக்க வருதல்
மகிழ்ச்சியை அளிக்கும்; மாண்புற அதற்குள்
அறுசுவை யுணவு ஆக்குவன் விரைவில்!

புலவர் -

திருமகளே, உன் தேனினும் இனிய
உறுசுவை யுணவை உண்டிட அவனும்,
விரைந்தே வருகுவன் ; விரைகவே நீயும்! 50

அன் :

வரையினின் றெடுத்த வான்பலாச் சுளையைத்
தேனில் நனைத்தே திகழ்வுற வைத்தேன் ;
மா பலா வாழை மாண்சுவைக் கனிகளும்,
தேமூறுங் கிழங்கும் தினையும் பிறவும்
அண்ணனுக் கென்றே அமைந்தன போலும்!

புல :

செல்வமே, உன்னைப் பார்த்த பின்னரும்
செல்லுமோ உணவு ? அருளப்ப னுக்கே!

[ வீரன் ஒருவன் வருகிருன் ]

வீர : ஐயா, வணக்கம்!

புல : ( கைகுவித்தபடி ) ஆரென அறிகிலேன்!

வீர : (பணிவுடன்)

மெய்யாய் என்னைத் தாங்கள் அறிந்திட
வாய்ப்பிலை ; நானோர் வாணிகன் ; பொதியச்
சாரலி லிருந்து சோணாடு புகுவேன் ;

புல : நேருற நவின்ருய்! காரியம் ஏதோ ?

வீர : (வருந்தி)

சேரும் கானகச் செறிவிடை என்பொருள்
முற்றும் கள்ளர் முடுகிக் கொண்டார்!

புல : (திடுக்கிட்டு)

என்ன, வழிப்பறி இக்கா னகத்தோ ?
செந்நெறிச் செல்லும் வழுதியின் நாட்டில்
திருட்டா, தம்பி! என்னுளம் பதைக்கும்!

வீர :

புரட்டிலை, ஐயா! முழுதும் உண்மை!
உடன்வரிற் கள்ளர் திருடிய இடத்தைத்
திடம் பெறக் காட்டுவன்!

புல : (திரும்பி) திருமகள்! கொடுவாள்? 70

[ அன்பரசி உள்ளே சென்றுவந்து கொடுவா கொடுக்க, வாங்கி இடையிற் செருகிக் கொண்டு புலவர் நடக்க அவர்க்கு முன்னர் வீரன் நடக்கிருன் ; காட்டு மரங்களி லிருந்து நாற்புறமும் சில முரடர்கள் வந்து அன்பரசியைச் சூழ்ந்து கொள் கிருர்கள் ]

அன்: (அஞ்சி)

ஐயோ, இவர் யார்! அறத்தின் கடவுளே!
மெய்யோ இதுவும்! முறையோ! முறையோ!

[ ஓர் இளைஞன் ஓடிவந்து வீரர்களைப் போராடி விரட்டி விட்டு அன்பரசியின் மருங்கு வருகின்ருன்; அச்சம் தவிர்ந்த அன்பரசி அன்புடன் அவனை நோக்கி நிற்கின்ருள் ]

புதியவன் -

பெண்ணே! இது என்? தனியே இப்படித்
துண்ணெனுக் கொடிய விலங்குகள் நடுவே
காட்டில் இருத்தல் சரியோ கூறுய்!
வீட்டுள் யாரும் துணைவர் இலையோ ?

அன் : ( நாணித் தலை கவிழ்ந்து)

தந்தையார் உள்ளார்; தனித்துள்ள வேளை
வந்ததித் தொல்லை; வான்பனித் துளிகள்
கதிரோன் முன்போல் கடுகின துன்பம்;
உதிர்ந்தன உம்மால் உரைக்குள் அடங்குமோ
ஐய, நும் உதவி ...

புதி :

... அன்புரை போதும்!

[ புலவர் விரைந்து வருகிறார் ]

புல :

யாரிவர்! செல்வமே! ...

அன்

.. தந்தையே! வஞ்சகர்
நேற்ற, என்னைக் காத்தனர் இதற்குள்;

புல : ( பரபரப்புடன் )

வஞ்சமோ அம்மா! வந்தவன் பொய்யன்!
இதுகேள்!.
கொஞ்சதூரம் போய் நஞ்சென நகைத்துத்
'திருட்டும் இல்லை, உன் திரு மகளை
முரட்டுத் தனத்தால் அடைகுவேன் நானோர்
வேற்றுநாட்டின'னெனக் கூறியென் வாளின்
மாற்றிலா இலக்கிற்கு மாறி ஓடினான்!

புதி :

ஐயா! வஞ்சனை தூய்மையை வெல்லுமோ?

புல :

தம்பி! உன் தோற்றமும், தகவும் என்னை
வெம்பும் நிலையினின் றெடுத்துக் களிக்க
வைத்திடும்; நீ யார்?

புதி :

பெரியீர்! வணக்கம்
பொதியப் புலவர் மாறனா ரிடத்தே
துதித்துத் தமிழ்வளம் கற்றவன்;

புல :

ஆயின்
என்னிள மகனும் அம் மூதாளர்
தன்னுடை மாணவன்; தரும்தரும் இதுவே!

புதி : ( வியந்து )

ஐய, நும் மகனார் அரும் பெயர் யாதோ?

அன் :

அருளப்பன் என்னுடை அண்ணனார் திருப்பேர்!

புல : ( வியந்து )

அருளப்பன் என்னுடைத் தோழனும்; ஐயா!
இருவரும் : என்ன ?

புதி : ஆம், யான் நண்பனே, பெரியீர்!

இருவரும் வந்தோம், இந்நாள் விடியல்!
மருவிடும் கானக மரங்களின் இடையே,
வழிதடு மாறி வந்தனன் இவ்விடம்!
கழிசெயல் தீயோர் செயலினைக் கண்டேன்!

புல :

என்மகன் தோழனா? தம்பி! எங்குளான்
என்மகன் ?

அன் : ஆண்டுகள் ஏகின பல்வாய்;

அன்பின அண்ணலைக் காண்பெமோ, இனியும்!

[ அருளப்பன் வருகின்றான் ]

அருள :

அப்பா, வணக்கம்! அறவனே! நீயே,
ஒப்புறும் இல்லம் உவந்துமுன் போந்தனை!

[ புலவரின் திருவடிகளில் விழுந்து வணங்குகிறான் ]

புதி : வழிதடுமாறிய வழியினில் உன்மனை

விழிப்பட வந்தேன் ;

அன் : விரைந்து வாராவிடில்

தீயோர் கைச்சிறைப் படுதலும் கூடும்;
போயினர் அண்ணா! புகுந்தது கேளாய்!.

புல : [ மகிழ்ந்து ]

நண்பனும் நீயும் நலமுடன் ஈங்குக்
கண்மணி களிக்க வந்தனிர் வாழி!
துன்பம் நீக்கிய இன்புறு பரம்பொருள்
இன்பச் சேவடி ஏத்துகம் வாரீர்!

[ மனையினுட் புகுகின்றார்கள் ]

## காட்சி 3.

**[ கானகத்தின் ஒருபுறம், புலவரை வஞ்சித்துச் சென்ற வீரன் மரத்தடியில் வீழ்ந்து கிடக்கின்றான்; அவனது வாயிலிருந்து நுரை வழிகின்றது; கண்களில் நீலம் பாய்கிறது; உறுப்புகள் சோர்வடைந்துள்ளன.]**

வீரன் : [ தனக்குள்; மெலிந்த குரலில் ]

ஐயோ, கொடியேன் ! அறிவினிற் பெரிய
மெய்யோர் அவர்க்குத் தீமை எண்ணினேன்;
புலவரைக் கொன்று பூங்கொடி யவளை
நலமுறக் கவர நண்ணினேன். (திணறி) ஐயோ!
கேடு நினைத்தேன் ; கேடு சூழ்ந்ததே!
ஆடும் அரவு அணைந்ததே என்னை !
......(புலம்பி)
கடிவிடம் ஏறக் கண்கள் இருளால்......
துடிப்புறும் ; இறைவா! துணையெனக் காவாய்!
வஞ்சித் தவர்க்கு வாழ்விலை யென்றே
விஞ்சும் செருக்கின் வீணனும் என்னைக்
கொண்டே...உலகம் குறித்திடச் செய்தாய்...
...உண்டே நின்னருள் ஆற்றலுக் கொப்பு!

(புலம்பி) கெடுக என் ஆயுள்! கெடுக என் வாழ்வு!

[ வீழ்ந்து மடிகின்றான் ; புலவரும், அன்பரசியும், அறவன், அருளப்பனுடன் வருகின்றனர் ]

புல : ஆ, ஈதென்ன ! ஆண்டவன் சோதனை !

[ பாம்பு கடித்து வீழ்ந்து கிடக்கும் அவனைக் கண்டு வருந்தி நிற்கின்றனர் அனைவரும் ]

அன் :

எந்தையே ! தங்கள் இதயமும் என்னே !
முந்துறத் தங்களை முடுக்கிய தீயோன்
இவனே யன்றோ ?

அருள : எந்தையே, தீயவன்

நலிதலைக் கண்டும் நையும், நும் நெஞ்சம் !
பொலிவுறும் பண்பின் நிறைவிடம், வாழி !

அற : ( நெகிழ்ந்து )

பகைவனுக் கருளும் பண்புடைச் சான்றோர்
வகையுறும் புவியில் வாழ்வதால் அன்றோ,
வையகம், வாழும்; வாழிய பண்பு !

புல :

தீவினை செய்தார், தீவினை யாலே
சாவினை எய்துதல் இறையுளம் போலும் !

[ எழுந்து கண்ணீர் மல்கி ]

இளஞ்சிறு மக்காள் ! இறைவன் திருவுளம்
அளந்தறிதல் இவ் வெளியனுற் கூடுமோ ?
நன்மையும் தீமையும் நாளும் மாறி
பன்மையும் ஒருமையும் பாரினில் பெருகி
வளர்தலும் தேய்தலும் வையத் தியற்கை !
தளர்தலும் மகிழ்தலும் தகுமோ நமக்கு !
“ அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்,
அவரவர் வினைவழி அவரவர் அநுபவம் !”
எத்துணை உண்மை !

அருளப் :

எந்தையே ! ஏட்டிற் கற்றோம் கல்வி ;
சிந்தையில் அமைதிச் செறிவுடன் வாழ்ந்து
கல்வியைக் காட்டும் கசடற்ற வாழ்க்கை
ஓல்கும் மனத்தை உறுதி யாக்குவதைத்
தம்மிடம் கண்டோம்; வாழி நும் தகவு !

அற :

செம்மைசேர் வாழ்வே சீரிய கல்வியாம் !

புல :

வாரீர் இறையவன் வண்பதம் போற்றுவோம் !

[ கானகத்தின் நடுவுள்ள மனைக்கு மூவரும் தொடர முன்னே நடக்கின்றார் புலவர் பிறை சூடியார். ]

## காட்சி 4

[ மலையருவிக்குப் பக்கத்தில், பாறையில் அமர்ந்து அருவியில் கால்களைத் தோய்த்தபடி இன்புற்றிருக்கின்றனர் அன்பரசியும் அறவனும் ]

அற :

வாழ்வின் ஒளியாய் வாய்த்தஎன் அன்பே
சூழ்வினைத் தொடர்பும் சொல்லிடப் போமோ?
அருளப்ப னெடுநாள் அருந்தமிழ் கற்றதும்,
பொருளுரை தேறிப் பொதியத்தி னின்றும்
தோழ னுடனே பயணம் ஆனதும்,
யாழெனும் மொழி, நினைத் தீயவரிடையே
கண்டதும் ...

அன் : ( நகைத்து )

கருத்தில் சிறை பிடித்ததும்,
எந்தையார் அன்பிற் கேற்ற பண்புடன்
சிந்தையில் உயர்ந்து, சிறுமகள் மனத்தில்
இடம் பிடித்ததும் ...

அற : ( தொடர்ந்து )

என்னவளே, உனை
மணம் செய்வித்திடத் தந்தையார் கணித்ததும்
எண்ணிடில் இயற்கைத் திறம் வியந்திடும்
என்னுளம் ! ...

அன் : ( எழுந்து )

... உயிரினும் இனியநன் மானம்
தன்னைக் காத்தநீர் என்னையும் ஏற்றீர் !
தென்னு டுடைய தேவனும் சிவனின்
இன்னருள் என்றே ஏத்துவன் யானே.

[ இருவரும் கரம்குவித்து நிற்கின்றார்கள். சேய்மையில், புலவர் மனையிலிருந்து திருவாசகப் பாடல் ஓசை காற்றில் மிதந்து வருகிறது. ]

# முருகனடி

**திருமதி. சௌந்தரா கைலாசம்.**

தழலும் ஒளியும் முருகனடி — இன்பத்
தமிழின் சுவையும் முருகனடி!
மழையும் புயலும் முருகனடி — நீல
மயிலின் அழகும் முருகனடி! 1

குழலின் இசையும் முருகனடி — கூவும்
குயிலின் குரலும் முருகனடி!
விழைவும் செயலும் முருகனடி — ஞான
விரிவும் திரளும் முருகனடி! 2

உயிரும் உடலும் முருகனடி — வியன்
உலகம் அனைத்தும் முருகனடி!
பயிரில் பசுமை முருகனடி — அடி
பாழும் வெளியும் முருகனடி! 3

கலகம் விளைப்பதும் கந்தனடி — நறுங்
காதல் விளைப்பதும் கந்தனடி!
பலரும் உருகியே பாடிவரும் — ஞான
பண்டிதன் பைந்தமிழ்க் கந்தனடி! 4

வித்தினுள் வித்தந்த வேலனடி — உயர்
வேழ முகத்தனின் தம்பியடி!
சொத்தினுள் சொத்தந்தத் தூயனடி—அவன்
சொல்லுக் கடங்காத மாயனடி! 5

உயரத்தில் உயரத்தில் திரிவானடி — அன்புக்
குரலுக்கு ஓடியே வருவானடி!
துயரமும ஏதவனைத்தொழுதால்? — அது
தூளடி தூளடி தூளடியோ! 6

கோலத்தில் யாவும் முருகனடி — உயிர்க்
கூட்டங்கள் யாவும் முருகனடி!
காலத்தை மீறிய வெள்ளமடி — அன்புக்
கட்டில் அகப்படும் செல்வமடி! 7

நாடி மகிழ்பவர் நெஞ்சினிலே — கேட்கும்
நாதத்தின் நாமம் முருகனடி!
தேடி உருகுவார் சிந்தையிலே — செழுந்
தேனாய் இனிப்பவன் கந்தனடி! 8

கண்ணீரின் ஊடேதான் கந்தனடி—கண்ணில்
கண்டு மகிழ்ந்திட வந்திடடி!
எண்ணிடு வார்க்கவன் சொந்தமடி -- எண்ண
எண்ணத் தொலைந்திடும் பந்தமடி! 9

ஆலயத் துள்ளும் முருகனடி — இங்(கு)
ஆவியின் உள்ளும் முருகனடி!
சாலச் சிறந்தவன் முருகனடி — நாம்
தங்கி மகிழ்வது ''முருகனடி''! 10



# திருமுறைகளும் மெய்கண்ட நூல்களும்

*தருமையாதீனப் புலவர் " பாலகவி"*

**வயிநாகரம். திரு. வே. இராமநாதன் செட்டியார்**

சித்தாந்த சைவர்களுக்கு உரிய மூலப்பிரமாண முதல் நூல்கள், வேதாகமங்கள். அவைகள், அளவால் விரிந்து கோடிக்கணக்கான கிரந்தங்களை உடையனவாயிருக்கின்றன. வேதங்களின் முடிபான வேதாந்தப் பொருள் உபநிடதங்களிலும், அதன் முடிபான சித்தாந்தம் (முடிந்ததன் முடிபு) சிவாகமங்களிலும், உணர்த்தப் பெற்றுள்ளன

" நீள்மறையி னொழிபொருள்வே தாந்தத், தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம் பிறநூல், திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்" என்ற சிவஞான சித்தியாரும், இதற்கு மாதவச் சிவஞான சுவாமிகள் எழுதிய "வேதத்திற் கூறும் கருமகாண்டப் பொருள்கட்கு இன்றியமையாது வேண்டப்பட்டெஞ்சி நின்றனவாய பொருள்களையும், வேத முடிபாய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக் கொண்டினிது விளக்குவது சிவாகமமாகலான், இதனின் வேருய வேதத்தின் பூர்வபக்கப் பொருளைச் சொல்லும் நூல்களெல்லாம் பூர்வபக்க நூலெனவும், அதன் சித்தாந்தப் பொருளைச் சொல்லுவதாய சிவாகமம சித்தாந்த நூலெனவுமாம்" என்ற பொழிப்புரையும் "சிவாகமங்களே முடிந்த பொருளை உணர்த்துவன" என்பதை அறிவிப்பனவாகும்.

வேத சிவாகமங்களைச் சிவபெருமானது திருமேனிகளெனவும், அவற்றுள் வேதம் அவனது பொதுத் திருமேனி, சிவாகமம் அவனது சிறப்புத் திருமேனி எனவும் ஆன்றோர்கள் கொண்டு தொன்று தொட்டுப் போற்றி வருகின்றார்கள். 'ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க" என்ற திருவாசகம் இக்கருத்துப் பற்றி எழுந்ததே. ஆன்மார்த்த பூசைக்குரிய க்ஷணிகலிங்க மூர்த்தங்களுள், சிவாகமமும் ஒன்றாக இருப்பதை, இங்கே நினைவு கூர்தல் வேண்டும்.

வேதமுடிபு சிவாகமமே யாதலின், அதன் வழியொழுகுஞ் சித்தாந்த சைவர்களே, உண்மை வேதாந்திகளாவார்கள். வேதத்திற் கூறப்படும் இடைப்பட்ட முடிபுகளை, அவ்வவ்வெல்லைகள் வரை சென்று ஏற்றுக்கொண்டு, அதற்கு மேலும் சென்று காணுதற்குரிய மதுகையும், புண்ணியமுமில்லாதார் தங்களையும் "வேதாந்திகள்" என்று கூறிப் பிறரை வஞ்சித்தும், ஏமாற்றியும் வருகிறார்கள். இப்போலி வேதாந்திகளின் வஞ்சகச் செயல்கள், அரைகுறையாகச் சமய நூல்கள் கற்ற சைவர்களையும் கூட, அவர்கள் வலையில் விழுந்து இடர்ப்படுமாறு செய்து வருகிறது.

வேதாகமங்களைக் கற்றுத் தெளிந்துணர, ஒருவனுடைய முழு ஆயுட்காலமும் போதாதபடி, அவை அளவாற் பெருகியிருக்கின்றனவாதலின், கருணைக் கடலாகிய சிவபெருமான், நம்மீது வைத்த பேரன்பினால், சமய குரவர்களும், சந்தான குரவர்களும் ஆகிய ஆசாரிய மூர்த்திகளை இந்நிலவுலகத்தில் அவதரிக்கச் செய்து, அவர்கள் வாயிலாகத் திருமுறைகளையும் மெய்கண்ட நூல்களையும் வேதாகமசாரமாக நமக்கு வழங்கியருளினர். இவ்வருளாசிரியன்மார்கள், சீவபோதம் கழன்று சிவபோதமயமாகி நின்றவர்களாதலின், இவர்களது திருவாக்கு நம்மனைய பசுவாக்குகள் போலாது, பதிவாக்காகவே கொள்ளப்பெறும்.

" வேதம் பசுவதன்பால் மெய்யா கமம்நால்வர்
ஓதும் தமிழதனி னுள்ளுறுநெய் — போதமிகும்
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம். "

என்னும் திருப்பாடல், சிவபெருமான் நேரே அருளிச் செய்ததாகிய வேதம் தொடங்கி, அவர் ஆசாரியர் வாயிலாக அருளிச் செய்ததாகிய மெய்கண்ட நூல் வரை வரும் தொடர்பை, நன்கு தெரிவிக்கின்றது.

ஒரு பொருளிலிருந்து பெறத்தக்க பயன்கள் இரண்டு வகைப்படும். அவை இடைப்படு பயன் (அவாந்தரப் பிரயோசனம்) முடிவுப் பயன் (பரமப் பிரயோசனம்) என்பனவாகும். இவற்றுள், இடைப்படு பயன்களில் ஒன்றையேனும், சிலவற்றையேனும் பெற்ற அளவில் மகிழ்ந்து, அடங்கி விடுவது

புத்தியாகாது. முடிவுப் பயனைப் பெற்றால்தான், பொருள்பெற்ற பயனைப் பெற்றதாக ஆகும. பசுவி லிருந்து பெறுகின்ற இடைப்படு பயன்கள் பலவா யிருப்பினும், முடிவுப் பயனாக அதிலிருந்து நாம் பெறத்தக்கதாயிருப்பது சத்தானதும், சுவையுள்ளது மான நெய்யேயாகும். வேதத்தைப் பசுவாகவும், திருமுறைகளை நெய்யாகவும, மெய்கண்ட நூல்களை நெய்யின் சுவையாகவும் இத்திருப்பாடல் கூறுவதி லிருந்து, வேதப்பயன் சைவமாகிய திருமுறைகளிலும், மெய்கண்ட நூல்களிலுமே பெறத்தக்கதாயிருக்கிற தென்பது விளங்கும்.

வடமொழி வேதாகமங்களிலுள்ள மந்திரங்கள், முறைப்படி செபிப்பவர்களைக் காத்து, அவர்கள் விருப்பங்களைக் கூட்டி வைப்பது போலத் தென் மொழி வேதாகமங்களாகிய திருமுறைகளும், மெய் கண்ட நூல்களும் முறைப்படி ஓதியவர்களைக் காத்து, அவர்கள் விருப்பங்களைக் கூட்டி வைத்த செய்தி, வரலாறுகளிற் கேட்கப் பெற்றதாகும் இன்றும் அவற்றை ஓதிப் பயன்பெற்று வருபவர் எண்ணிக்கை அளவற்றதே. " கண்டபெரு மந்திரமே மூவர் பாடல் கைகாணு மந்திரங்கண் ணுதலோன் கூறல் " என்பார் உமாபதி சிவம்.

சிவபெருமான், நம்மீது வைத்த கருணைககு அடையாளமாக விளங்குகின்ற திருமுறைகள் பன்னி ரண்டு. மெய்கண்ட நூலகளாகிய சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கு. திருஞானசம்பந்தமூர்த்தி கள் அருளிய திருப்பதிகங்கள் முதல் மூன்று திருமுறை களாகவும், திருநாவுககரசு சுவாமிகள் அருளிய திருப் பதிகங்கள் அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகங்கள் அடுத்த ஒரு திருமுறையாகவும், சப்தகோடி மகா மந்திரங்களைப் போலத், தேவாரம் என்னும் திருப் பெயர் தாஙகி, ஏழு திருமுறைகளாய் இலஙகுகின்றன. மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந் திருமுறை. திருமாளி கைத் தேவர் முதல் சேந்தனர் வரையுள்ள ஒன்பதின் மர் அருளிய திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறை. திருமூல தேவர் அருளிய திருமந்திரம் பத்தாந் திருமுறை. திருவாலவாயுடை யார் முதல் நம்பியாண்டார் நம்பிகள் வரையுள்ள பன்னிருவர் அருளிய நாற்பது பிரபந்தங்கள் பதினொ ராந் திருமுறை. சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாந் திருமுறை.

இவற்றின் மொத்தத் திருப்பாடல்கள் 18324. ஆசிரியர் முறையே திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் திருமாளிகைத் தேவர், சேந்தனர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி யமுதனர், புருடோத்தம நம்பி, சேதிராயர், திருமூல தேவர், திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான்பெருமாள், நக்கீர தேவர், கல்லாடதேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டணத்துப் பிள்ளையார், நம்பியாண்டார்நம்பிகள், சேக்கிழார் பெருமான் என்னும் இருபத்தெழுவர்.

மெய்கண்ட சாத்திரங்கள் திருவுந்தியார், திருக் களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தி யார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப் பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் பதி னன்குமாம். இவற்றின் மொத்தத் திருப்பாடல்கள் 1188. ஆசிரியர் திருவியலூர் உய்ய வந்த தேவர், திருக்கடவூர் உய்ய வந்த தேவர், மெய்கண்ட தேவர், அருணந்தி சிவம், மனவாசகம் கடந்தார், உமாபதி சிவம் என்னும் அறுவர். இவற்றுள் திருவுந்தியாரைத் திருவியலூர் உய்யவந்த தேவரும், திருக்களிற்றுப் படியாரைத் திருக்கடவூர் உய்யவந்த தேவரும், சிவ ஞான போதத்தை மெய்கண்ட தேவரும், உண்மை விளக்கத்தை மனவாசகம் கடந்தாரும் அருளிச் செய் தார்கள்.

சிவஞான சித்தியாரும் இருபா இருபஃதும் அருணந்தி சிவத்தால் அருளிச் செய்யப்பெற்றவை. இவற்றுள் சிவஞான சித்தியார் பரபக்கம், சுபக்கம் என்னும் இரண்டு பிரிவுகளை உடையது. சிவப் பிரகாசம் முதலிய மற்ற எட்டு நூல்களும் உமாபதி சிவத்தால் அருளிச் செய்யப்பெற்றன. சிவஞான போதம் சூத்திரமும், கருத்துரையும் மேற்கோளும் ஏதும் உதாரணமும் என்னும் பகுப்புக்களுடன் அமைந்தது.

வேதம், உலகத்தார் பொருட்டு அருளிச்செய்யப் பெற்றதாதலின் அதில் கடவுள், உயிர், தளை என்னும் முப்பொருள்களைப் பற்றிய உண்மைகள் உலக மக் களின் பக்குவ நிலைகளுக்கேற்பப் பலபடிகளில் வைத்துக்குறிப்பாகவும் வெளிப்படையாகவும் உணர்த் தப்பெற்றிருக்கின்றன. சிவாகமங்கள் சத்திநிபாதம் பெற்ற பக்குவான்மாக்கள் பொருட்டு அருளிச்செய்யப் பெற்றதாதலின், அதில் அம்மூன்றையும் பற்றிய உண்மைகள், அச் சத்திநிபாதத் தரங்களுக்கேற்ற முறைகளில் வைத்து வெளிப்படையாக உணர்த்தப் பெற்றன. திருமுறைகளும், மெய்கண்ட நூல்களும் கருணை மேலீட்டால் அருளிச்செய்யப் பெற்றனவாத லின், அவற்றில் அவை தெளிவாக முடிந்த முடிபாய் உணர்த்தப் பெற்றுள்ளன.

நலம் பெருகுக.

# பூம்பாவை

செந்தமிழ்ச்செம்மல்

திரு. அ. சீநிவாசராகவன் M. A,

மயிலின் அகவல் காதில் விழுந்தது எட்டிப் பார்த்தேன். புழைக்கடை வாசலருகே நின்ற தென்னை மரத்தின் மடல், நீண்டு வளைந்து, அழகிய பச்சைத் திரையாக மூண்டு, என் பார்வையை மறைத்தது. காலை வெய்யில், அந்த மடலின் பசுமை மேல் நடமாடி, அதற்கு நளினமான பொன்வண்ணச் சோபையைத் தந்தது. இந்த மடல்தான் எவ்வளவு அழகு, எவ்வளவு நீளம் என்று எண்ணியவுடன், 'மடலார்ந்த தெங்கின்' என்ற சொற்கள் நினைவில் எழுந்தன. இவை யாருடைய சொற்கள் ? ஆமாம். ஞானசம்பந்தப் பெருமானுடைய சொற்கள் என்று தேறுவதற்குச் சிறிது நேரம் ஆயிற்று பாடல் முழுவதும், மெல்ல, மெல்ல, நெஞ்சிலே தோன்றியது:

'' மடலார்ந்த தெங்கின் மயிலையார், மாசிக்
கடலாட்டுக் கண்டான், கபாலீச்சரம் அமர்ந்தான்,
அடல் ஆனேறு ஊரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணுதே போதியோ பூம்பாவாய். ''

'மடலார்ந்த தெங்கு', நீண்ட மடலுடைய தென்னை, என்று பாடுகிறார் ஞானசம்பந்தர்.]

'' ஆமாத்தூர் அம்மானைக்
காணுத கண்ணெல்லாம் காணுத கண்களே ''

என்று பாடிய இவருக்கு, தென்னையின் நீண்ட மடல்மேல் எப்படிப் பார்வை சென்றது ? ஏன் செல்லாது ? தென்னையின் பசுமையும் இறைவனே என்று பார்க்கத்தொடங்கிவிட்டால், தென்னை மட்டும் என்ன, இவ்வுலகெங்கும் பரந்துள்ள அழகுக் கடலெல்லாம் அவனே என்று கண்டுவிட்டால், எதைக் கண்டாலும் அவனையே காணும் பாங்குமட்டும் அமைந்துவிட்டால், கண்படைத்த பயன் முழுதும் தானகவே தோன்றிவிடாதா ?

'' பண்காட்டும் இசையானும், பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும், விடைகாட்டும்கொடியானே.''

என்றும்

'' மண்ணெடு நீர் அனல் காலோ டாகாயம் மதி இரவி
எண்ணில் வரு மியமானன் இகபரமும் எண்டிசையும்
பெண்ணினெடாண் பெருமையொடு சிறுமையுமாம்
பேராளன.''

என்றும் உணர்ந்ததால் அன்றோ ஞானசம்பந்தரால் உலகில் உள்ள இயற்கைக் காட்சிகள் பலவற்றையும் கூர்ந்துநோக்கி, அவற்றின் அழகை ஊடுருவி நித்தியப் பொருளைக்கண்டு, அதனைச் சொல்லில் தேக்க முடிநதது !

'' தண் புறவின்
மடல் விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தட மண்டு துறைக்கெண்டை தாமரையின் பூ மறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டும் காட்சி. ''

என்றும்,

'' கொல்லை முல்லை மெல்லரும்பினும் ''

என்றும்,

'' குலை வாழைக் கமுகம் பொன் பவளம் பழுக்கும் ''

என்றும்,

'' களிமண்டு சோலைக் கழனிக் கலந்த
கமலங்க டங்கு மதுவில்
தெளி மண்டி உண்டு சிறைவண்டு பாடும் ''

என்றும் எத்தனை எத்தனையோ பாடியுள்ள ஞானசம்பந்தருக்கு 'மடலார்ந்த தெங்கு' என்று பாடுவது

பெரிதா? தனது நீண்ட அன்பு மடலால், இறைவனையே தொட்டு மகிழ்ந்த அவருடைய உள்ளம், தென்னையின் நீண்ட மடலின் அழகை ஏன் பருகாது, ஏன் பாடாது?

இப்படி எண்ணி, பதிகம் முழுவதையும் நினைந்து பார்த்தேன்.

“ மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க் (கு)
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய் ”

‘தேன் ததும்பும் புன்னை மலர்க் கானல். அருகே ஆலயம். அங்கே, நாம காணும் வகைக்கு, எளிவந்த பிரானாய், உருவாயும், அரு உருவாயும், மனவாக்குக் கெட்டாத பரமன், அருள் சுரந்து கோயில் கொண்டுள்ளான், தானே விருமபி, இத்தலததில் அமர்ந்துள்ளான். அவனோடு ஒட்டிநிற்கும உள்ளம் படைத்த அடியவர்க்கு அமுது செய்விதது, அந்தக் கண்கொள்ளாக காட்சியில் தோயவேண்டாமா? அதைக் காணாமற் போகலாமா?’ என்று தொடங்குகிறது பதிகம். இறந்துபோய், எலும்புக்கூடாய்க் குடத்தில் முடங்கிய பெண்ணொருத்தியைப் பார்த்து, இரங்கிப் பாடுகிறார் ஞானசம்பந்தர் என்கிறது வரலாறு.

இருக்கலாம். ஆனால் என்னைப் பார்த்து, என்னையே பார்த்துத்தான, இந்தப்பாடல் எழுந்ததோ என்று எனக்குத் தோன்றியது.

கள்ளவிழும் மலர்ச்சோலையையோ, கடற்கரையையோ காண்கிறேனா, இல்லையே. இங்கேயே, இந்த மண்ணுக்கே, எனக்காக இறைவன் வநது, கபாலீச்சரம் அமர்ந்தான் என்றுதான் எண்ணுகிறேனா? நாளும் அவனை நினைந்து நினைநது, அவனோடு ஒன்றும் அடியவர்கருப் பணியாற்றி மகிழ்கிறேனா? இல்லை, ஒன்றும இலலை. எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறேன். பார்க்கப்போனால், உயிரற்ற எலும்புக்கூடு என்று கருதுவதற்கு, என்னைவிடத் தகுதி உடையவர் யார்? எனக்கும் உயிர் அளித்து உய்விக்கவன்றோ இப்பாடல் வருகிறது?

ஐப்பசித் திருவோண விழாவும், அதைத்துய்த்து மகிழும் தவத்தோரும், கார்த்திகை நாளும், ஒளிமயமான விளக்கணியும, மார்கழி ஆதிரையும் தைப்பூசமும், மாசிக் கடலாடு சிறப்பும், பங்குனி உத்தரமும், சித்திரை அட்டமிக் கொண்டாட்டமும், வைகாசிப் பொன்னூசலும், ஆனி, ஆடி, ஆவணியில் நிகழும் பெருஞ்சாந்தியும, திருவிழா மாலையாக, எழிற் சங்கிலியாக விரிகின்றன. காண்பதற்குக் கண் வேண்டுமே! அதைத்தருகிறது இந்தப் பதிகம்.

ஊன் வாட வாட, உயிர் காவலிட்டு, உடலிற பிரியாப் புலன் ஐந்தும நொந்து, தாம் வாட வாடத் தலம்’ புரிவோர் புரியட்டும். ‘அவர்களைப்போல், புலன்களை உன்னால் ஒடுக்க முடியவில்லையா? வேண்டாம. அவற்றை, இநத உலகின் நீண்ட நெடும அழகுக் கரைமேற் படரவிடு. அங்கே இறைவன் இருக்கிறான். அது முழுதுமே அவனுடைய கபாலீச்சரம. அங்கே காலமெல்லாம் வையகமும் வானும் புனைவது அவனுடைய திருவிழாவே. இவை ஒன்றையுங் காணமல் ஒடுங்கி, எலும்புக்கூடாய்ப் போனாயே, கண்முன்னே நிற்கிறான் கண்ணுதலான்; பார், கண்ணைத் திறந்து பார், நீயும உயிர் பெறலாம’ என்று ஞானசம்பந்தப் பெருமானை என்னைப பரிவுடன் நோக்கிப் பாடுவது போல் இருந்தது.

எலுமபுக்கூடும உயிர்பெறுமா? ஏன் பெறாது? உணர்ச்சியற்றுப் போன எனது ‘நெஞ்சக் கனகல்லும நெகிழ்ந்துருகும’ அற்புதத்தை இப்பாடல்கள் இயற்றுமானால், அவற்றின் ஆற்றல் எலும்பைப் பூம்பாவையாகச் செய்திருக்க முடியாதா?

‘முடியும’ என்று சோலையிலிருந்து அகவியது மயில். என் ஏழை உள்ளமும நிமிர்ந்தது.



# தர்மமும் தருமபுரம் ஆதீனமும்

திரு. P. நீலகண்ட சர்மா.

'அறஞ்செய விரும்பு' என்று தென்னாட்டிலும், தஸ்மாத் தர்மபரோ பவ (तस्मात् धर्मपरो भव) என்று வடநாட்டிலும் ஒன்றுபோல் எல்லோரும் தர்மத்தைப் பேணவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஏன்? தர்மோ ரக்ஷதி ரக்ஷித (धर्मो रक्षति रक्षितः) தர்மம் கைவிடாமல் காப்பாற்றப் படுமானால் அது நம்மையும் எப்போதும் காப்பாற்றும் என்று பெரியோர்கள் சொல்லும் வார்த்தை அனுபவத்தால் கண்ட உண்மையும் உறுதியும் ஆகும்.

தர்மம்தான் என்ன? தரதே இதி தர்ம (धरते इति धर्मः) அழிவில்லாமல் நிலைநிறுத்துவது என்பது அதன் பொருள். இதில் அடங்கியுள்ள கருத்துக்கள் பல. தர்ம, அர்த்த, காம, மோக்ஷ (धर्म, अर्थ, काम, मोक्ष) என்ற புருஷார்த்தங்களில் தர்மம்தான் அடிப்படையாகச் சொல்லப்படுகிறது.

தானி தர்மாணி பிரதமான்யாஸன் (तानि धर्माणि प्रथमान्यासन्) ஏஷ தர்ம: ஸனாதன (एष धर्मः सनातनः) என்றெல்லாம் வேதத்தில் காண்கிறோம். அதாதோ தர்ம ஜிக்ஞாஸா (अथातो धर्मजिज्ञासा) என்று மீமாம்ஸா சாஸ்திரத்திலும், தர்மம் சரணம் கச்சாமி (धर्मं शरणं गच्छामि) என்று புத்தமத ஸூத்திரத்திலும் ஸ்வதர்மே நிதனம் சிரேய: (स्वधर्मे निधनं श्रेयः) என்று பகவத்கீதையிலும் தனித்தனியான பொருள்களில் இந்த வார்த்தை வழங்கப்படுகிறது.

வேதங்களில் யாகம் முதலிய கர்மங்களையும், மீமாம்ஸையில் சோதனாலக்ஷணோர்தோ தர்ம: (चोदनालक्षणोऽर्थो धर्मः) என்று இயற்கையாகவரும் வாஸனையும், பௌத்தஸூத்திரத்தில் ஸமயத்தையும் குறிப்பிடுகிறது இந்த வார்த்தை. பொதுவாக மற்ற இடங்களில் இயற்கை ஸ்வபாவம், கடமை என்ற பொருள்களில் இந்த வார்த்தை உபயோகப் படுத்தப்படுகிறது.

கடமை ஒவ்வொரு மனிதனுக்கும், சமுதாயத்திற்கும் உண்டு. அந்தக் கடமைகளைத் தவறாமல் செய்வதுதான் உலகத்தை நல்லநிலைமையில் காண்பதற்கான வழி.

மனிதனுக்கு மனிதன் என்ற நிலைமையில் சில கடமைகள் உண்டு. தவிர குடும்பத்திலும் சமுதாயத்திலும் அவனுடைய அல்லது அவளுடைய நிலையை ஒட்டி ஏற்கவேண்டிய கடமைகள் வேறு பலவும் உண்டு.

இவைகளைச் சரிவர உணரவேண்டும். உணர்ந்தால் மட்டும் போதாது. கல்வி பயின்றால் மட்டும் போதுமா? அது முழுமிக்காது. அதீதி (अधीति) போதம் (बोधम्) ஆசரணம் (आचरणम्) பிரசாரம் (प्रचारम्) என்ற நான்கும் ஒன்றுபட வேண்டும்.

கற்பவை கசடறக் கற்பதும், கற்றபின் சிந்தித்து உணருவதும், அதன்பின் அதை நடைமுறையில் கொண்டுவருவதும், அதற்குப் பின்னால் கற்று உணர்ந்ததைப் பிறருக்குத் தெரிந்துகொள்ளும் படிப் பிரசாரம் செய்வதும் ஒன்றுபட்டால் மட்டும் தான் கற்றதின் பயனாகும், கல்வி பூர்த்தியாகும்.

இவ்விதத் தர்மப் பிரசாரத்திற்காக ஒவ்வொருவனும் பாடுபடவேண்டும். அதிலும் மத ஸ்தாபனங்கள் இதன் பொறுப்பை ஏற்றுக்கொள்வது அவசியம்.



தருமையாதீனம் 25ஆவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
கனகாபிஷேகங் கொண்டருளும் காட்சி.

இந்த வழியில் பார்ப்போமானால் இன்று மாயூரத்தினருகில் அமைந்திருக்கும் தருமபுரம் ஆதீனம் அதை நல்ல முறையில் கையாளுகிறது. அங்கு எழுந்தருளியிருக்கும் 25 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முழு கவனத்துடன் இதைப் பராமரித்து வருகிறார்கள் என்பது தமிழ்நாட்டிற்கே ஒரு பெரிய சிறப்பு. தமது ஆணையின் கீழுள்ள பழைய மடங்களிலும் புதிதாக அமைத்து வரும் மடங்களிலும் மதப்பற்றுதல் பெருகவும் தர்மம் தழைத்து ஓங்கவும் செய்துவரும் ஒவ்வொரு புனிதமான ஏற்பாடுகளும் நமக்குப் புத்துணர்ச்சியையும் ஊக்கத்தையும் அளிக்கிறது.

அறநெறியும் ஆற்றலும சிறுவயதிலிருந்தே கற்றுக்கொடுக்கப பள்ளிகளும், முதியோருக்கு அவைகளை ஞாபகமூட்ட சமயாசமயங்களில் பெரியோர்கள் சொற்பொழிவுகள், அந்தந்த இடங்களிலிருந்தே நினைவுபடுத்திக்கொள்ள பிரசுரங்கள், கடவுளை வழிபடும் கடமையை நடைமுறையில் காட்ட, கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் திருக்கயிலை முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்குத் தீர்த்தயாத்திரை, ஆலயவழிபாடுகள், ஆங்காங்குச் சென்று ஆஸ்திகர்களை சந்தித்து சமய வளர்ச்சியிலும், தர்மத்தைக் காப்பாற்றுவதிலும் அவர்களுக்குள்ள தீராத கடமையை உணரவைப்பது இவைகள் எல்லாம் நமது குருமகாசன்னிதானத்தின் சாதாரண திட்டப்படியாக இருக்கிறது, அதில் அவர்கள் மனம் ஒருபோதும் சலிப்பதில்லை, அவர்கள் பராமரிப்பில் இருக்கும் கோயில்களில் சென்றால் நம்மை அறியாமலே நமக்கு ஏற்படும் தெய்வீகச் சிந்தையும் உயர்ந்த மனோநிலையும் நிம்மதியும் அனுபவித்தவர்களுக்கே தெரியும். அதைப்போல் மகாசன்னிதானம எங்குசென்றாலும் அவர்கள் எழுந்தருளியிருக்குமிடமெல்லாம் தெய்வீக சக்தி நிறைந்து (surcharged with a divine spirit) காணப்படுகிறது. அவர்கள் முன்னிலையில் எல்லோருக்கும் ஒரு புத்துயிரும் புத்துணர்ச்சியும் அனுபவ பூர்வமாக ஏற்படுகிறது.

*ஆணவமலம தனது சத்தி மடங்கிப்போக, உயிர் அதனது கட்டினின்றும் விடுபடும் நிலையில் கன்மத்தின் ஒழுங்கு முறை பயனபடாது ஒழியும். கன்மத்தின் ஒழுங்கு முறையினால் விளைவன பிறப்பிறப்புக்கள். அவ்வொழுங்குமுறை பயனற்றுப் போனால், உயிர் பிறப்பிறப்புக்கள் இன்றி, இறைவன் திருவடியையடைந்து, அவனது இடையறாத இன்பத்தை என்றும் அனுபவித்துக்கொண்டு இருக்கும்.*

❊ ❊ ❊

*அறியாமையே வடிவாய் உள்ள ஆணவமலம, உயிர்களது அறிவு, இச்சை, செயல்களைச் சிறிதும் தொழிற்படாதவாறு அடியோடு மறைத்திருக்கும். அப்பொழுது உயிர் யாதோர் அறிவும் செயலும இன்றிச் சடம்போற் கிடக்கும்.*

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

# எது இன்பம்?

திருக்குறள்வேள்

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

கொடுப்பது இன்பம். கொடுத்து இன்பம் அடைந்தோர் பலர். கொடையில் பல வகை; பொருளைக் கொடுப்பது, கல்வியைக் கொடுப்பது, பதவியைக் கொடுப்பது, தன்னையே கொடுப்பது ஆகியவை. தாவிப் படரக் கொழு கொம்பிலாது தவித்த கொடியினுக்குப் பாரிவள்ளல் தான் ஊர்ந்து சென்ற தேரினையே கொடுத்தான். பசுங்கொடி படர்வதற்குச் சிறு கொம்பை ஊன்றி வைத்தால் போதாதா? அதற்குப் பெரிய தேரையா கொடுக்க வேண்டும்? இது மடமையின்பாற் படாதா என்று எண்ணலாம். இஃது ஆராய்ச்சி; ஆனால் உணர்ச்சி வயப்பட்டார் நிலை வேறு. அன்பு மீதூரப் பெறற போது அறிவு தொழிறபடாது. அதனால்தான் இதனைக் கொடை மடம் என்பர். அகப்பொருள் வாழ்விலும் இன்ப அனுபவத்தில் அறிவு தொழிற படாமையைக் காண்கிறோமே! இது பொருளைக் கொடுத்து இன்பம் பெற்ற வரலாறு.

இனி, கல்வியைக் கொடுத்து இன்பம் அடைந்தவர் பலர்; அடைகின்றவரும் பலர், கல்வியைக் கொடுக்கக் கொடுக்கக் கல்வி பெருகுகிறது. கல்வியைப் பெற்றவர் பெருநிலை எய்தும் போது கல்வியை அளித்த ஆசிரியன் அடையும் இன்பம் யாவரே அறியாதவர்! அருச்சுனன வில் வித்தையில் சிறந்திருந்தமையைக்கண்டு ஆசிரியர் துரோணர் அடைந்த இன்பம அளவற்றது என்றதைப பாரதத்தில் காணலாம்.

அடுத்து, தம் பதவியைப் பிறருக்குக் கொடுப்பதிலும் இன்பம் உண்டாகிறது. பதவியினால் பொறுப்பும், பொறுப்பினால் துன்பமும் உண்டாகின்றன. அப்பதவியைப் பிறருக்குக் கொடுத்து விட்டால் பொறுப்பு நீங்கித் துன்பம் விலகுகிறது. திருவள்ளுவர் இவ்வுண்மையை,

> " யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
> அதனின் அதனின் இலன் "

என்று அழகாகக் கூறுகிறார். அவர் வாக்குப் பொய்யாமொழியல்லவா! துன்பநீக்கமே இன்பம் பெறத் துணை செய்கிறது,

இனி, தன்னையே கொடுத்து இன்பம் பெற்ற வரலாறு திருத்தொண்டர் புராணத்துட் பலவுள. கண்ணப்பர் காளத்திநாதன் கண்ணில் உதிரம் சோர் வதைக் கண்டார். 'உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன் எனும் உரைமுன் கண்டு' தமமுடைய கண்ணை இடந்து அப்பி மகிழ்ந்தார் என்ற செய்தியைச் சேக்கிழார் வாககில் கண்டு மகிழ்க.

> " நின்ற செங் குருதிகண்டார் நிலத்தினின்றேறப் பாய்ந்தார்
> குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினர் கூத்துமாடி
> நன்று நான்செய்த இந்தமதி என நகையுந் தோன்ற
> ஒன்றிய களிப்பினாலே உன்மத்தர் போல மிக்கார் "

என்பது அவர் திருவாக்கு.

இற்றைநாளில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பொன்னையும் பொருளையும் கொடுத்து மகிழ்வதை அணுக்கராய் உள்ளோர் அறிவர். கொடுத்தலில் இருவகை; பதிக்குக் கொடுத்தல், பசுவிற்குக் கொடுத்தல் என்பன. பதிக்குக் கொடுத்தலாவது, பூவும் நீருங் கொண்டு இறைவனுக்குப் பூசனை செய்தல். பசுவிற்குக் கொடுத்தலாவது, பாவாணருக்குப் பரிசிலும் வறியார்க்குப் பொன்னும் கொடுத்தல்.

இவ்விரு திறத்திலும் நமது குருமணி அவர்கள் செய்யும சிறப்பு அளவ்றறது. இத்துணையும் கூறியது புகழ் கருதியல்ல; இன்பம் கருதியேயாம்.

தமககுரிய பொருளேக் கொடுத்து இன்புறுகின்றவர் இருக்க சிலர் பிறர்க்கு உரிய பொருளேயே பிறர்க்குக் கொடுக்க மறுக்கின்றனர். இதனுல துன்பமே உண்டாகும். பிறர் பொருளே அவருக்குக கொடுக்காததால் துரியோதனன் அடைந்த துன்பத்தைப பாரதத்தில் காண்க. பாதி அரசிற்கு உரிமையுடைய பாண்டவர்களுக்கு ஐநது ஊர்களும் கொடுக்க மாட்டேன் என்று பொருள்மேல் இருந்த பற்றினுல் கூறினுன் துரியோதனன். ஆனுல் என்ன ஆயிற்று? இறுதியில் தானும் அழிந்து, அழியாப் பழியையும் பெற்ருன். உலகப் போர்களுக்கும் அதனுல் உண்டாகும் துன்பங்களுக்கும் காரணம் பொருள் ஆசை தானே! இனி, இராவணன் பிறன் மனேவியை அவனிடம் ஒப்புவிக்க மறுத்து அடைந்த துன்பத்தை இராமாயணத்துட் காண்க சீதாப் பிராட்டியின மேல் உள்ள பற்றின காரணமாகத் தன் பதவி இழந்து. புகழ் இழந்து இறுதியில் உயிரையே இழந்தான் இராவணன்

' ஆன்றஎழிற் சீதையைவேட் டைந்நான்கு திண்கரத்தான்
தோன்றுபழி மாறிலனே சோமேசா '

என்ற சிவஞானசுவாமிகள் வாக்கையும காண்க' எனவே, பற்றினுல் துன்பமும, கொடுத்தலால் இன்பமும் உண்டாகின்றன என்பதை இவை உண்மைப் படுத்துகின்றன.

'' ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்திழககும் வன்க ணவர் ''

பொருளே வைத்து வழங்காதவரை 'வன்கண்ணர்' என்கிருர் நாயனுர். வன்கண்ணர் என்ருல் கொடியவர் என்று பொருள் படும. 'காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதல், மறுத்தல் ஆகிய பஞ்சமகாபாதகங்களேச் செய்வோரைக் கொடியவர் என்பர் நூலோர்.' ஆனுல் பொருளே வைதது இழப்பவரை வன்கண்ணவர் என்கிருர் நாயனுர் ஆதலால் இவர் பஞ்சமகாபாதகரைவிடக் கொடியவர் என்றதாம. ஆகவே பொருளேக கொடுதது இன்பம பெற்று, வைத்து இழக்கும் வன்கணணவர் ஆகாது வாழ்வோமாக.

நூலறிவினுல் சாத்திரங்களால மட்டும உண்மையை உணர்ந்துகொள்ளுதல் இயலாது, ஐயங்கள் தாம மிகுதியாகும ஆயினும, நூலறிவினுல் மலம் பரிபாகம் அடைநது, சததிநிபாதம உணடாகும ஆதலின் மெய்ந்நூல்களேக கருத்துடன கற்றலும கேட்டலும வேணடும. குருவருளால ஞானுேபதேசம கிடைத்தபின்னர், அவ்வுபதேசப பொருளேச் சிந்தித்துத் தெளிநது நிட்டை கூடுதறகும் மெய்ந்நூல்கள் வேண்டப்படுகின்றன.

ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமணி அவர்கள்

# திருநீற்றின் சிறப்பு

தருமையாதீனப் புலவர்
**வித்துவான். திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை**

சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெற்ற புண்ணியர் கட்குரிய திருவடையாளங்கள் திருநீறும் உருத்திராக்க முமாம். இவ்விரண்டனுள் திருநீறு முதல்வைத் தெண்ணத்தக்க சிறப்புடைத்தாகும். அதுபற்றி இங்கே சுருக்கமாகக் காண்போம்.

அப்பரடிகள் சிவபெருமானை 'மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்' என்றும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறணிந்தவன் என்றும் கண்டு தொழுது பாடியுள்ளார். அப்பெரு மான் அணிந்துள்ள திருநீற்றைத் தப்பாதணிவது சைவர்களின் முதற் பெருங்கடமையன்றோ? 'திரு வெண்ணீற்றுமை' என்று பார்வதிக்கு ஒரு பெயர் வழங்குவது நினைவு கூர்தற்குரியது.

ஒரு நாட்டில் சைவ சமயந் தழைத்தோங்கியுள தென்றால், ஆங்கே திருநீற்றொளி பொலிவுற்று விளங் கல வேண்டும். சேக்கிழார் பெருமான் நந்தனார் பிறந்த ஆதனூர் பற்றிக் கூறுமிடத்து 'நீற்றலர் பேரொளி நெருங்குமப்பதி'' என்று கூறுகின்றார். மற்றும் அவர், திருவாலவாய்க்கு எழுந்தருளிய திரு ஞானசம்பந்தப் பெருமானைக் குலச்சிறையார் வர வேற்றபோது ''வென்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்'' என்று கூறிய தாக அருளியுள்ளார். இத்தகைய திருநீற்றொளி நம் நாடடில் பேரொளியாய்த் திகழும்படி, சொல்லாலும் செயலாலும் தொண்டாற்றல் நம்மனோர் கடமை யாகும்.

'விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற்பூசி' என்று நீறணிவதின் நியதியினையும். 'எவரேனுந் தாமாக இலாடத்திடட திருநீறும் சாதனமுங்கண்டால் உள்கி'' எனத் திருநீறணிந்த அடியார் பெருமை யினையும அப்பரடிகள் விளக்கியுள்ளதல்லாமல், திரு நீறணிந்து நின்பால் வருவார்க்கு இரங்கி அருள் புரிய வேண்டுமென்று பசுபதித் திருவிருத்தத்தில் ''சாம்பலைப் பூசித் தரையிற் புரண்டு நின்றாள் பரவி, ஏம்பலிப் பார்கட்கிரங்கு கண்டாய்'' என்று வேண்டு கோள் விடுக்கின்றார். அஃதன்றித் தாமும் இறைவனி டம் ''திருவாய் பொலியச் சிவாய நம வென்று நீறணிந்தேன், தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூ ரரனே'' என்று பாடிப்பரவி வேண்டுகின்றார்.

இங்ஙனம் சமயகுரவர்கள் திருநீற்றின் பெருமை யைச் சொல்லாலும் செயலாலும் விளக்கிக் காட்டியுங கூட, சில்லோர் போலிச்சமரசம் பேசிக்கொண்டு நெற்றியில் திருநீறணியாமல் பாழ்நெற்றியுடன் காணப்படுவதைக்கண்ட பட்டினத்தடிகள் அவர்களைப் பார்த்து ''பூணீர் உருத்திர சாதனம் நீறெங்கும் பூசுகிலீர், வீணீர் எளிதோ மருதப்பிரான் கழல் மேவுதற்கே'' என்றுகூறி இடித்துரைக்கின்றார். திருவெண்ணீறணியாதார் வாழும் ஊர் காடே ஆகும் என்கின்றார் அப்பர். திருநீறணியாத நெற்றியைச் சுடு என்கிறது உபநிடதம். ''நீறில்லா நெற்றிபாழ்'' அன்று அறைகின்றார் அவ்வையார்.

முறையாகத் திருநீறணிவதனையே கடமையாகக் கொண்டொழுகிய அடியார் பெருமையினை ''முழுநீறு பூசிய முனிவர்க்குமடியேன்'' என்று நம்பி ஆரூரர் திருத்தொண்டத் தொகையுள் கூறியிருப்பது கொண் டறியலாம். இவ்வடியவர் உடல் முழுதும் திரு நீறணிந்து கொண்டிருப்பரென்பது புலனும்

கி. பி. 7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த மங்கையர்க் கரசியார் திருநீற்றொளியை வளர்த்ததன்றித் தாமும் அணிந்து விளங்கினரென்பதையும், அவர் கணவ னாகிய பாண்டியனும் திருநீறணிந்தா னென்பதனையும் திருஞானசம்பந்தர் திருஆலவாய்த் திருப்பதிகத்தில் முறையே ''சிவன்றிருநீற்றினை வளர்க்கும். பந்தணை விரலாள் பாண்டிமாதேவி'' என்றும், ''முத்தின்தாழ் வடமும் சந்தனக் குழம்பும் நீறுந்தன் மார்பினின் முயங்கப் பத்தியார்கின்ற பாண்டிமாதேவி'' என்றும், வெள்ளை நீறணியும் கொற்றவன்'' என்றுங் கூறியிருப்பதினு லறியலாம்.

சைவத்தின் முதற் சின்னமாக விளங்குகின்ற திருநீற்றின் பெருமையினைச் சைவ சமய முதற் குரவராய திருஞானசம்பந்தப்பெருமான் திருநீற்றின் பெருமையை ஆலவாய்ப் பதிகத்துள் ஒன்ருக வைத்து திருநீற்றுப் பதிகமாகக் கூறியிருப்பதனைச் சைவர்கள் நெடிது நினைந்து உணர்ந்து போற்றற்குரிய தொன்ருகும். இப்பதிகமே பாண்டியனது வெப்புநோயை அகற்றி உய்வித்தது; உலகையும் உய்வித்தது; ஆலவாயில் மீண்டும் திருநீற்றின் பேரொளி பரவ ஏதுவாயிருந்தது. இதனை ஓதி ஓதி உய்வோமாக.

இப்பதிகத்தில் திருஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றின் உண்மைப் பெருமையினைக் கூறத் தொடங்கி, அது வேத மந்திரமாகவும் நினைப்பவனைக் காப்பதாகவும் வானவர் மேலணிந்து கொள்வதாகவும், ஆகமமாவும் சமயத்திலுள்ளதாகவும், வேதத்தில் கூறப்படுவதாயும், கொடிய துன்பத்தைப் போக்குவதாகவும், ஞானத்தைத் தருவதாகவும், ஆணவ மலத்தைப் போக்குவதாகவும், ஓதத்தகுவதாகவும், உண்மைப் பொருளாகவும், முத்தி தருவதாகவும், முனிவர் அணிவதாகவும், சத்தியமாகவும் தக்கோர் புகழ்வதாகவும், பக்தி தரக் கூடியதாகவும், துதிக்கத்தக்கதாகவும் உளது என்றும், மற்றும் காண அழகாக இருப்பதும், அணிபவர்க்கு அழகைத் தருவதும், பெருமையையும் அழகையுந் தருவதும், ஆசையைக் கெடுப்பதும துன்பத்தைத் தீர்ப்பதும், வருத்தத்தைத் தணிப்பதும் ஆகிய இன்னேரன்ன நன்மைகளைச் செய்வது திருநீறென்று பத்துப் பாடல்களில் ஐமபத்தாறு முறையும், பத்துப்பாடல்களின் இறுதியடிகளில் "ஆலவாயான் திருநீறே" என்று பத்து முறையும, பதினெராம் பாடலில் பதிகத்தின் பயன் உரைக்கும் முறையில் இது பாண்டியன் தீப்பிணி தீரப்போற்றி உரைக்கப் பெற்ற திருநீற்றுப் பதிகம் என்று ஒரு முறையும் ஆக அறுபத்தேழு முறை திருநீற்றைச் சிறப்பித்துக் கூறியிருப்பது கண்டு கருத்திலிருத்தி மகிழத்தக்கது. வெப்புநோய் கண்ட காலை இப்பதிகததை ஓதித் திருநீறணிந்தால் அந்நோய் தணியும் என்பது உறுதி. இது எளியேன் பட்டறிவிற்கண்டதாகும். இத்திருநீற்றைப் பூசிக்கொள்வதன்றி நீரிற் கரைத்து உட்கொண்டாலும் நோய் நீங்கும். புற மதங்களில கூட இத்திருநீறு ஒரு வகையில் போற்றப்படுகின்றது. அதை விரித்தல் மிகையாகும். நம் மதக் கொள்கையில் நமக்கு உறுதியான நம்பிக்கையிருந்தாற் போதும்.

இத்தனை பெருமை வாய்ந்த திருநீற்றைத் தம் வாழ்க்கையில் உறுதியாகக் கடைப்பிடித்து ஒழுகியவர் உண்டோ எனில்? பலர் உளர். அவர்களில் முதன்மையானவர் திருஞானசம்பந்தரின் பெற்ருேரே என்பதைப் பெரிய புராணத்துட் பலவிடத்துங் காணலாம். காட்டாகச் சில கூறுவோம்:- சிவபாத இருதயரும், பகவதியாரும் "பரவு திருநீற்றன்பு பாலிக்குந் தன்மையராய்" மனை வாழ்க்கை நடத்தினரென்றும, ஞானசம்பநதர் அவதரித்த பிறகு அவருககுக்காப்பாக வேருென்றணிவது மிகையெனக் கருதி, அவர் பெற்ருேர் அக்குழந்தைக்குத் திருநீற்றையே காப்பாக அணிந்தனர் என்பதைச் சேக்கிழார்,

"ஆறுலவு செய்யசடை ஐயரரு ளாலே
பேறுலகி னுக்கென வரும்பெரிய வர்க்கு
வேறுபல காப்புமிகை என்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியில் நிறுத்திநிறை வித்தார்"

என்று அழகுற ஆணி அறைந்தாற்போல திருநீற்றின் பெருமையை நிலைநாட்டிக் கூறியுள்ளார்.

திருநீற்றின்பால் பெரியோர்கள் வைத்துள்ள அன்பு அளவிடற்கரியது. காட்டாக ஒன்று கூறுவோம். ஏனுதிநாத நாயனரிடம் வாட்போரில் முதலில தோல்வியுற்ற அதிசூரன் என்பவன் திருநீறணிந்தாரைக் கண்டால் ஏனுதிநாதர் கொல்லார் என்பதறிந்து தன் நெற்றியில் திருநீறணிந்து அதைப் பலகையால் மறைத்து வந்து ஏனுதியார் வாளோச்ச நெருஙகுங்கால் அவன் நெற்றியை மறைத்த பலகையைப் புறம் போக்க திருநீறுகண்டு "கெட்டேன் முன்பிவர் மேறகாணுத வெண்திருநீற்றின் பொலிவு மேற்கண்டேன் வேறினி என் அண்டர்பிரான் சீரடியார் ஆயினர்" என்று கருதி அவன் கருத்திற்கிணங்க நின்ருர் எனப் பெரிய புராணங் கூறுகிறது.

முடிவாகக கூறுமிடத்துத் திருநீறு நமக்குக் கவசமாக இருந்து வினையகற்றி, சிவகதியளித்து சிவனடியைச் சேரச்செய்யும் என்பதைக். கீழ்வரும் தெய்வத் திருமூலர் பாடலால் கண்டு கொள்க.

"கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே"



# சமய வாழ்வு

பல்கலைச் செல்வர்

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், M. A., B. L, M. O. L.

அநபாயன் போரில் வெற்றிகண்ட வீரசோழன் அல்ல; வெற்றிகண்ட நாட்டில் பண்பாட்டை நிலை நிறுத்திய சோழர்களில் சிறந்தவன் இவன். சேக்கிழாரை மந்திரியாகப் பெற்ற நல்ல பேறு இவனுக்கு உண்டு. திருமுறைகண்ட தெளிவும் உண்டு. அந்தப் பண்பாடு சமய -வாழ்வாகத் தமிழகத்தை வாழ வைத்தது. கோயில்களை வளர்த்தான் என்பதல்ல இவன் புகழ், அது அல்ல சேக்கிழாரின் புகழுங்கூட. சேக்கிழார் தொண்டர் புராணத்தை எழுதினர். அந்தப் புராணந்தான் சமய வாழ்வு என்ன என்பதை விளக்குகிறது. குழந்தைகளும் கூடத் தெரிந்து கொண்டு பின்பற்றும்படியாக விளங்குகிறது.

கோயில்தான் அந்தக் காலத்துச் சமுதாய உயிர் நிலை. பலவகை அறங்கள், மருத்துவ நிலையம், கலவி நிலையம் ஊராட்சி, கொடைப்பத்திரம் முதலிய வற்றைப் பதிவு செய்யும் ஆவணக் களரி, நியாய மனறம், கலைமன்றம், தேர்தல கூடம் இப்படி எல்லா மாகப் பல கோயிலகள் அந்தக்காலத்தில் விளங்கின. எனவே சமய வாழ்வு அந்தக் காலத்தில் சமுதாய வாழ்வாக விளங்கியது. திருநீறு பூசினுல்மட்டும் போதுமா? திருக்கோவில்களை வழிபட்டால மட்டும் போதுமா? ஏனதி நாயனுரையும் மெய்ப்பொருள் நாயனுரையும் கொன்றவர்கள் திருநீறு பூசியவர்கள் தானே? எனவே சமய வாழ்வு என்ருல் மக்களிடத் தெல்லாம் கடவுளைக் காணும் சிறந்தமனம் படைத்த வாழவேயாகும். எங்கும் இருக்கிருன் இறைவன் என்பதைப் பேச்சிலே மட்டுமல்லாமல் வாழ்விலும் உணர்ந்து வாழ்கிறவர்களுக்கு மட்டுமே சமயவாழ்வு கிட்டும். இந்த வாழ்வுடையவர்கள் யாராளுலும் அவர்கட்குச் சமய வாழ்வு கிட்டும். அவர்கட்குக் கலவியும் வேண்டாம் செல்வமும் வேண்டாம். அந்த மனமிருந்தால் பட்டினி கிடந்தோ உயிரைக் கொடுத்தோ சமுதாயத்தை வாழவைக்க முடியும். இப்படி மக்களைக் கண்டதும் கடவுளைக் கண்டதாக நெஞ்சு நிமிர்ந்து நிற்பவர்களையே கசிந்த தொண்டர்கள் என்று சித்தியார் பாடுகிறது. "கூடும் அன்பினல் கும்பிடுதலேயன்றி வீடும் வேண்டா" விறலின் விளங்கியவராகச் சேக்கிழார் பாடுவது இவர்களைத் தான். இந்தச் சமயவாழ்வு ஒரே வகையாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. உலகம பலவிதம். அதுபோலச் சமயவாழ்வும் பலவிதம். இதனையே பல பெரியோர்களது பலதிறப்பட்ட வாழ்வைக் கூறி விளக்குகிருர் சேக்கிழார். மக்களிடையே கடவுளைக் காணும்கண்ணில்லாதபோது சமயச்சின்னங்கள்பயன் படமாட்டா. இந்த மனநிலையைத்தான் வள்ளுவர் "மனத்தின்கண் மாசிலன் ஆதல்" என்று விளக்குகிருர் மாசின்மை என்ன என்பதை மற்ருேர் இடத்தில் "தூய்மை என்பது அவா வின்மை" என்று அவரே பொருள் கூறியுள்ளார் அந்தத் தூய்மை வாய்மை வேண்டவரும் என்று அவரே வழியும் காட்டுகிருர். இங்கே வாய்மை என்பது எங்கும் நிறைந்த ஆண்டவன் மக்களிடத்தும் ஜீவலிங்கமாக விளங்குகிருன் என்ற உண்மையை அறிந்து உயிர் வாழதலே ஆகும். "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நாதன் நாமத்தை ஓதுவது" அவனை இவ்வாறு மக்களிடையே கண்டு நெஞ்சுருகித் தொண்டு செய்யும்போதுதான். எனவே அந்தச் சமயவாழ்வு வாழ்க!

# குமரகுருபரர்

பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,

திரு. கு. சுந்தரமூர்த்தி

தமிழ் கூறும் நல்லுலகம் என்றுமே நல்ல புண்ணியம் செய்தது. அப்புண்ணியப் பயனாகப் பல அருளாளர்களை ஈன்றெடுத்த பெருமையுடையது. அதிலும் தென்பாண்டி நாடோ சங்கம் வைத்து மொழி வளர்த்த பெருமையுடையது. அதனால் தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாடு என அருளாளர்களால் பாராட்டப் பெற்றது.

ஒரு நாட்டில் பேரருளாளர்கள் அவதரிக்கிறார்கள் என்றால் அது அந்நாடுசெய்த நற்றவ மற்றும் அன்று. அவர்கள் எந்தக் காலத்தில் அவதரிக்கின்றார்களோ அந்தக் காலமும் நற்றவம் செய்தே இருக்கவேண்டும். அதனால்தான் அருளாளர்களை நினைக்கும்பொழுது எல்லாம் அவர்கள் அவதரித்த நாட்டையும் நினைந்து போற்றுகின்றோம். அவர்கள் அவதரித்த காலத்தையும் நினைந்து போற்றுகின்றோம்.

பாண்டிநாடு செய்த நற்றவமும் பதினேழாம் நூற்றாண்டு செய்த நற்றவமும் ஒருங்குகூட அவதரித்தார் ஒரு அருளாளர். அவர் யாவர்? அவரே குமரகுருபர அடிகளாவர். ஸ்ரீ வைகுண்டத்தில் ஒரு பகுதியாக விளங்கும் கைலாசபுரத்தில் வழிவழியாக வளர்ந்தோங்கும் முருக பக்தியும் சைவ நன்மரபும் உடைய சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி சுந்தரியார்க்கும்தோன்றிய அடிகள்அவர்கள், பிறந்து ஐந்தாண்டுகள் வரை பேசவே இல்லை. பிறப்பறுக்க வுற்றார்க்கு உடம்பு மிகையாகும்பொழுது பேச்சு மிகையாதல்சொல்லவேண்டுமோ? ஆதலின் பேசவேயில்லை. எனினும் பெற்றோர்கள் கவலையுற்றனர். ஆதலின், குழந்தையுடன் திருச்செந்தூர் சென்றனர். செந்தூர் முருகனின் திருமுன்பு பாடுகிடந்தனர். ‘ஒருகால் முருகா பரமா குமரா உயிர்கா’ எனவோத அருள்தரும் அருளாளன் அல்லவா அவன். ஆதலின் அடிகளார் தம் எற்புத் துளைதொறும் அற்புதமான அமுத தாரைகளை ஏற்றினன். அவ்வருள் மடை திறக்க அருள் செய்தனன். பேசினார் அடிகள். பேசிய பேச்சென்ன? தாய் தந்தையரை நோக்கிப் பேசவில்லை. தனக்கு வேண்டும் பொருள்களைப் பற்றிப் பேசவில்லை. உலகினரை நோக்கிப் பேசினர். மெய்த் தாயினும் இனியானைப் பற்றிப் பேசினர். பேசில்தாம் ஈசனே எந்தாய் எந்தை பெருமானே என்றன்றோ பேசுதல்வேண்டும். அங்ஙனமே பேசினர். அப் பேச்சு அருட்பேச்சு, அமுதப் பேச்சு. ஜென்ம விடாய் தீர்க்கும் திருப்பேச்சு, அத்திருப்பேச்சே கந்தர் கலி வெணபாவாய் வெளி வந்தது. சாத்திரங்காண் என்பார்க்குச் சாத்திரமாய், தோத்திரங்காண் என்பார்க்குத் தோத்திரமாய், வரலாறுகாண் என்பார்க்கு வரலாறாய் விளங்குவது இந்நூல். இந்நூலில் திவ்வியம்பழுதத சைவ சித்தாந்தத்தையும், கந்தவேள் மாக்கதையையும் குழைத்து இழைத்துத் தந்துள்ளார் அடிகள். அதன் முடிவில் அடிகள் வேண்டியிருக்கும் வேண்டுகோள் அவருக்காக வேண்டியதன்று. உலக உயிர்கட்காகவே வேண்டப்பட்டது. உயிர்கள் அனைத்தும் அவ்வேண்டுகோளையே வேண்டல் வேண்டும். அப்பொழுது தான் உயிர்ப்பசி அடங்கும்.

உடம்பைவளர்த்தேன்உயிர்வளர்த்தேனேஎன்பர் திருமூலர். அடிகளும் உடம்பை வளர்க்க, உடம்பிற்கு எவ்வித ஊறும் விளையாதிருக்க முருகப்பெருமானே! “எவ்வெத் தீங்கு நேர்ந்தாலும் அவ்வவ் விடத்திலும் பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும் அச்சமகற்றும் அயில் வேலும் கொண்டு நீ எனக்கு அருளவேண்டும்” என வேண்டிக் கொள்கிறார். அடுத்து இவ்வுடம்பை வளர்க்க வேண்டுவதும் உயிர் வளர்க்கவே ஆதலின் கல்வியறிவு வேண்டும் என்கின்றார். அக்கல்வி யறிவும் வெறும் ஏட்டுக் கல்வியாய், ஏதோ தேர்ச்சி பெற்று அதனால் ஊதியத்திற்கு வழிதேடி வயிற்றை வளர்க்கும் கல்வி யறிவாய், உயிரைத் தொடாத வெறும் வறட்டுக் கல்வி யறிவாய் இருத்தல் கூடாது. அக் கல்வி யறிவு எழுத்து முதலாம் ஐந்திலக்கணமும் தோய்ந்த கல்வியறிவாய்

வேண்டும் என்கின்றார். இங்குத் தோய்ந்த என்ற சொல் ஆழமானது. எழுத்து முதலாம் ஐந்திலக்கண மும் படித்த அல்லது கற்ற அல்லது ஆய்ந்த என்ற சொற்களை வைத்துக்கூறாது தோய்ந்த என்றது அவ் வைந்திலக்கண அறிவும் நான் தேடிப் பிடித்ததாய் அமையாது. அது தானே என்னைத் தேடி அடைந்த தாய், அது வேறு நான் வேறு என்றில்லாது அதனுள் நான் தோய்ந்து ஒன்றாகி இருக்குமாறு அமைதல் வேண்டும் என்கின்றார். அடிகளுக்கு இருக்கும் அறிவுப் பசியைக் காட்டவில்லை இது. அவர் இதனை இயல்பாகவே பெற்றவர். ஆயினும் உயிர்கள் இத் துணைத் தோய்வுடைய கல்வியறிவைப் பெறவேண்டும் என்ற உணர்வுடையர். ஆதலின் இங்ஙனம் கேட் கின்றார். கள்ளத்தலைவர் துயர் கருதித் தம்கருணை வெள்ளத்தலைகின்ற இவர்தம் கருணைதான் என்னே! அடுத்துக் கேட்கின்றார். அரம்போலும் கூர்மையராக இருக்கலாம். ஆனால் மக்கட் பண்பு இன்றி மரம் போன்றிருப்பின் யாது பயன்? ஆதலின் மக்கட் பண்பு அவர்தம் ஒழுக்கம் நன்கு அமையவேண்டும் என்பாராக ஒழுக்கமுடன் அக்கல்வியறிவு வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றார். அறிவு நலனும் மன நலனும் ஒருங்கு இருப்பினும் இனநலம் நன்கிருத்தல் இன்றியமையாததாகும் தாம் பழகும் இனம் தகுதி யற்றதாயின் மனநலம் மாறுபடும். ஆதலின் நின் அன்பர்களோடு மிகுதியாக மருவி வாழ்தல் வேண்டும் என்கின்றார். இத்தகைய மனநலமும் இனநலமும் பெற்று இவ்வுலகில் காற்றாடியும் சக்கரமும் போல் பிறந்திறந்து வாழவிரும்பவில்லை அடிகள். முருகப் பெருமானே! "கடியேற்கும் பூங்கமலக் கால் காட்டி அடியேற்கு முன்னின்று நின் திருவடியில் சேர அருள் புரிவாயாக" எனவும் இறுதியாக வேண்டிக் கொள் கிறார்.

இவ் வேண்டுகோள் ஒன்றே அடிகளாரின் உள நிலையை நன்கு உணர்த்தப் போதிய சான்றாகும்.

இங்ஙனம் வேண்டியபின்பு செந்திலாண்டவனின் கருணை வெள்ளத்தில் தோய்ந்து, பின்பு தமது ஊருக்குப் பெற்றோர்களுடன் வந்தார். எனினும் இவருக்கு வாழ்வில் சிந்தனையில்லை. மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தரிசிக்க நினைந்தார். மதுரைக்கு வந்தார். அருள் சூற்கொண்ட அங்கயற்கண் ணமுதை அகம் மகிழக் கண்டு வணங்கி அம்மையின் திருவடியில் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் என்னும் பாமாலையைச் சூட்டினர். அவ்வமயம் அம்மையும் தம் பரிசாக முத்துமாலையைச் சூட்டினர். அக்காலத்தில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரின் உள்ளம் தெளிய திருக்குறளின் சாரமாக, நீதிநெறி விளக்கத்தை அருளினர். 1330 அருங் குறள்களால் உணர வேண்டிய அறநெறியை 101 வெண்பாக்களால் இந் நூலில் தெளிய வைத்திருப்பது பேரிதும் போற்றற் குரியதாகும். ஆரூர்ப் பிறத்தல் நேர்படின் அல்லது செயற்கையின் எய்தும் இயற்கைத் தன்று. ஆயினும் சென்று வழிபாடு ஆற்றுதலேனும் செய்யவேண்டும் என நினைந்த அடிகள் ஆரூர்க்குச் சென்றார்கள். பெருமானை வணங்கி வழிபட்டுத் திருவடிகளில் திருவாரூர் நான்மணிமாலை என்னும் பாமாலையைச் சூட்டியருளினர்.

அப்பொழுது சிவராஜதானியாய் விளங்கும் தருமைப்பதியில் ஞானச் செல்வராக நான்காவது பட்டத்திலெழுந்தருளியிருந்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ மாசிலா மணி தேசிகர் அவர்கள் ஆவர். ஞானச்சரக்கறை யாக இருந்த அப்பெருமானைக் கேள்வியுற்று அடிகள் அங்குச் சென்றார்கள். அன்புமிக உண்டாய் அதிலே விவேகமுண்டாய்த் துன்ப வினையைத் துடைப்ப துண்டாய் இன்பம் தரும் பூரணத்திற்கே தாக முண்டாய் ஓடிவரும் காரணர்க்கு உண்மை உணர்த் தும் குருமூர்த்திகளும், அடிகளின் பக்குவத்தைக் கண்டார்கள். வாக்குத் தடைப்படும் இடமே ஞானாசிரியன் கிடைக்கும் இடமாகச் செந்திலாண்டவ னின் அருளாணையும் இருந்தது. ஆதலின் அடிகள் அக் குருமூர்த்தியினிடம் முறைப்படி சந்நியாசமும் ஞானோபதேசமும் பெற வேண்டுமென்று விரும் பினர். ஆயினும் அங்ஙனம் பெறுதற்கு முன்பு, காசிக்குச் சென்று கண்ணுதற் பெருமானை வணங்கி வரச்செய்தல் ஆதீன மரபு. ஆதலின் குருமூர்த்திகள் அடிகளைக் காசிக்குச் சென்று வருமாறு பணித் தருளினர். அடிகள் நீரிற்குமிழியிளமை, செல்வம் நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள், நீரில் எழுத்தாகும் யாக்கை என்பதை நன்கு உணர்ந்தவர்கள்; ஆதலின் காசி வரை சென்று வருதற்குச் சிறிது கவன்றனர். அங்ஙனமாயின் 'சிதம்பரமேனும் சென்றுவருக' என அருளாணை பிறக்க அதன்படிச் செல்கின்றவர், இடையில் புள்ளிருக்கு வேளூரைத் தரிசித்தனர். செல்வமுத்துக்குமரன், அடிகளின் தேனூறுகிளவிக்கு வாயூறி நின்று, தம்மீது பிள்ளைத் தமிழ் பாடவேண்டு மென, அங்ஙனமே முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் என்னும் நூலைப் பாடியருளினர். அந்நூலில் ஆகம அளவையானன்றி காட்சியளவை யானும் காணப்படும் கண்கண்ட கடவுள் செல்வமுத்துக் குமரன் என்றும், அவன் பொன்னுலகு மண்ணுலகு எவ்வுலகு வேண்டினும்தந்து புரப்பதுடன், அழியாத வீடும் தரக்கடவன் என்றும் அம்புலியை ஆற்றுப் படுத்தும் முகமாக அனைத்துயிர்களையும் அப் பெருமானிடத்தில் ஆற்றுப் படுத்திச் செல்லும் பெருமை அறிந்து இன்புறத்தக்கதாகும்.

பின்னர், தில்லைக்குச் சென்று சிதம்பர மும்மணிக் கோவை என்னும் பாமாலையைக் கூத்தப் பெருமானின் திருவடிகளிற் சூட்டினார். 31 பாடல்களையுடைய இந்நூல் அடிகளின் அறிவுக் கருவூலமாகத்திகழ்வது. அந்நூலில் அம்பலவாணன் அற்புத நடனத்தின் பயனை உயிர்கள் நேரே பெற இயலாதென்று

நினைந்த அம்மை பாலுண் குழவி பசுங்குடர் பொறு தென நோயுண்மருந்து தாயுண்டாங்கு அந் நடனத்தைத் தான் தரிசித்து உயிர்களுக்கு அப் பயனை விளைவிக்கின்றான் என்று கூறுகின்றார். இல்லறம், துறவறம், அக்காலச் சூழலில காசிக்குக் கால்நடையாகச் செல்லும் பொழுது நேரும் துன்பம், செல்வம், நல்குரவு என்பதற்குத் தரும் விளக்கம் ஆகியவைகளைப் பற்றி யெல்லாம் அந்நூலில் அடிகளுக்கே அமைந்த பாணியில் கூறிச் செல்வது பன்முறையும் படித்து இன்புறத் தக்கதாகும்.

தில்லையில் இருக்கும்போது மும்மணிக்கோவை யையேயன்றிச் செய்யுட் கோவை ஒன்றையும் அடிகள் அருளினர். யாப்பிலக்கணம் கற்பார் செத்துப் பிறக்கின்ற தெய்வங்களைப் பற்றிய பாடல்களையும் பயனற்ற சொல்லடுக்குகள் நிரம்பிய பாடல்களையுமே பயில இருந்த குறை, அடிகள் அருளிய சிதம்பரச் செய்யுட் கோவையால் நீங்கிற்று. எடுத்துக்காட்டாக ஒன்று. வெண்பா இனங்களுள் வெளிவிருத்தம் என்பது ஒன்று. இது மூன்றடியானும் வரும், நான்கடியானும் வரும். அடிதோறும் ஒரு சொல்லே இறுதிச் சொல்லாக வரும். நான்கடியாய் வந்த வெளிவிருத்தத்திற்கு யாப்பருங்கலக் காரிகையில் காணப்படும் பாடல்

'' ஆஆ என்றே அஞ்சினர் ஆழ்ந்தார் ஒருசாரார்
கூகூ என்றே கூவிளிகொண்டார் ஒருசாரார்
மாமா என்றே மாய்ந்தனர்நீந்தார் ஒருசாரார்
ஏ பீர்நாகீர் என்செய்தும் என்றார் ஒருசாரார் ''

என்பதாகும். இப்பாடலின்கண் வெளிவிருத்தத்தின் இலக்கணம் நன்கமைந்து இருப்பினும் இப்பாடலைப் படிப்பதால் பயன் உண்டோ எனில் இல்லை ஏதோ பெருந்துயரத்து அகப்பட்டவர்கள் எவ்வெவ்வாறு புலம்பினர் என்பதையே காட்டுகின்றது. இப்பாடல் ஆனால் அடிகள் இதே வெளிவிருத்தத்திற்குக் காட்டும் பாடலோ உலகியல் துன்பங்களைப் போக்குவது மட்டும் அன்று; பிறவிப் பிணிக்கும் மருந்தாகும் பான்மையது அப்பாடல்.

'' வெஞ்சம வஞ்ச வேலோ டெதிர்ந்தா னமரங்காள்
அஞ்ச லெனுஞ்சொல் லார்சொல வல்லார் நமரங்காள்
மஞ்சிவ ரிஞ்சி மன்ற பிறைஞ்சீர் நமரங்காள்
நஞ்ச மயின்றார் நல்குவர் மாதோ நமரங்காள் ''

என்பதாகும். இப்பாடல் யாப்பமைதியைத் தெரிந்து கொள்ள விரும்புவார்க்கும் அதே சமயத்தில் பிறவிப் பிணியைப் போக்க விரும்புவார்க்கும் பெருந்துணை யாய் நிற்பது பெரிதும் எண்ணி மகிழ்தற்குரியதாகும்.

பின்பு தம் ஞானசிரியரிடத்துச் சென்று ஞானோப தேசம் பெறுவதற்குத் தருமைக்குச் செல்லக், குரு மூர்த்திகளும் அடிகள் பன்னாள் அலமருதல் கண்ணுற் றருளி அவர்கட்குச் சந்நியாசம் அளித்து ஞானோபதேசமும் செய்தருளினர். அவர்கள் மீது அருளியதே பண்டார மும்மணிக்கோவை என்ற நூலாகும்.

குருவருளின்மாண்பினை விளக்கிநிற்கும் இந்நூல் ஞானப்பேழையாக, சாத்திரக் கருவூலமாக விளங்கி நிற்பது ஆகும். இறைவனே தன்னை ஆட்கொள்ளத் தன்னொத்த மேனிகொண்டு வந்தான் என்றும். அவன் தன் கண்டத்திருந்த களங்கத்தை மறைத்து வந்தமையால் மாசிலாமணி என்ற பெயரைப் பெற்ற னன் என்றும், அப்பெருமானுக்கு ஞானசம்பந்தர் என்று பெயர் இருப்பதால் தனக்கு ஞானசம்பந்தத்தை உளதாக்கலும் அவனுக்கு ஏற்புடையதே என்றும் அனைவரையும் ஆட்கொண்டருள அவனது சந்நிதி விசேடம் கூட வேண்டுவதன்று, அவ்வாசிரியன் இருக்கும் ஊரே அத்தகைய அருளைச் செய்யவல்லது என்றும், அவ்வூரை அடையக்கூட வேண்டுவதின்று; அவ்வூரைக் குறுகின அளவே அவ்வருள்கிட்டவல்லது என்றும் கூறியிருப்பது குருவருளின் மாண்பினை நன்கு விளக்கிநிற்பதாகும். இனி அந்தப்பெருமானை வேண்டிக்கொள்ளுங்கால பிறவாமை வேண்டும், அதற்குத் தகுதி என்பால் இல்லையேல் பிறவி வேண்டும். அப் பிறவிதான் மலரோனாகிப் படைக்க நினைவதன்று. மாலாகிக் காக்க நினைவதன்று. இந்திர னாகி ஐந்தரு நிழற்கீழ் இருக்க நினைவதுமன்று அவை யனைத்தும் ஆராஇன்பம் என்று அரும்பெயர் பெறி னும் வாரா வல்வினை வருவிக்கும் ஆதலின், நினதடித் தொண்டர்கள் திருவமுதாரந்து தெருக் கடையெறிந்த பரிகலமாந்திப் பவக்கடல உழக்கும் வரனுடைய ஞமலியாகும் வரமே வேண்டும்' என வேண்டி நிற்பது அடிகளுக்கு அடியார்கள் மீதுள்ள அழியாத பக்தியினையும், 'வேதம் என்னும் மரத்தில் பிறபிற சமயங்களாகிய பூவும் பிஞ்சும் காயும் தளிரும் இருப்ப அவற்றையே பிறர் கொண்டனர். ஆயினும் எனக்கு ஒரும் வேதாந்தத்து உச்சியிற் பழுத்த சாரங்கொண்ட சைவசித்தாந்தத்து ஆராவின்ப அருங்கனியைப் பெறுமாறு அருள் செய்ய வேண்டும்' என வேண்டியிருப்பது அடிகளுக்குச் சைவ சித்தாந் தத்திலுள்ள வேட்கையையும் நன்கு காட்டுவதாகும்

இதன்பின்னர்த் தன் குருமூர்த்திகளிடம் பிரியா விடை பெற்றுக் காசிக்குச் சென்று, விசுவலிங்கப் பெருமானை வழிபட்டுச் சிலகாலம் தங்கியிருந்தார். அப்பொழுது காசிக் கலம்பகம், காசித்துண்டி விநாயக, பதிகம் என்னும் நூல்களை யருளினர். அக்காலத்து முகலாயமன்னனாக விளங்கிய ஔரங்கசீப்பினிடத்துப் பேசவேண்டிச் சகலகலாவல்லி மாலை பாடிக் கலைமகளைத் துதிக்க, இந்திமொழிப் பயிற்சியும் கைவரப் பெற்றார்

அதனால் மொகலாய மன்னனிடத்துப் பேசினர். அம்மன்னருக்காம் அறவுரைகளையும் கூறினர். அம்மன்னரிடத்துத் தாம் சமய பிரச்சாரம் செய்யவும் விசுவலிங்கப்பெருமானை வழிபடவும் ஒரு இடம் கேட்க, அவரும் அளித்தனர். அவ்விடமே இன்று கங்கைக்கரையில் விளங்கும் கேதாரக் கட்டமாகும். அங்குத் தம்பால் வந்தவர்களுக்குத் திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தப் பொருளை அறிவுறுத்தியும், துளசிதாசர் போன்ற புலவர் பெருமக்களுக்கு இலக்கிய நயங்களை எடுத்துரைத்தும் மகிழ்வித்து வந்தனர். பின்னர் ஞானாசிரியரைத் தரிசிக்கவிரும்பித் தருமைக்கு வந்தனர். வழிபட்டனர். பின்னரும் காசிக்குச் சென்றவர், கல்வி கேள்வியல்லல் ஓய்ந்து ஒன்றிரண்டும் அறச் சிவானந்தவாரியுள்ளே தோய்ந்து, அண்ணலார் சேவடிக்கீழ் அணைந்து இன்புற்றனர்.

இவர்கள் வழிவந்த திருமரபே திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் திருமரபு ஆகும். தருமையாதீனத்திற்கும், ஸ்ரீ காசி மடத்திற்கும் அன்று ஏற்பட்ட குருசிஷ்ய பாரம்பரியம் இன்றும் வழிவழியாக வளர்ந்தோங்கி வருகிறது. வாழ்க திருத்தருமையாதீனம்! வளர்க ஸ்ரீ காசி மடம்!



குருமா சிலாமணி குமரகுரு பரர்க்குப்
பெருஞானம் போதிக்கும் பேரருளின் சீரெழிலே.

# நாத தரிசனம்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்,

**திரு. ச. தண்டபாணி தேசிகர்**

சேரமான் பெருமாள் நாயனார், நாடோறும் சிவ பூசை முடிவில் நாததரிசனங் கேட்ட பின்புதான், ஆனந்த நடராசப்பெருமான் அன்றைய பூசையை ஏற்றுக் கொண்டதாக எண்ணிக் களிப்பார் என்ற வரலாறு கேட்கிறோம். அவர் கேட்ட நாத தரிசனம் கூத்தப்பெருமானுடைய திருப்பாதச் சிலம்பொலி யென்று பெரியபுராணம் தெரிவிக்கிறது. அத்தகைய ஒலியை அநுபவமுள்ளவர்கள் அனைவருங் கேட்க முடியுமா? அவர்கள் வரலாறு நீயும் பழகினால் கேட்கலாம் என்று வாழ்வியல் முறையில் தூண்டிவிட வேண்டுமல்லவா? அதற்கு உரிய உபாயம் என்ன? அவருக்கு மட்டும் கேட்டது! மற்றவர்கள் கேட்கவே முடியாது என்றால் அதனாற் பயன் யாது? என்ற சிந்தனை சமயி ஒவ்வொருவனுக்கும உண்டாகத்தான் வேண்டும்.

சமய அநுபவம புத்தக மூட்டைகளைக் கரைத்துக் குடிப்பதில் இல்லை; தத்துவங்களைத் தவறாமல் எண்ணித் தலையடித்துக் கொள்வதில் இல்லை; துடுக்காக-மேடைகளில் அடுக்குமொழிகளைப் பேசும் வாய்ப்பந்தலில் இல்லை. படம் பிடித்ததுபோலப் பல வேறு கருத்துக்களை எழுதிக்காட்டும் எழுத்தாளன் கையிலும் இல்லை. ஆனால் 'இருந்ததனை இருந்து காட்டும ஆசாரியன் அருளுள்ளத்தோடு 'இப்படியிரு' என்று இருத்தி வைக்க இருந்து பழகும் பழக்கத்தில் இருக்கிறது; வளர்கிறது; பயன் தருகிறது

## பழக்கம் வருவதெப்படி?

மனிதன் பிறந்த நாள் முதல் ஏதோ பழகிக் கொண்டுதானிருக்கிறான்; அழப் பழகுகிறான்; சிரிக்கப் பழகுகிறான்; பேசப்பழகுகிறான்; பார்க்கப்பழகுகிறான்; கேட்கப்பழகுகிறான்; அப்பழக்கமெல்லாம் அவனுடைய வயிற்றுப்பசி, கண்பசி, காதுப்பசி, உடற்பசிகளைப் போக்குவனவாக அமைகிறது. அதற்கேற்ற அறிவுப பசியையும் அந்தந்த தேவைகளை நிறைவேற்றும் வகையில் போக்கி நிறைவெய்துகிறது. கண், காது, மூக்கு, நாக்குத் தேவைகளைக் காட்டிலும் மனிதனுக்குப் பெரிய தேவை ஒன்று இருக்கிறது. அதை யடையத் தான் மனிதன் பிறந்திருக்கிறான்; என்ற ஆசை ஒவ்வொருவனுக்கும் உண்டாக வேண்டும், உண்டானால் அத் தேவையை நிறைவேற்றுவதெப்படி என்ற உத்வேகம் பிறக்கும. உத்வேகம் முற்றப் பழகிய பழக்கங்களில் உவர்பபுண்டாகும். இதனையே திருவுந்தியார் 'பழக்கந்தீரப் பழக வேண்டும்' என்கிறது.

ஓராடையில் சாயம் ஏற்றுவது எளிமை; சாயம் ஏறிய ஆடையில் மற்றொரு சாயத்தை ஏற்றமுடியாது. பழக்கம் ஒன்றுமே இல்லாத தூய உள்ளத்தில் பழக்கங்களைப் பயிற்றிவிடலாம். ஒருவகையான பழக்கங்கள் ஏறிய பின் அவற்றை நீக்கிப் புதியவற்றைக் குடியேற்றுதல் மிகக் கடினமான காரியந்தான். அதனை ஓர் ஆரம்ப ஆசிரியன் செய்துவிட முடியாது. பரம்பரையில் வந்த ஆசிரியன் - பழகித் தேர்ந்த ஆசிரியன் - பழகும்போது இன்னின்ன இடையூறுகள் இன்னின்ன வடிவில் வரும்; அவற்றை விலக்கிக் கொண்டு முன்னேறும் முறை இப்படி என்பதைத் தம் அநுபவத்திற்கண்ட அநுபவியான ஆசாரியனே வழிகாட்ட முடியும; அவனும் வழிகாட்டினால்மட்டும் போதாது. கூடவே இருந்து சிறிதுதூரம் அழைத்துச்

செல்லவும் வேண்டும். அப்போதுதான் பழக்கந் தீரப் பழகலாம்.

வள்ளுவன் "ஒருமைக்கண் தாங்கற்ற கல்வி யொருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து" என்கிறான். ஒரு பிறவியிலே படித்த படிப்பு ஏழு பிறப்பிற்குத் தொடருமானால் அடுத்த பிறவி எடுக்கின்ற நாம் ஏன் அ, ஆவிலிருந்து தொடங்கவேண்டும் விட்டகுறை தொட்ட குறையாக முற்பிறவியில் புலவனான நாம பெரும் புலவனாகத் தொடரலாமே! முற்பிறவியில் கற்றவற்றை அடியோடு மறந்து அரிவரி தொடங்கிப் படிகக்வேண்டிய அவசியத்தை ஏன் கடவுள் அமைத்திருக்கிறார்? எல்லாந் தெரிந்த வள்ளுவன் இதனை மறந்தோ-மறைத்தோ கூறினனை? என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறதல்லவா?

எந்தப் பழக்கமும் சோபான முறையில் (அதாவது படிப்படியாக) பிறவிகள் தோறும் வந்தால்தான் அப்பழக்கம நிலைக்கும் என்பது ஆண்டவன் கட்டளை. அதற்காகவே மறப்பைத் தந்து முயற்சியால் நினைப்பை வளர்த்து நிலைக்க வைககத் திருவுளம் பற்றுகிறான். சென்ற பிறவியில் படித்ததை அரிவரியிலிருந்து தொடங்கி அறிஞனகிறோம். விட்டகுறையுள்ளவன் ஓராண்டுக்கு ஒரு வகுப்பாக உயர்கிறான். விரைவில் தெளிந்து உயர்கிறான். அஃதில்லாதவன் வகுப்பிற்கு மூன்று வருஷங்களாக முப்பதுருபாய் அபராதங்கட்டி உயருகிறான். எப்படியோ பயிற்சி சோபானக கிரமமாக வரவேண்டும் என்பதே ஆண்டவன் திருவுள்ளம்.

அதுபோலவே சமய அநுபவத்திலும், பூவெடுத்து மாலைகட்டிக் கோயிலுக்குக் கொடுத்தும, பூசைத் தொண்டுகள் செய்தும், கோயிலுக்கு விடாமறபோய் வந்தும் பழகிய பழக்கம், தானும் பூசை செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை யுண்டாக்க, அதற்குரிய விதிமுறைகளைத் தெரிந்து கொள்வது எப்படி என்ற ஆசை தூண்ட, அதனைத் தெரிவிககும் ஆசாரியனை யடுத்து அவனுக்குரிய கைங்கரியங்களைச் செய்து அவன் மனங்கனிந்தபோது கொடுக்க ஏற்றுப் பழகினல் அப்பழக்கம நழுவுமா? என்னதான் இடையூறு வந்தாலும் அப்பழக்கத்தை யடைந்த அருமையை எண்ணிப் பெற்றவன் கைவிடுவானா? கரன்சிநோட்டுக்களுக்கு நாணய மதிபபை ஏற்றி வைப்பது போலச் சமயத்தகுதியில் உயர்த்த வேண்டும் என்று பரிபாகமும் விருபபமும இலலாத ஒருவனுக்குப பூசை செபம் தியானம இவற்றைக்கொடுக்கிறோம். அவன் அதைத் தலைச்சுமையாக ஏற்றுக் கைநழுவ விடுகிறான். வெறுப் புணர்ச்சியோடு ஏற்றுக் கொண்டவன் கொண்டு செலுத்த முடியுமா? நின்றவன் உட்கார்ந்து தான் படுக்க வேண்டும் என்பது போலச் சமயாநுபவமும் சரியை கிரியை யோகம் ஞானம் என்றபடி முறையிற் பழகி வர அவகாசம் அளிக்கத்தான் வேண்டும்.

இங்ஙனம் சரியை கிரியைகளிற் பல நாள் பழகி யோகப் பயிற்சியிலும் பல ஆண்டுகள் பயின்ற பேர்க்கே நாத தரிசனம் நன்கு விளங்கும். நாத தரிசனம் மனேலயத்தின் சாதனை. மனேலயம் உண்டாவதற்குரிய உபாயங்கள் ஒன்றேகால் கோடி உள என்றும அவற்றுள் நாதானுசந்தானமே சிறந்த சாதனம் என்றும் ஆதிநாதராகிய மகேஸ்வரன் கூறினர் என்று கோரக்கச் சித்தர் கூறுகிறார். ஆகவே நாதானுசந்தானம் யோகியர்கட்கு இன்றியமையாதது. அதனைப் பழகும் முறைகள் பல.

இரவில் எல்லாரும் உறங்கியபின் அதாவது ஊரடங்கியபின், விளக்கு முதலிய ஒளிகளையும் நிறுத்திவிட்டு நல்ல இருட்டில், தன் படுக்கையில் எழுந்திருந்து சுகாசனத்தில் இருந்து கொண்டு சுட்டு விரல்கள் இரண்டாலும் இரு காது துவாரங்களையும் நன்ருக மூடினல், நமது ஜாடராக்கியால் உண்டாகிய (நெருப்புப் பற்றி எரியும் போது உண்டாகும் ஒலி) சப்தம்கேட்கும். நாடோறும் இரண்டுமணிநேரமாவது பழகி வந்தால் பசியுண்டாம்; நோயகலும்; காய்ச்சல் முதலியன நீங்கும். அவன் மிருத்யுவையும் வென்று தன்னிச்சையின்படி எங்கும் உலாவி எல்லாச்சித்தியும் அடைகிறான். இது நாததரிசனத்தின் முதல் பாடம்.

சில மாதங்கள் இந்நிலையிற் பழகியபின், மாரிக் காலத்தின் மேக ஒலி கேட்கும். அதனைக் கேட்கும் யோகி உலகியறபந்தனைகளினின்று வீடு பெற்று ஒரு வகை இன்ப உணர்ச்சியை எய்துகிறான். அதனல் அவன் அவவொலி கேட்கும் வழக்கத்தை இடைவிடாது பழகிவருகிறான். அதனல், இடி இடிப்பது போலப் பெரிதாகக் கேட்ட நாதம் நுணுகி நூறுகிக் கோடி மைல்களுக்கு அபபாற் கேட்கும் ஒலி போலச்சூட்சுமமாகிறது. இதனைக் கேட்பவனுக்குத் தானகவே சம்சாரபந்தம் நழுவுகிறது. இது முற்றினல் 'ஓம்' என்னும் பிரணவ நாதம் கேட்கும். இதுவும் பல ஆண்டு பழகி வந்த அநுபவமே நாதச் சிலம்பொலி தரிசனம். அதனைக் கேட்டவர் சேரமான் பெருமாள்

இதனைத் திருமூலர்,

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்

தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க வொண்ணுதே

எனவும்,

'' கடலொடு மேகங் களிறொடும் ஓசை
அடலெழும் வீணை அண்டரண் டத்துச்
சுடர்மனு வேணுச் சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்கல்லாற் றெரியாதே ''

எனவும் உரைப்பர். (திருமந்திரம் 606 - 607)

யோகசூடாமணி என்னும் நூலும் இவற்றுள்சில நாதங்களின் இயல்பையும் பயனையும் அறிவிக்கின்றது. அவை வருமாறு:

**கோஷம்:-** ஒருவகையான இரைச்சல். அது கேட்கப்படுமானல் சித்த சுத்தியுண்டாகும். நோயகலும்; எல்லாரையும் எல்லாவற்றையும் வசிகரிக்கும் ஆற்றல் விளையும்; ஆட்கொள்ளும் வன்மை பெருகும்.

**வெண்கல நாதம்:-** வெண்கல பாத்திரத்தைத் தட்டும் ஒலி. இது கேட்டுச் சித்தியான யோகி விஷமிறக்குதல், கொடிய விலங்கினங்களை யடக்கியாளுதல், கோள்களை வெல்லுதல் முதலிய ஆற்றலைப் பெறுவான்.

**கொம்பு நாதம்:-** பகைவெல்ல அபிசாரஹோம சித்தியிலும், சத்துருமாரண சித்தியிலும் கேட்கப்படுவதாம்.

**மணி ஒலி:-** இதுகேட்கப்படுமானல் தேவர்கள் மக்கள் அனைவரும் இவன் ஆணை வழி நடப்பர். விரும்பிய பேறுகள் அனைத்தும் விளையும்.

**வீணையொலி:-** இந்நாத சித்தியுடையவர்கள் இருந்த இடத்திலிருந்தே எல்லாவற்றையும் அறியும் ஆற்றலுடைவர்.

**புல்லாங்குழல் ஒலி;** இதனல் சர்வஞ்ஞத்தும் சித்திக்கிறது.

**துந்துபிநாதம்:-** இதனல் பிறப்பிறப்பு நீங்குகிறது.

**சங்கநாதம் :-** நினைந்த வடிவங்கொள்ளும் ஆற்றல் சித்திக்கிறது.

**மேகநாதம்;-** இதனல் ஆகாயத்திற் பறத்தல், எல்லாவற்றையும் அறிதல் முதலியன விளைகின்றன.

**பிரணவ ஒலி :** இதனை இடைவிடாது கேட்டனுபவிக்கும் யோகிக்குச் சோதி தரிசனம் உண்டாகிறது. அவனுக்கு அடைய இயலாத சித்திகளே யில்லை. எல்லாம் அவன் ஆணைவழி நிற்பனவே.

**சிலம்பொலி ;-** நடராசப்பெருமான் ஐந்தொழில் ஆனந்த நடனம் இயற்றும்போது உண்டாகின்ற ஒலி. இதனைக் கேட்பவர் இம்மையிலும் பேரரசராய் - பெருந்துறவியாய் - பெரிய ஞானியாய் விளங்கி மறுமையிலும் பேரின்பம் எய்துவர் என்கின்றது.

ஆதலால், சமயத்துறைப் படிப்பைக் காட்டிலும் பயிற்சி அவசியம். சிவபூசை செய்யும் பழக்கமுடையார் இங்ஙனம், சோபானக் கிரமத்திலிருந்து நாதானுசந்தானம் பண்ணிவருதல் அவசியம். அதில் படிப்படியாக முன்னேறிச் சிலம்பொலி கேட்கும் பயிற்சி கைவரும் வரையில் பழகுவது சிறந்தது. இதனையே திருமூலர் பயின்ற அநுபவியான ஆசாரியன்பால் இருந்து பழகுக என்று ஒலி வகைகளைத் தொகுத்துணர்த்தினுர்.

நாமும் முற்கூறியவண்ணம் இருந்து பழகி முன்னேற முயல வேண்டும். சமய முன்னேற்றம் சமயானுட்டானத்திலிருக்கிறது; அது புகழுக்கும் பொருளுக்கும் அப்பாற்பட்டது. அதனை யுள்ளபடித் தேடிக்கொள்ளுதலே சமயியின் கடமை

ஒரு வார்த்தை :

ஞானசம்பந்தம் சிவஞானப் பண்ணையில் தோன்றிய நாண்மலர். அது மாதந்தோறும் பூத்துச் சிவமணம் பரப்புவது. இதுவரை 288 மலர்கள் பூத்துள்ளன. இதனைத்தோற்றுவித்தவர்கள் தருமபுர ஆதீனத்து 24-வது குருமகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள். அதற்கு வண்ணவண்ண நிறம் ஊட்டி, பல்சுவைத் தேனைப் பிலிற்றச்செய்து பல்லாயிர மக்களை இடைவிடாது முகரவும் - சுவைக்கவும் - பார்க்கவும் செய்த பெருமை 25-வது தலைமுறையாக ஞானபீடத்து எழுந்தருளியுள்ள குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களையே சாரும்

ஞானசம்பந்தப் பணியாளனுக அடியேனும் சில ஆண்டுகள் இருக்கும்பேறு இருந்தது. அப்போதெல்லாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அதனைக்

கருத்துப்படங்களாலும், உயிரோட்டமுள்ள கட்டுரைகளாலும் ஒப்பனை செய்க எனப் பணிப்பார்கள். இவ்வண்ணம வளர்ந்து இப்போது ஞானசம்பந்தத்திற்கு 24 ஆண்டு நிறைவெய்துகிறது. இந்த இருபத்து நான்கு ஆண்டுகளாகச் சிவாகம மொழிபெயர்ப்பு திருமுறையாராய்ச்சி, சித்தாந்த வினவிடை, புராண இலக்கிய நயம் முதலான பல துறையிற் சிவமணம் பரப்பி வருகிறது. ஏனைய பத்திரிகைகட்கு இல்லாத தனிச் சிறப்பு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களே சித்தாந்த சிவானுபவக் கட்டுரைகளால் இதனை யலங்கரிப்பது. முதிர்ந்த அநுபவம் பெரிய நுணுகிய கருத்துக்களை எளிய இனிய மொழிகளால் தெள்ளத்தெளிய எடுத்துரைக்கும் வன்மையாலே பலருக்குப் பயன்படும். இதனை ஞானசம்பந்தத்து வெளிவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளுபதேசங்களால் அறியலாம்.

சுக்கிரோதயம் பெற்ற ஞானசம்பந்த வெள்ளி விழாமலருக்குப் பழம் பணியாளன் என்ற பழைமை பாராட்டி அடியேனையும் ஒரு கட்டுரை வரைக என ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆணை தந்தார்கள். என்ன எழுதுவதென்று சிந்தித்தேன். சிந்தனைக்கு ஒன்றும் எட்டவில்லை. பெரியபுராணத்தை எடுத்துப் பிரித்தேன். சேரமான்பெருமாள் நாயனார் சிலம்பொலி கேட்ட பாடல் உதயமாயிற்று. ஆனந்த நடராசப் பெருமாள் ஆணையென எண்ணி, நாத தரிசனம் என்ற தலைப்பில் அதனையே பொருளாகக்கொண்டு எழுந்த கட்டுரை இது.



முதற பொருளாகிய இறைவனை அறியாதிருத்தலே அஞ்ஞானமும், அந்த அஞ்ஞானமே பிறவிக்குக் காரணமும் ஆகும். இறைவனை அறிந்துகொள்ளுதலே ஞானமும், அந்த ஞானமே பிறவியறுதலாகிய முத்திக்குக் காரணமும் ஆகும். ஆகவே, மன்றுள்நின்ற நிருத்தம் இறைவனது ஐந்தொழிலை உணர்த்தி, அவனை உணரும ஞானத்தைத் தருதலின், அதனை வணங்குதலால் பிறவி அறும். பிறவி அறற நிலையே ஆனந்த நிலையாம.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

# சித்தாந்த நூல்கள்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான், சித்தாந்தக்கலைமணி,

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**

ஆன்ம லாபத்தை முதன்மையாகக் கருதி அதன் கண்ணே பெரிதும் முயன்று பயன் எய்திய நாடு நம் இந்திய நாடு. இதில், 'வேதாந்தம் சித்தாந்தம்' இருபெருந் தத்துவக் கொள்கைகள் இருப்பதை அனைவரும் அறிவர்

> "வேதாந்த சித்தாந்த சமரச நன் னிலைபெற்ற
> வித்தகச் சித்தர்கணமே "

என்று, தாயுமானவர் அவ்விருபெருங் கொள்கைகளையும் இனிதெடுத்து இயம்பியுள்ளார்.

வேதாந்தம், வேதத்தின் முடிவு என்பது வெளிப்படை. இனிச் சித்தாந்தம், ஆகமத்தின் முடிபாம். 'ஆகமம்' என்பது சிவாகமமே. "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்னும் சிவஞான சித்தியைக் காண்க.

வேதம், சிவாகமம் என்னும் இரு முதல் நூல்களையும் பற்றியே தத்துவத்தின் முடிபு காண்டல் வேண்டும்; ஏனெனில், தத்துவக் கொள்கையை முதற்கண் பொதுவகையிற் கூற எழுந்தது வேதம்; அதனைப் பின்னர்த் தெளிவுபட முடித்துக்காட்ட எழுந்தது ஆகமம். நுண்பொருள்களை முதலில் பொதுவாகச் சொல்லிப் பின்னர்ச் சிறப்பாக உணர்த்துதலே முறை. இதனை, 'தூலாருந்ததி நியாயம்' என்பர் அறிஞர்.

தூலாருந்ததி நியாயமாவது, ஆகாயத்திற் காணப்படும் விண்மீன்களுள், 'அருந்ததி' என்பது ஒன்று. அது 'சப்தரிஷிகள்' எனப்படும் ஏழு மீன்களுள், 'வசிட்டர்' எனப்படும் விண்மீனோடு ஒட்டி நின்று நுண்ணிதாய்க் காணப்படுவது. ஆதலின், அதனை ஏனைய மீன்கள்போல எளிதில் அறிந்து கொள்ளல் இயலாது. ஆதலின், 'வசிட்டர்' என்னும் விண்மீனையே, 'அருந்ததி' என முதலிற் காட்டிப் பின்னர், 'அதன் அருகில் உள்ளது அருந்ததி மீன்' எனக் காட்டுதல் போல்வது. 'வசிட்டர் என்னும் மீனைச் சார்ந்து நிற்றல், அருந்ததி மீனுக்குப் பொது வியல்பு. ஆதலின், அவ்வியல்பை உணர்த்துதல் அதனைப் பொதுவாக உணர்த்துதலாம். பின் தனக்கென ஓர் தனி ஒளியை உடையதாய் இருத்தல் அதற்கு உண்மை இயல்பு ஆதலின், அதனைத் தெரிவித்தல், உண்மையாக உணர்த்துதலாம்.

இங்ஙனமே பதி பசு பாசங்களாகிய நுண்பொருள்களின் இயல்புகளை முதற்கண் பொதுவாக உணர்த்தியே பின்னர்ச் சிறப்பாக உணர்த்தல் வேண்டும். ஆதலின், அங்ஙனம் பொதுவாக உணர்த்துவன வேதங்கள்; சிறப்பாக உணர்த்துவன சிவாகமங்கள். இதுபற்றியே முதல்நூல் ஒன்றேயாய் இருந்து, இரண்டாய் அமைந்துள்ளன. 'வேதம் சிவாகமம்' என்று முதல் நூல்கள் இரண்டுபட்டது. ஒன்று, முதல் மூன்று வருணத்தார்க்கு உரித்தாதற் பொருட்டும், மற்றொன்று நான்கு வருணத்தார்க்கும் உரித்தாதற் பொருட்டுமாம் என்று காரணங் கூறுவர் நீலகண்ட சிவாசாரியர்; அது பொருந்துமாறில்லை.

இங்ஙனம் தத்துவக் கொள்கையை உண்மையாய் உணர்த்துவன சிவாகமங்களேயாய் இருக்கச் சிலர், அவற்றை அறவே இகழ்ந்தொதுக்கி, வேதம் ஒன்றை மட்டுமே போற்றிக் கொள்ளுவர். அவர், ஆகமங்கள் சிவாகமத்துக்குப் புறம்பான கருத்துடையவை என்றுங் கூறுவர். அத்தன்மையோரை நோக்கியே திருமூல நாயனர் தம் திருமந்திரத்துள்,

> "வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
> ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன;
> நாதன் உரையவை நாடில், இரண்டந்தம்
> பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே "

என்று அருளிச்செய்தார். இரண்டந்தம் வேதாந்தம்; ஆகமாந்தம். இவ்வாறே அருணந்தி சிவாசாரியரும் சிவஞான சித்தியில்,

" வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுமுள நூல்இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதிஅமலன் தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொது, சைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும்
நிகழ்த்தியது "

என்று அருளினர். தத்துவ நெறியை உலகத்தார் பொதுவாகவே தழுவி நிற்பராதலின், பொது நூலாகிய வேதம், அவர் பொருட்டாகவும், சத்திநி பாதத்து உத்தமர் தத்துவ நெறியைச் சிறப்பாக்கைக்கொள்வராதலின் சிறப்பு நூலாகிய ஆகமம், அவர் பொருட்டாகவும் செய்யப்பட்டன. ஆகவே தத்துவக் கொள்கைகளைக் கூறும் வாக்கியங்கள் பல வகையாகப் பொருள் கொள்ளுதற்கு இடந்தந்து ஐயத்தை விளைக்கும். ஆகம வாக்கியங்கள் அவ்வாறின்றி, ஒரு வகையாகவே பொருள் தந்து தெளிவை உண்டாக்கும். எடுத்துக்காட்டாக முதற்பொருளை வேதம், 'தத் - அது' என்றும், 'ச: - அவன்' என்றும் பொதுவாகக் கூறுகின்றது. அவற்றிற்கு எத்தன்மையை உடையதையும், உடையவனையும் பொருளாகக் கூறலாம், ஆகமம் அவ்வாறின்றி முதற்பொருளை, 'சிவம்' என்றும், 'சிவன்' என்றும், கூறுகிறது. அவற்றிற்கு மங்கலம் - 'நன்மையை உடையதையும், உடையவனையுமே பொருளாகக் கொள்ள இயலும். ஆகவே, நல்லன என்று நாம் எவ்வெவற்றை விரும்புகிறோமோ அவை அனைத்தையும் உடையது முதற்பொருள் என்று ஆகின்றது. ஆகவே. முதற்பொருள் பொருளால் ஒன்றாய்க் குண குணித்தன்மையால் இருதிறப்பட்டு நிற்கும் என்பது பெறப்படும். அவ்விருதிறங்களே 'சத்தி, சிவம்' எனப்படுகின்றன. எனவே, பொருளால் வேறுபடாது, சத்தியும் சிவமுமாய், அம்மையும் அப்பனுமாய் இருகூற்றால் இயைந்து நிற்பவனே முதற்பொருள் என்பதும், இத் தன்மையோடு மாறுபடச் சொல்லப்படுவன வெல்லாம் முதற்பொருள்கள் அல்ல என்பதும் தெளிவுற விளங்கும்.

இதனால், வேதவாக்கியங்கள் சூத்திரம்போலவும், ஆகம வாக்கியங்கள் அவற்றின் உரை போலவும் உள்ளன என்பது தெளிவாகும். சூத்திரத்தை மட்டும் நோக்கின், அது பல பொருளைத் தந்து, யாது பொருள்? என ஐயுற நிற்கும். உரை, நூல் முழுவதையும் நோக்கி முன்னெடுப்பின் மலைவற உரைக்கப் படுவதால், 'இச்சூத்திரத்திற்கு இதுவே பொருள்' எனத் தெளிவாகக் காட்டும். ஆகவே, வேதத்தை மட்டும் கொண்டு ஆகமத்தைப் புறக்கணிப்பவர், சூத்திரத்தை மட்டும் கொண்டு, அதன் உரையைப் புறக்கணிப்பவர் போன்றவராவர்.

சித்தாந்தமாவது, முடிந்த முடிபு ஆதலின், சிவாகமங்களே சித்தாந்தம் என்பது, மேற்கூறிய பல வற்றாலும் நன்கு விளங்கும். " சிவாகமங்கள் சித்தாந்தமாகும் " என்பது சிவஞான சித்தி.

இனி, பொழிப்புரை, கருத்துரை, அகலவுரை முதலாக உரைகளிலும் பலவகை உண்டு, சூத்திரத்தின் பொருள் இதுவென்பது பொழிப்புரை. சூத்திரத்திலும், பொழிப்புரையிலும் சொல்லப்படும் பொருள்களைச் சில சொற்களால் சுருக்கமாகத் தெளிவுறக் கூறுவது கருத்துரை. அந்தக் கருத்தைப் பலவகையாலும் வலியுறுத்துவது அகல உரை. சிவாகமங்களை, 'பொழிப்புரை' என்று கூறலாம். 'வேத சிவாகமங்கள் அனைத்தின் முடிபும் இதுவே' என ஒரு நெறியே உணர்த்துவன தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகள். திருமுறைகளிற் சொல்லப்பட்ட பொருள்களையும் பலவகையாலும் வலியுறுத்துவன, மெய்கண்ட நூல்கள். ஆதலின், அவைகளே 'சித்தாந்த நூல்கள்' எனப்படுகின்றன. இவற்றின் பெருமையை,

" வேதம் பசு; அதன்பால் மெய்ஆகமம்; நால்வர்
ஓதுந் தமிழ்அதனின் உள்உறுநெய் - போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டார்
செய்ததமிழ் நூலின் திறம் "

என்பதனுன் அறிக.

இச்சித்தாந்த நூல்களை, 'பதினன்கு' என்றல் மரபாயிற்று; எனினும் வேறும் சில நூல்கள் அவற்றோடு ஒத்த சிறப்புடையனவே.

" உந்தி களிறே உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தஅருட்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்பம் உற்று "

என்னும் வெண்பாவால், 'சித்தாந்த நூல்கள் பதினன்கு' எனப்படுவன இவை என்பது தெளிவாகும். துகளறுபோதம், ஞானமிர்தம் போன்றனவும் சிறப்புடைய நூல்களே. இவை அனைத்தும், 'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள்களின் பொதுவியல்பு, உண்மை இயல்புகளை இனிது விளக்கும்.

இவற்றுள் பொதுவியல்பு, உண்மை இயல்பு என்னும் இரண்டினையும் எடுத்துக்கொண்டு அவற்றின் பகுதிகள் அனைத்தையும் முற்ற உரைக்கும் நூல்கள் 'சிவஞான போதம், சிவஞான சித்தி, சிவப்பிரகாசம்' என்னும் மூன்றுமாகும். மேலும் இவை அவ்விரண்டு இயல்புகளையும் பரபக்கம் பற்றியும், சுபக்கம் பற்றியும் கூறும் இருவகையிலும் அமைந்துள்ளன. ஆதலின், இவை மூன்றும் முடிந்த நூல்களாகும். இவை முறையே, முதல்நூல், வழிநூல், சார்பு நூல்களாகும்.

# திருக்குறளும் திருமுறையும்

வித்துவான். திரு. மு. நடராஜ தேசிகர்

" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு " (குறள் 1)

எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன. அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடையது.

இக் குறட்கருத்தை நமது திருஞானசம்பந்தர் மிக அழகாக எடுத்து அருளியுள்ளார்கள்.

" தகர மணியருவித் தடமால் வரைசிலையா
நகர மொருமூன்றும் நலங்குன்ற வென்றுகந்தாள்
அகர முதலானை அணியாப்ப னூரானைப்
பகரும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே "

(திருஆப்பனூர், பண் குறிஞ்சி பாட்டு 5.)

" மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் என்னும் எழுத்ததிகாரச் சூத்திர விளக்கவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'மெய்க்கண் அகரங் கலந்து நிற்குமாறு போல உயிர்க்கண்ணும் அகரங் கலந்து நிற்கும்' என்ற கருத்தை நமது சம்பந்தர் "உரை சேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேதம், நிரை சேரப் படைத்தவற்றின் உயிர்க் குயிராய் அங்கங்கே நின்றான்' என்று அருளியுள்ளார்கள். (திருவீழிமிழலை-பண்-மேகராகக்குறிஞ்சி பாட்டு-4.) இத் திருமுறைகளின் கருத்தையே "அகரவுயிர் போல் அறிவாகி யெங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" என்று நமது ஞான சாத்திர நூலாகிய திருவருட்பயனும் விளக்கி நிற்கும். நமது சுந்தரரும் " அகரம் முதலின்எழுத்தாகி நின்றாய் " எழுத்துக்களுக் கெல்லாம் அகரமாகிய முதல் எழுத்துப் போன்று, பொருள்களுக்கெல்லாம் முதற்பொருளாய் நிற்பவனே' என்றருளி யுள்ளார்கள். கண்ணன் கீதையில் " அக்ஷராணும்அகாரவத் " எழுத்துக்களில் அகரம் போல எல்லாவுயிர்களிடத்தும் கலந்து நிற்கின்றேன் என்று கூறியுள்ளார்.

" மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் " (குறள் 3)

மலரின்கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார் எல்லா வுலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்.

அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் ஏகினானென இறந்த காலத்தாற் கூறினார் என்றார் பரிமேலழகர்.

இக்குறள் கருத்தை ஞானசம்பந்தரும் "அகனமர்ந்தவன்பினராய் அறுபகை செற்று ஐம்புலனும் அடக்கி ஞானம் புகலுடையோர் தம் முள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும் புராணர் " என்றருளியுள்ளார்கள். உள்ளப்புண்டரிகம் - இதயத்தாமரை ( திருவீழிமிழலை - பண் மேகராகக் குறிஞ்சி - பாட்டு-6).

இக்கருத்தையே நமது திருநாவுக்கரசரும் " அள்ளலைக் கடக்க வேண்டில் அரனையே நினைமினீர்கள், பொள்ளலிக் காயந்தன்னுள் புண்டரீகத் திருந்த வள்ளலை " என்றருளியுள்ளார்கள். " உள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும் புராணர் என்பதும், காயந் தன்னுள் புண்டரீகத்திருந்த வள்ளல் என்பதும் அறியத்தக்கது.

" இருள்சேர் இருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு " (குறள் 5)

மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை என்னும் இரண்டுவினையும் உளவாகா. இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினாரிடத்து.

இறைமைக் குணங்கள் இலராயினாரை உடையவராகக்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின் அவை முற்றவுமுடைய இறைவன் புகழே பொருள் சேர் புகழ் எனப்பட்டது. புரிதல் - ஏப்பொழுதுஞ் சொல்லுதல், (பரிமேலழகர் உரை)

இக்கருத்தையே நமது அப்பர் பெருமான் " பொய்யஞ்சி வாய்மை கண்டு இப் புகழ்புரிந்தார்க்கருள் செய்யும் " என்று அருளியுள்ளார்கள். ( திருவாரூர், பண் – காந்தாரம் - பாட்டு 10.)

" பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். " (குறள் 6)

மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது



மெய்கண்டார்



ஸ்ரீ செந்திலாண்டவர் சூரசம்ஹாரத்துக்குப் புறப்பாடும் வழிபாடும்



கயிலாயம் மேற்கு முகம் சிவலிங்கப் பிரதிஷ்டை



நேபாலம் பசுபதிநாதம்



மாயூரம் தருமபுர ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக சுவாமிகள் மருத்துவமனை திறப்பு விழா.



மாயூரம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள் மருத்துவமனைக் கட்டிடம்



தருமையில் திருவாவடுதுறை ஆதீனம் 20-வது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கு வரவேற்பு.



ஸ்ரீ சிவானந்தாவுக்கு வரவேற்பு.



ஆதீனம் மடாலய முகப்பு

மெய்கண்டான் மகாநாடு



திருமுறை ஊர்வலம்



திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார் பிறப்பின்றி எக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்வார்.

ஐம்புல வேடர்கள் செய்யும் துன்பங்கள் :-

" புள்ளுவ ரைவர்கள்வர் புனத்திடைப் புகுந்துநின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளையவொட்டார்
முள்ளுடை யவர்கடம்மை முக்கணன் பாதநீழல்
உள்ளிடை மறைந்துநின்றங் குணர்வினா லெய்யலாமே "

ஐம்புல வேடரும் நம்மைச் சாராதிருக்குமாறு மறைந்து நிற்க முக்கணன் திருவடிநிழல் உண்டு. நாம் காணாமல் மறைந்து நின்று நம்மை அவர் அம்பால் எய்யுமாறு போல, நாமும் முக்கணன் பாத நீழலுள்ளிடை மறைந்து நின்று அவரை சிவஞானத் தால் எய்து வெல்லலாம். (பொது தனி நேரிசை பாட்டு - 5,)

" அஞ்சினா லியற்றப்பட்ட வாக்கைபெற் றதனுள்வாழும்
அஞ்சினா லடர்க்கப்பட்டிங் குழிதரு மாதனேனை
அஞ்சினை யுய்க்கும்வண்ணங் காட்டினாய்க் கச்சந்தீர்ந்தேன்
அஞ்சினாற் பொலிந்தசென்னி யதிகைவீ ரட்டனீரே "

(திருவதிகை நேரிசை பாட்டு 5.)

பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டது யாக்கை. அவ் வுடலுள் நின்று ஐம்பொறிகள் துன்பப்படுத்து கின்றன என்றார் நம் அப்பர்.

" பொறி வாயிலிவ் வைந்தினையும் அவியப்
பொருது உன்னடியே புகுஞ்சூழல் சொல்லே "

பொறி யெனப்படுகின்ற அவாவின்வாயில்களாகிய இவ்வைந்தனையும் அடங்குமாறு வென்று உன் திரு வடிக் கண்ணே புகுதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள் ( சுந்தரர் திருநெல்வாயில் அரத்துறை இந்தளம் பாட்டு 2.) பொறிவாயில் இவ்வைந்தனை யும் அடக்கிப் பொருது என்னாது, "அவிய" என் றருளியமை நினைந்து இன்புறுதற் குரியது,

" பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார் " (குறள் 10)

இறைவனடி யென்னும் புணையைச் சேர்ந்தார் பிறவி யாகிய பெரிய கடலை நீந்துவர். சேராதார் நீந்த மாட்டாராய் அதனுள் அழுந்துவர்.

நமது சுந்தரமூர்த்தி சுவாமிகளும்

" அற்றார்பிற விக்கடல் நீந்தியேறி
அடியேனுய்யப் போவதோர்சூழல் சொல்லே "

என்றருளியுள்ளார்கள்.

அடியேன் இறப்புப் பொருந்திய பிறவிக்கடலைக் கடந்து கரையேறிப் பிழைத்துப் போதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள். ஒருபுடை ஒற்றுமைநோக் குக. ( சுந்தரர் - திரு - அரத்துறை - பண் - இந்தளம் - பாட்டு - 3. )

" உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு " (குறள் 339)

ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோ டொக்கும். அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழித் தல் வருதலோடொக்கும் என்னும் திருக்குறள் கருத்தினை,

" ஓடு புனற் கரையாம் இளமை
உறங்கி விழித்தால் ஒக்கும்இப்பிறவி "

என்னும் திருப்பாடலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் விளக்கியருளுகின்றார்கள்.

இப்பிறப்பு உறங்கியபின் விழித்தாற் போல்வது. இதன்கண் உள்ள இளமையோ, ஓடுகின்ற நீரின் கரையை ஒக்கும். ஆதலின் என் செய்வதென்று மெலிவுற்று நின்று வருந்தாது அடியேன் இப்பிறவி யில் இருந்து பிழைக்க வழியருள் என்று எண்ணு கின்றார்கள். ஓடுபுனற்கரை - ஆற்றின்கரை. அது நிலையாது அழிதல் திண்ணமாகலின் யாக்கை நிலை யாமைக்கு அது உவமை ஆயிற்று. (திரு-அரத்துறை- பண் – இந்தளம் - பாட்டு - 4).

" நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யென்னும்
பெருமையுடைத் திவ்வுலகு " ( குறள் 336 )

ஒருவன் நெருநல் உளனாயினான் அவனே இன்று இல்லையாயினானென்று சொல்லும் நிலையாமை மிகுதி யுடைத்திவ்வுலகம்.

இக்கருத்தையே மேலும் விளக்கியருள்பவர்களா கிய நமது அப்பர் பெருமான் இன்றைக்கிருக் கின்றேன், நாளை இல்லாதவனாகப் போகின்றேன் என்று அருளியுள்ளார்கள். " இன்றுளேன் நாளை யில்லேன் என்செய்வான் தோன்றினேனே " என்றும் (பொதுநேரிசை-பாட்டு-1.) பின்னும் இக்கருத்தையே குறுந்தொகையிலும்,

" இன்றுளார் நாளையில்லை யெனும் பொருள்
ஒன்றும் ஓராதுழிதரும் ஊமர்காள் "

ஊமர்களே! இன்றைக்கிருப்பார் நாளைக்கில்லை யெனும் பொருள் ஒன்றும் உணராது திரிகின்றீர் களே என்றும் வருந்துகின்றார்கள்.

" இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள " (குறள் 223)

யான் வறியனென்று சொல்லும் இளிவரவைத் தான் பிறர்கட சொல்லாமையும், அதனைத் தன்கட் சொன்னார்க்கு மாற்றாதீதலும் இரண்டும் உளவாவன குடிப் பிறந்தான் கண்ணே.

" ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் " (குறள் 228)

தம்முடைய பொருளை ஈயாது வைத்துப் பின்னிழந்தது போலும் அருளிலாதார், வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர் உவத்தலால் அருளுடையார் எய்தும் இன்பத்தினைக் கண்டறியார் கொல்லோ ! இக்குறட் கருத்துக்களைச் சம்பந்தர்,

" இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லையென்னாது ஈந்துவக்கும்
தன்மையார் "

என்றருளுகின்றார்கள் யாசிப்பவர்களுக்கு இல்லையென்னாது கொடுத்து மகிழ்கின்ற தன்மையுடையவர்கள் வாழ்கின்ற ஆக்கூர் என்பது கருத்து. ( திருவாக்கூர் - பண் - சீகாமரம் - பாட்டு - 4. )

உலகியலில் தனவந்தர்களிற் சிலர் அவர்கள்பால் பொருள்வேண்டி வருபவர்களுக்கு நல்லகாலம் பார்த்து வரும்படிக் கூறுவதியல்பு. கொடுக்கின்றவர்கள் எப்பொழுதும் கொடுக்கலாம். அதற்குக் காலம் வேண்டியதில்லை யென்பது நமது சம்பந்தர் திருவுள்ளம்.

" இரந்தோர்க்கு எந்நாளும் காலம் பகராதார்
காழிந் நகர் தானே "

என்று அருளியுள்ளார்கள்.

" வஞ்சமனத் தான்படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும் " (குறள் 271)

வஞ்சம் பொருந்திய மனத்தையுடையவனது மறைந்த ஒழுக்கத்தை உடம்பாய் அவனொடு கலந்து நிற்கின்ற பூதங்கள் ஐந்தும் கண்டு தம்முள் நகும். என்ற இக்குறட்பொருள் " கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக்கழித்துப் போக்கித் தெள்ளியேனாகிநின்று தேடினேன் ; நாடிக்கண்டேன். உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்தறிதியென்று வெள்கினேன் ; வெள்கிநானும் விலாவிறச் சிரித்திட்டேனே " என்ற அப்ப மூர்த்திகளின் திருப்பாடலால் தெளிவுபடுதலறிக. கள்ள உள்ளமுடையான் கள்ளத்தொண்டைச் செய்து வீணேகாலத்தைப்போக்கிச் சிறிதுதெளிவுடையனாகித் தேடினேன் ; ஆராய்ந்து கண்டேன் என்னவெனில் நினைக்கின்றவர்கள் நினைப்பதெல்லாம் நீயும் உடனிருந்து அறிகின்றாய் என்று அறிந்தேன். அதனால் ஞானம் அடைந்தேன். அதுகாரணமாகச் சிரிப்பு வந்தது. விலா எலும்பு இற்றுவிழச் சிரித்திட்டேன் என்று அருளியுள்ளார்கள். ( பொது-நேரிசை-பாட்டு - 3. ) நமது அருளாசிரியன்மார்களாகிய திருமுறையாசிரியர்கள் திருவள்ளுவரது கருத்துக்களைத் திருமுறைகளில் பல இடங்களிலும் எடுத்து நன்கு விளககுகின்றார்கள். திருக்குறளையும் திருமுறை விளக்கங்களையும் பயின்று ஆய்வார்க்கு அவைகழி பேரின்பந்தருவனவாம். விரிவஞ்சியே சில எடுத்துககாட்டுகளுடன் அமைந்தேன்.

## ஒருமுழமுள்ளகுட்டம்

ஒருமுழம் உயரமும், அரைமுழ அகலமும் உள்ளதொரு குளம். குளமோ ஒன்பது துளைகளை உடையதாயுள்ளது. இக்குளத்தில் வாழும் முதலைகள் ஐந்து. இதற்குள் அகப்பட்டவர் கதி யாது ? உடம்புதான் அக்குளம். ஐம்பொறிகளே முதலைகள். அக்குளத்தில் அகபபட்டது உயிர். உய்யும் வழி ஒன்றே என எண்ணி இறைவனையே சிந்திக்கின்றது.

" ஒருமுழ முள்ளகுட்டம் ஒன்பது துளையுடைத்தாய்
அரைமுழம் அதனகலம் அதனில்வாழ் முதலைஐந்து
பெருமுழை வாய்தல்பற்றிக் கிடந்துநான் பிதற்றுகின்றேன்
கருமுகில் தவழும்மாடக் கச்சியே கம்பனீரே. "

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

# என்றும் இருக்க

திரு. R. கந்தசாமி மூப்பனூர் B. A., B. L.,

இற்றைக்கு ஆயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நம் தமிழகத்தில் பெரும் புரட்சிகரமான மத மாறுதல்கள் தோன்றின. சைவ சமயம் குன்றிச் சமணமும், பௌத்தமும் தலைசிறந்தோங்கிற்று. அரசர்களும் அந்நெறியைப் பரப்பி வந்தார்கள். அப்போது வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்கத் திருஞானசம்பந்தர் அவதரித்தார். திருத்தொண்டின் நெறிவாழத் திருநாவுக்கரசரும் தோன்றினர். ஆண்டவன் அருளுடன் தோன்றிய அவர்கள் பல அற்புதங்களை நிகழ்த்தியும், தல யாத்திரை செய்தும் ஆங்காங்கே திருக்கோவில்களில் வழிபாடு நிகழ்த்தியும், புறச்சமயிகளுடன் வாதுகள் நிகழ்த்தியும் மக்களிடையே சைவத்தின் அருமை பெருமைகளையும் புகட்டி, இன்னல்களைப் பொருட்படுத்தாமல், தங்கள் கொள்கைகளையும் வெற்றிகரமாகப் பரப்பிச் சைவத்தை மலரச செய்தார்கள்.

அதற்கேற்பச் சாத்திரங்களும் சேர்ந்து அப்பணியைஅழகுபடுத்தின. பிறகு சமணமும், பௌத்தமும் அதிகம் பரவ இயலாதுபோயின. ஆயினும் நம் நாடு பிறருடைய ஆட்சியின் கீழ் இருக்க நேர்ந்தபோது, சைவத்திற்கு அதிக ஆக்கமில்லாது போயிற்று. ஏதோ ஒருவாறாக இருந்து வந்தது. சைவத்தின் பெருமையும் விளங்கித் தோன்றவில்லை. சமீபத்தில் பலர் நாத்திகத்தில் பற்றுள்ளவர்களாகத் தெய்வம் இல்லையென்றும், புராண இதிகாசங்கள் புரட்டென்றும், அவைகள் அழிக்கப்பட வேண்டுமென்றும், கோவில்களில் தெய்வம் இல்லையென்றும், அவை சூழ்ச்சிக்காரர்களின் செயல் என்றும், கோயில்களைக் கண்காட்சிச் சாலையாகவும், பள்ளிக்கூடங்களாகவும் குடியிருக்க வசதியற்றோர்களுக்குப் பயன்படும் இடங்களாகவும் கொடுக்கத்தக்கன வென்றும், பிரசாரம் செய்தும், ஆன்றோர்களால் செய்யப்பட்ட புராண புத்தகங்களைத் தீயிட்டும், தெய்வ உருவங்களை உடைத்தும், மக்களின் மனத்தைத் திருப்பி புலன்களின் வழிநின்று சிற்றின்பங்களின் நிலையாமையை மறந்து, அவைகளைக் கண்கண்ட காட்சியாகவும், கைகண்ட பலனாகவும் போதித்து, அப்போதனையில் திளைத்தவர்கள் ஒரு கூட்டமாக இருந்து சமயத்தை அழுத்தி வரும்போது, மதங்களைப் பற்றியும், தெய்வ வழிபாடுகளைப் பற்றியும் எடுத்துக்கூறி ஆத்திகத்தை நிலைநாட்டவேண்டிய பெரியதோர் கடமை மதத்தலைவர்களுக்கு ஏற்படலாயிற்று. தமிழ் நாட்டில் தமிழர் மடங்களிலும் பிராமண மடங்களிலும் இந்த அரிய காரியத்தை நடத்தி வருகிறார்கள்.

அப்படி செய்துவருவதில் உள்ள கஷ்ட நஷ்டங்கள் வெளியில் யாவர்க்கும் எளிதில் தோன்றாது. ஏனெனில் நம் மதம் (இந்து மதம் என்று சொல்லப்படுகிற ) பெரிய சமயக் கோட்பாடுடைய மதம், பிற மதம் போன்று ஒரு தனித் தலைவர், ஒரு கட்டுப்பாடு, ஆதிக்கம் என்பது இல்லை. சமயத்தைச் சார்ந்தவர்களும் கட்டுபாட்டுக்கு நடக்க வேண்டிய அவசியம் இல்லை உதாரணமாக கிறிஸ்துவ மதத்திற்குத் தனித் தலைவரும், ஒரு கட்டுப்பாடும் இருந்து வருகிறது. அவர்கள் 'கடவுள் ஒருவரே' வேதம் பைபிள என்றும்; ஞாயிற்றுக்கிழமைகள்தோறும் அவசியம் கோயிலுக்குச் சென்று வழிபடவேண்டும் என்றும் கூறுகின்றனர்.

மகமதிய மதத்திலும் ஒரு தனித் தலைவர் உள்ளார். குரான் என்பது அவர்கள் வேதப்புத்தகம். தினம் ஐந்து வேளை ஆண்டவனைத் தொழவேண்டும். ஆண்டவன் ஒருவனே என்று கூறப்படுகிறது. நம் மதத்திலோ பல தலைவர்களும், பல கருத்துக்களும் நிலவி, வணஙகும் துறைகள் பலவென்றும், ஆண்டவன் எங்கும் நிறைந்து இருப்பதனால் அவர்கள் இஷ்டப்படி எதையும் தெய்வம் என்று வணங்கலாம என்றும் அவர் அவர்களின் விருப்பத்திற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது அரிய பெரிய கொள்கை என்றாலும், கட்டுப்பாடு இல்லாததினால் நம் மதத்தில் பல குழப்பங்கள் ஏற்பட்டு இஷ்டம் போல் நடந்து வருவதில் பிறர் மத போதனைகளும், நாஸதீகக் கொள்கைகளும் புகுந்து சீர்கேடாக்கும்

நிலைமையில் சமயத்தைக் காக்கும் நிலைமை மடாதிபதிகளுக்கு அதிக சிரமத்தைக் கொடுக்கிறது அதை நீக்க **அ**வர்கள் பல்வகையாலும் முயன்று வருவதில் நமது தருமையாதீனத் தனித்தலைவர் கயிலையை நேரில கண்டு தரிசித்து உயர்வு பெற்ற குருமகா சந்நிதானம் ஞானசம்பந்தம் மூலமாக சாஸ்திரங்களையும், தோத்திரங்களையும், இலக்கிய இலக்கணங்களையும், ஜோதிடம் முதலிய சாஸ்திரக் கருத்துக்களையும், தம் ஆசி மொழிகளையும், அதில அநேக ஞான மொழிகளையும், கருத்துக்களையும் எடுத்து விளக்கி, கடுத்தின்ஞதானை கட்டி பூசிக் கடுத்தீற்றிய வாறு போலவும் தமது அன்புடன் கலந்த கருணையையும் செலுத்தி மக்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் மாதாந்திரம் வெளியீடு செய்து நல்வழி காட்டி வருவதற்கு மக்கள் பொதுவாகவும் சைவப் பண்பாடு உடையவர்கள் முக்கியமாகவும், அவர்களை வணங்கி வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளார்கள்.

"குரு" என்பதின் பொருள் அஞ்ஞானத்தை நீக்குகிறவர் என்பதற்கு ஏற்ப குருமகாசந்நிதானம் ஆசியுரை முழுவதும் மக்களின் அஞ்ஞானத்தைப் போக்கி, ஞானத்தை ஊட்டுவிக்கத் தக்க சக்தி உடையதாய் இருந்து வருகிறது. அவர்கள் செய்துவரும் அறச்செயல்களையும், ஆலயங்களின் திருப்பணிகளையும், வழிபாடுகளையும், இன்னபல சமயத்தொண்டுகளையும் ஞானசம்பந்தம் வெளியிட்டு மக்களுக்கு அதன் பால் அன்பை உண்டாக்கிவருகிறது. இம்மாதாந்திர வெளியீடு தோன்றி, இன்றைக்கு இருபத்துநான்கு ஆண்டுகள் நிறைவுற்று, மேலும், தொடர்ந்து அதிக சிறப்புடன் என்றும் நிலைத்திருக்க ஆண்டவன் திருவீருள் - அன்று காஞ்சி - உலகநாயகியாகிய காமாட்சி அண்ட நாயகர் முன் நின் பூசனை குறை நிரம்பிட கொள்க என, நின் பூசனை என்றும் முடிவதில்லை என்று அருள் புரிந்தது போன்று இனி வழி வழி தோன்றும் மக்களுக்கும் ஞான போதனை அவசியம் ஆனபடியால் நமது ஞானசம்பந்தம் என்றும் நிலைத்து இருக்க குருமகாசந்நிதானத்தின் **அருள்** ஆசி பெற்றுளதால் - அது, இன்றே போல் என்றும் வாழ்வதாக.

## கலைமகள் துதி

திருமுறை இன்னிசைவாணர், திரு. க. சோக்கலிங்கம்



இராகம் - கேதாரம் ] [ தாளம் - ஆதி

### பல்லவி

*தாமரைச் செல்வியே தயைபுரி வாயே(வெண்)*
*சந்தத்மும் உந்தன் தாள்மறவேன் தாயே (தாமரைச்)*

### அனுபல்லவி

*நாமகளே எந்தன் நாவினிலே வந்து*
*நாடுங்கலை யெலாம் கூடும்படிச் செய்வாய் (தாமரைச்)*

### சரணம்

*கலைவடி வாகிய கன்னிகையே ஞானக்*
*கற்பகமே தமிழ்ப் பொற் கொடியே*
*தலைமகளே வெற்றி தருபவளே புகழ்*
*தங்கும் மங்களத் தனிவடிவே தண் (தாமரைச்)*

*சிரம்நான் குடையவன் சிந்தை மகிழும்*
*செல்வியே அன்பொடு கல்வியே நல்கிடும்*
*சரஸ்வதி தேவியே தவமணியே நீயே*
*தாங்குவாய் அன்பொடு த்மியேன் எனையே. (தாம்ரைச்)*

# வேத ஆகம உபநிடதங்கள்

சிவாகம வித்துவான்

**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

வேத சிவாகமங்கள் வேதோபப்ரும்மணமான உபநிடதங்கள், இஹபர சுகங்களை விரும்புகிறவனுக்குச் சிவனை உபாசிக்குமாறு விதிக்கின்றன.

சிவம் ஞானனந்த ஸ்வரூபியாதலின் ஆன்மா அதனை வழிபடுதலால் அச்சிவம் அருட்பிழம்பாகலின் வணங்கியவர்க்கு அருள்புரியும் தன்மையுடையதாகும்.

ஆன்மா பளிங்குபோன்று எதையெதைச் சார்ந்ததோ அதனதன் குணத்தைத் தன்குணமாகக்கொள்ளும் இயல்பினது. அதனுல் அநாதியே தன்னேடு இயைந்துள்ள மல மாயா கன்மங்களின் தன்மைகளைத் தன்தன்மையாகக் கொண்டு இடர்ப்படுகின்றது. ஆணவமலக் குணத்தைத் தன் குணமாகக் கொண்டதனுல் யான் எனது என்னும் அஹம்பாவமும், மாயையின் குணத்தைத் தன் குணமாகக் கொண்டதனுல், சுக துக்க மோஹங்களும், கன்மத்தின் குணத்தைத் தன்குணமாகக் கொண்டதால் எண்ணரிய பிறவிகளும் உண்டாயின. ஆன்மா ஞான ஸ்வரூபியாக இருந்தும் தன்னதல்லாத பிற குணங்களைத் தன்னதாகக் கொள்ளுதற்கு ஏதுவாயிருந்தது சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடைமையேயாம். அதனுல் அவ்வுபாதியினின்றும் நீங்கவேண்டின் மலமாயா கர்மங்களின் சேர்க்கையை விடவேண்டும்.

இவ்வாறு உள்ள பந்த நிலையினின்று விடுதலை பெற சிவோபாஸனை விதிக்கப்பட்டிருக்கிறது.

தானே எல்லாம் உணர்ந்து உணர்த்திவரும் முதற்பொருளாய், அண்டத்தினும் பிண்டத்தினும் காணப்படும் உயிர்ப்புக்கெல்லாம் அடிநிலையாய். அருவாய், உணர்வாய், ஸதஸத்தாய் உள்ளது சிவம்,

இந்தச் சிவத்தின் ஸ்வரூபத்தை உணர்ந்து வழிபட்டு இஷ்டசித்திகளைப் பெறும் விதிமுறைகளைக் கூறுவது வேதாகமங்களும் வேதோபப்ரும்மணமான உபநிடதங்களும் ஆகும். வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் கர்த்தா ஒருவனே. அவன் சிவபெருமான்.

'தொகுத்தவ னருமறை அங்கம் ஆகமம் வகுத்தனன்' என்பது திருஞானசம்பந்தருடையதிருவாக்கு.

**वेदांश्च धर्मशास्त्राणि पुराणं भारतं तथा ।**
**वेदांगान्युपवेदांश्च कामिकाद्यागमानपि ॥**

... ... ... ... எனத் தொடங்கி

**निर्ममे शंकरस्साक्षात्**

— சூதசம்ஹிதை.

வேதங்கள், தாமசாஸ்திரங்கள், புராணம், பாரதம், வேதாங்கங்கள் உபவேதங்கள் காமிகம் முதலிய ஆகமங்கள் யாவையும் சாக்ஷாத் சங்கரன் செய்தார் என்று சூதசம்ஹிதை கூறுகிறது.

ஆகவே, வேதம் ஆகமம் இரண்டிற்கும் கர்த்தா ஒருவன் எனப்படுகிறது. ஊர்த்துவமுகமான ஈசான முகத்தினின்றும் காமிகம் முதலிய சிவாகமங்கள் தோன்றியதால் இதற்கு பரசுருதி என்றும், தத்புருஷம் முதலிய நான்கு முகங்களினின்றும் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்கள் தோன்றினமையால் இதற்கு அபரசுருதி என்றும் கொள்ளப்படும்.

வேதம் பசுவும், சிவாகமம் அதன் பாலும், வேதம் கனியும் சிவாகமம் அதன் சாறும், வேதம் உடலும் சிவாகமம் அதன் உயிரும், வேதம் ஒரு நதிக்குச் செல்லும் வழியும் சிவாகமம் அந்நதியிற் சென்று படியுந் துறையுமாயிருத்தலால் வேதவழியில் நின்று ஆகம ஞானத்தைக் கைகொண்டவர்களுக்குப் பரமேச்வரன் விரைவில் பேரருள் புரிவானென்பது இதனல் தெளிவிக்கப்பெறுகிறது. வேதம் பொருள் பலபடத்

தோன்றும் சூத்திரமும் சிவாகமம் அதனையவ்வாருக்க வொட்டாத பாஷ்யமாயிருத்தலாலும், வேதத்தினது ஞானபாகத்தில் சித்தாந்தமுடிபு அற்பமும், சிவாகமத்தின் ஞானபாதத்தில் சித்தாந்த முடிவு அதிகமுமாய் விளங்குவதாலும் சிவாகம ஞானமே சிவப்பிரஸாத மடைவதற்கு இன்றியமையாது வேண்டப்படும். இதை "தாயுமானவர் ஆரணமார்க்கத்தாகமவாசி யற்புதமாய் நடந்தருளும்" என்று கூறினர். ஆகவே வேதாந்த சித்தாந்தமாகிய முடிவையே ஆகமம் விரித்துரைக்கின்றது.

"த்ரயீ" என்று ஸ்மிருதி முதலியவைகளில் கூறப்படும் வேதமானது ருக், யஜுர், சாமம் என்று மூன்றுவிதமாகப் பிரிந்து விளங்கும். இம் மூன்றனுள் நடுவேயுள்ளது யஜுர் வேதம். இந்த யஜுர்வேதம் நூற்றொரு சாகைகளாக விரிந்துகிடக்கின்றது. இவற்றின் நடுச்சாகை ஐம்பத்தோராவது சாகையாகிய ஸ்ரீ போதாயன சாகை. இந்தச் சாகை ஏழு காண்டங்களாக அமைந்துள்ளது. இதன் மத்தியிலுள்ள காண்டமே நாலாவது காண்டமாகிய சதருத்ரீயம், இதன் நடுவிலுள்ளது ஐந்தாவது பிரச்னம், அதில் "**नमस्सोमाय च रुद्राय च**" (நம: ஸோமாய சருத்ராய ச) என்னும் அனுவாகத்தின் இருதயத்தில், "**नमश्शिवाय च**" (நம: சிவாய ச) என்னும் பஞ்சாக்ஷர மந்திரம் பிரகாசிக்கின்றது. இதனாலே இச் சிவ மந்திரம் சகல வேத ஜீவரத்னமாயும், பரமபாவன கரமாயும், அதிரஹஸ்யமாயும், சர்வவேதாந்தசார மாயுமுள்ளதோர் மந்திரமாகும்.

இதனை, சிவஞானப் பாலையுண்டருளிய ஸ்ரீ ஞான சம்பந்தப்பெருமானார் "வேத நான்கினு மெய்ப்பொருளாவது - நாதனும நமச்சிவாயவே" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பஞ்சாக்ஷர வாச்சியப் பொருளான பரமேச்வரன் பஞ்சாக்ஷர நடுவிலுள்ள 'சி' என்ற சிவபீஜத்தை முகத்திலேற்று வகாரமாகிய அமிருத வாருணபீஜத்தைத் தம்மைப் பின்பற்றப்பெற்று அகில வேதரகசியமாயும் அவற்றிற்கு ஜீவரத்னமாயும் நின்று "சிவ:" என்னும் நாமத்தால் பிரகாசிக்கின்றான்.

ருக்வேதம் இருபத்தொரு சாகைகளிலும், யஜுர் வேதம் நூற்றொரு சாகைகளிலும், சாமவேதம் ஆயிரம் சாகைகளிலும், அதர்வணவேதம் ஒன்பது சாகைகளிலும் இந்தச் சிவ என்ற சொல்லானது பேரணியாய் நின்று துரீயஸ்தானத்தை விளக்குதலானும் பரப்பிரமத்திற்கு இடுகுறிப் பெயராய் நிற்றலானும், மாண்டூக்யோபநிடதம், நரசிம்மதாப நியோப நிடதம் முதலிய எல்லா உபநிடதங்களும் இதனை அளவிலாது புகழ்கின்றன.

நூல்களெல்லாவற்றிலும் வேதஞ் சிறந்தது. அதனிடத்திலுள்ள ஸ்ரீ பஞ்சாக்ஷரியும் அதனுள் சிவ என்னும் இரண்டக்ஷரமே சிறந்தது. ஆகவே வேத புருஷனுக்கு உருத்திரைகாதசனி கண்ணும், பஞ்சாக்ஷரம் கண்மணியும் சிவசப்தம் கட்பார்வையுமாக இருக்கின்றன.

தேகத்தின் மத்தியிலுள்ள ஹிருதயத்தில் ஆன்மா அணுரூபமாயிருந்து தேஹ முழுமையுமியக்குமாறு போல் வேதத்தின் நடுவில் சிவசப்தம் இருந்து கொண்டு வேத முழுமையுஞ் சிவ மணங்கமழச் செய்கின்றது. இக்காரணம் பற்றியே வேத வித்துக்கள் யாவரும், பதினன்கு வித்தைகளின் சாரமாயுள்ளதும், பாவங்களை எல்லாம் நசிக்கச் செய்வதும், பரம்பிரும்ம வாசகமாயிருப்பதும் சிவநாமமே என்று நுண்ணறிவு கொண்டு கூறியுள்ளார்கள்.

திருமூலரும்,

"சிவசிவ வென்கிலர் தீவினையாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவருமாவர்
சிவசிவ வென்றிடச் சிவ கதியாமே"

என்றும்,

அப்பய தீக்ஷிதரும்.

"**शिवनामनि भाविते ऽन्तरंगे महतिज्योतिषि**
**मानिनी मयार्धे ।**
**दुरितान्यपयांति दूरदूरे मुहुरायांति**
**महांति मङ्गलानि ।**"

**சிவனுமநி பாவிதேந்தரங்கே மஹதிஜ்யோதிஷி**
**மாநிநீ மயார்த்தே,**
**துரிதான்யபயாந்தி தூரதூரே முஹுராயாந்தி**
**மஹாந்தி மங்களாநி.**

என்றும் கூறியுள்ளார்கள்.

மகத்தான ஒளிப்பிழம்பாயும், தேவியைப் பாதியில் உடையதாயுமுள்ள சிவநாமமானது நினைக்கப்பட்ட பொழுது தீமைகள் வெகுதூரத்திற்கு ஓடும், மங்களங்கள் அடிக்கடி வந்து சேரும். எனவே இவ்விரண்டு அக்ஷரத்தை உச்சரிப்பவர்கள் மங்களத்தையடைகிறார்கள்.

பஞ்சாக்ஷரத்திற்குப் பொருள் கூறும் ஆகம வாக்கியம் 'சி' என்பது சிவன். 'வா' என்பது சத்தி. 'ய' என்பது ஆத்மா. 'ம' என்பது மலம் முதலானது. 'ந' என்பது மல நிவாரகம் என்று கூறினமையால், பஞ்சாக்ஷரத்தை உச்சரிப்பவர்கள்

ஆணவம் முதலிய மல நீக்கம்பெற்று அம்மையப்பரின் சாலோகாதிபதவியை யடைகிருர்கள் என்பது காணப் படுவதால் 'சிவ' என்ற சொல் சத்தியுடன் கூடிய சிவத்தைக் குறிக்கிறது.

இந்தப் பஞ்சாக்ஷரத்தையும் அதன் பேதங்களையும் சிவாகமம் விளக்கிக் கூறுகிறது. அஃது, தாரபஞ்சாக்ஷரம்; ப்ராஸாத பஞ்சாக்ஷரம், மிச்ரபஞ்சாக்ஷரம். ஸ்தூல பஞ்சாக்ஷரம், ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரம், சுத்த பஞ்சாக்ஷரம் என்று அறுவகைப்படும். அஃதெவ்வாறெனில் "ஓம் நமச்சிவாய" என்பது தாரபஞ்சாக்ஷரம். ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம: என்பது ப்ராஸாத பஞ்சாக்ஷரம். நமச்சிவாய சிவாயநம: என்பது மிச்ர பஞ்சாக்ஷரம். நமச்சிவாய என்பது ஸ்தூல பஞ்சாக்ஷரம். சிவாய நம: என்பது சூக்கும பஞ்சாக்ஷரம். சிவாய என்பது சுத்த பஞ்சாக்ஷரம் என்று கூறி இந்த பஞ்சாக்ஷரங்களை குருமுகமாக உபதேசம் பெற்று சிவத்தியானத்துடன் ஜபம் செய்பவர்கள் தேவர்கோவறியாத தேவதேவனின் ஸ்வரூப சாக்ஷாத்காரத்தைப் பெறலாம்.

ப்ரும்மோபநிஷத்தில் :-

पञ्चाक्षरमयं शंभुं परब्रह्मस्वरूपिणम् ।
नकारादि यकारान्तं ज्ञात्वा पञ्चाक्षरं जपेत् ॥

**பஞ்சாக்ஷரமயம் சம்பும் பரப்ரும்ம ஸ்வரூபிணம்**
**நகாராதியகா ராந்தம் ஜ்ஞாத்வா பஞ்சாக்ஷரம் ஜபேத்,**

பஞ்சாக்ஷர மயனை பரம்ரும்மஸ்ரூபியான சம்புவை நகாரம் முதல் யகாரம் வரையிலுள்ளதாக தியானித்து ஜபம்செய்யவேண்டும் என்று வேதோபப் பிரும்மணமான ப்ரும்மோப நிஷத்து ஸ்தூல பஞ்சாக்ஷரத்தைக் கூறியது. திருநாவுக்கரசு அடிகளாரும்,

" கருவாய்க் கிடந்துன் கழலே
நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்
பயின்றே னுனதருளால்
திருவாய் பொலிய சிவாயநம
வென்றுநீ றணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்
புலியூர் அரனே "

திருப்பாதிரிப்புலியூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றவனே! கருப்பையிற் கிடந்து உன்னுடைய திருவடிகளையே சிந்தித்துக்கொண்டிருந் தவனுகிய நான் ; உனது பேரருட்டிறத்தினுல், உனது திருநாமமாகிய அஞ்செழுத்தை ஓதிப்பழகினேன் ; உனது பேரருட்டிறத்தால் மலத்துவம் நீங்கி சிவத்துவ விளக்கம் அடைவதற்காக, சிவாய நம என்ற சூக்ஷ்ம பஞ்சாக்ஷரத்தை நினைத்து ஓதி திருநீறணிந்து உன்னுடைய திருவடிகளை வணங்கினேன்; இவ்வாறு நான் செய்ததனுலுண்டான பயனுக நீ எனக்குச் சிவஞானத்தைத் தந்தருளுவாய் என்று திருநாவுக்கரசர் சூக்ஷ்ம பஞ்சாக்ஷரத்தைக் கூறியுள்ளார்.

திருநீறணிந்து பஞ்சாக்ஷரத்தை ஓதவேண்டும் என்று வாகீசர் கூறினர். இது பற்றி சுருதி. "பூத்யை நப்ரமதிதவ்யம்" பூதியை அணிவதின்றும் நழுவக் கூடாது என்றது. "ஐச்வர்ய காரணுத்பூதி:" ஐச்வர்யத்துக்குக் காரணமாயிருத்தலால் பூதி எனப் படும் என்று பிருஹ ஜ்ஜாலோபநிடதம் அப்பொருளை விளக்கியது. பூதி : பஸிதம், பஸ்ம, விபூதி, ஐச்வர்யம் என்பவை பஸ்மாவின் பெயர்களாகும்.

त्रिपुण्ड्रकं सदा कुर्यान्मन्त्रपूतेन भस्मना ।
वेदोक्तेन विधानेन शिवसायुज्य माप्नुयात् ॥

வைதிகமுறைப்படி சுத்தமாக எடுக்கப்பட்ட மந்திர பூர்வமான விபூதியினுல் எப்போதும் திரிபுண்டர தாரணம் செய்து கொள்ளுபவன் சிவ ஸாயுஜ்யத்தை யடைகிருன் என்று முன் வேத வாக்கியத்தை யனுசரித்து ஸ்மிருதி கூறுகிறது.

இதை, சிவாகமத்தில் விபூதி எடுக்கவேண்டிய முறைகளும், அதைத் தரித்துக்கொள்ள வேண்டிய முறைகளும், யார் யார் எந்தெந்த அளவில் தரிக்க வேண்டும் என்ற விஷயமும், விளக்கமாகவும் விரிவாகவும் கூறப்பட்டிருக்கிறது.

" கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவநெறி
சிங்காரமான சிவனடி சேர்வீரே "

என்றது திருமூலரின் திருவாக்கு.

வாக் என்பது பற்றியும் வேதத்திலும் ஆகமத்திலும் கூறப்படுவதைக் காணலாம். வேதத்தில் சுருக்கமாகவும் ஆகமத்தில் விளக்கமாகவும் காணப் படுகிறது.

चत्वारिवाक् परिमिता पदानि ।
तानि विदुर्ब्राह्मणा ये मनीषिणः ॥
गुहात्रीणि निहिता नेङ्गयन्ति ।
तुरीयं वाचो मनुष्या वदन्ति ॥

— வேதம்.

அறிவாளிகள் நான்கு வாக்குகள் என்று உணர்ந் தார்கள். அதில் மூன்று வாக்குகள் (சூக்ஷ்மை

பைசந்தி, மத்தியமை) உள்ளேயே இருக்கும். நான்காவதான (வைகரி) வாக்கினால் மக்கள் பேசுகிறார்கள் என்று வேதத்தில் கூறப்படுகிறது. சிவாகமத்தில் இந்த வாக்குகள் மிகவும் விரிவாகக் கூறப்படுகின்றன. இதை பௌஷ்கராகமம்

**शब्दाश्चतुर्विधास्तेऽपि वैखर्यादि विभेदतः ।**
**वैखरी मध्यमाख्या च पश्यन्ती सूक्ष्मसंज्ञिता ॥**

என்று தொடங்கி விஸ்தாரமாகக் கூறியுள்ளது. அதாவது வைகரிவாக்கு - தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்பட்டு நினைத்த பொருளைச் சொல்லுஞ் சொல். சொல்லுபவனுக்கும் கேட்பவனுக்குஞ் சவிகற்பஞான முண்டாவதற்கு ஏதுவானது; அஹங்காரத்தால் செலுத்தப்படும் பிராணன் என்னும் காற்றால் உந்தப்பட்டு எழுந்து புறத்தேயடையும் அக்ஷரங்கள் இவ்வாக்காதற்குமுன் மத்தியமைத் தானத்தில் உதானன் என்னுங் காற்றால் உந்தப்பட்டுச் சூக்கும ரூபமாய்ப் பிரிந்து தோன்றின.

மத்தியமை வாக்கு செவியிற் கேட்கப்படாதது. மெல்லோசையானது, கண்டத்தில் விளங்குதலுள்ளது. அதனால் சொல்லுபவன் தன்னுள் உணருஞ் சவிகற்பக ஞானத்திற்கு ஏதுவாகி உள்ளே உணரப்படும் ஓசையாயிருப்பது. சூக்ஷமரூபமாய் அக்ஷரம் பிரிந்து தோன்றினாலும் பல், இதழ், நா, அண்ணங்களிற்பட்டுச் சிதறிப்போகா. அதற்குக் காரணம் அங்கு உதானவாயுவின் தொழிற்பாடேயன்றிப் பிராணவாயுவின் தொழிற்பாடில்லாமையாகும். இது பைசந்திக்கும் வைகரிக்கும் வேறாய் அறியப்படுவது.

பைசந்திவாக்கு:- ஐந்து நிறங்களையும் சூக்ஷம ரூபமாய் அடைவுபட வொடுக்கிநிற்கும் மயில் முட்டையினீர் போலப் பலவகைப்பட்ட எழுத்துக்கள் பிரிவுபட விளங்கித் தோன்றாநிலையிற் சூக்ஷம ரூபமாகக் கொண்டு சிந்தையில் நிற்கும். நிருவிகற்ப ஞானத்திற்கு ஏதுவாகும். இதுவே அக்ஷரங்கள் பிரிவுபட விளங்கித் தோன்றும் மத்தியமை வாக்காக விருத்தியடைகிறது.

சூக்ஷமை வாக்கு:- பரசரீரத்துள் நாதமாத்திரையாய் விளங்குதலுள்ளது. ஞானத்திற்கு மட்டும் ஏதுவாதலுடையது. இதுவே பைசந்தி, மத்தியமை, வைகரி என விருத்தியடைகிறது. இதன் விருத்திகளாகிய அவை அழியும். இது என்றும் அழிவதில்லை. அழிவின்றிச் சுத்தமாயா ரூபமாய் நிலைபெற்றிருக்கும். தவவிசேடத்தால் இதைக் காணப்பெறுவார்க்கு அந்தச் சுத்த மாயா புவனத்திலுள்ள அபரமுத்திப் பெரும்போகம் உண்டாகும். இந்நான்கு வாக்கும் நிவர்த்தி முதலிய பஞ்சகலைகள் பற்றுக்கோலாகச் சார்ந்து ஐவகைப்பட்டு சிவதத்துவ முதலிய ஐந்து தத்துவங்களிலுமிருக்கும் என்று வேதத்தில் கூறப்பட்டிருக்கும் நான்கு வாக்கையும் சிவாகமம் விஸ்தாரமாகக் கூறியுள்ளது. எனவே வேதாகமம் இரண்டிற்கும் கர்த்தா ஒருவன்; அவன் ஆப்த்தன் எனப்படுவதால் ஆப்த்தவாக்கியம் பிரமாணம். மற்றும்

**आप्तोक्ति रत्र सिद्धांतश्शिवएवाप्तिमान्यतः ।**
**नताभ्यां सदृशः कश्चिच्छ्रेयसोऽस्ति विधायकः ॥**

ஆப்த்தனுடைய வசனம் ஈண்டு சித்தாந்தம், எதனால் எனின் ஆப்த்திமான் சிவன். இவ்விருவருக்கும் ஒத்த தாய்ச் சிரேயஸைக் கொடுப்பதாகிய எப்பொருளுமில்லை, என்னும் வசனத்தால் ஈண்டு வேதத்திற்குரிய உபவர்ணனம் சிவாகமத்திற்கும் பொருந்தும். வேதம் சிவாகமம் இரண்டிற்கும் கர்த்தா ஒருவன் ஆதலால் வேதத்தில் கூறப்பட்ட விஷயங்கள் சிவாகமத்தில் விரிவாகக் கூறப்படுகின்றன. சிவாகமத்தில் காணப்படும் விஷயங்கள் வேதங்களிலும் அதன் உபப் பிரும்மணமான உபநிடதங்களிலும் காணப்படுகின்றன. ஆகவே வேதம், ஆகமம், உபநிடதங்கள், ஒன்று சொல்லும் பொருளை மற்றொன்று அனுவாதம் செய்து சுருக்கமாயும் விரிவாயும் கூறுகின்றன.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.





சுந்தரர்



மாணிக்கவாசகர்



சீகாழி. திருஞானசம்பந்தர்



திருநாவுக்கரசர்


உமாபதிசிவம்


திருக்கடவூர் காலசம்ஹாரமூர்த்தி



அருணந்தி சிவம்



மறைஞானசம்பந்தர்



காஷ்மீரம் கீர்பவானி அம்பிகை வழிபாடு



அமாநாதயாத்திரை சேஷநாக் ஏரி



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களுடன் ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்கள்



ஆதீன மடாலய நூல் நிலைய பழங்கால ஏட்டுச்சுவடிகள்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும்
காமகோடி பீடம் ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்களும்



சென்னை, சமயப் பிரசார நிலையத்தில்
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம்
அவர்களும் முன்னாள் ஜனாதிபதி கனம். பாபுராஜேந்திர
பிரசாத் அவர்களும் சென்னை மாநில ஆளுநர்
கனம். திரு. ஸ்ரீபிரகாசா அவர்களும்



திருநெறிய தெய்வத்தமிழ் மகாநாட்டை
காமகோடி பீடம் ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் தொடங்கி வைத்தல்.
சர். பி. டி. இராஜன் அவர்கள், கனம், T. L. வேங்கடராம சாஸ்திரிகள் (சுப்ரீம் கோர்ட்) நீதிபதி அவர்கள் வழிமொழிதல்



சீன பாரதப் போரின்பொழுது சென்னை மாநில முன்னாள் முதலமைச்சர்
கனம். திரு. கே. காமராஜரவர்கள் 1 லட்சம் ரூபாய் உதவிநிதியாகப் பெற்றுக்கொள்ளுதல்

# மனிதப்பிறவியின் பயன்

வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

தன்னிடத்தில் பிறந்த உயிர்கட்கு முத்தியளிக்கும் தலம் திருவாரூர். தன்னிடத்தே இறந்தவர்கட்கு முத்தியளிக்கும் தலம் காசி என வழங்கும் வாரணாசி. நினைத்தாலே முத்தியளிக்கும் தலம் திருவண்ணாமலை. தரிசித்தால் முத்தியளிக்கும் தலம் சிதம்பரம். இச் சிதம்பரம் பஞ்சபூதத் தலங்களுள் ஆகாயத் தலமாகத் திகழ்வது; விராட் புருஷனின் இருதயத்தானமாக விளங்குவது. இங்கு மார்கழி மாதத்தில் நடைபெறும் திருவாதிரைத் திருவிழாவைத் தரிசனம் என்றே வழங்குவர். இதனால் தரிசனச் சிறப்பு இத்தலத்திற்கே உரியதென்பது தெளிவாகும். மேலும் இத் தலம் உலக முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். ஆகாயத்தில் அதாவது சிதாகாசப் பரவெளியில் நடராஜப் பெருமான் ஆடுகிறார். அவரது ஆட்டத்தால் உலகம் இயங்குகிறது. அவர் கையிலுள்ள உடுக்கை ஒலியால் உலகைத்தோற்றுவிக்கிறார். அபயகரத்தால் உலகைக் காப்பாற்றுகிறார். அக்கினி ஏந்திய கரத்தால் உலகை ஒடுக்குகிறார். முயலகனை அழுத்தி ஊன்றிய பாதத்தால் உலகத்தை மறைக்கிறார். தூக்கிய திருவடியால் உயிர்கட்கு அருள் புரிகிறார். அவரது ஆடல் நின்றால் உலக இயக்கமே நின்றுவிடும்.

அதுபோலவே மனிதஇருதயத்துள்ளும் ஆகாயம் இருக்கிறது. இதனைத் தகராகாசம் என்பர் சான்றோர். இவ்விருதயத்துள் நாம்உறங்கும்போதும், உழைக்கும் போதும், ஓய்வெடுக்கும்போதும் ஓயாமல் துடிப்பு நிகழ்வதைக் காண்கிறோம். இதயத் துடிப்பு நின்றால் உடல் இயங்காது. உலகத்தையும், நம்மையும் தனது ஆடலால் இயக்குபவன் நடராஜப் பெருமான்.

அப்பெருமான் காரிட்ட ஆணவக் கருவறையில் கண்ணிலாக் குழந்தையைப்போல் கட்டுண்டு கிடந்த உயிர்களை உய்விக்கக்கருதித் தமக்கே உரிய பெருங் கருணையால் பிறவிகளைக் கொடுத்து உதவுகிறான். நாம் கேளாமலே நமக்குத் தாய் தந்தையரை உதவுகிறான். மிக நுட்பமான கருவிகளைக்கொண்ட உடலாகிய இயந்திரத்தையும் அளித்துள்ளான். பிறவிகளில் சிறந்த மனிதப் பிறப்பையும் கொடுத்துள்ளான்.

பிள்ளைகள் கேளாமல் இருக்கும்போதே பெற்றோர்கள் எப்படிப் பிள்ளைகளின் முன்னேற்றத்தில் கண்ணும்கருத்துமாய் இருந்து வேண்டத்தக்க தறிந்து தக்க சமயத்தில் உதவுகிறார்களோ அதைவிட மேலாக உயிர்களின் முன்னேற்றத்தில் கரையிலாக் கருணையுடன் வேண்டுவார் வேண்டுவதை அருளி வருகிறான். கைம்மாறு கருதாது செய்யும் இப்பெருதவிக்கு நம்மால் பிரதி உபகாரம் ஒருநாளும் செய்ய இயலாது நாம் செய்யவேண்டுவதெல்லாம் அவனை வணங்கியும், வாழ்த்தியும் வழிபடுவதேயாம். வழிபடுவதும் அவனுக்காக அன்று. நமக்காகத்தான், வானவர்கள் இறைவனை வாழ்த்துவதும் தாம் வாழ்வதற்காகத்தான் என்றார் மாணிக்கவாசகர். பொன்னால் பிரயோசனம் பொன் படைத்தவர்க்கு உண்டு. அவர்களால் பொன்னுக்குப் பிரயோஜனம் ஒன்றும் இல்லை என்கிறார் பட்டினத்து அடிகள். அதுபோல நாம் வழிபடுவதால் நாம் உயர்கிறோமேயன்றி இறைவனுக்கு உயர்வோ, பலனோ இல்லை.

இங்ஙனம் உயிர்கள் உய்வதற்காக மனிதப் பிறப்பை அருளிய இறைவன் தில்லையம்பலத்தில் நடனமிடுகிறான். ஆறறிவு படைத்த மனிதப் பிறவி பெற்ற நாம் அவனது வளைந்த புருவத்தையும், கோவைப்பழம் போன்ற சிவந்த வாயையும், புன் சிரிப்பையும், குளிர்ந்த சடையையும், பவளம்போல் சிவந்த மேனியில் பால்போன்ற வெண்ணீற்றையும், உயிர்கட்கு இனிமை நல்கும் தூக்கிய திருவடியையும் கண்டு தரிசித்துப் பிறவாப்பெருநெறி அதாவது பேரின்பம் எய்துதல் மனிதர்களின் தலையாய கடமை. தரிசித்தால் முத்தியளிக்கும் சிதம்பரத்தில் நடனமிடும் நடராஜப் பெருமானைக் காணப்பெற்றால் நமக்கு மனிதப்பிறவி வேண்டுவதுதான். இன்றேல் தரிசிக்கும் வாய்ப்பில்லாத ஏனைய பிறவிகளாகவே அமைந்து விடலாம். தகுதிவாய்ந்த மேம்பட்ட மனிதப் பிறவி எடுத்த நாம் அத்தகுதிக்கேற்ப வழிபட்டுப் பெரும் பயன் அடையவேண்டும் என்பதே அப்பர் சுவாமிகளின் திருவுள்ளம். அவரது அருள்வாக்கைக் காண்போமாக.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

— திருநாவுக்கரசர்

# வேதத்தின் சிறப்பு

**பிர்மஸ்ரீ. வைத்தியநாத கனபாடிகள்.**

நமது வேதம் அநாதியானது. ஐம்புலன்களாலும் ஊகத்தாலும் அறிய முடியாததை எது தெரிவிக்கின்றதோ அதற்கு வேதம் என்று பெயர். "ப்ரத்ய க்ஷேண அனுமித்யாவா யஸ்தூபாயோ நபுத்யதே. ஏனம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேததா:" எம்மதத்தினரும் தம் மதத்தின் அடிப்படை நூலிற்கு வேதம் என்றே பெயரிடுகின்றனர். ஸத்ய வேதம் என்று கிறிஸ்த்வரும், இஸ்லாமிய வேதம் என்று முகம்மதியரும் கூறுகின்றனர். சென்றது, நடக்கிறது, நடக்கப்போகிறது இவை எல்லாவற்றையும் வேதங்கள் விளக்குகின்றன. "பூதம் பவ்யம் பவிஷ்யச்ச ஸர்வம் வேதாத் ப்ரசித்யதி". வேதம் யாராலும் உண்டாக்கப் பட்டதல்ல, உலகத்தில் ஒலி உருவமாக உள்ள வேதங்களை மாபெரும் முனிவர்கள் தம் தவ வலிமையால் இறைவன் அருட்டுணை கொண்டு கண்டு பிடித்தனர். "யுகாந்தே அந்தர் ஹிதான், வேதான் சேதிஹாஸான் மஹர்ஷய; லேபிரே தபஸா பூர்வம் அனுக்ஞாதா: ஸ்ஸ்யம் புவா" என்று புராணங்கள் பறை சாற்றுகின்றன.

பொய்யாமொழிப் புலவரின் குறளுக்குப் புகழுரை செய்த வெள்ளிவீதியார் அவர்களும் "செய்யா மொழிக்கும் வள்ளுவர் புகன்ற பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே" என்று கூறியிருக்கிறார். வெள்ளிவீதியார் செய்யாமொழி என்றதினால் வேதங்கள் யாராலும் உண்டுபண்ணப் படாதவைகள் என்று விளக்கியிருக்கிறார். ஆதலாலதான் வேதத்திற்கு "எழுதாக்கிளவி" என்ற பெயர் ஏற்பட்டது. காதாலேயே கேட்டு எழுதப்படாமல் இன்று வரையில் காக்கப்பட்டு வருவதால் சுருதி என்றும் அழைக்கப்படுகிறது. புத்தகங்களை பார்த்து படிக்காமல் ஓதியே கற்கப்பட்டதால் ஔவைப்பிராட்டி அவர்களும் "ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்" என்றும் கூறியிருக்கிறார். தேவர்கள் ஒரு சமயம் யமனிடமிருந்து அஞ்சியவர்களாக வேதங்களால் தன்னை யமனிடமிருந்து மறைத்துக் கொண்டனர். ஆகையால் வடமொழியில் "சந்தஸ்" என்றும், மறைந்து கொள்வதற்கு உதவியாக இருந்ததால் தென்மொழியாகிய தேன்மொழியாம் தமிழில் மறை என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. நான்கு வேதங்களும் ஈசனது திருவாக்கு அல்லது மூச்சுக் காற்று என்பதே நாயன்மார்கள் ஆழ்வார்கள் உள்ளிட்ட நமது வைதீக சமயத்தைச் சார்ந்த எல்லாப் பெரியோர்களின் முடிவும். சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில் உத்தமமாகவே ஓதிய வேதத்தில் (திருமூலர் திருமந்திரம்) வேதம் ஈசனின் மூச்சுக்காற்று என்று பல பெரியோர்கள் பகர்கின்றனர். "யஸ்ய நிச்வஸிதம் வேதா:" என்று (ஸாயணர்) மறைகளீசன் சொல் (சிவஞானசித்தியார்) மறைகலந்த ஒலி பாடலோ டாடலர் (திருஞான சம்பந்தர்) பேசுவதும் திருவாயான் மறைபோலும் (மாணிக்கவாசகர்) நான்கு நின் வாய்மொழி (நக்கீரர்) வேதங்கள் அனந்தம் என்று யஜுர் வேதம் கூறுகின்றது. பரத்வாஜர் என்னும் முனிவர் ஒரு மனிதனுக்கேற்பட்ட பூர்ண ஆயுட் காலத்தைப் போன்ற மூன்றுபங்கு ஆயுட்காலங்களில் வேதங்களைக் கற்றார். உடல் மிகவும் மெலிந்து சக்தியற்றுக் கிடந்தார்.

அப்பொழுது அவரெதிரில் இந்திரன் தோன்றினன். எதிரே மூன்று மலைகளைத் தோற்றுவித்து. அம்மலைகளினின்றும் ஒவ்வொரு பிடியாக எடுத்தான். பரத்வாஜரே! இதுவரையில் நீ கற்றதெல்லாம் இப்பிடிகளுக்கொப்பானது. இன்னும் கற்க வேண்டியது இம்மலைகளுக் கொப்பானது என்று கூறினன். ஔவைப் பிராட்டி புகன்ற "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு". என்னும் பழமொழியும் இக்கதையிலிருந்து ஏற்பட்டதே. "வேதத்தை விட்ட அறம் இல்லை; வேதத்தின்; ஓதத்தகும் அறம் எல்லாம் உள; தர்க்க வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற வேதத்தை ஓதியே வீடு பெற்றோர்களே" (திருமூலர் திருமந்திரம்). "வேதம் நிறைந்த தமிழ் நாடு" என்று நம் தமிழ்க்கவி பாரதியாரும் விளக்குகிறார். உலகத்தின் எந்த நூலும் வேதத்தின் பொருளை உரைப்பதாகவே பெரியோர்கள் தொன்று தொட்டுக் கூறிவந்திருக்கிறார்கள்.

எல்லா க்ஷேத்ரங்களையும் காசிக்கொப்பானது என்றும், எல்லா புண்ய நதிகளையும் கங்கை போன்றதென்றும் கூறுவது போல எல்லா நூல் களையும் வேதத்திற் கொப்பானதாகக் கூறிவந்து இருக்கிறார்கள் வேதமே வால்மீகியினிடத்தில் இராமாயணமாகத் தோன்றியது என்பது பழமொழி. "வேத: ப்ராசேத ஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத் மனா." பாரதம் ஐந்தாவது வேதமென்று கூறப்படு கிறது. பாரத: பஞ்சமோ வேத:. நம்மாழ்வார் வேதத்தையே தமிழ் செய்தார். "வேதம் தமிழ் செய்தான் மாறன் சடகோபன்". நவீன ஆராய்ச்சிக் காரர்கள் ஜோதிடர்கள் கெட்டுப்போன ஜாதகம் கணிப்பதுபோல்வேதங்களுக்குக்காலவரையறையைக் காண முயலுகிறார்கள். ஆனால் இவர்கள் ஆராய்ச்சி கள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதால் ஒரு விதமான முடிவையும் தரவில்லை. டாக்டர் ஜாகோபி என்னும் மேனாட்டு ஆராய்ச்சியாளரும் நம் நாட்டு லோகமான்ய பாலகங்காதர திலகரும் வேதங்கள் 6000 வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்டிருக்கலாமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். வங்காளத்து அபினாஸ் சந்திரதாஸ், தீரேந்த்ரநாத் உபாத்யாயர் முதலிய வர்கள் 25000 வருஷங்களுக்கு முன் வேதங்கள் காலம் என்று கூறுகின்றனர். மாக்ஸ்முல்லர், வின்டர் நிட்ஸ் முதலியவர்கள் 3000 வருஷங்கள் இருக்கலாமென்று ஆராய்கிறார்கள். இன்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்பெழுந்த ஜைனர்கள், வேதத்திற்குப் புறம்பான மதத்தினர்கள் கூட வேதங்களுக்குக் காலம் கூறவில்லை.

ருக்வேதம் 21 சாகைகள். யஜுர் வேதம் 101 சாகைகள். ஸாம வேதம் 1000 சாகைகள். அதர் வண வேதம் 9 சாகைகள்.* கடவுள் உலகங்களை படைப்பதுகூட வேதங்களில் கூறப்பட்ட சொற்களைக் கொண்டே, "வேதசப்தேப்ய ஏவாதௌ நிர்மமே ஸ மஹேச்வர:" வேதங்கள் கடவுளின் மூச்சுக்காற்றாக ஆங்காங்கு கூறப்பட்டிருப்பதால்தான் கும்பாபிஷேக காலங்களில் தெய்வங்களுக்கு உயிர் ஏற்படுவதற்காக வேத பாராயணங்களை நன்றாக நடத்துகிறோம் வேத ஒலி எங்கு கேட்கிறதோ அங்கு கெட்ட நோய்கள் ஏழ்மை இவைகள் அணுகாதென்று புராணங்கள் கூறுகின்றன. ஒலிக்கு உயர்ந்த சக்தி உண்டு என்பதை நாம் தற்காலம் நன்கு அறிகிறோம். சங்கீத ஓசையின் மூலம் பயிர்கள் நன்றாக வளர்கின் றன. மழை பெய்யாத காலங்களில் வருண ஜபம் நடத்தி மழை கொட்டியதைக் கண்டு வருகிறோம். ஒவ்வொரு சாகையிலும் கர்ம காண்டம் ஞான காண்டம் என்ற இரு பாகுபாடுகளுண்டு. கர்ம காண்டத்தில் ஆசாரங்களையும், க்ரியானுஷ்டானங் களையும் கடைப்பிடித்து அக்கர்மானுஷ்டானங்களை மனதால ஈச்வரார்ப்பணம் செய்து அவன் கருணை வெள்ளத்தால் சித்தத்தின் மலத்தை அலசி சுதத மாக்க வேண்டிய முறை உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் சுத்தமான மனதை ஒரு நிலைப்படுத்தி ஈசனிடம் அன்பைப் பெருககி நினைவு அவனை விட் டகலாமல் அவனது உருவத்தைத் த்யானித்து வழிபட்டு அவனது அளவிலா வடிவாகிய அகண்ட ஞானானந்த உண்மையை அறிந்து உய்யும் உபதே சத்தைச் செய்வது ஞான காண்டம்.

"கருமநூல் ஞான நூலென விரண்டாம்
கருமநூ லிவனர்ச்சனைக்கு
வரும்வினையுணர்ந்து ஞானநூ லிவன்றன்
வடி விலா வடிவினையுணர்த்தும்"

(பரஞ்ஜோதி முனிவர் திருவிளையாடல் புராணம் மதுரைக் காண்டம் வேதத்திற்குப் பொருளருளிச் செய்த படலம்.) ஸ்ரீ ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள், தான் அவதரித்த காரணங்களை முடித்துக் கொண்டு ஜோதியில் கலக்கும் காலத்தில் சீடர்கள் சுருக்கமாகச் செய்ய வேண்டியதை உபதேசித்தருள வேண்டும் என்று ப்ரார்த்திகும் பொழுது "வேதோ நித்யம் அதீயதாம்" என்று முடிவாக அருளினார்கள். அப்பரம்பரையில் வந்த ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அவர்களும், நம் ஸ்ரீலஸ்ரீ மஹா சந்நிதானம் கயிலைக் குருமணி அவர்களும் வேதத்தைப் பாதுகாக்க அல்லும் பகலும் பாடுபடு கிறார்கள்.

செங்கோலேந்திய அரசனுக் கொருமழை
கற்புடைய மாதருக்கொரு மழை
வேதமோதிய அந்தணருக்கொரு மழை

என்ற பழமொழி கூறிய விதம் மாதம் மும்மாரி பொழிநது யாவரும் இன்புற்றிருக்க வேதத்தின் விழுப்பொருளான பரமனின்பாதங்களைப் பன்முறை பணிந்து நன்மையை அடைவோமாக.

* சாகையாயிர முடையார் சாமமு மோதுவ துடையார்
ஈகை யார்கடை நோக்கி யிரப்பதும் பலபல வுடையார்
தோகை மாமயி லனைய துடியிடை பாகமு முடையார்
வாகை நுண்டுளி வீசும் வாழ்கொளி புத்தூ ருளாரே. --சம்பந்தர்

# புராணம்

வேதாந்த சிரோமணி
பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

**सर्गश्च प्रतिसर्गश्च वंशो मन्वन्तराणि च ।
वंशानुचरितं चेति पुराणं पञ्चलक्षणम् ॥**

பழயதாயினும் புதிதாகத் தோன்றுவது, பழமையானது, தன்னிடத்தில் ஈடுபட்டவர்களை முன்னுக்குக் கொண்டுவருவது என்று பொருள் கொண்டது புராணம் என்ற சொல். உலகசிருஷ்டி, ஒடுக்கம், சூரிய சந்திரவம்சம், பதினன்கு மன்வந்தரம், புகழ்பெற்ற அரசர்களுடைய சரிதம் என்ற ஐந்தும் புராணங்களிலிருந்து அறியப்படும். இவ் வைந்தையும் உணர்த்தும் நூலே புராணம் என்று லக்ஷணம் கூறுகின்றனர்.

**अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्यायविस्तरः ।
पुराणं धर्मशास्त्रं च विद्या ह्येताश्चतुर्दश ॥**

ரிக் யசுர், ஸாம, அதர்வ என்ற வேதங்கள் நான்கும், சிக்ஷா (எழுத்திலக்கணம்) வியாகரணம் (சொல்லிலக்கணம்) சந்தஸ் (செய்யுளிலக்கணம்) நிருத்தம் (வேதப் பதங்களுக்குப் பொருள்கூறும் நிகண்டு) ஜ்யோதிஷம் (காலத்தைப்பற்றி விரிவாகக் கூறும் கணிதநூல்) கல்பம் (வேதத்திற்கூறிய கன்மங்களைச் செய்யவேண்டிய முறைகளை வகுத்துக்கூறும் நூல்) என்ற வேதாங்கங்கள் ஆறும், மீமாம்ஸா, நியாயசாஸ்திரம், புராணம், தர்மசாஸதிரம் முதலியனவும் ஆகப்பதினன்கும் வித்தைகள்எனப்படும். அவற்றில் புராணம் ஒன்று என்பது கவனிக்கத்தக்கது.

**पुराणं सर्वशास्त्राणां प्रथमं ब्रह्मणा स्मृतम् ।**

புராணமே ஸகல சாஸ்திரங்களுள் முதன்மையானது என்று பிர்மதேவன் கருதுகிறுர்.

**इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत्**

இதிஹாஸ புராணங்களைக் கொண்டு வேதத்தின் பொருளை வீரித்துரைக்க வேண்டும்.

**इतिहासपुराणानि पञ्चमो वेद उच्यते**

இதிஹாஸ புராணங்கள் ஐந்தாவது வேதம்.

**पुराणं मानवो धर्मः साङ्गो वेदश्चिकित्सितम् ।
आज्ञासिद्धानि चत्वारि न हन्तव्यानि हेतुभिः ॥**

புராணம், மனுதர்ம சாஸ்திரம், அங்கங்களுடன் கூடிய வேதம், வைத்ய சாஸ்திரம், இவைகளில் கூறப்பட்டவைகளை ஏதுக்களால் மறுத்துக் கூறக் கூடாது என்றும் கூறும் வாக்கியங்களால் நம் முன்னேர்கள், எவ்வளவு உயர்ந்த நிலையில் மதித்திருந்தனர் என்பது புலப்படும். மேலும் தினந்தோறும் செய்யும் பிர்மயக்ஞம் என்ற கர்மாவில் புராணங்களுக்கும் தர்ப்பணம் விதிக்கப்பட்டிருப் பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

பாரத நாட்டிலுள்ள பழய வடமொழி இலக்கியங்களை வேதம் என்றும், இதிஹாஸ புராணம் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். அவற்றில் வேதம் மூன்று வருணத்தாருக்கே உரியதாக இருத்தலின், யாவரும், வேதப் பொருளை அறிய இதிஹாஸ புராணங்கள் பயன்பட்டன. இக்கருத்துப் பற்றியே முற்காலத்தில் ஆலயங்களில் புராணம் படித்து விரிவுரை கூற மான்யங்கள் கூட விடப்பட்டிருந்ததாக அறியக் கிடக்கின்றது. இப்படிப் புராண விரிவுரை நிகழ்த்தப்படுவதால் மக்களின் ஒழுக்கமும், பழக்க வழக்கங்களும், சமய சாஸ்திரங்களில் பற்றும், இறைவனிடத்து பக்தியும், பண்பாட்டின் வளர்ச்சியும் ஏற்பட்டன.

மகா புராணங்கள் 18. உப புராணம் 18 என்று பலரும் அறிந்ததே. இந்தப் பதினெட்டு மகா புராணங்களையும் இயற்றியவராகிய வேத வியாசர் பராசர முனிவரின் குமாரர். இவர் ஒன்றுக இருந்த வேதங்களை நான்காய்ப் பிரித்து அமைத்தமையால்

வேத வியாசர் என்றும், தீவில் பிறந்தமையால் த்வைபாயனர் என்றும், கருப்பாக இருந்தமையால் கிருஷ்ணன் என்றும் பெயர் பெற்றூர். விஷ்ணுவே வியாசராக அவதாரம் எடுத்தார் என்பதை,

**व्यासाय विष्णुरूपाय व्यासरूपाय विष्णवे**

என்ற வாக்கியம் உணர்த்தும் உப-புராணங்களில் சிலவும் வியாசரால் இயற்றப்பட்டன. சனத்குமாரர் நந்தி, துர்வாசர், நாரதர், கபிலர், மனு, சுக்ரன் பராசரர், மரீசி இவர்கள் இயற்றிய உப-புராணங்கள் இவர்களுடைய பெயரால் வழங்கப் படுகின்றன. மற்றவை வியாசருடையன. உப - புராணங்கள் பதினெட்டைத் தவிர மிருதியாகப் பதினென்று இருந்ததாகவும் கூறுகின்றனர். மகா புராணங்கள் எல்லாம் அச்சிடப்பட்டிருப்பன போன்று உப புராணங்கள் எல்லாம் அச்சிடப்பட வில்லை. சிலவே அச்சிடப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர ஆங்காங்கு க்ஷேத்திரங்களில் ஸ்தல புராணம் என்று ஒன்று வழக்கத்தில் இருக்கிறது. அதன் இறுதியில் அந்த ஸ்தல புராணம், மகா புராணத்திலோ அல்லது உபபுராணத்திலோ அடங்கி இருப்பதாகவும் எழுதி இருக்கும். ஆனல் அவை அந்தந்த க்ஷேத்திரங்களின் பெருமையை விளக்க ஆங்காங்கு இருந்த பெரியோர்களால் எழுதப்பட்டிருக்கலாம்.

இராமாயணம் மகா பாரதம் இவைகளில் கதை தொடர்ச்சியாக இருப்பது போல புராணங்களில் காண முடியாது. ஒரு புராணத்தில் கூறப்படும் கதை மற்றெரு புராணத்தில் வேறு வகையாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கலாம். புராணங்கள் கல்ப பேதத்தால் மாறுபடும். ஆதலின் இந்த வேற்றுமை ஏற்பட்டதாகக் கொள்ள வேண்டும். மேலும் புராணங்களில் சிவன், விஷ்ணு, ராமன், லலிதா முதலிய தேவர்களை அர்ச்சித்து வழிபடுவதற்குரிய சகஸ்ர நாமஸ்தோத்திரங்களும், அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரங்களும் உள்ளன. புராணங்களைத் தினமும் படிக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

புராணங்கள் கதை கூறி நீதி புகட்ட வந்தன. ஆதலின் கதையில் கருத்துக் கிடையாது. வேதங்களில் உள்ள வேள்விகள், அத்தி முதல் எலும்பீறுன உயிர்களின் படைப்பு, உலக அமைப்பு, நவக்ரஹ மண்டலம் அவற்றின் சலனம், ஸ்வர்க்கம், நரகம், தேவ ஆராதனை, உடலமைப்பு, வைத்ய முறை, நாடி விசாரம், யோக முறைகள், நோன்புகள், மந்திரம், ஸ்துதி, சகுனம் முதலிய இம்மைக்கும் மறுமைக்கும் உதவக்கூடிய பல உபாயங்கள் ஆகிய எல்லா விஷயங்களும் புராணங்களில் உள்ளன. புராணங்களில் இல்லாத பொருள் ஒன்றுமில்லை என்றே துணிந்து கூறலாம். அது காரணம்பற்றியே பல புராணங்கள் தற்சமயம் ஆங்கிலம் முதலிய பல மொழிகளிலும் மொழி பெயர்த்து எழுதப்பட்டிருக்கின்றன.

புராணத்தைக் கேட்பவரின் பெயராலும், சொல்லுகிறவரின் பெயராலும், கூறப்படும் விஷயத்தாலும் மகா புராணங்களின் பெயர்கள் அமைந்துள்ளன. பிராமம், பத்மம், விஷ்ணு, சைவம், பாகவதம், பவிஷ்யோத்தரம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்னேயம், பிர்ம வைவர்த்தம், லிங்கம், வராஹம், ஸ்காந்தம், வாமனம், கௌர்மம், மாத்ஸயம், காருடம், பிரமாண்டம் என்பன மகாபுராணங்களின் பெயர். இவற்றுள் வைஷ்ணவம், நாரதீயம் பாகவதம், காருடம் என்ற நான்கு புராணங்களும் விஷ்ணுவின் பெருமையையும், பிராம்மம், பத்மம் இவ்விரண்டும் பிரமனின் பெருமையையும். ஆக்னேயம் அக்னியின் பெருமையையும், பிர்ம வைவர்த்தம் சூரியனின் பெருமையையும், எஞ்சிய பத்தும் சிவபெருமானின் பெருமையையும் கூறுகின்றன. எனினும் எல்லாப் புராணங்களிலும் எல்லாத் தேவர்களுடைய பெருமையும் இருக்கும். முக்கியமான கருத்துடன் கூறுவதுபற்றி சைவம்பத்து, வைஷ்ணம் நான்கு என்றவாறு பிரித்துக் கூறப்பட்டது. மகாபுராணங்களில் சமயச்சார்பு இருப்பதாகத் தெரியவில்லை. எல்லாக் கடவுளரையும் வழிபடலாம் என்றே கூறுவதாக அமைந்துள்ளன. உப புராணங்களிலோ இதற்கு மாறுபாடான நிலைகாணக் கிடக்கிறது. மகா புராணத்திலுள்ள வாக்கியங்களே பிற்கால பாஷ்யக் காரர்களால்| மேற்கோளாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

வேதம், புராணம், இதிகாசம், உபநிஷத் முதலியவை ஈச்வரனிடமிருந்தே மூச்சுக் காற்றுப்போல் முயற்சியின்றி உண்டாயின. புராணங்கள் நூறு கோடி சுலோகங்கள்கொண்ட ஒரே நூலாக இருந்தன. முன்கல்பங்களில் இருந்தவர் தபோ வலிமை உடையவராக இருந்தமையால் அவற்றைக்கொண்டு பயன் பெற்றனர். பின் கல்பங்களில் மக்களின் தபோ வலிமை குறைந்தமையால் அளவில் பெரியதாகிய புராணங்களிலிருந்து சாரத்தை அறியும் திறமை மக்களுக்குக் குன்றியது. இதை அறிந்தே ஈச்வரன் ஒவ்வொரு சதுர்யுகத்திலும் ஒருவரை அனுப்பி, புராணங்களைப் பிரிக்கச் செய்தார். அம்முறையில் தற்காலமுள்ள 18 புராணங்கள் வியாசராகப் பிறந்த விஷ்ணுவினல் பிரிக்கப்பட்டன. இவை நான்கு லக்ஷம் சுலோகங்கள் கொண்டன.

முற்கூறிய மகாபுராணங்கள் பதினெட்டைத் தவிர ஆதி புராணங்கள் என்ற மற்றெருவகையான 18 புராணங்களும் இருப்பதாகத் தெரிகிறது. பார்க்கவ புராணம், பிரஹந்நாரதீயம், பிரஹந்மாத்சயம், முத்கல புராணம், மகாபாகவதம், கர்க்க புராணம், கல்கி புராணம், பிரஹத்தர்மம், பிரஹத்வாமனம், பராநந்தம், பகவதி, லக்ஷ்மி, வாசிஷ்டம், ஆதிக புராணம்

முதலியன. பாகவதம் என்ற புராணம் விஷ்ணு பாகவதம், தேவீ பாகவதம் என்ற இரண்டு வகையாக இருக்கிறது. விஷ்ணு பாகவதமே பதினெட்டு மகா புராணத்தில் சேர்ந்தது என்றும், தேவீ பாகவதமே மகாபுராணத்தில் சேர்ந்தது என்றும் ஒரு விவாதம் உள்ளது. ஸ்காந்தம் மகாபுராணத்திலும், உப புராணத்திலும் இரண்டு இடத்திலும் உள்ளது.

சனத்குமாரபுராணம், காந்தபுராணம், நந்தி புராணம், நாரதபுராணம், மானவபுராணம், பிர் மாண்ட புராணம், சாம்ப புராணம், பராசர புராணம், நரசிம்ம புராணம், சிவதர்ம புராணம், காளிகா புராணம், துர்வாச புராணம், கபில புராணம், ஔசனச புராணம், வருண புராணம், மகேச்வர புராணம் சௌர புராணம் என்பன உப புராணங் கள் இவை மகா புராணங்களுக்கு உதவியாகத் துணையாக இருப்பதால் உப புராணம் எனப்படும்; மகா புராணங்களில் இவைகளின் பெயர்கள் குறிப் பிடப் படுகின்றன. சில அச்சாக வில்லை.

ஆனல் தமிழ் நாட்டில் புராணம் என்ற மாத்திரத் தில் ஸ்தல புராணங்கள்தான் நினைவுக்கு வருகின் றன. ஆங்காங்கு ஸ்தலங்களில் கர்ண பரம்பரையாக வரும் கதைகளையும் வைத்து க்ஷேத்ரம், மூர்த்தி, ஸ்தலம், பூசனை செய்து நற்கதிபெற்றவர் வரலாறு நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு இவைகள் வர்ணிக்கப் படுகின்றன. இப் புராணங்கள் நாட்டில் போர் முதலியவற்ருல் மக்கள் வாடி வருந்தியிருந்த காலத்தி லும் மக்கள் கருத்தழிந்து சாகாதபடி ஊக்கமளித்து புத்துணர்ச்சியோடு வாழச் செய்தன, செய்கின்றன என்று சொல்லுவது மிகையாகாது தமிழ் இலக்கியங் களிலும் இப்புராணங்களில் சில முதன்மையான இடம் பெற்று விளங்குகின்றன. இவை பெரும்பாலும் வட மொழியில் உள்ள ஸ்தலபுராண வரலாறுகளைக் குறிப்பிடுகின்றன. ஆனல வடமொழியில் இயற்றப் பட்டிருக்கும் ஸ்தல புராணங்களில் சில, ஊரின் பெயர் முதலியன விளங்காதவிடத்தில் தமக்குப் புரிந்த அளவில் பெயரை வடமொழியில் மொழி பெயர்த்து எழுதப்பட்டுள்ளன. அதற்குத் தக்கவாறு கதைகளையும் மாறுபட எழுதியுள்ளனர். எறும்பியூர் - மலையுள்ள நாடு என்று பொருள் உள்ள இந்த ஊர் எறும்பு ஊர்ந்தபுரி என்று பொருள்படும்படி பிபீலிகா புரம் என்று எழுதப்பட்டிருக்கிறது கவனிக்கத்தக்கது.

ஆத்மார்த்த விசாரணை செய்கின்ற மதவாதிகள் பலரும் கீதையை பிரமாணமாக எடுத்துக் காட்டு கின்றனர். கீதை என்ற பெயரில் பல உள்ளன. பகவத்கீதை, மகாபாரதம் என்ற இதிகாசத்திலுள்ளது. சிவகீதை, ராமகீதை பத்ம புராணத்திலுள்ளன. ஹம்சகீதை விஷ்ணு புராணத்திலுள்ளது. அகஸ்த்ய கீதை, ருத்ரகீதை, பிருகுகீதை இவை வராஹ புராணத் திலுள்ளன. ஈச்வரகீதை, வியாசகீதை இவை கூர்ம புராணத்திலுள்ளன. பிர்மகீதை, சூதகீதை ஸ்காந்த புராணத்தில் உள்ளன, ரிபுகீதை, குருகீதை இம் மாதிரியே. உபபுராணங்களிலும் இவ்வாறு கீதைகள் இருக்கக்கூடும். ஆகவே ஆத்ம விசாரம் செய்பவர் களுக்குப் புராணங்கள் மிகவும் உதவியாக இருப்பது அறியப்படும்.

பத்ம புராணம், ஸ்காந்தம், பிர்மாண்டம் இவற் றில் க்ஷேத்ரவைபவங்கள் அதிகமாக உள்ளன. ஆக்னேய புராணத்தில் இம்மைக்குப் பயன்படக் கூடிய பல் மந்திரம், வைத்யமுறை, ஔஷதிகள், காவ்ய நாடக ரச அலங்காரங்கள், இவை அதிகமாக இருக் கின்றன. கருடபுராணத்தில் ஆசார, பிரேத, பிர்ம்ம என்ற மூன்று காண்டங்கள் உள்ளன. இவற்றில் பிரேத காண்டம் மட்டும் இறந்த வீட்டில்தான் படிப்பது வழக்கம். இவ்வாறு பல விஷயங்கள் அடங் கிய புராணங்களைப் படித்து இம்மை மறுமைப் பயன் களை யடைய இறைவன் அருள் புரிவாராக.



# எதிர்காலம்

திரு. கே முத்துஜோதிடர்

விசுவாவசுஸூ மார்கழிமீ 1உ முதல் 29உ முடிய (16—12—65 முதல் 13—1—66 முடிய

### 1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

மேஷராசி 9 பாதங்களும் தனதான்யப் பெருக்கத்தையும், கிரக சுகத்தையும் ஜீவன லாபத்தையும் தரும்; ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். ஸ்திர சுக வாசம் ஏற்படச்செய்யும். தானதர்ம பலன்கள் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 2. ரிஷபம்: கார்த்திகை ¾, ரோகிணி, மிருகசீர்ஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் சுபமாகும். இடம் மாறுதலோடு, நூதன ஸ்திர சுக ஜீவனத்தைத் தரும், ஆரோக்யம் உண்டுபண்ணும். ரோஹிணி நான்கு பாதங்களும், மிருகசீர்ஷம் 1, 2 பாதங்களும் மிச்ர பலனைத் தரும். அடிக்கடி சஞ்சாரமும் வீண் அலைச்சல்களும் காரிய விக்னமும் ஏற்படும். சஸ்யதான்ய விருத்திகளில் குறை காட்டும். ஈதிபாதிகளால் சிரமம் உண்டாகும்; ஆனாலும் மாதக் கடைசியில் நஷ்டமான பொருள்வரத்தும் ஜீவன லாபமும் உண்டாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

### 3. மிதுனம்: மிருகசீர்ஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிதுனராசி 9 பாதங்களும், சுப சந்தோஷங்களை உண்டுபண்ணும். தனதான்ய விருத்தியும், புத்திர பௌத்திராதிகளால் சுகமும் உண்டாகும். தூரதேச பிரயாணமும், நூதன ஜீவன லாபமும் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

### 4. கடகம்: புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும், சத்காரியங்கள் மூலமாயும், சுபசோபனுதிகள் மூலமாயும், அதிக செலவினங்களைத் தந்து தெய்வ பலம் ஓங்கி குடும்பத்தைச் செழிக்கச் செய்யும். ஸ்தாவர சொத்துக்கள் மூலமாய் விசேஷ லாபத்தைத் தரும். மேலோர், பெரியோர்களின் அன்பு கிடைக்கும். திங்கள், புதன் சுபமாகும்.

### 5. சிம்மம்: மகம், பூரம், உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும், மிச்ரபலனைத் தரும். நூதனமான தொழில் ஏற்படச் செய்யும். மேல் பதவிகளும் ராஜாங்க உதவிகளும் கிடைக்கும். சரீரத்துக்கு ஆரோக்யக்குறைவு காட்டும். குடும்பத்தொல்லை அதிகமாகும். ஞாயிறு, செவ்வாய் சுபமாகும்.

### 6. கன்னி: உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

கன்னியாராசி 9 பாதங்களும், சுப சந்தோஷங்களை உண்டுபண்ணும். ஆரோக்யத்தைத் தரும். நஷ்டமான பொருள்கள் தானுக வந்து சேரும். சஸ்ய தான்ய விருத்திகள் ஏற்படச்செய்யும். அடிக்கடி சஞ்சார பலனும், தானதர்ம பலன்களும் உண்டாகும், உலக பிரசித்தியும் ராஜாங்க மைத்ரமும் உண்டாகும். எதிர்பாராத செலவினங்கள் மாத்திரம் அடிக்கடி உண்டாகிக்கொண்டே இருக்கும். தெய்வபலம் முன்னின்று காக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

### 7. துலாம்: சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

துலாராசி 9 பாதங்களும், சுபத்தைத் தரும் தொழில் ஓங்கும், மேலோர் பெரியோர்களின் அன்பும் தெய்வ பலமும் முன்னிற்கும். ஆரோக்யத்தைத்தரும். உலகப் பிரசித்தியை உண்டுபண்ணும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். குடுமபம் ஓங்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 8. விருச்சிகம்: விசாகம் ¼, அனுஷம். கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும், மிச்ர பலனைத்தரும். விசாகம் 4-ம் பாதமும், அனுஷம் நான்கு பாதங்களும், விசேஷ கஷ்ட நஷ்டங்களையும், கவலைகளையும் உண்டு பண்ணும். கேட்டை நான்கு பாதங்கள் மாத்திரம் கிரஹசுகத்தைத் தந்து ஜீவனலாபத்தையும் ஆரோக்யத்தையும் தரும், செவ்வாய், புதன் சுபமாகும்.

**9. தனுசு : மூலம், பூராடம், உத்திராடம் ¼.**

தனுர்ராசி 9 பாதங்களும் மேன்மையைத் தரும். புத்திரர்திகளால் சுகம் உண்டு பண்ணும். இல்லற சுகம்ஓங்கும்; உலகப் பிரசித்தியை உண்டு பண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**10. மகரம் : உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.**

மகரராசி 9 பாதங்களும், விசேஷமான நன்மைகளை உண்டு பண்ணும். ராஜாங்கத்தால் ஜெயத்தையும், கீர்த்தி பத்திரத்தையும் தரும்படி செய்யும். உத்தியோக உயர்வு ஏற்படும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். தனதான்யம் விருத்தியாகும். தானதர்ம பலன்கள் ஓங்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**11. கும்பம் : அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾**

கும்பராசி 9 பாதங்களும், நன்மைகளை உண்டு பண்ணும். ஆரோக்யத்தைத் தரும். இல்லற சுகம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கச் செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**12. மீனம் : பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும், எதிர்பாராத நன்மைகளைத் தந்து ஜீவன லாபத்தையும் தரும். பலவிதமான தொழில்களையும், அதன் மூலமாய் லாபங்களையும் தரும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். மேலோர் பெரியோர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கச்செய்யும். ஆரோக்யத்தை உண்டுபண்ணும். புத்ராதிகளால் குடுமபம் ஓங்கும், வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு:— மேற்படி மாதத்தில் எங்கும் தெய்வ பலம் ஓங்கி உலகத்துக்கு ஏற்பட்ட துர் அதிருஷ்டங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக நீங்க ஆரம்பித்து சஸ்ய விருத்தியும், தான்யவிருத்தியும் ஆகி பிரஜைகள் சுகம் அடைவார்கள். ராஜாங்கமும், மேலோங்கி நிற்கும். எனினும் விந்தியோத்தர தேசங்களில் துர்பிக்ஷமும், சத்ருபாதையும் கொஞ்சம் இருந்து கொண்டே இருக்கும். தென்தேசம் செழிக்கும். ஸ்ரீ கருணாமூர்த்தியாகிய சர்வேச்வரன் உலகத்தை ரக்ஷிப்பார், ராஜாங்கத்தில் இன்னும் கொஞ்சம் பங்கெடுத்துக்கொண்டு உலகம் பூராவாகவும் அமைதி நிலவி சுபிக்ஷம் உண்டாகி சத்ருபயம் நீங்க தெய்வ பலத்தைப் பூர்ணமாக நம்பினால் கொஞ்சம் நன்மை ஏற்பட்டு பயம் நீங்கி உலக மக்கள் எல்லோரும் ராஜாங்கத்தைப் போற்றுவார்கள். சுபம் உண்டாகும்.

# ஸ்ரீ துர்க்காதேவி துதி

*திருமுறை இன்னிசைவாணர்,*

**திரு. க. சொக்கலிங்கம்**

புவியினில் உறைந்தென்றும் ஒளிதரும் முழுநிலவு
போலும்அருள் முகமுங்கமலப்
பூவனைய நயனமும் பதினெண் கரங்களும்
பூத்தசெங் குமுதவாயும்
செவியினிற் குழைதோடும வளைபுருவ மும்நுதலும்
திவ்யமண மருவுகுழலும்
திகழும்பொன் மேனியில் அணிவயிர மாலையும்
செம்பட்டுடை யுந்திதலமும்
குவிமுகையும் இளநகையுங் கொடியிடைப பிடிநடையுங்
கொண்டஎழில் வடிவினையே
கூப்பித் தினந்தொழும் அடியருள மருவியவர்
கொடியவினை களையுமயிலே
தவிசிருந் தவனிதனி லனைமண மருளியறந்
தனைவளர்த்திடும் அம்மையே
தருமையம் பதியிருந் தருள்தரும் செல்வியே
தாயேதுர்க் காதேவியே.



வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்
(ஸ்தலவிருக்ஷம்) வேம்படிமால்

சித்தாமிர்ததீர்த்தம்





ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
திருக்கயிலையின் வடக்குமுக தரிசனம் செய்தருளல்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram) 10-12-65.